
ஆனந்த
யாழை
ஆனந்த யாழை
மீட்டுகிறாய்
அமுதவல்லி கல்யாணசுந்தரம்

## பதிப்புரை

அற்புதமாக எழுதி மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்று விட்டார் திருமதி அமுதவல்லி கல்யாணசுந்தரம். வரிக்கு வரி படித்து மகிழும் வாசகர்களின் வரவேற்புக்கு மிக்க நன்றி.

நல்ல எழுத்துக்களுக்கு மக்களின் வரவேற்பு உண்டு என்பதற்கு திருமதி அமுதவல்லியின் நாவல்கள் எடுத்துக் காட்டு.

இந்த நாவலையும் படித்து மகிழ்ந்து கருத்தினை எழுதுங்கள்.

**- அருணோதயம் அருணன்**

# ஆனந்த யாழை மீட்டுகிறாய்

## 1

ஆனந்த யாழை மீட்டுகிறாய்
நெஞ்சில் வண்ணம் தீட்டுகிறாய்
அன்பெனும் குடையை நீட்டுகிறாய்
அதில் ஆயிரம் மழைத் துளி கூட்டுகிறாய்
இரு நெஞ்சம் இணைந்து பேசிட
உலகில் பாஷைகள் எதுவும் தேவை இல்லை

சிறு புல்லில் உறங்கும் பனியில் தெரியும்
மலையின் அழகோ தாங்கவில்லை
உந்தன் கைகள் பிடித்துப் போகும் வழி

அது போதவில்லை இன்னும் வேண்டுமடி
இந்த மண்ணில் இதுபோல் யாருமிங்கே
எங்கும் வாழவில்லை என்று தோணுதடி!

என்று ஸ்ரீராம் பார்த்தசாரதியின் குரல் அலைபேசியின் வழியே அவன் காதுகளில் உருகி வழிந்து கொண்டு இருக்க, தனஞ்செயன் சற்றே திரும்பி அருகே படுத்து இருந்த மகளைப் பார்த்தான். அவனுக்கு மிகவும் பிடித்த பாடல். பதினோரு வயது மகளை தனியே வளர்க்கும் அவனுக்கு இந்தப் பாடல் பிடிக்கவில்லை என்றால் தானே அதிசயம்?

''மகளை பெற்ற அப்பாக்களுக்கு மட்டுமே தெரியும். முத்தம் காமத்தில் சேர்ந்தது இல்லை...!''

அந்த வாக்கியத்தில் என்ன ஒரு ஆளுமை?

நா.முத்துகுமாரின் பாடல் வரிகள் நெற்றியில் அறைந்தது.

அடுத்தடுத்த வரிகள் உள்ளத்தை உருக்கியது.

ஒரு நாளைக்கு மூன்று முறையாவது கேட்டு விடுவான். இரவில் சீக்கிரம் வந்து விட்டால் மகளுக்கு தாலாட்டு பாடலே அதுதான். அவனின் குரல் எப்படி இருக்குமோ? அவன் உணர்வுகளும் பாடல் வரிகளின் இனிமையும் அவளை கட்டிப் போட்டுக் கிறங்கடிக்கும். அவளும் ஆசையாகவே கேட்பாள். பாடலின் முடிவில், மறக்காமல், ''லவ் யூப்பா'' என்று கன்னத்தில் முத்தமிடு வாள்.

''குட்மார்னிங் அம்மு குட்டி'' என்று கன்னத்தில் முத்தமிட்டு, ஆறாம் வகுப்பில் இருக்கும் தன் பதினோரு வயது மகளை எழுப்ப முயன்றான் தனஞ்செயன்.



தந்தையின் குரல் என்ற உணர்வு. அந்த ஆழ்ந்த உறக்கத்திலும் அவளின் மூளையை எட்ட 'விலுக்' என்று எழுந்து அமர்ந்த காவ்யா, ''அப்பா'' என்று அழைக்க அந்தக் குரல் அவன் உயிர் வரை சிலிர்த்தது.

''எப்பப்பா வந்தீங்க?'' என்று அவள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல், ''குட்டிம்மா எழுந்து போய் பல் தேய்த்துவிட்டு வருவாங்களாம் அப்பா உனக்கு பூஸ்ட் வச்சு இருக்கேனே...'' என்று கொஞ்ச, அவள் எழுந்து அவன் மடியில் அமர்ந்து அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

''எனக்கு பூஸ்ட் வேண்டாம்பா. நீங்க என் கூட இருந்தால் போதும்.''

''நானும் உன்னுடன் இருப்பேன். பூஸ்ட்டும் குடிக்கலாம் ஓடு'' என்று அவளைச் செல்லமாக விரட்ட எழுந்து சென்றவள் செல்ல மகள் திருமணம் முடித்த எட்டாவது மாதம் இவளை கையில் கொடுத்துவிட்டு, இந்த உலகத்தை விட்டு மறைந்துவிட்ட வினோதினியின் நினைவுகள் மேகம் மறைத்த நிலவு போல கலங்கலாக இருக்கிறது.

கடந்த ஆண்டு வரை, பத்து ஆண்டுகளாக பேத்தியை கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொண்ட அம்மாவின் மறைவிற்குப் பிறகு மகளை எப்படி பார்த்துக் கொள்ளப் போகிறோம் என்று தவிப்பு வந்து விட்டது.

கோடிகளில் பணம் புரள்வது உண்மைதான்!

விளம்பர படம் எடுக்கும் போட்டி மிகுந்த தொழில்! நேரம் காலம் இல்லாமல், உணவு தூக்கம் இல்லாமல், அயராமல் வேலையை மட்டும் கருத்தில் கொண்டு

உழைக்க வேண்டிய தொழில், உழைக்க வேண்டும். அதிலும் கற்பனா சக்தியைத் தூண்டும் தொழில். கவலையில் மூழ்கினால் விளம்பரத்தின் தரம் பாதிக்கக் கூடும்.

இரவு நீண்ட நேரம் ஷூட்டிங்கில் அல்லது பார்ட்டியில், இருந்து விட்டு வீடு வந்து சேர நள்ளிரவாகி விடும். பெரும்பாலான நாட்களில் அவள் வருவதற்கு முன்பே தூங்கி விடுவாள் என்பதால், காலையில் சில நிமிடங்கள் அவளுடன் செலவழிக்க வேண்டும் என்பதற்காகவே அதிகாலையில் எழுந்து மகளைப் பார்க்க வந்து விடுவான்.

''அப்பா, தினமும் ராத்திரி நீங்க லேட்டா வரீங்க. வீட்டுல தனியா இருப்பது எனக்கு பயமா இருக்குப்பா.''

''பயமா? என் பெண்ணுக்கு பயமே இருக்கக் கூடாதே? அவள் தைரியசாலி ஆச்சே?'' என்று சொல்ல அவளின் முகம் வாடியது.

''என்னப்பா நீங்க? பயம் என்றால் பேய் பிசாசு பயம் சொல்லலை. அதுக்கு தைரியம் இருக்கு. ஆனால் போர் அடிக்குதுப்பா...''

''ஏன் போர் அடிக்கணும்? உனக்கு என்ன பிடிக்குதோ அந்த கிளாஸ் போக வேண்டியது தானே? டிரைவர் இருக்கார். ஸ்கூலில் இருந்து வந்ததும் பிரெஞ்சு ஜெர்மன் என்று வேறே மொழிகள் கற்றுகொள், பரதம் கதக் குச்சிபுடி என்று டான்ஸ் படிக்கப் போ. அதுவும் இல்லை என்றால் மியூசிக், ஓவியம் சிற்பம், அதுவும் பிடிக்கலை என்றால், கராத்தே கிளாஸ் போ. பொழுதை பயனுள்ள வகையில் கழிப்பது நம் கையில் தானேடா குட்டி



இருக்கு'' என்று அப்பா தன்னை அருகில் இறுத்தி அன்போடு சொல்லும் போது உலகமே நம் கையில் இருப்பது போல தோன்றும் உணர்வு மாலை மயங்கி இரவாகும் போது காணாமல் போய் விடுகிறது.

''எழுந்துக்கோ அம்மு. ஹோம் வொர்க் முடிச்சுட்டியா? ஷட்டில் ரெண்டு செட் விளையாடலாமா? அப்பாவும் எட்டு மணிக்குக் கிளம்பணும்'' என்று சொன்னபடி எழுந்தான்.

காலையில் தந்தை தன்னுடன் செலவு செய்யும் அந்த இரண்டு மணி நேரங்களை வீணாக்க விரும்பாமல் துள்ளி எழுந்தாள் காவ்யா.

அவளின் உயரத்திற்கு வரும்படி மட்டுமே அடித்து விளையாடியவன் மகள் என்பதற்காக விட்டுக் கொடுக்கவில்லை. அதனாலேயே 80 சதவிகித சர்வீஸ்களை வென்ற போதும் அவளுக்கு ஜெயிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலும் மேலும் வளர்ந்தது. மணியை பார்த்துவிட்டு, 'போதும் அம்மு' என்று சொன்னவன் மறுபுறம் வந்து அவளைத் தூக்கி தட்டாமாலை சுற்றினான்.

அதுவரை போட்டியாளராகப் பார்த்த மகளை, விளையாட்டு முடிந்ததும் 'நாலாவது செட்டில், மூன்றாவது கேம் சூப்பரா ரிலே பண்ணினாய் செல்லம்' என்று ஒவ்வொரு நாளும் ஷாட்டையும் குறிப்பிட்டுப் பாராட்டவும் தவறவில்லை தனஞ்செயன். அறைக்குள் சென்றவர்கள் அடுத்த பதினைந்து நிமிடத்தில் குளித்துத் தயாராகி உணவறைக்கு வந்தனர். உணவறையில் அமர்ந்ததும் மகளின் முகம் வாட கேள்வியாகத் திரும்பினான்.

''என்ன புஜ்ஜு, ஏன் டல்லாகிட்ட?''

''ப்ச் ஒண்ணும் இல்லைப்பா.''

''ஹோம் வொர்க் பண்ண விட்டு போச்சா?'' என்று மீண்டும் துருவ அவள் மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''அப்பாவிடம் பொய் சொல்லக் கூடாது.''

''ப்ராமிஸ் அதெல்லாம் எதுவும் பாக்கி இல்லை.''

''வேறென்னடா? ப்ராஜெக்ட் ஏதாவது பண்ண னுமா? கடையில் ஏதாவது வாங்கணுமா? பணம் தருகிறேன். டிரைவரோடு லேண்ட் மார்க் போய் பார்த்து வாங்கிட்டு வந்துடு.''

''இல்லைப்பா, வயிறு வலிக்குது'' என்று அடி வயிற்றைப் பிடித்துக் கொள்ள, அவன் ஆதரவாக தலையை வருடினான்.

''நேற்று நைட் என்ன சாப்பிட்டாய்?''

''நூடுல்ஸ்.''

''ப்ச்! வாரத்தில இரண்டு நாள் நூடுல்ஸ் சாப்பிடலாம் என்று சொன்னால் தினமும் அதையே சாப்பிட்டால் எப்படி குட்டி? முதலில் அது எப்படி வயிறு நிறையும்? சத்துள்ள ஆகாரமா சாப்பிடணும் என்று சொன்னால் கேட்பதில்லையா? எங்கே கனகா?'' என்று மகளை கடிந்த கையோடு சமையல் ஆளை கூப்பிட தோட் டத்தைப் பெருக்கும் பெண் வந்தாள்.

''என்ன பொன்னம்மா கனகா எங்கே? நீ வருகிறாய்?''

''கனகாக்கு நேற்று மாலை ஊரில் இருந்து போன் வந்தது. சவிதாம்மா சாயங்காலம் இருந்தாங்க. அவர் களிடம் சொல்லிவிட்டு கிளம்பி விட்டாள். பொழுது



விடிவதற்குள் வந்து விடுகிறேன் என்று சொல்லி விட்டு போனாங்க. இன்னும் காணோமே?''

''சவிதாவிடம் சொன்னால் போதுமா? அவங்கதானா இந்த வீட்டு எஜமானியா? என்னிடம் சொல்லவே இல்லையே? அப்ப இன்னிக்கு பால் காய்ச்சியது டிபன் பண்ணியது எல்லாம் யாரு?'' என்று கேட்டவன் முகம் கோபத்தில் சிவந்து இருந்தது.

''நான் தாங்க.''

''அப்ப நீ அவள் பண்ணிய தப்பை மறைக்கப் பார்த்து இருக்கிறாய்?''

''ஹையோ இல்லீங்க அய்யா. நீங்க ரெண்டு பேரும் பசியா இருப்பீங்களே என்று எனக்குத் தெரிஞ்சதை செய்து வைத்தேன். அய்யா. நேற்று ராத்திரியோடு கிளம்பி இன்னிக்குக் காலையில ஆறு மணிக்கு வந்து விடுவேன் என்று சொல்லிட்டுப் போனதால் நான் உங்களிடம் சொல்லலை..'' என்றவளின் குரலில் பதட்டமும் பயமும் இருந்தது.

''அம்மா காலத்தில் இருந்து இருப்பவங்க என்று உங்களை நம்பி சின்னப் பெண்ணை விட்டுப் போனால் இப்படி ஆளாளுக்கு உங்க இஷ்டத்துக்கு ஊருக்குக் கிளம்பிப் போனால் என்ன அர்த்தம்? இனிமேல் கனகா வேண்டாம். நான் சமையலுக்கு வேறே ஆள் பார்த்துக் கொள்கிறேன். ரெண்டு நாள் வேறே ஆள் வரும் வரைக் கும் நீயே பார்த்துக்கோ'' என்று சொல்ல அவளுக்கு உடல் நடுங்கியது.

''ஹையோ அந்த கனகா தன்னை உண்டு இல்லை என்று பண்ணி விடுவாளே?'' என்று அந்த வாய்க்கு

பயந்தாலும் அதை இவனிடம் சொன்னால், தன்னையும் சேர்த்து வெளியே அனுப்பி விடுவான் என்ற பயமும் கூடவே இருந்ததால் வாயைத் திறக்கவில்லை.

தனஞ்செயனுக்கும் கவலையாக இருந்தது. சின்ன பெண் இரவில் வீட்டில் துணைக்கு ஒரு பெண் இல்லாமல் இருந்தால் எப்படி என்ற கவலை தோன்றியது. மனைவி இறந்து பதினோரு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு பெண்ணின் அருகாமை வேண்டும் என்ற எண்ணம் மகளுக்காகத் தோன்றியது. அம்மா இருந்த போதே அவர் வருந்தி சொன்ன போதே ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு இருக்கலாம்.

''மனைவி எப்போ சாவாள் என்று காத்து இருந்த மாதிரி இன்னொரு கல்யாணம் பண்ணிக்க முடியாதும்மா'' என்று வியாக்கியானம் பேசினான். அவளை தினமும் நினைத்து உருகுகிறான் என்று இல்லை தான். ஆனாலும் அவளுடன் வாழ்ந்த தருணங்கள் அவ்வப்போது தென்றலாக வருடிச் செல்லும்.

இப்போது தனக்காக இல்லை என்றாலும் மகளுக்காக வீட்டில் கனிவுடன் கவனிக்க 24 மணி நேரமும் வீட்டில் இருக்க ஒரு பெண் துணை அவசியம் என்ற எண்ணம் வலுபெற ஆரம்பித்தது.

''திருமணம் செய்து கொள்ள விளம்பரம் செய்யலாம். ஆனால் வருபவர் தன் சொத்தை குறி வைத்து வருபவராக இருந்து விட்டால்...'' என்ற கவலை வாட்டியது.

இப்போதைக்கு வீட்டு நிர்வாகம் பார்க்க இங்கே தங்க கூடிய ஒரு பெண் தேவை என்று விளம்பரம் கொடுக்கலாம். திருமணம் பற்றி அப்புறம் யோசிக்கலாம் என்று முடிவெடுத்த பிறகு மகளிடம் திரும்பினான்.



''அம்மு குட்டி, பயப்படக் கூடாது இப்போதைக்கு டைஜின் போட்டுக் கொள். வயிற்று வலி சரியாகிடும். மதியம் சமைத்து சாப்பாடு பள்ளியில் கொண்டு போய் கொடு பொன்னம்மா'' என்று மகளை தேற்றி பணியாளுக்கு உத்தரவிட்டவன் மனதில் கலக்கம் தோன்றியது.

'தங்கும் இடம் உணவு இலவசம் பதினோரு வயது பெண்ணை 24 மணி நேரமும் உடன் இருந்து கவனித்துக் கொள்ள பொறுமையும் சகிப்பு தன்மையும் மிகுந்த ஒரு பெண் தேவை. சம்பளம் பேசிக் கொள்ளலாம்' என்ற விளம்பரத்தை தினசரிகளில் வெளியிட்டதோடு வேலை வாய்ப்பு நிறுவனங்களிலும் சொல்லி வைத்த பிறகு தனஞ்செயன் மனதில் கலக்கம் குறைந்து நிம்மதி பரவ ஆரம்பித்தது.

# 2

**ஆனந்த குயிலின் பாட்டு தினம் எங்களின் வீட்டுக்குள்ளே!**
**பூக்களின் நனையும் காற்று நித்தம் எங்களின் தோட்டத்திலே**
**கிளிகளின் கூண்டுக்குள்ளே புது உலகம் பிறந்ததே**
**அன்புகொண்ட நெஞ்சத்திலே ஒரு வாசம் பிறந்ததே!**

'உதயராகம்' என்ற பெயரில் மென்மையான பாடல்கள் வானொலியின் பண்பலையில் ஒலிபரப்பாக, அதை கேட்டுக் கொண்டு இருந்த, ஆனந்தியின் கண்களில் நீர் சுரந்தது. பெயரில் இருக்கும் ஆனந்தத்திற்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தம் இல்லை.

இல்லை! அப்படிச் சொல்ல முடியாது. கடந்த எட்டு ஆண்டுகளாக தான் இப்படி. அதற்கு முன்பு அப்பாவின் திடீர் மறைவு வரையில் ஆனந்த பூந்தோட்டமாக இருந்த வீடு இது.

தன்னை அறியாமல் பார்வை அம்மாவிடம் பாய்ந்தது. ஹாலின் ஒரு பக்க சுவற்றில் இருந்த அலமாரி பூஜை அறையாக மாறி இருக்க, கண்களை மூடி வேண்டுதலுடன் இருந்த சாரதாவை பார்த்ததும் பெருமூச்சு வெளியேறியது.

அம்மாவின் மன கலக்கமும் ஏக்கமும் புரிந்தது. ஆனால் அதை துடைக்கும் வழி அறியாமல் கையில் இருந்த கீரை கட்டினை ஆய்வதில் கவனம் செலுத்தினாள்.

இந்த வீடு அவருக்கு வேண்டும். முப்பது ஆண்டுகளாக அவர் வாழ்வில் நிகழ்ந்த நல்லது கெட்டவைகளை உள்ளடக்கிய வீடு. ஒரு நடுத்தர குடும்பத்தின் கனவான சொந்த வீட்டைக் கட்டி முடித்து விட்டேன் என்று அவரை மார் தட்ட வைத்த வீடு. அதை அவரால் இழக்க முடியுமா?

அப்பா தனியார் நிறுவனத்தில் கணக்காளராக பணி புரிந்து வந்த சொற்ப சம்பளத்தில் சிக்கனமாக குடும்பத்தை நடத்தி, மூன்று குழந்தைகளுடன் கணவருடனும் நிறைவான வாழ்க்கையை சந்தோஷமாக வாழ்ந்தவர் சாரதா.

'நெஞ்சு வலிக்குது சாரு' என்று ஒரு இரவில் மார்பை பிடித்தவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்



முன்பே அவரின் உயிர் பிரிந்து இருந்தது. எம்.எஸ்.சி. கணிதம் இறுதியாண்டு பரிட்சையை எதிர்நோக்கி இருந்த ஆனந்தி, ப்ளஸ் டூவில் கார்த்திக், பத்தாம் வகுப்பில் வசந்தி, குடும்ப தலைவியான சாரதா என நான்கு ஜீவன்கள் நிர்க்கதியாக நின்றன.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, பல்லாவரத்தில், தாத்தா வாங்கிப் போட்ட இரண்டு கிரவுண்டு மனையில் ஆயிரம் சதுர அடியில் கீழும் மேலுமாக வீடு, சுற்றிலும் பூந்தோட்டம், கௌரவமான வேலை, அளவான சம்பளத்திலும் நிறைவாக குடும்பம் நடத்தும் துணைவி, என்று அழகான குருவிக் கூடாக இருந்த பத்மநாபனின் குடும்பம் திகைத்து நின்றது.

இறப்புக்கு வந்த நெருங்கிய சொந்த பந்தங்கள் பதினாறாம் நாள் காரியத்துடன் காணாமல் போக, தனியே நின்றது நான்கு பேர் மட்டுமே. அம்மாவுக்கு உடன் பிறந்தவர்கள் இல்லை. அப்பாவுக்கு இருந்தும் இல்லை.

சதா கண்ணீரில் மிதந்த தாய், பசிக்குது என்று தன் கையை சுரண்டிய தங்கை வசந்தி, பொறியியல் படிப்புக்கான கனவுகளுடன் காத்திருக்கும் தம்பி கார்த்திக், என்று மூவரையும் தேற்றி ஆறுதல் சொல்லி வழி நடத்தும் பொறுப்பு ஆனந்தியின் தலையில் விழுந்தது அந்த சுமையினை சுகமாகவே ஏற்றுக் கொண்டாள்.

படித்த படிப்பிற்கான பட்டம் வருவதற்கு முன்பே வீட்டின் அருகில் இருந்த பள்ளியின் முதலாளியை நேரில் சந்தித்து வேலை கேட்டாள். அவளின் குடும்ப சூழலை கேட்டு மனம் இளகி, நிர்வாக பொறுப்பில் இருந்தவர் மழலையர் பிரிவில் பணியளிக்க மனமுவந்து

ஏற்றுக் கொண்டாள். மனம் தளராமல் தொடர்ந்து படித்து எம்.பில். பி.எட்., என்று முடித்து இப்போது ஒன்பது பத்தாம் வகுப்புகளுக்கு கணிதம் எடுத்துக்கொண்டு இருக்கிறாள்.

நடுவே பொறியியல் படிப்பை முடித்த கார்த்திக் நன்றாக படித்து, காம்பஸ் இன்டர்வியூவில் பணிக்கு தேர்வாகி பெங்களூர் சென்றவன், அங்கேயே உடன் வேலை செய்பவரை மணம் செய்து கொண்ட விஷயம் குடும்பத்திற்கு திருமணம் முடிந்த பிறகே தெரிய வந்தது.

ஒரு முறை வீட்டுக்கு வந்தவனை அப்போது இருந்த கோபத்தில், ''வீட்டு வாசப்படி ஏறாதே'' என்று சாரதா சொன்ன வார்த்தைகளுக்குப் பிறகு அவன் நேரில் வருவது இல்லை. விட்டது தொல்லை என்று இருந் தானோ?

சாரதாவின் கவலை அவருக்கு...

வீட்டில் வயது வந்த பெண்கள் இரண்டு பேர் திருமணத்துக்கு காத்திருக்க, அவன் மணம் செய்து கொண்டதை அவரால் மன்னிக்க இயலவில்லை.

இருபத்தியாறு வயது தமக்கை வீட்டில் திருமணம் ஆகாமல் தன் உயர்விற்காக ஓடாக உழைத்து தேய்ந்தவள் இருக்கிறாள் என்ற குற்ற உணர்வு இருந்தாலும், காதலித்த பெண்ணைக் கைவிட மனம் இல்லாமல் அவளின் வீட்டில் திருமணத்திற்கு நெருக்க, பிறந்த வீட்டிற்குச் சொல்லாமல் திருமணம் முடிந்து விட்டது என்ற விளக்கம் அந்த திருமணத்தின் ஹைலைட்!

'குறைந்தபட்சம் காதலிக்காவது கடைசி வரை உண்மையாக இரு' என்ற வாழ்த்துடன் முடித்து விட்டாள் ஆனந்தி.



அவனிடம் தொலைபேசியில் பேசும்போது, சாரதா மனம் தாளாமல் புலம்புவார். ''இப்பதான் வேலையில் செட்டில் ஆகி இருக்கேன்மா. கன்பார்ம் ஆனதும் அக்காவுக்கு ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுப்பது என் கடமை' என்று சொல்லிக் கொண்டே இருந்தான்.

அவனுக்குக் குடும்பம் பெருக, தேவைகள் கூடியது. தன்னிடம் எதிர்பார்க்கும் தன் குடும்பத்தை விட, தனக்கு நிறைய அள்ளிக் கொடுக்கும் மனைவியின் உறவினர்கள் நெருங்கியவர்களாக போக, மாதம் இருமுறை அழைப்புகள் வந்து, மெல்ல தேய்ந்து நின்று போனது.

தன் திருமணத்தை எடுத்து செய்ய ஆள் இல்லாத வேளையிலும், தங்கை திருமணத்தை சீர் செனத்தியோடு சிறப்பாகச் செய்ய அவள் தயாராக தான் இருக்கிறாள் அதிலும் காதல் திருமணம்.

கணினி பயிற்சி எடுத்துக் கொண்டால் எளிதில் வேலை கிடைக்கும் என்று பட்ட படிப்பு முடித்த கையோடு கூடுதல் தகுதியை வளர்த்துக் கொள்ள அனுப்பி வைத்தால், தங்கை கணினி கல்வி கற்றாளோ இல்லையோ, சென்ட்டர் நடத்துபவனை காதலித்து விட்டு வந்தாள்.

''அக்கா உனக்கே தெரியும் ஜெய் ரொம்ப நல்லவர் தான். ஆனால் அவங்க அம்மா என் கல்யாணத்துக்கு ஒத்துக் கொள்ள வேண்டுமே? அதனால்...'' என்று நேற்று இரவு பீடிகையுடன் தங்கை வந்து நின்றபோது அவளுக்கு வயிற்றைக் கலக்கியது.

''அவங்களுக்கு என்ன செய்யணும் வசந்தி?''

''அவருக்கு திருமணம் செய்து கொள்வதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் கணினி மையத்தை

விரிவாக்கம் செய்ய வேண்டும். ஐந்து லட்சம் ரூபாய் பணம் கேட்கிறார்...''

''ஐந்து லட்சமா?''

''ஏன் அக்கா இப்படி சத்தம் போடுகிறாய்? இந்த காலத்தில் ஐந்து லட்சம் ஒரு பணமே இல்லை. இதை வைத்து வங்கியில் பத்து லட்சம் கடன் வாங்கப் போகிறார் தெரியுமா? இதற்கு மேல் அவரால் என்ன செய்ய முடியும் சொல்லு.''

''பணமா ஐந்து லட்சம் கொடுத்து விட்டாலும், அது போக நகை, துணிமணி, கல்யாண செலவு, அதற்கு இன்னொரு ஐந்து லட்சம் வேண்டுமே? பத்து லட்சத் துக்கு எங்கே செல்வது?''

''வீட்டை வைத்துக் கொடு'' என்று சர்வ சாதாரண மாக சொல்ல அதைக் கேட்ட சாரதாவுக்கும், ஆனந் திக்கும் மயக்கமே வந்தது.

''என்னடி சொல்ற?''

''என்னம்மா சொல்றது? அவங்க சொன்னதை அப் படியே சொன்னால் உங்களுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்து விடும்.''

''இனிதான் வரணுமா? இப்பவே வந்துடுச்சு. இதுக்கு மேலேயும் என்ன சொன்னாங்க?'' என்று சாரதா விசாரிக்க அவள் ஒரு பெருமூச்சுடன் பதில் சொன்னாள்.

''இந்த இடத்தில் மூன்றில் ஒரு பங்கினை ரெஜிஸ்டர் பண்ணித் தரச் சொன்னாங்க.''

''என்ன உளறல் இது?'' என்று ஆனந்தி கேட்டதும், அவளுடன் ஒத்து ஊதினாள் வசந்தி.



''அதைத் தான் நானும் சொன்னேன்.''

''என்ன தப்பு?'' என்று கேட்ட ஆனந்தியின் கண் களில் கவனம் இருந்தது. இவள் தன்னுடைய நலன் மட்டுமே நினைப்பாள். பேசும் போது இவளிடம் கவன மாக இருக்க வேண்டும்.

''மூன்றில் ஒரு பங்கு நாம் கேட்க முடியாது. நாலில் ஒரு பங்கு தான் கேட்க முடியும். வேண்டுமானால் அம்மாவை நம்முடன் வைத்துக் கொண்டால் பாதி பங்கு கேட்கலாம் என்று சொன்னேன். ஜெய் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை...'' என்று சொன்ன வசந்தியை என்ன செய்வது என்று தெரியாமல் ஆனந்தி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

இப்போதைக்கு கிடைத்ததைப் பற்றி கொள்ளலாம். அம்மாவை அக்காவே பார்த்துக் கொள்ளட்டும். அவள் இந்த வீட்டை எப்படியும் மூன்று நான்கு ஆண்டுகளில் மீட்டு விடுவாள். அம்மாவின் காலத்திற்குப் பிறகு, தனக்கு சேர வேண்டியதை பெற்றுக் கொள்ளலாம் என்ற நல்ல எண்ணம்! அவளுக்குக் கசந்து வழிந்தது.

''யோசிக்கணும் வசந்தி. கார்த்திக்கிடம் கேட்க வேண் டாமா?'' என்று பிரச்னையை ஒத்தி வைக்க அவள் சொல்லி வைத்தால், அடுத்த ஐந்தாவது நிமிடம் அலை பேசிக்கு வந்து விட்டான்.

''ரொம்ப யோசிக்க வேண்டாம் அக்கா. நான் புதிதாக தொழில் துவங்கலாம் என்று பார்க்கிறேன். வீட்டை விற்ற பாகம் பிரித்து எனக்கும் பங்கை கொடு'' என்று கேட்க வந்து விட்டான் தம்பி. அவள் நாலு பாகம் வைத்து அம்மாவின் பங்கையும் சேர்த்து அனுபவிக்க நினைக்க,

அவன் பெருந்தன்மையாக மூன்றில் ஒரு பங்கு என்று நின்று விட்டான்.

அக்கரைக்கு இக்கரை பச்சை என்பது இதுதானோ?

இதுதான் உலகம் இருவருக்கும் அவரவர் காரியமே முக்கியமாக இருந்தது. தங்கைக்கு தான் விரும்பிய பணக்கார மாப்பிள்ளையுடன் திருமணம். தம்பிக்கு அவனின் மனைவி வீட்டின் முன்பு எனக்கும் தொழில் இருக்கிறது என்று காண்பிக்க ஒரு கௌரவம்.

''அவங்க வசதிக்கு அவங்க அம்மாவை இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிக்க வைக்க அவர் எவ்வளவு சிரமப்பட்டார் தெரியுமா?'' என்று தங்கை தனக்கு வேதம் சொல்லும் நிலை!

''அதெல்லாம் நமக்கு சரி வராது வசந்தி, வேறே மாப்பிள்ளை பார்த்துக் கொள்ளலாம்'' என்று சாரதா முடித்துவிட முன் தினம் இரவில் இருந்து கண்ணீருடன் படுக்கையில் சரிந்து கிடக்கும் தங்கையை தேற்றும் வழி தெரியவில்லை.

''நான் உயிரோடு இருக்கும் வரை வீட்டை விற்கும் பேச்சுக்கே இடமில்லை. என் உசுரு இங்கே தான் போகணும். அதுக்குப் பிறகு என்னவோ பண்ணிக்கோங்க'' என்று முடித்து விட்டார் சாரதா.

''அப்ப என் கல்யாணம்...?'' என்று வசந்தி ஒரு புறம் நெருக்க,

''என் தொழில்?'' என்று கார்த்திக் மறுபுறம் கடிக்க,

ஒரு வார்த்தை சூறாவளி அடித்து ஓய்ந்தது அந்த புயலுக்குப் பிறகு வந்த அமைதி. ஊசி கீழே விழுந்தால் கூட சப்தம் கேட்கும் மயான அமைதி நிலவ அவளுக்குத் தாங்கவில்லை.



வீட்டை விற்று விட்டால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் அம்மா இந்த வீட்டின் மேலே வைத்த உணர்வு பூர்வமான ஒன்றுதல் அவளுக்கு வேகத்தடை விதிக்க, மண்டை குழம்பியது.

கைகள் சமையலை கவனிக்க, இந்தப் பிரச்னையை சுமுகமாக தீர்க்க என்ன செய்யலாம் என்று மூளை அதன் போக்கில் தன்னைத் தானே கசக்கிக் கொண்டு இருந்தது.

## 3

ஆனந்தி மனதில் நீண்ட யோசனையை ஏறக்கட்டி, சமையலை முடித்து தனக்கு உணவு கட்டி, குளித்து தயாராகி, காலை டிபனையும் எடுத்து வைத்த பிறகும், தங்கள் நிலையில் இருந்து அம்மா சாரதாவும் தங்கை வசந்தியும் நகரவே இல்லை.

''அம்மா, மணி எட்டரை ஆச்சு. வாங்க சாப்பிடலாம்.''

''என்னை ஏன் கூப்பிடுற? காலையில் நான் என்னிக்கு சாப்பிட்டு இருக்கேன்.''

''காபி கூட குடிக்காமல் வெறும் வயிற்றில் இருக்கீங்க. அல்சர் வரும். சொன்னா கேளுங்க. எழுந்து வரீங்களா இல்லையா?''

''உன் தங்கச்சியை முதலில் சாப்பிட வை. அவள் சாப்பிட்ட உடனே நான் காபி குடிக்கிறேன். பதினோரு மணிக்கு தானே சாப்பிடுவேன்'' என்று அம்மா முறுக்கிக் கொள்ள அவள் தங்கையை அழைத்தாள்.

''வசந்தி, போதும் பிடிவாதம். முகத்தை கழுவிட்டு எழுந்து வா.''

''இருந்தால் சந்தோஷமா இருக்கணும் அது முடியாது என்றால் உயிரோடு இருக்கவே கூடாது.''

''முதலில் எழுந்து வா. இந்தப் பிரச்னை பற்றி சாயங்காலம் ஸ்கூலில் இருந்து வந்த பிறகு பேசலாம். பேசி முடிச்சு தீர்வு கிடைக்கவில்லை சாகலாம் என்று முடிவு பண்ணி விட்டால் மூன்று பேரும் சேர்ந்து சாக லாம். இப்ப எழுந்து வா'' என்று சொன்ன ஆனந்தியின் குரலில் வெறுப்பும் சலிப்பும் இருந்தது.

மேலும் சில நிமிடங்கள் கொஞ்சி கெஞ்சி, தங்கையை சாப்பிட வைத்து, அம்மாவுக்கு காபி கொடுத்து விட்டு அவள் பள்ளிக்குக் கிளம்பும்போது, இந்தப் பிரச்னையை எப்படித் தீர்க்கப் போகிறேன் என்ற ஆயாசம் மனதில் தோன்றியது.

அவசரமாக தன் இரு சக்கர வாகனத்தை பள்ளியில் நிறுத்தும்போது, சற்று தொலைவில் ஒரு மாணவியின் முதுகில் பையை மாட்டிக் கொண்டு இருந்த அந்த மிரு கத்தின் விரல்கள் அந்தக் குழந்தையின் மேல் தேவைக்கு மேல் இருந்ததாகத் தோன்றியது.

அவன் டிரைவரா? இல்லை என்றால் தூரத்து சொந்தம் என்ற பெயரில் பணம் புழங்கும் வீட்டில் ஒட்டிக் கொண்டு இருக்கும் ஒரு வெட்டிப் பயலாக இருக்கலாம். அவனை உடனே வெட்டிப் போட வேண்டும் என்று தோன்றிய ஆத்திரத்தை அடக்கினாள்.

இல்லை, தன் மனநிலை சரி இல்லாத நேரத்தில், எல்லாமே தவறாகப் படுகிறதோ என்னவோ? தலையை



உலுக்கி விட்டு அந்த இடத்தில் இருந்து நகர்ந்தாலும் பள்ளிக் கட்டிடத்தை அடைவதற்குள் மூன்று முறை அவர்களை நிமிர்ந்து பார்த்து விட்டாள்.

அவன் அந்த பெண்ணுடன் கூடவே நடந்து வந்த விதம் அவளுக்குப் பிடிக்கவில்லை. ஏன் கூடவே வரு கிறான்? அதுவும் முதுகை தடவி பின்புறம் வருடி. அவளின் ரத்தம் சூடேறியது. இன்னொரு முறை அவளைத் தொடட்டும், வைத்துக் கொள்கிறேன் என்று மனதிற்குள் கருவ, அவன் கை ஆட்டிவிட்டு விலகி நடப்பது தெரிந்தது.

பொங்கிய கோபத்தை அடக்கி, கால்களை எட்டிப் போட்டு அவளை அடைந்தவள், 'யார் அவன்?' என்று ஆங்கிலத்தில் விசாரிக்க, ''ப்ரெண்ட் மிஸ்'' என்ற பதில் கிடைத்தது.

''ப்ரெண்ட்? இவ்வளவு பெரிய பையனா? என்ன செய்கிறான்?'' என்று மனதில் தோன்றியதை வெளியே கேட்காமல் அவளின் அடையாள அட்டையை நோட்டம் விட்டாள் ஆனந்தி.

காவ்யா, சிக்ஸ் - B அவனுக்கு எப்படிப் பார்த்தாலும் இருபதுக்கு மேல் இருக்கும். ப்ரெண்ட் என்றால் எப்படி பழக்கம்? எப்படி பள்ளிக்குள் சீருடை இல்லாமல் விட் டார்கள்? மனதிற்குள் கேள்வி குடைந்தாலும் ஐயாயிரம் மாணவிகள் படிக்கும் பள்ளியில் ஒவ்வொரு பெண்ணும் யாருடன் பேசுகிறார்கள் என்று கண்காணிக்க முடியாது என்ற ஞானோதயம் பிறக்க அவள் ஒன்றும் பேசாமல் விலகிச் சென்றாள்.

ஆனாலும் அவளை மாதிரி இரு மடங்கு வயது இருக்கும் 'அவன்' தொடுகையை அவள் உணர்ந்து

அனுமதித்தால் 'பணத்தில் திளைத்தது', 'பிஞ்சிலே பழுத்தது' என்று விடலாம். ஆனால் உணராமல் இருக்கும் பட்சத்தில், இவளை எச்சரிக்க வேண்டியது, தன் கடமை என்று எண்ணிக் கொண்டே பள்ளியில் கையெழுத்திடச் சென்றாள் ஆனந்தி.

அன்று பிற்பகல் உணவு வேளை முடிந்து முதல் வகுப்பு அவளுக்கு ஒய்வு என்பதால் மெதுவாக நடந்து செல்ல, அவளின் கால்கள் அவளையும் அறியாமல் ஆறாம் வகுப்பு B பிரிவில் நின்றது.

ஜன்னல் வழியே பார்வையை ஓட்டியதில், அவள் அங்கே இல்லை. கால்கள் அந்த வகுப்பறையைத் தாண்டி இரண்டு எட்டு வைத்த பிறகு என்னவோ மனதில் உறுத்த அவள் மீண்டும் வாசலுக்கு வந்தாள்.

வகுப்புக்கு உரிய ஆசிரியர் இன்னும் வந்து இருக்காத நிலையில் ஆங்காங்கே நின்று கொண்டு இருந்த மாணவ மாணவிகள் ஆசிரியை வாசலில் நிற்பதைக் கண்டதும் சட்டென்று சலசலப்பு அடங்கி அவரவர் இருக்கையில் அமர முயன்றனர்.

''காவ்யா எங்கே?'' என்ற குரல் சற்றே அதட்டலாக வெளியே வர அப்போது தான் அவர்கள் அருகே சுற்றிப் பார்வையை ஓட்டினர்.

''கான் பார் லஞ்ச் மிஸ்'' என்ற குரல் ஒலிக்க அவள் கைகடிகாரத்தை திருப்பி மணி பார்த்தாள். மதிய உணவு நேரம் முடிந்து விட்டதே.

''ஏன் இங்கேயே சாப்பிட மாட்டாளா?'' என்ற ஆனந்தியின் ஒற்றை கேள்விக்கு, ''இங்கேதான் சாப்பிட்டாள் மிஸ், தினமும் சாப்பிடுவாள், இன்று சாப்பிடலை



மிஸ்'' ''தெரியலை மிஸ்'', ''ரெஸ்ட் ரூம் போய் இருப்பாள் மிஸ்'' என்று பலவிதமான பதில்கள் குவிய, அவள் யோசனை கூடியது.

''சைலன்ஸ்'' என்று சொல்லிவிட்டு ஆசிரியர்களின் ஓய்வறைக்கு வந்தவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. சில நிமிடங்கள் கழித்து கால்கள் மீண்டும் அந்த அறைக்குச் செல்ல, ஆசிரியர் பாடம் எடுக்க ஆரம்பித்து இருந்தார்.

காவ்யா அங்கில்லை. ஆனால் காலையில் அவள் வந்ததைப் பார்த்தாளே? அதன் பிறகு எங்கே சென்று இருப்பாள்? மண்டை குடைந்தது. யாரோ ஒரு பெண். தன் வகுப்பும் இல்லை. அவளுக்காக ஏன் மண்டை இவ்வளவு காய்கிறது என்று கேள்வி எழுந்தாலும் அவளால் சும்மா இருக்க முடியவில்லை.

அலுவலக அறைக்குச் சென்று கணினியில் மாணவர்களின் விபரங்கள் அடங்கிய ஃபைலை எடுத்துப் பார்க்க, பல்லாவரத்தில் வீடு இருந்தது பெற்றோர்கள் பற்றிய குறிப்பில் அம்மாவின் பெயர் என்ற இடத்தில் 'லேட்' என்ற பதிவைப் பார்த்ததும் திக் என்று இருந்தது. அவள் தந்தையின் மொபைல் நம்பரை தன் அலைபேசியில் பதிவு செய்துவிட்டு, அந்த இடத்தை விட்டு எழுந்தாள்.

தாய் இல்லாத குழந்தை என்ற அந்த ஒரு பதிவு, அவளின் இதயத் துடிப்பை மூன்று மடங்கு அதிகப்படுத்த அவசரமாக வெளியே வந்து, முதல் தளத்தின் நான்கு மூலைகளிலும் இருந்த மாணவிகளுக்கான ஓய்வறைக்குச் சென்று தேடினாள்.

மூன்றாவது கழிவறையை விட்டு வெளியே வந்த போது, அதை ஒட்டிய மாடிப்படிகளில் 'ம்மா' என்ற வலியினால் வந்த முனகல் கேட்டது. அவசரமாக ஓடிச் சென்றபோது, அங்கே இருந்தது காவ்யா. அவள் அமர்ந்து இருந்த விதத்தில் புரிந்து விட்டது.

அவள் பூப்படைந்து இருக்க வேண்டும். வலி தாளா மல் சுருண்டு இருக்கிறாள். இவ்வளவு சீக்கிரமா என்ற வருத்தம் தோன்ற, அதை ஒதுக்கி அருகே வந்து அவளின் தலையை வருடினாள்.

''காவ்யா, இங்கே தனியா என்னம்மா பண்ற?'' என்ற அவளின் கேள்வியிலும் தலை மீது வைத்த கை எழுப்பிய அதிர்ச்சியிலும் அவசரமாக தன்னை தள்ளி விட்டு வேகமாக எழுந்தாள்.

''சாரி மிஸ், கிளாசுக்கு இதோ போய்டறேன் மிஸ்'' என்று பதட்டமாக சொன்னவளை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

''பயப்படாதே. உனக்கு என்ன பண்ணுது என்று சொல். கிளாஸ்ல நானே கொண்டு போய் விடுறேன்'' என்று முதுகை வருடிச் சொல்ல, அவள் கண்களில் இருந்து பட்டென்று கண்ணீர் பொங்கி வழிந்தது.

''எனக்கு வயிறு ரொம்ப வலிக்குது'' என்று திக்கித் திணறிச் சொல்லும் போதே ஆடையில் படிந்த கறை அவளின் சந்தேகத்தை உறுதி படுத்த, அவளின் முதுகை வருடிக் கொடுத்தாள்.

''எவ்வளவு நேரமா வலிக்குது காவ்யா?''

''காலையில் இருந்தே.''



''கிளாஸ் மிஸ் கிட்டே காலையில் சொல்லி இருக்க லாமே? இவ்வளவு நேரத்தில் வலியைச் சரி பண்ணி இருக்கலாமே காவ்யா.''

''பயமா இருந்தது.''

''உங்க பிரெண்ட்ஸ் யாரிடமாவது சொல்லி இருக் கலாம் இல்லையா?'' என்று மேலும் பேச்சு கொடுத்தபடி அவளை அணைத்தவாறு டிஸ்பென்சரிக்கு அழைத்து வந்தாள் ஆனந்தி.

அங்கே அமர்த்தி, ஒரு எலுமிச்சை ஜூஸ் குடிக்க வைத்து, ''இதுல பயப்பட ஒன்றுமே இல்லை காவ்யா. உன்னுடைய உடல் உறுப்புகள் சரியா வேலை செய் கிறது என்பதைக் காட்டும் விஷயம் இது. இந்த உல கத்தில் இருக்கும் எல்லா பெண்களுக்குமே நடக்கும்'' என்று மெல்ல மெல்ல ஆரம்பித்து பருவமடைதல் என்றால் என்ன, உடல் சுத்தம் பராமரிப்பது எப்படி என்று அவளுக்குப் புரியும் வகையில் சின்னதாக விளக்கம் சொல்லி அவளின் பயத்தைப் போக்கிய பிறகு, வீட்டு லேண்ட் லைனுக்கு தகவல் சொல்ல மூன்று முறை முயன்றாள். மணி அடித்து ஓய்ந்தது யாருமே எடுக்கவில்லை.

''உங்க வீட்டு போன் நம்பர் யாருமே எடுக்கலையே? வீட்டுல இருக்கும் பெண்கள் யாருக்காவது மொபைல் நம்பர் இருந்தால் சொல்கிறாயா காவ்யா?'' என்று அவள் விசாரிக்க அவள் விழி மலர்த்தினாள்.

''வீட்டுல யாரும் இல்லையே? வேலைக்காரங்க தான் இருப்பாங்க.''

''ஓ, பாட்டி, பெரியம்மா, அத்தை சித்தி என்று யாருமே இல்லையா?'' என்று கேட்கும் போதே தொண்டைக் குள் அடைத்தது.

''ம்ஹூம்.''

''உங்க கூட இல்லாவிட்டாலும் சென்னையில் யாராவது இருக்காங்களா?''

''இருக்காங்க. ஆனால் போனில் சொன்னால் வந்து போகும் தொலைவில் யாரும் இல்லை. அப்பாவுக்கு அது பிடிக்காது'' என்று வருத்தமாகச் சொல்ல ஆனந்தியின் முகமும் வாடியது.

''அப்ப உங்க அப்பாவுக்கு தான் மொபைலில் கூப்பிடணுமா?'' என்று கேட்க அவள் ஆமோதிப்பாக தலை அசைத்தாள்.

வேறு வழி இன்றி தயக்கத்துடன் அவள் அவனை அழைத்தபோது, ''உனக்கு ஒரு தடவை சொன்னால் அறிவிருக்காதா? ஏன் என்னை இப்படி திருப்பித் திருப்பி தொந்தரவு செய்கிறாய்? ஜஸ்ட் ஷட் அப் அண்ட் கெட் லாஸ்ட் சவி'' என்று உச்ச ஸ்தாயியில் அவன் அதட்டி விட்டு போனை வைக்க அவள் திகைத்தாள்.

அவன் 'சவி' என்று சொன்னது அவள் காதில் 'கவி' என்று விழுந்ததால் தாய் இல்லாத பெண்ணை இப்படி அதட்டும் இவன் உண்மையிலேயே அவளைப் பெற்றவன் தானா என்ற சந்தேகம் எழுந்தது. இவன் எல்லாம் ஒரு மனிதனா? பெற்ற பெண்ணின் பள்ளியில் இருந்து ஒருத்தி அழைக்கிறாள் அவள் யார் என்ன விஷயம் என்று விசாரிக்கக் கூட இல்லாமல், இப்படி கத்துகிறானே?

ஏற்கனவே இவள் தன் தந்தையை அழைத்தேன் என்று சொன்னாளே? இப்படித்தான் அப்போதும் கத்தி இருக்க வேண்டும். அதனால் தான் சுருண்டு விட்டாள்.



வலியும் பயமும், இந்த அதட்டலும் சேர்ந்தால் அவள் என்ன செய்வாள் பாவம்?

செய்யாத தவறுக்காக தனஞ்செயன் மேல் பழி ஏறிக் கொண்டே போக, அதே சமயம் சாவ்யாவின் மீதான பரிதாபமும் அவளை முடிந்த அளவு சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதியும் ஆனந்தியின் மனதில் எழுந்தது.

# 4

தனஞ்செயன் படப்பிடிப்பில் இருக்கும்போது இருபதாவது முறையாக அலைபேசி ஒலித்த வேகத்தில் எடுத்து அது சவிதாவாக இருக்க வேண்டும் என்று எண்ணி உச்ச ஸ்தாயியில் அதட்டியவன் என்ன பேசினான் என்று கேட்டால் அவனுக்கே தெரியாது.

''வாயை மூடிட்டு போ'' என்ற அர்த்தத்தில் ஏதோ சொல்லி இருக்க வேண்டும். எதிர்முனை வைக்கப் பட்டதும் வியப்பாக இருந்தது. சவிதா இவ்வளவு சென்சிடிவா? திட்டியதும் போனை வைத்து விட்டாளே என்ற ஆச்சரியம் தோன்றிய வினாடியே மறைந்தது. ஹூம்! அவளுக்கு அதெல்லாம் உரைக்காது.

''உனக்கும் எனக்கும் பதினான்கு வயது வித்தியாசம். இதெல்லாம் சரிப்பட்டு வராது. உன் வயசுக்கும் அழகுக்கும் அந்தஸ்திற்கும் ஏற்ற வேறு ஒரு மாப்பிள்ளையை பார்த்துக் கொள்'' என்று அவளிடம் இதுவரை ஆயிரம் முறை சொல்லி இருப்பான்.

படிப்பு முடித்த நாளில் இருந்து இந்த ஆறு மாதத்தில் எத்தனை கால்கள்? இது எல்லாம் அத்தை மாமாவுக்குத் தெரியாதா? கண்டிக்க மாட்டார்களா என்ற எரிச்சல் பொங்கியது.

ஏற்கனவே காலையில் வீட்டில் நடந்த குளறுபடியால் மனம் நொந்து இருந்தான். வேலை ஆட்கள் அனுப்பும் நிறுவனத்தில் தகவல் சொன்ன பதினைந்தாவது நிமிடம் அவளிடம் இருந்து அழைப்பு வந்து விட்டது.

''நான் ஒருத்தி இருக்கையில் நீங்க ஏன் வெளியாளை வேலைக்குக் கொண்டு வர முயற்சி செய்கிறீர்கள்?'' என்ற அவளின் கேள்வி அவனை எரிச்சல் பட வைத்தது. நிறுவனத்தில் சொன்ன பதினைந்தாவது நிமிடம், அவளுக்கு எப்படித் தகவல் போனது?

''வேலைக்கு ஏன் அத்தான் ஆள் தேடுறீங்க? வீட்டுக்கே வர நான் ரெடியா இருக்கேனே? அவளை ஊட்டி போர்டிங் ஸ்கூலில் போட்டு விடலாம். நீங்க கவலை இல்லாமல் தொழிலைப் பார்க்கலாம்'' என்று ஆரம்பிக்க பொரிந்து தள்ளி விட்டான்.

''எவ்வளவு தைரியம் இருந்தால் பத்து வயசு பெண்ணை, அதுவும் தாய் இல்லாதவளை ஹாஸ்டலில் விடச் சொல்வாய்? என் பெண்ணைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும். நீ போனை வை'' என்று அவளின் முகத்தில் அறையாத குறையாக ஒரு முறை இல்லை இரு முறை இல்லை. இருபது முறை சொன்ன பிறகு தான் அவனின் பொறுமை கரையைக் கடந்தது.

அதன் பிறகு அலைபேசியை அணைத்த இருபதாவது நிமிடம் அந்த சவிதா விளம்பர மாடலை விட ஒய்யாரமாக நேரில் வந்து நின்றபோது அவன் செய்வதறியாது திகைத்துப் போனான்.



* * *

பள்ளியில் மிச்ச நேரத்திற்கு விடுப்பு சொல்லி விட்டு காவ்யாவை தன் வண்டியில் ஏற்றிக் கொண்டு அவளின் வீட்டுக்கு அழைத்து வந்த ஆனந்தி, ''உங்க வீட்டுல இப்ப யார் இருப்பாங்க காவ்யா?'' என்று வரும் வழியில் மெல்ல விசாரித்தாள்.

''வேலைக்காரர்கள் மட்டுமே இருப்பாங்க மிஸ்.''

''உங்க வீட்டு ஆளுங்க, சொந்தக்காரங்க மாதிரி அருகில் யாருமே இல்லையா?''

''இல்லை மிஸ், எங்க பாட்டி போன மாசம் தான் இறந்தாங்க. அவங்க இருந்த வரைக்கும் நாங்க வேறு யாரையும் தேடவே இல்லை. என்னை பாட்டியே ரொம்ப நல்லாப் பார்த்துக் கொண்டாங்க. இப்ப தான்...'' என்று சொல்லும் போது அவளின் குரலில் கலக்கமும் கண்ணீரும் தோன்றியது.

''உங்க அம்மா...?''

''அவங்களை நான் போட்டோவில் தான் பார்த்து இருக்கேன்'' என்று சொல்லும் போது அவளின் குரல் சாதாரணமாகவே இருந்தது. அவள் அம்மாவின் இழப்பை உணராத அளவிற்கு கவனமாக அவளின் பாட்டி வளர்த்து இருக்க வேண்டும். அந்த பெரியவர் மேல் கனிவு பொங்கிய அதே நேரம் காவ்யாவின் மேல் பரிதாபம் தோன்றியது.

''உங்க அப்பா...?''

''அப்பா எப்போ வருவாங்க என்று தெரியாது. நைட் ரொம்ப லேட்டாகும்'' என்று சொன்னவளின் குரல் அந்த பரிதாபத்தை மேலும் வளர்த்தது.

இரவு நெடு நேரம் கழித்து வருவார் என்ற செய்தியும் அவர் சற்று முன்பு கடுமையாகப் பேசியதும் சேர்ந்து அவனை ஒரு ராட்சசனாக சித்தரிக்க வைத்தது. பணக் காரர்களின் வீட்டில் பெற்றவர்களை விட வேலைக்காரர் களின் பாசம் தான் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் என்ற நம்பிக்கையோடு அந்த வீட்டுக்கு வந்தபோது வாசலில் இருந்த காவலாளி மட்டுமே விழிப்பாக இருந் தார்.

பின்னால் அமர்ந்து இருந்த காவ்யாவைப் பார்த்த பிறகும் அவளை நூறு கேள்விகள் கேட்டார். ஆனால் அது அந்த வீட்டின் மேல் இருந்த அக்கறை என்பது புரிய ஒரு மரியாதை வந்தது.

''நான் ஸ்கூலில் வேலை செய்கிற மிஸ். அவசரமா காவ்யாவுக்கு உடல்நிலை சரி இல்லை என்பதால் நானே வீட்டுக்கு அழைத்து வந்தேன்'' என்று சொல்லி உள்ளே சென்றவள் பிரமித்துப் போனாள்.

வெளியே இருந்து பார்க்கும் போது ஏழடி உயர காம்ப வுண்டு சுவர் மட்டுமே தெரிந்ததால் உள்ளே இருந்த வீடு மற்றும் தோட்டத்தின் அழகு கண்ணில் படவில்லை. ஆனால் அவ்வளவு அழகான வீட்டுக்குள் அன்பு காட்ட யாருமே இல்லை என்பது போன பத்து நிமிடங்களில் அவளால் உணர முடிந்தது.

''இந்த மாதிரி நேரத்தில் பச்சை முட்டை குடிக்க கொடுப் பாங்க. உங்க சமையல் காரம்மா இருந்தால் கூப்பிடு கிறாயா?'' என்று சொல்ல அவள் வீடு முழுவதும் தேடி விட்டு வந்தாள்.



''யாரும் இல்லை மிஸ்.''

''பிரிட்ஜ் காட்டு. முட்டையும் பாலும் நான் அடித்துத் தருகிறேன்.''

''வேண்டாம் மிஸ். என்னால் பச்சை முட்டை குடிக்க முடியாது. உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? நான் ரூமில் போய் படுத்துக் கொள்கிறேன். சமையல்காரம்மா நாலு மணிக்கு வந்துடுவாங்க. இன்னிக்கு நான் சீக்கிரம் வந்து விட்டேன் இல்லையா? அதான் வீட்டில் யாரும் இல்லை'' என்று பெருந்தன்மையாகச் சொன்ன காவ்யாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''இல்லை, இப்ப உன்னை தலைக்குக் குளிக்க வைக்கணும். சாப்பிட நல்ல சத்துள்ள ஆகாரமா செஞ்சு கொடுக்கணும். வீட்டுல பெரியவங்க இருந்தால் சொல்லி விட்டுப் போக நினைத்தேன்'' என்று தயங்கி நின்றாள்.

''நான் ப்ரெட்டும் பாலும் சாப்பிட்டுக் கொள்கிறேன். எனக்கே செய்ய தெரியும்'' என்று சொல்ல அவளுக்கு கண்களில் ஈரம் கசிந்தது. 'இந்தப் பெண்ணின் நிலையைப் பார்த்தால் நம் நிலை எவ்வளவோ தேவலாம் என்று தோணுதே?'

''இது என் மொபைல் நம்பர். பள்ளியில் என்றாலும் சரி வீட்டில் என்றாலும் சரி. ஏதாவது பிரச்னை உங்க அப்பாவை உடனடியா தொடர்பு கொள்ள முடியவில்லை என்றால், எனக்கு தகவல் சொல். அது எந்த நேரமா இருந் தாலும் வருவேன். மறக்கக் கூடாது'' என்று அழுத்தமாகச் சொல்லி அவளின் கன்னத்தை வருடி விட்டு வெளியே வந்த ஆனந்திக்கு மனசு பாரமாக இருந்தது.

வெளியே வந்து வண்டியைச் செலுத்த முயன்ற போதே எதிரே இருந்த சந்தில் காலையில் பார்த்தவன்

நின்று இருந்தான். இவன் ஏன் இங்கே நிற்கிறான்? மனசுக்குள் நெருட, செக்யூரிட்டியிடம், ''இங்கே வீட்டில் பெண் உறவினர்கள் என்று யாரும் இல்லையா?'' என்று விசாரிக்க அவன் புருவம் உயர்த்தினான்.

''இல்லை, ஏன் மேடம் கேட்கறீங்க?''

''காவ்யா பெரிய பெண்ணாகி விட்டாள். தலைக்கு தண்ணி ஊத்தணும். சம்பிரதாயம் எல்லாம் செய்யணும் முக்கியமா துணைக்கு ஒரு ஆள் கூடவே இருக்கணும். அதான் கேட்டேன்'' என்று விவரம் சொல்ல அவரின் முகம் வாடியது.

''இல்லையேம்மா. அவங்க அம்மாவோட தங்கை ஒரு பொண்ணு வரும். ஆனால் அவங்க...'' என்ற அவரின் முக சுளிப்பிலேயே அவளின் குணம் புரிந்தது.

''அந்த மாதிரி ஆட்கள் யாரும் இல்லையே? நான் வேண்டுமானால் அய்யாவிடம் பேசுகிறேன். அவர் யாரையாவது வரவழைப்பார்'' என்று சொல்ல அவள் நம்பிக்கை இன்றி பார்த்தாள். அவன் அலைபேசிக்கு அழைக்க, அணைத்து வைக்கப்பட்டு இருப்பதாக செய்தி வந்ததுமே அவளின் உதடுகள் ஏளனமாகப் பிதுங்கியது.

'எனக்குத் தெரியாதா அவன் பவிஷு' என்ற எண்ணம் அவள் முகத்தில் தெரிய காவலாளி அவசரமாக மறுத்தான்.

'மொபைல் எடுக்கலை. அவரின் ஆபீசுக்கு போன் பண்ணுகிறேன்' என்று முயற்சி செய்தவனுக்கு அங்கும் ஏமாற்றமே.

''அய்யா அவசர வேலையா வெளியே போய் இருக்காங்க. சமையல் காரம்மா இல்லை. அது இருந்தாலும்



இல்லாவிட்டாலும் ஒன்றுதான்'' என்று வருத்தத்துடன் சொல்ல, அவள் பொறுமையும் எரிச்சலும் எல்லை மீறியது.

''நான் என் வீட்டுக்கு காவ்யாவை அழைத்துச் செல்கிறேன். உங்க அய்யா வந்த உடனே இந்த முகவரியைக் கொடுத்து வந்து பெண்ணை அழைத்துக் கொள்ளச் சொல்லுங்க. அவள் இங்கே தனியாக இருக்க வேண்டாம்'' என்று சொல்ல அவன் திகைத்தான்.

''அய்யாவிடம் சொல்லாமல் நீங்க எப்படி...?''

''உங்க அய்யாவிடம் எப்படி தகவல் சொல்வது என்று வழி சொல்லுங்க. நான் சொல்கிறேன்'' என்று அவள் எதிர்கேள்வி கேட்க அவன் விழித்தான்.

''என் செல்லில் இருந்து உங்க அய்யாவுக்கு பெண்ணை அழைத்துச் செல்லும் தகவலையும் என் வீட்டு முகவரியையும் செய்தியாக அனுப்புகிறேன். இப்ப இல்லை என்றாலும் எப்போ போனை ஆன் பண்ணினாலும் உடனே தகவல் அவருக்குப் போய் சேர்ந்து விடும். அவளை இங்கே தனியாக விட்டுச் செல்ல மனசு இல்லை'' என்று கனிவுடன் சொல்ல அவள் சொல்வதில் இருந்த உண்மை புரிந்ததால் அரை மனதாக தலை அசைத்தான்.

சவிதாவை பூந்தமல்லியில் இருந்த அவளுடைய வீட்டில் கொண்டு போய் விட்டு, ''இனி என் வீட்டு விஷயத்தில் நீயோ உன் குடும்பத்தினரோ தலையிட வேண்டாம். மீறி தலையிட்டால் காவல் துறை நடவடிக்கை எடுக்கவும் தயங்க மாட்டேன்'' என்று மிரட்டி விட்டு அலுவலகத்திற்கு வந்த போது அலுவலக

ரிசப்ஷனிஸ்ட் பதட்டத்துடன் அலுவலக வாயிலில் காத்திருந்தாள்.

''சார் உங்க போனுக்கு எத்தனை முறை முயற்சி செய்வது? உங்க மகளின் பள்ளியில் இருந்து மணி கண்டன் அஞ்சரை மணியில் இருந்து, இந்த ஒரு மணி நேரத்தில் பத்து முறை போன் பண்ணி விட்டார். உங்க பெண் அங்கே இல்லையாம்'' என்று கவலையுடன் சொல்ல அவன் ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் தாக்கிய மாதிரி அதிர்ந்தான்.

# 5

மகள் பள்ளியில் இருந்து மதிய நேரத்தில் வந்தது மட்டும் இல்லாமல் சீருடையில் இருந்த ஒரு பெண்ணை அழைத்து வந்ததைக் கண்டு வியப்படைந்தாலும் கேள்விகள் எதுவும் கேட்காமல், ''வாம்மா.. சாப்பிட்டாயா?'' என்று விசாரித்தார் சாரதா.

''நான் சாப்பிட்டேன்மா. இந்த பொண்ணு பேர் காவ்யா. அவள் இன்னும் சாப்பிடலை. அவளுக்கு கொஞ்சம் உளுத்தங்களி நல்லெண்ணெய் விட்டு செய்றீங்களா? நான் இந்த பெண்ணுக்கு குளிக்க ஊற்றி அழைத்து வருகிறேன்'' என்று சுருக்கமாகச் சொன்ன வார்த்தைகளில் விஷயம் புரிந்தது.

ஆனாலும் யார் இந்த பெண்? இவளை அவங்க வீட்டுக்கு அழைத்துச் செல்லாமல் ஏன் இங்கே அழைத்து வந்து இருக்கிறாள் என்ற கேள்விகள் தோன்றாமல் இல்லை.



''தலைக்கு ஊற்றுவது என்றால் வீட்டுக்குச் சொல்ல வேண்டாமா? அவங்க வீட்டில் பெரியவங்க...'' என்று மகளிடம் கோடி காண்பிக்க மறுப்பான பதில் உடனடியாக வந்தது.

''இல்லைம்மா. இப்போதைக்கு யாரும் இல்லை...''

''சரி நீ குளிக்க ஊற்று...'' என்று பெரிய மகளை அனுப்பி விட்டு 'வசந்தி...' என்று சின்ன மகளை அழைத்தார்.

''பக்கத்துல கடைக்குப் போய் சில்க் காட்டனில் ஆயிரம் ரூபாய்க்குள் வருவது மாதிரி ஒரு புடவை ப்ளவுஸ் பாவாடை எல்லாம் வாங்கி வா. ஒரு பொண்ணு வயசுக்கு வந்தால், புது ட்ரெஸ் போடணும்...'' என்று கிசுகிசுப்பாகச் சொல்லிக் கொண்டு இருக்க உள்ளே இருந்து குரல் வந்தது.

''நான் எடுத்துட்டு வந்து விட்டேன்மா. வண்டியில் இருக்கு. எடுத்துட்டு வாங்க'' என்று சொல்ல வசந்தி முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றாள்.

''வீட்டுல இருக்கும் காசை எல்லாம், இப்படி யார் என்றே தெரியாத ஒரு பெண்ணுக்கு வாரி இறைக்கலாம் தப்பில்லை. ஆனால் வீட்டுல பிறந்த பெண்ணுக்குக் கல்யாணம் பண்ண ஏதாவது வேண்டும் என்று கேட்டால் அது தப்பு...?'' என்று பொருமிய தங்கைக்கு பதில் கொடுக்க வாய் துடித்தாலும் அமைதியாக இருந்தாள் ஆனந்தி.

''இந்த காசை எல்லாம் எதிர்பார்த்துக் காத்திருக்கிற அளவில அவங்க இல்லை...'' என்று முகத்தில் அடித்த மாதிரி சொல்ல வேண்டும் என்று வாய் துடித்தாலும்

பதில் பேசவில்லை. பிரியத்தை பணம் என்ற கோலால் அளப்பவர்களுக்கு இந்த மாதிரி விளக்கம் அனாவசியம்.

அக்கறையுடன் மென்மையான குரலில், பூப்படைதல் குறித்த அறிவியல் ரீதியான விளக்கம் கொடுத்ததுடன் உணர்வுப் பூர்வமாக, 'நான் இருக்கிறேன்' என்ற தைரியமும் ஆனந்தி அந்த சிறிய பெண்ணுக்கு அளிக்க அவள் நெகிழ்ந்து போனாள்.

''ஏன் மிஸ் என்னை இங்கே கூட்டிட்டு வந்தீங்க?''

''இப்போதைக்கு நீ பயம் இல்லாமல் சந்தோஷமா இருக்க வேண்டும். அதுக்கு தான் இங்கே கூட்டிட்டு வந்தேன். உங்க வீடு மாதிரி வசதியா இல்லை என்று பார்க்கிறாயா?'' என்று விசாரித்தபடி வெந்நீர் குழாயைத் திறந்து விட்டாள். அவளை ஸ்டூலில் அமர வைத்து உச்சியில் நல்லெண்ணெயும், கன்னத்தில் மஞ்சளும் தடவி அதை மொபைலில் படம் பிடித்தாள்.

''உங்க வீட்டுல எப்படி செய்வாங்க என்று தெரியலை. இருந்தாலும் எனக்குத் தெரிஞ்ச முறையில் செய்கிறேன்...'' என்று சொல்லி தலைக்குக் குளிக்க வைத்தாள். வெங்காய நிற உடலில் அடர் பச்சை நிற பார்டர் இருந்த பாவாடை சட்டை தாவணியுடன் கூடிய ரெடிமேட் ஆடையை அவளிடம் கொடுத்து அணியச் சொன்னாள்.

''பிடிச்சு இருக்கா?''

''எனக்குப் பிடிச்சு இருக்கு மிஸ். பிங்க் கலர் பிடிக்காத பொண்ணு இருக்க முடியுமா? ட்ரெஸ்சை விட, உங்க கூட இப்படிப் பேசிட்டு இருப்பது ரொம்ப பிடிச்சு இருக்கு மிஸ்'' என்று அவளை நெருங்கி அணைக்க வந்தவள் பாதியில் தயங்கி நின்றாள்.



இவள் தன் ஸ்கூலில் ஆசிரியையாக பணி புரிபவள் அவளை அணைக்கலாமா? அணைத்தால் தப்பாக எடுத்துக் கொள்வாளோ என்ற சந்தேகம் வர, அவளின் முக மாற்றத்திற்கான காரணம் அறியாமல் பார்த்தாள் ஆனந்தி.

''என்னம்மா வயிறு வலிக்குதா? கொஞ்சம் வயிற்றில் நல்லெண்ணை தடவி விடட்டுமா?'' என்று கேட்க அவள் ஓடி வந்து அணைத்துக் கொண்டாள்.

அவளுக்கு புட்டும் உளுந்தங்களியும் உடலுக்கு நல்லது என்று தட்டில் வைத்துச் சாப்பிடக் கொடுக்க அவள் கண்ணில் நீர் மல்க ரசித்து உண்டாள்.

''ஹேய் கவி, ஸ்வீட் தானே இது? காரம் சாப்பிடுற மாதிரி கண் கலங்குகிறாய்?'' என்று செல்லமாக கன்னம் வருடிய ஆனந்தியை கண்ணீருடன் அணைத்துக் கொண்டாள்.

''இந்த மாதிரி யாருமே என்னிடம் பேசியதில்லை மிஸ். பாட்டி பிரியமா இருப்பாங்க. அது வேறே மாதிரி இருக்கும். அவங்களும் இப்ப இல்லை. நான்...'' என்று திக்கித் திணற அவளை முதுகில் வருடி ஆறுதல் சொன்னாள்.

''வேறே உனக்குப் பிடிச்சவங்க யாராவது இருந்தால் போன் நம்பர் சொல். நான் கூப்பிடுகிறேன்'' என்று கேட்க அவள் மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''எங்க அப்பா தான் எனக்கு பிரெண்ட் மிஸ்'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல அவள் திகைத்தாள்.

'இந்த அப்பாவிடமே இவள் இவ்வளவு உயிராக இருக்கிறாளே? ஒரு வேளை நிறைய பணம் செலவு

பண்ணி பரிசுகள் வாங்கி தருவானோ? தப்பித் தவறி அவன் அன்பானவனாக இருந்து இருந்தால் இவளை கையிலேயே பிடிக்க முடியாது போல' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாலும் அவளிடம் அவள் அப்பாவைப் பற்றிக் குறைவாக சொல்ல மனம் வரவில்லை.

ஆனால் அவனை நேரில் பார்த்து, 'நறுக்' என்று நாலு கேள்வி கேட்டால் தான் மனசு ஆறும். மகளை அழைத்துச் செல்ல அவன் வந்து தானே ஆக வேண்டும்? அவன் வருகைக்காகக் காத்திருந்தவளுக்கு நேரம் செல்லச் செல்ல, கோபத்தின் அளவு கூடிக் கொண்டே சென்றது.

* * *

''பள்ளியில் உங்கள் பெண்ணை அழைக்கச் சென்றால் அவள் அங்கே இல்லை'' என்ற தகவலை தன்னிடம் சொல்லவே வரவேற்பாளர் வேலை நேரம் முடிந்த பிறகும் காத்திருக்கிறாள் என்பது தனஞ்செயனுக்குப் புரிந்தது.

''எப்ப சுபா போன் வந்தது? என் மொபைலுக்கு என்ன ஆச்சு?'' என்று எடுத்துப் பார்க்க மூன்று மணிக்கு சவிதா செய்த தொல்லையினால் அணைத்து வைத்தது நினைவுக்கு வந்தது. பதட்டத்துடன் அதை எடுத்து உயிர்ப்பித்தவன் மணிகண்டனை அழைத்தான்.

''மணி என்ன ஆச்சு?''

''சார், நான் எப்பவும் போல நாலு மணிக்கு ஸ்கூல் வாசலில் இருந்தேன். ஐந்து மணி வரை காவ்யாம்மா வரலை என்றதும் உள்ளே வகுப்பறைக்குச் சென்று பார்த்தேன். அங்கே யாருமே இல்லை. செக்கியூரிட்டியிடம் கேட்டால் அவருக்கு தகவல் தெரியல'' என்று கவலையோடு சொல்ல அவனுக்கும் பதட்டம் வந்தது.



''ஆபீஸ் ரூமில் ஸ்பெஷல் கிளாஸ் இருக்கா என்று கேட்க வேண்டியது தானே?''

''கேட்டேன் சார். ஆறாம் வகுப்புக்கு ஸ்பெஷல் கிளாஸ் இல்லை என்று சொல்லிட்டாங்க சார்.''

''கிரவுண்டில் செக் பண்ணினாயா? ஷட்டில் ஏதாவது ப்ராக்டீஸ் மேட்ச் இருக்கா, பார்த்தாயா?''

''ஸ்கூல் புல்லா சுத்தி பார்த்துட்டேன் சார். வீட்டுக்கு போன் பண்ணி வேறே யார் வண்டியிலாவது வந்து விட்டார்களா என்று கேட்டேன். இல்லை என்று சொன்னாங்க. என்ன செய்றது என்று தெரியாமல் இங்கேயே நிக்கிறேன்.''

''சரி இன்னும் கொஞ்ச நேரம் நீ அங்கேயே இரு. நான் வீட்டுக்குப் போயிட்டு கொஞ்ச நேரத்தில் கூப்பிடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு போனை வைத்தவனுக்கு குழப்பமாக இருந்தது.

மனக் குழப்பத்தில் இருந்தவனால் ஒழுங்காக அலைபேசியைப் பார்க்க முடியவில்லை பார்த்து இருந்தால் மூன்று மணிக்கு அழைத்தது சவிதா இல்லை என்பதும், மகள் பத்திரமாக இருக்கிறாள் என்ற செய்தியும் அவனை அடைந்து இருக்கும்.

காவ்யாவிடம் மொபைல் இல்லை. எப்படி தேடுவது? காவல் துறைக்குப் போக வேண்டும். எதற்கும் வீட்டுக்கு ஒரு முறை சென்று பார்த்து விடலாம் என்று காரில் கிளம்பினான். கலங்கிய நெஞ்சத்துடன் கடவுளை சரணடைந்து ஏகப்பட்ட பிரார்த்தனைகளை சமர்ப்பித்தான்.

''என் செல்லத்துக்கு ஒன்றும் இல்லாமல் பத்திரமாக திருப்பிக் கொடுத்து விடு பெருமாளே, திருப்பதிக்கு

பாத யாத்திரை வருகிறேன்'' என்று இறைவனைச் சரணடைந்தான். அலுவலகத்தில் இருந்து வீட்டுக்கு வர ஆன அரை மணி நேரமும் அவனின் பதட்டமும் மன இறுக்கமும் அதிகரித்துக் கொண்டே சென்றது.

வீட்டுக்குள் நுழைந்த காருக்கு வெளி கேட்டைத் திறந்தபடி சல்யூட் அடித்த கூர்க்காவின் கண்கள் உள்ளே காவ்யாவை தேடியது அவசரமாக பின்னால் ஓடி வந்தவன், ''சின்னம்மாவை கூட்டிட்டு வரலையா சார்?'' என்று வினவியதும் அவன் கண்கள் இடுங்கியது.

''எங்கே இருந்து கூட்டிட்டு வரணும்? நீங்க என்ன சொல்றீங்க'' என்று அவரின் அருகே வந்து அதட்ட அவர் திணறினார்.

''காவ்யாவோட பள்ளிக்கூட ஆசிரியர் உங்களுக்கு கூட ரெண்டு தடவை போன் பண்ணினாங்க. எஸ்.எம்.எஸ்.கூட அனுப்பினாங்க'' என்று கோர்வையாகப் பேச முடியாமல் தடுமாற, அவன் திகைப்புடன் மொபைலை மீண்டும் ஆராய்ந்தான்.

அவர் கூறியது உண்மை என்பது புரிய குற்ற உணர்வு தலை தூக்கியது. அவள் பத்திரமாக இருக்கிறாள் என்பதை உணர்ந்த உடனே கால்கள் தள்ளாட அப்படியே காரில் தொய்ந்து அமர்ந்தான். அருகே இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து ஒரே மூச்சில் காலி பண்ணினான். கொஞ்சம் ஜீவசக்தி மீண்டு வர, ''ஏன் அவங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போனாங்க...?'' என்று இறங்கிய குரலில் கேட்டான்.

''நல்ல விஷயம் தான் அய்யா நம்ம பொண்ணு பெரிய மனுஷி ஆகி விட்டது. இங்கே வீட்டில் தனியா விட மனசில்லாமல் கூடவே கூட்டிட்டுப் போகிறேன்



என்று சொல்லி அவங்க அட்ரஸ் கொடுத்து இருக்காங்க'' என்றதும் மலர்ந்த முகத்தோடு எழுந்தான்.

''சரி நான் அவளைக் கூட்டிட்டு வருகிறேன். நீங்க மணிகண்டனுக்கு போன் பண்ணி வீட்டுக்கு திரும்பி வரச் சொல்லுங்க. அவன் ஸ்கூலில் காத்திருக்கிறான்'' என்று சொல்லி விட்டு அலைபேசியில் இருந்த முகவரிக்கு சென்று அழைப்பு மணியை அழுத்தினான்.

''யார் நீங்க? உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்ட குரலில் அதீதமான கடுமை இருந்தது. ஐந்தரை அடி உயரத்தில், ஒடிசலாக கம்பீரத்துடன், நேர் கொண்ட பார்வையுடன், இன்னமும் மடிப்பு கலையாத அடர் பச்சை நிற காட்டன் புடவையில் மிக பொலிவான தோற்றத்திலேயே அவள் இருந்தாலும், குரலின் கடுமை அந்த தோற்றப் பொலிவுடன் இணைய மறுத்து தனியாகத் தெரிந்தது. அதுவரை கறபனை செய்து இருந்த இளகிய மனம் படைத்த அந்த டீச்சருக்கும்' இந்த கடுமைக்கும் மலைக்கும் மடுவுக்கும் இடையே உள்ள வித்தியாசம் தெரிய திகைத்து நின்றான் தனஞ்செயன்.

## 6



ஆனந்தியின் வீட்டு முகவரியை மனதில் குறித்துக் கொண்டு வீட்டில் இருந்து கிளம்பியபோது தனஞ்செயனின் மனதில் பல்வேறு உணர்வுகள் அலைகழித்துக் கொண்டு இருந்தது.

காலையில் இருந்தே அவனுக்குப் பல பிரச்னைகள்! எத்தனை முறை சொன்னாலும் புரிந்து கொள்ளாத

சவிதாவை என்ன செய்வது என்ற கலக்கம், இதற்கு ஒத்து ஊதும் அவளின் பெற்றோர்கள் மேல் வந்த கோபம், அத்துடன் மகளைக் காணவில்லை என்ற தகவலும் கிடைக்க அவன் துடித்து போய் விட்டான்.

ஏற்கனவே 24 மணி நேரமும் வீட்டில் தங்கி தன் மகளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்து கொள்ளும் ஒரு நல்ல நிர்வாகி, வேண்டும் என்ற முடிவை எடுத்து இருந்தாலும் அதில் சில தினங்கள் கூட தாமதம் அனுமதிக்க முடியாது என்று தோன்றியது.

பூப்படைந்து விட்ட பதினோரு வயது பெண்ணை, தனியாக வளர்ப்பது இந்தக் காலத்தில் சிரமம்! படித்த நாற்பதுகளில் இருக்கும் நடுத்தர வயது பெண்ணாகப் பார்த்து உடனே முடிவு பண்ண வேண்டும்.

காவ்யாவை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்ற ஆசிரியரின் அக்கறை அவன் மனதிற்கு இதமாக இருந்தது. அன்பின் உருவாக இருக்கும் அவருக்கு மனமார நன்றி சொல்லி பாராட்டினை தெரிவிக்க வேண்டும், என்று மனதில் வரும் வழி எல்லாம் உரு போட்டுக் கொண்டு வந்த தனஞ்செயன், ''யார் நீங்க?'' என்ற அந்த கேள்வியிலும், குறிப்பாக அதில் தெரிந்த கடுமையிலும் விக்கித்துப் போனான்.

அதற்கு காரணமும் ஒன்று மேற்பட்டவை. முதலில் கதவைத் திறந்த பெண் நடுத்தர வயதாக இருக்கக் கூடும் என்று அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக இளமையாக இருந்தாள்.

இரண்டாவது அவளின் முகத்தில் தெரிந்த கடுமை. மூன்றாவது அவளின் 'யார் நீங்க?' என்ற கேள்வி.



''இந்த நேரத்தில் உங்களைத் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கணும். என் பெயர் தனஞ்செயன். காவ்யாவை தேடி வந்தேன்'' என்று அவன் அறிமுகத்தை ஆரம்பித்த வேகத்திலேயே, ''காவ்யாவைத் தேடி வந்தேன் என்றால் என்ன அர்த்தம்? நீங்க அவங்க வீட்டில் வேலை செய்யும் டிரைவரா?'' என்ற அவளின் இடையீட்டில் அதிர்ந்தான்.

''டிரைவரா? என்னைப் பார்த்தால் டிரைவர் மாதிரியா இருக்கு...?'' என்று அதிர்ந்து போய் நம்ப முடியாமல் திகைப்புடன் கேட்ட தனஞ்செயனை மேலும் கீழும் ஆராய்ந்தாள்.

ப்ளாக் ஜீன்ஸ், ஆகாய நீல வண்ண சட்டையில், கருப்பு கோடுகள் குறுக்காகப் போடப்பட்டு இருந்த பிராண்டட் டீஷர்ட் கலைந்து இருந்தாலும், முன் நெற்றியில் புரண்டு கொண்டு இருந்த நல்ல பளபளக்கும் கருப்பில் இருந்த அடர்த்தியான கேசம், ஏசியில் பெரும்பாலான நேரம் இருப்பதால் வந்த சரும பளபளப்பு எல்லாமே அவனின் செல்வச் செழுமையை எடுத்துக் காட்டியது.

''சீருடை இல்லாததால் அப்படிச் சொல்ல முடியவில்லை ஒருவேளை அவங்க அப்பாவின் அலுவலகத்தில் வேலை புரியும் பணியாளோ?'' என்று கேட்டதும், அவன் முகத்தில் இப்போது எரிச்சல் வந்தது.

''என் பேர் தனஞ்செயன். நீங்க ஆனந்தி மேடம் தானே?'' என்ற கேள்வியில் தொனித்த எரிச்சலை அவளால் உணர முடிந்தது. ஆனாலும் கோபம் அடங்கவில்லை. மதியம் இவனை போனில் அழைத்தபோது அடிப்படை நாகரீகம் இல்லாமல் எப்படி எரிந்து

விழுந்தான்? அவன் பேசிய வார்த்தைகளுக்கு முன்னால் இதெல்லாம் ஜுஜுபி என்ற அவளின் கோபம் தொடர்ந்தது. அவன் கேள்விக்கு பதிலாக மேலும் ஒரு கேள்வியையே கேட்டாள்.

''நீங்க யார் என்று நான் கேட்டேன்.''

''ஏன் இப்படி வாசலில் நிற்க வச்சு குறுக்கு விசாரணை பண்றீங்க? நீங்க தானே எனக்கு எஸ்.எம்.எஸ். கொடுத்து காவ்யா இங்கே இருக்கிறாள் என்று சொல்லி இருக்கீங்க. காவ்யா என் பெண். போதுமா? அவள் இங்கே தானே இருக்கிறாள்?''

''காவ்யா உங்களின் பெண் என்பது நினைவு வந்து விட்டதா? பிற்பகல் மூன்று மணி அளவில் அவளைப் பற்றி பேச நான் அழைத்தபோது அது நினைவில் இருந்த மாதிரி தெரியவில்லையே?'' என்று கடுமையான குரலில் அவள் சொல்ல அப்போதுதான் அவனுக்கு ஆனந்தியின் கோபத்திற்கான காரணம் புரிந்தது.

கடவுளே! சவிதாவை பேசிய வார்த்தைகளை இவள் கேட்டு இருக்க வேண்டும். ரொம்ப கடுமையான வார்த்தைகளாக இருக்க வேண்டும். அதான் இப்படி பொரிந்து தள்ளுகிறாள். இளகிய மனதுடன் தன்மானமும் நிறையவே இருக்கிறது!

''ஐ ஆம் சாரி. இன்று பிற்பகல் நீங்க அழைத்த போது...'' என்று விளக்கம் சொல்ல முயலும் போதே, ''ஆனந்தி, யாரும்மா? வாசலிலேயே நிக்க வச்சுட்டுப் பேசுகிறாய்?'' என்று உள்ளே இருந்து குரல் கேட்டதும் வாசலை விட்டு விலகி நின்றாள்.

''உள்ளே வாங்க...'' என்றவளின் குரலில் பெரிதான வரவேற்பு இல்லை.



''காவ்யாவை தேடி அவங்க அப்பா வந்து இருக்காங்க. இது அம்மா சாரதா, இது தங்கை வசந்தி'' என்று மெல்ல முணுமுணுப்பாக ஆனந்தி சொல்லி வசந்தி வாசலில் இருந்த காரை கவனிப்பதிலும், சாரதா அவனை வரவேற்பதிலும் கவனம் செலுத்தினர். அவனது கவனம் ஆனந்தியின் கடுமையான பாவனையில் இருந்து விலக மறுத்தது.

''வாங்க தம்பி, உட்காருங்க. பயப்பட ஒன்றும் இல்லை. நல்ல விஷயம் தான். உங்க வீட்டுல பெரிய வங்க பெண்கள் யாரும் இல்லை என்று கேட்க சங்கடமா இருந்தது. காபி, டீ, என்ன சாப்பிடுறீங்க?'' என்று உபசரித்த சாரதாவின் குரல் கேட்டதும் அவசரமாக அவரின் புறம் திரும்பியவன் கண்கள் பனித்தது. தன் தாயே அவர் உருவில் வந்ததைப் போல உணர்ந்தான்.

மதியத்தில் இருந்து ஒன்றும் சாப்பிடவில்லை. நான் பசியில் இருக்கிறேன் என்று அந்த வினாடியில் வயிறு பொருமியது. ஆனாலும் இப்போது தான் சந்தித்த ஒருவருக்கு தன்னால் சிரமம் வரக் கூடாது என்று நினைத்தான்.

''உங்க உதவிக்கும் அன்பான மனதுக்கும் நன்றிம்மா. காவ்யா இங்கே'இல்லையா? என் சத்தம் கேட்டுக் கூட வரவில்லை'' என்று இழுத்து நிறுத்த எதிரில் நின்று இருந்த ஆனந்தி பல்லைக் கடித்தாள்.

''அவங்க எல்லாம் நம் வீட்டில் சாப்பிடுவாங்களாம்மா? நம் வீட்டில் காலடி பட்டதை நினைத்தே நாலு நாள் டெட்டால் விட்ட தண்ணீரில் கழுவுவாங்க'' என்றதும் அதிர்ச்சியோடு திரும்பிப் பார்த்தான் தனஞ்செயன்.

அவளுக்கு நன்றி சொல்லவேண்டும் பாராட்ட வேண்டும் என்று எண்ணி இருக்க, இவள் கடுப்பில் இருக்கிறாளே? அதை மாற்றியாக வேண்டும் என்று மனதில் உறுதி பூண்டான். ஏற்கனவே மதியம் பேசிய வார்த்தைகளுக்கும் விளக்கம் சொல்லி மன்னிப்புக் கோர வேண்டும்.

''சாரி மேடம்! நான் அந்த மாதிரி எல்லாம் எதுவும் நினைக்கவில்லை. உங்களுக்கு ஏன் வீண் சிரமம் என்று தான் நினைத்தேன். ஏற்கனவே என் பெண்ணுக்காக நீங்க சிரமப்பட்டு இருக்கும் போது கூடுதல் வேலை உங்களுக்கு வேண்டாமே, என்று நினைத்தேன். உங்களுக்கு இந்த மாதிரி சந்தேகம் இருக்கு என்று சொல்லி விட்டதால், இன்று இரவு சாப்பிட்டுட்டு தான் போவோம்...'' என்று ஆனந்தியிடம் பொரிந்து தள்ளியவன் சாரதாவின் புறம் திரும்பினான்.

''எங்க ரெண்டு பேருக்குமே சாப்பாடு ரெடி பண்ணுங்கம்மா. அதுவரை நான் காவ்யாவிடம் பேசிக் கொண்டு இருக்கிறேன். அவள் எங்கே?''

''மதியம் எண்ணெய் தேய்த்து ஊற்றி, சாப்பாடு கொடுத்த உடனே கண் அசந்து விட்டா. அந்த ரூமில் தூங்கிக் கொண்டு இருக்கிறாள்'' என்று சாரதா சொல்ல அவன் ஆனந்தியைப் பார்த்தான்.

''இப்ப நான் உள்ளே போகத் தயங்கக் காரணம் சின்னரூம் என்பதால் இல்லை மேடம். உள்ளே வேறு யாராவது இருக்கலாமே என்பதால்'' என்று நிறுத்த அவளின் இறுகிய முகம் கொஞ்சம் தளர்ந்தது.

''இங்கே நான், அம்மா தங்கை மூவர் தான். வீட்டில் வேறு யாரும் இல்ல'' என்று சொல்ல, அவன் நன்றி



கூறி உள்ளே நுழைந்தான். உள்ளே போகும் போதே அவளின் கன்றிய முகம் மனக்கண்ணில் ஆட, அவள் சொன்ன வார்த்தைகளும் மீண்டும் காதில் ஒலித்தது.

வீட்டில் இவர்கள் மூன்று பேர் மட்டுமா? ஆண் பிள்ளை என்று யாரும் இல்லையா? இது சொந்த வீடா? வாடகை வீடா? அவளுக்கு வயது இருக்கும் போல இருக்கே? இன்னும் திருமணம் ஆகவில்லையா? அல்லது நடந்து...

மேலே யோசிக்கப் பயமாக இருக்க அந்த இடத்திலேயே சிந்தனைக்கு தடை விதித்தான். அங்கே கொட்டிக் கிடக்கும் பணமும், சொத்தை குறி வைக்கும் இதயமில்லா உறவுகளும் பிரச்னை. இங்கே பணமே பிரச்னையாக இருக்க, அதனால் திருமணம் நடக்கவில்லையா? இதென்ன தேவை இல்லாத ஆராய்ச்சி? தலையை உலுக்கிவிட்டு மகளைப் பார்த்தான்.

பத்துக்கு பத்து இருந்த சின்ன அறையில் கட்டில் சுவரை ஒட்டிப் போட்டு இருக்க, அதில் ஒருக்களித்து படுத்து இருந்தாள். வெங்காய நிற உடலும் அடர் பச்சை நிறத்தில் பார்டரும் போட்ட பாவாடை சட்டையும் அடர் பச்சை நிறத்தில் ஜார்ஜெட் தாவணி அணிந்து இருந்தாள்.

புது உடை என்று முதல் பார்வையிலேயே தெரிந்தது. விளம்பரப் படங்கள் எடுக்கும் அவனுக்கு அந்த துணியின் விலையை ஊகிக்க முடிந்தது. ஆயிரம் ரூபாய் இருக்கும். இவ்வளவு பணத்தை தன் பள்ளியில் படித்த ஒரு பெண்ணுக்காக செலவழித்தாளா?

தனக்கு ஆயிரம் ரூபாய் பெரிய விஷயமாக இல்லாமல் இருக்கலாம் அவளுடைய பொருளாதார நிலையில் அது பெரிய தொகை தான். அதற்கு மேலே,

அவளை வீட்டுக்கு அழைத்து வந்து சம்பிரதாயங்களை நிகழ்த்தி, ஆறுதல் சொல்லி அமைதியாக உறங்க வைத்து இருக்கிறாள். அதற்கு என்ன கைம்மாறு செய்வது?

கிடைத்த இடைவெளியில் சுவரோரமாக இருந்த ஒரு ஸ்டீல் பீரோவில் பதித்த கண்ணாடியும், அதன் அருகே ஸ்டீல் நாற்காலியும், இருந்தது. அந்த நாற்காலியில் அமர்ந்தவன் மகளின் தலையை வருடினான்.

''அப்பா'' என்ற அழைப்புடன் அடுத்த சில வினாடிகளில் எழுந்து அமர்ந்த மகளைப் பார்த்த உடனே அவனுக்கு கண்ணில் நீர் கோர்த்தது.

''புஜ்ஜு...'' என்று எழுந்து இயல்பாக கட்டிலில் அமர்ந்தான். சில நிமிடங்களுக்கு முன்பு, அன்னியர் படுக்கக் கூடிய அதிலும் வயதில் இளைய பெண்கள் படுக்கக் கூடிய கட்டிலில் தான் அமர வேண்டாம் என்று எடுத்த முடிவு அப்போது நினைவில் இல்லை.

''செல்லம் ரொம்ப பயந்துட்டியா? வலித்ததா கண்ணம்மா...'' என்று தன்னோடு சேர்த்து அணைத்து முதுகை வருடி ஆறுதலாக விசாரிக்க அவன் மார்பில் புதைந்து மறுப்பாக தலை அசைத்தாள் மகள்.

''இப்ப இல்லைப்பா'' என்ற மகளின் சாமர்த்தியமான பதிலில் அவள் மறைத்த உண்மை புரிய அவன் கண்கள் சுரந்தது.

''மதியம் ரொம்ப வலித்ததா செல்லம்...?'' என்று விசாரித்தவனுக்கு குரல் வெளியே வரவே இல்லை.

''ஆமாப்பா'' என்று திணறலாகச் சொன்னவளுக்கு அன்று பிற்பகல் தனியாக பள்ளியில் படிக்கட்டில் அமர்ந்து இருந்த நினைவில் கண்கள் கலங்க, அதை



உணர்ந்தவன் இறுக்கமாக அணைத்துக் கொள்ள, பல நிமிடங்கள் தந்தையும் மகளும் அந்த அமைதியில் கரைந்தார்கள்.

''அலைச்சலில் வந்து இருக்கிறார். முதலில் டீ கொண்டு போய் கொடு'' என்று அம்மா கையில் திணித்த டீ டம்ளருடன் அறைக்குச் சென்றவள் அங்கே கண்ட காட்சியை கண்டு மனம் உருகி நின்றாள்.

# 7

வயிற்றில் கருப்பைக்குள் இருக்கும் குழந்தை தன் தாயை அணைத்து இருக்கும் பாவனையில் காவ்யாவை அணைத்து, அவளின் உச்சியில் கன்னம் பதித்து, அவளின் முதுகை வருடியவாறு இருந்த தனஞ்செயனின் அந்த தோற்றம் அவள் மனதில் அழுத்தமாகப் பதிந்தது.

மதியம் காவ்யாவைப் பற்றி பேச அலைபேசியில் தொடர்பு கொண்டபோது, ''ஷட் அப் அண்ட் கெட் லாஸ்ட்'' என்று காட்டுத் தனமாக அதட்டியது இவன் தானா என்று ஆனந்திக்கு சந்தேகம் வந்தது. தானா கனவு எதுவும் காணவில்லையே? என்று எண்ணியவள் கையில் இருந்த டீ டம்ளரை தன் புறங்கையில் வைத்து பார்த்தாள். சுட்டது.

''ஸ்..! ஆ! கனவில்லை நனவு தான்'' என்று தனக்குள் சிரித்துவிட்டு, 'காவ்யா' என்ற அழைப்புடன் அறைக்குள் சென்றாள்.

''வாங்க மிஸ், இதுதான் எங்க அப்பா'' என்று பெருமையாக அறிமுகப் படுத்தியவளின் முகத்திலும் மலர்ச்சி இருந்தது.

''பார்த்தேன்மா. பேசிட்டு இருங்க. அரை மணி நேரத்தில் டிபன் பண்ணி விட்டு கூப்பிடுகிறேன்'' என்று காவ்யாவிடம் சொன்னபடி அவனிடம் டம்ளரை நீட்ட அவன் அவளின் முகத்தைப் பார்த்தபடி வாங்காமல் இருந்தான். பல வினாடிகள் கழித்தே அவன் இன்னும் டீ டம்ளரை வாங்கவில்லை என்பதை உணர்ந்து அவனைப் பார்க்க அவன் புன்னகை செய்தான்.

''டீ-க்கும் எல்லா கவனிப்புக்கும் தேங்க்ஸ்'' என்று புன்னகையோடு சொல்ல அவள் அந்த புன்னகையிலும் பேச்சிலும் தன்னை மறந்து ஒரு கணம் நின்றாள்.

''வெல்கம்'' என்ற முணுமுணுத்து விட்டு அறையை விட்டு வெளியேற அவனின் பார்வை அவளைத் தொடர்ந்தது.

''இவங்க உங்க கிளாஸ் மிஸ்ஸா அம்மு?''

''இல்லைப்பா. மிஸ் ஒன்பது, பத்து வகுப்புகளுக்கு எடுப்பவங்க...'' என்றதும் அதிசயமாகத் திரும்பினான்.

''பின்னே எப்படி உன்னை அவங்களுக்குத் தெரியும்?''

''நான் டாய்லட் பக்கத்தில வலியுடன் அழ... ப்ச் வயிற்று வலியுடன் நின்று இருந்தபோது பார்த்து டிஸ்பென்சரி கூட்டிட்டுப் போய் ஜூஸ் குடிக்க வச்சு நம்ம வீட்டுக்கு அழைச்சு வந்தாங்க. அங்கே யாரும் இல்லை என்றதும் தனியா விட யோசிச்சுட்டு இங்கே கூட்டிட்டு வந்துட்டாங்க.''

''ஆனால் வீட்டுல தகவல் சொல்லி விட்டு வந்து இருக்கலாமேடா...? அப்பா ரொம்ப பயந்து விட்டேன் தெரியுமா?''

அவர்கள் பேசிக் கொண்டு இருந்தது சின்னக் குரலில் என்றாலும் வேலையாக வெளியே இருந்த ஆனந்தியின் காதுகளிலும் அது விழுந்தது.



'தகவல் சொல்றதுக்கு நீ போனை எடுக்கணும்! கேள்வி கேக்கறான் பாரு கேனை மாதிரி?' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

அவளா இப்படி எல்லாம் அவனைப் பற்றி நினைத்தது? மனசுக்குள் என்றாலும் எப்படி இப்படி மரியாதைக் குறைவாக நினைக்கலாம்? சமூகத்தில் மிகப் பெரிய அந்தஸ்தில் இருக்கும் யாரோ ஒருவன்! அவனுக்கு, இல்லை. அவருக்கு, ம்ஹூம்! அவர் பெண்ணுக்கு சின்னதாக ஒரு உதவி செய்து விட்டதால் இந்த மாதிரி நினைக்க இவளுக்கு யார் உரிமை கொடுத்தது? வெளியே அவளின் மனநிலை தெரியவில்லை என்பதால் தந்தை மகளுக்கு இடையே சின்னக் குரலில் பேச்சு தொடர்ந்தது.

''ஒருமுறை பள்ளியில் இருந்தும், இரண்டு முறை வீட்டில் இருந்து கிளம்புவதற்கு முன்பும், மிஸ் மூன்று தடவை போனில் உங்களைத் தொடர்பு கொள்ள முயற்சி பண்ணினாங்கப்பா. முதல் தடவை கட் ஆகிடுச்சு. அடுத்த இரண்டு முறையும் சுவிட்ச் ஆஃபில் இருந்தது. அவங்க என்ன பண்ணுவாங்க?''

''சாரி புஜ்ஜூ. நான் வேறே வேலையில் பிசியா இருந்ததால்...'' என்று திணறியவனுக்கு இப்போது தான் 'கெட் லாஸ்ட்' என்று தான் கத்தியது சவிதாவிடம் இல்லை. ஆனந்தியிடம் என்பது முன்பு சந்தேகமாகத் தோன்றியது இப்போது உறுதியானது.

அவளின் அந்த சுய கௌரவமும் தன்னம்பிக்கையும் மனதை ஈர்த்தது. தன் மனம் காயப் பட்டதை காவ்யா விடம் காட்டிக் கொள்ளவில்லை என்பதும், ஓரளவிற்கு பொறுப்பாகவே எல்லாக் காரியங்களையும் செய்து இருப்பதையும் மனம் ரசித்தது.

''என்னிடம் ஏன்பா சாரி சொல்றீங்க? எனக்கு தான் உங்களைப் பற்றித் தெரியுமே? நீங்க சாரி சொல்வதாக இருந்தால் மிஸ் கிட்டே தான் சொல்லணும். ஆனால் சாரியை விட தேங்க்ஸ் தானேப்பா பொருத்தமா இருக்கும்?'' என்று சூழ்நிலை புரியாமல் மகள் கேட்க அவன் தலை அசைத்தான்.

''தேங்க்ஸ் சொல்லலாம் காவ்யா'' என்று சொன்னவன் 'சாரியும் சொல்லணும் குட்டி' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

''வெறுமனே வாயில் வார்த்தையால் மட்டும் நன்றி சொல்லாமல் மிஸ்க்கு ஏதாவது கிப்ட் பெரிசா அவங்களுக்கு ரொம்பப் பிடிச்ச மாதிரி வாங்கிக் கொடுக்கணும்பா.''

''வாங்கிக் கொடுக்கலாம் குட்டிம்மா. ஆனால் மிஸ் மனசு ஹர்ட் ஆகாமல் பார்த்து கொடுக்கணும்.''

''நம்ம பிரியமா வாங்கிக் கொடுத்தால், அதைப் பார்த்து மிஸ் ஏன் ஹர்ட் ஆகணும்? எனக்குப் புரியலையே...?''

இதற்கு என்ன பதில் சொல்வது என்று திணறியவனைக் காப்பாற்ற வந்த தேவதையாக ஆனந்தியின் குரல் ஒலித்தது.

''டிபன் சாப்பிட அப்பாவைக் கூட்டிட்டு வா கவி'' என்ற ஆனந்தியின் குரல் அறைக்குள் எட்ட அது அவனை இரண்டு விதமாகத் தாக்கியது. முதலாவது கவி என்று அவளை சுருக்கிச் செல்லமாக அழைத்தது. இரண்டாவது அப்பாவை அழைத்து வா என்று மட்டும் சொன்னது அந்த வார்த்தையில் பாவனையில் அவனுக்கு என்னென்னவோ தோன்றி அதிர வைத்தது.



''வாங்காப்பா, சாப்பிட போகலாம்'' என்று கை பற்றி எழுந்தவள் அவன் முகம் தீவிர பாவனையில் இருப்பதைப் பார்த்துத் தயங்கினாள்.

''ஏன்பா இங்கே சாப்பிட உங்களுக்கு இஷ்டம் இல்லையா? வீட்டுக்குப் போகலாம் என்று பார்க்கறீங்களா?''

''ச்சே! அப்படி இல்லை புஜ்ஜு. உன்னைப் பார்க்க அறைக்குள் வருவதற்கு முன்னாடியே நான் இங்கே சாப்பிடுகிறேன் என்று பாட்டியிடம் சொல்லி விட்டு தான் வந்தேன்'' என்று சொல்ல அவள் சிரித்தாள்.

''பாட்டியா? இது டூ மச்பா.''

''ஹேய் எனக்கு சொல்லலைடா குட்டி உனக்கு சொன்னேன்.''

''ஓகே நம்புகிறேன்'' என்று சந்தோஷமாகச் சொன்னவள் அவனின் கை பற்றி மலர்ந்த முகத்துடன் அறையில் இருந்து ஹாலுக்கு வர அங்கே இரண்டு இலைகளில் உணவு பரிமாறி இருந்தது.

''ஏன் இரண்டு இலை மட்டும் போட்டு இருக்கீங்க? நீங்க சாப்பிட வேண்டாமா? மணி எட்டாகப் போகிறதே? எல்லோரும் சேர்ந்தே சாப்பிடலாம் உட்காருங்க'' என்று அவன் உபசரிக்க சாரதா மறுப்பாகத் தலை அசைத்தார்.

''நீங்க முதலில் சாப்பிடுங்க தம்பி.''

''என்னம்மா நீங்க? ரெண்டு பேருக்கு பரிமாற மூன்று பேரா? ரொம்ப ஜாஸ்தி கவனிப்பா இருக்கே? மிஸ் நீங்க எங்களுக்கு கம்பெனி கொடுக்கலாமே?'' என்று தனஞ்செயன் இயல்பாகச் சொல்ல அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

அவன் ஆசிரியை என்ற அர்த்தத்தில் மிஸ் என்று சொல்கிறானா? திருமணம் ஆகாதவள் என்ற அர்த்தத்தில் மிஸ் சொல்கிறானா? என்ற ஆராய்ச்சி தோன்றியது.

''பள்ளியில் இருந்து வந்ததும் காவ்யாவுக்கு செய்த புட்டும் களியும் நாங்க எல்லோருமே சாப்பிட்டோம். உங்களைப் பார்த்தால் மதியமும் சாப்பிடாத மாதிரி தெரியுது. நீங்க முதலில் சாப்பிடுங்க'' என்று இறுக்கமான குரலில் சொன்னாள் ஆனந்தி.

''மிஸ் என்னுடன் சாப்பிட முடியாது என்று குச்சி வைத்து மிரட்டாத குறையாக சொல்லிட்டாங்க. நீங்க கம்பெனி கொடுக்கறீங்களா வசந்தி?'' என்று கேட்க அவள் திகைத்தாள்.

முதல் முறை இந்த வீட்டுக்கு வருகிறோம் என்ற தயக்கமே இல்லாமல் இவ்வளவு இயல்பாகப் பேசுகிறாரே? எப்படி சாத்தியம்? ஒரு வேளை அக்காவுக்கு ஏற்கனவே தெரிந்தவரோ? அப்படி இருந்தால் அதை டெவலப் பண்ண வேண்டியது உடனடி தேவை. அவள் புன்னகையோடு அருகே அமர்ந்தாள்.

''உங்களுடன் ஒன்றாக இணைந்து சாப்பிடக் கொடுத்து வைத்து இருக்கணுமே சார்'' என்று மரியாதையாகச் சொன்னவள் உள்ளே போய் ஒரு தட்டை எடுத்து வந்து அவன் அருகில் அமர, சாரதாவும் ஆனந்தியும் கேள்வியோடு பார்க்க, நன்றியோடு புன்னகைத்தான் தனஞ்செயன்.

''தேங்க்ஸ் வசந்தி. இப்படி தான் இயல்பா இருக்கணும். ஆமா இதென்ன கலர் கலரா இத்தனை டிஷ் பரிமாறி இருக்காங்க? இதெல்லாம் என்ன என்று சொல்.



சாப்பிடலாமா வேண்டாமா என்றும் சேர்த்து சொல்லு'' என்று தன்னை இன்னும் மரியாதை பன்மையில் நிறுத்தி வைத்து இருக்கையில் இவனிடம் எப்படி இயல்பாக ஒருமைக்குத் தாவினான் என்ற கேள்வி ஆனந்தியின் மனதில் எழுந்தது.

கேள்விகளை மனதுக்குள் மறைத்து உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் மூவருக்கும் பரிமாறினாள். இடை இடையே விளக்கங்களும் கொடுத்தாள்.

''குழந்தைகள் பருவம் அடையும் இந்த நேரத்தில உதிரப் போக்கு இருப்பதால் இரும்பு சத்து கூடுதலாகக் கொடுக்க வேண்டியது அவசியம். அதனால் அரிசியோடு பிற தானியங்களையும் சர்க்கரைக்கு பதிலாக வெல்லம் கருப்பட்டி போன்ற பொருட்களை பயன்படுத்தி உணவு வகைகளை தயார் செய்து இருக்கிறோம். உங்களுக்குச் சாப்பிட்டு பழக்கம் இல்லை என்றால், இட்லி சாம்பார் தேங்காய் சட்னியோடு இருக்கு. அதைச் சாப்பிடுங்க'' என்று சொன்னவளின் குரலில் உபசரிப்பு இல்லை.

அது வெறும் தகவல் பரிமாற்றம் என்ற அளவிலேயே இருக்க தனஞ்செயனுக்கு அவளின் மனநிலையை உணர முடிந்தது. அவளிடம் பேச வேண்டும். மன்னிப்புக் கேட்க வேண்டும். அதுவரை இவள் இப்படி தான் இருப்பாள். அது தப்பும் இல்லை.

உணவினை முடித்து எழுந்தவன், ''காவ்யாவை இங்கே வைத்து நல்லா கவனித்து இருக்கீங்க. இதுக்கு வெறும் வார்த்தையில் நன்றி சொல்லி முடித்துவிட எனக்கு இஷ்டம் இல்லை. ஒரு லீவு நாளில் எங்க வீட்டுக்கு நீங்க எல்லோரும் வந்து டின்னர் சாப்பிடணும்

அந்த நாளை நான் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன். இப்ப நான் காவ்யாவை அழைத்துக் கொண்டு கிளம்பட்டுமா?'' என்று எழுந்த பிறகே அவனும் காவ்யாவும் கிளம்பி விடுவார்கள் என்ற ஞானோதயமே ஆனந்திக்கு வந்தது.

''ஒரு நிமிஷம்'' என்றபடி தன் பின்னால் வந்தவளை வியப்புடன் பார்த்தவனுக்கு தான் இன்னும் பிற்பகல் கடிதத்திற்கு மன்னிப்பு கேட்கவில்லை என்பதும் உரைத்தது.

''சொல்லுங்க மிஸ்.''

''அங்கே வீட்டில் பெண்கள் யாரும் இல்லை என்று சொன்னீங்க...?'' என்று தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் மொட்டையாக ஒரு கேள்வி கேட்க அதற்கு என்ன பதில் சொல்ல என்று தெரியாமல் திகைத்தான் தனஞ்செயன்.

''வீட்டில் சமையல் காரம்மாவும் தோட்டக் காரம்மாவும் இருக்காங்க.''

''இல்லை, நான் அதைச் சொல்லவில்லை இன்னும் ஐந்து நாட்களுக்காவது அவளுக்கு சத்துள்ள ஆகாரமும் ஓய்வும் தேவை. 24 மணி நேரமும் அருகே இருந்து கவனித்துக் கொள்வது மாதிரியான ஒரு அன்பான பெண் துணை அவளுக்குத் தேவை என்ற அர்த்தத்தில் சொன்னேன் மிஸ்டர் தனஞ்செயன்'' என்றவளின் குரலில் அக்கறை கூடுதலாகவே இருந்தது.

''அவங்க அம்மா வழி பாட்டி பூந்தமல்லியில் இருக்காங்க. அவங்களை வரச் சொல்கிறேன். அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம். மதியம் உங்களிடம் கடுமையாகப் பேசியதற்கு சாரி. அந்தக் கடுமையான



வார்த்தைகள் உங்களை நோக்கிச் சொல்லப்பட்டவை இல்லை. அந்த மாதிரி கடுமையாக பேசுவது என் இயல்பும் இல்லை'' என்று காவ்யாவின் காதில் விழாத வாறு மென்மையாக உரைத்து விட்டு காரில் ஏற ஆனந்தியின் உள்ளே அந்த வினாடியில் ஏதோ மாற்றம் நிகழ்ந்தது.

காரை கிளப்பிய தனஞ்செயனுக்கும் உள்ளே பிசைந்தது காரணமும் பலவாக இருந்தன. முன்பின் அறிமுகம் இல்லாத ஒரு பெண் இவ்வளவு அக்கறையுடன் தன் மகளைப் பார்த்துக் கொள்ள இவளின் சித்தியோ பாட்டியோ தன்னைப் பார்க்க வருவதில் காட்டும் அக்கறையில் பாதியை ஏன் இவளைப் பார்ப்பதில் காட்டவில்லை என்ற வருத்தம் தோன்றியது.

அந்த வீட்டில் தப்பி பிறந்த தேவதை வினோதினி. அதனால் தான் அவளின் ஆயுசும் கம்மியாகி விட்டதோ என்ற எண்ணம் தோன்ற பெருமூச்சு வந்தது.

இவளிடம் சொன்னாலும் அங்கே வரச் சொல்ல முடியாது. முதலில் அவர்கள் காவ்யாவை நல்லபடியாக கவனித்துக் கொள்வார்களா என்பதே சந்தேகம். அடுத்து இலவச இணைப்பாக மாமியாருடன் சேர்ந்தே அந்த சவிதாவும் வருவாளே? அவளை எப்படி தவிர்ப்பது என்ற யோசனையில் திகைத்தான் தனஞ்செயன்.

# 8

வாசல் வரை சென்று தனஞ்செயனையும் காவ்யாவையும் அனுப்பி விட்டு உள்ளே வந்த ஆனந்திக்கு,

அங்கே துளைக்கும் பார்வைகளும் கேள்விகளும் காத்திருந்தன.

''மிஸ்டர் தனாவை உனக்கு முன்னாடியே தெரியுமா ஆனந்தி?'' என்று தங்கையின் கேள்வி அவள் ஹாலுக்குள் அடி எடுத்து வைக்கும் முன்பே அவள் காதுகளை வந்தடைய, அவளுக்கு எரிச்சல் மூண்டது.

ஏற்கனவே தன் மனதிற்குள் இருக்கும் உணர்வுகளையே இனம் காணத் தெரியாமல் கடுப்புடன் இருந்தவள் தங்கையின் துருவலில் மேலும் கடுப்பானாள்.

''தெரியாது யாரையும் தெரிஞ்சு வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் எனக்கில்லை'' என்று ஆனந்தி பட்டென்று சொல்ல சாரதா அவளைக் கூர்மையாக ஆராய்ந்தார்.

இவள் தெரியவில்லை என்று சொல்வதே தெரியும் என்று சத்தமாகச் சொல்வது மாதிரி இருக்கே? முன் பின் தெரியாதவர் மீது. அதுவும் இலகுவாக இந்த வீட்டில் பழகி எளிமையாக தங்களின் வீட்டிற்கும் அழைப்பு விட்டுச் சென்ற அவ்வளவு பெரிய பணக்காரன் மீது, இவள் இவ்வளவு கோபம் காட்ட வேண்டிய அவசியம் இல்லையே என்ற எண்ணம் தோன்றியது.

''நீ தெரியாது என்று சொல்கிறாய். ஆனால் அவரின் பார்வை உன்னை ஒவ்வொரு வினாடியும் பின் தொடர்ந்த மாதிரி எனக்குத் தோன்றியது. நீ மட்டும் என்ன? அவரை வாசல் வரை போய் வழி அனுப்பி விட்டு வந்துட்டு யாரிடம் கதை விடுகிறாய்?'' என்றவளின் குரலில் நான் உன்னை நம்பவில்லை என்ற பாவனை தெளிவாகத் தெரிந்தது.



''நான் சொல்வது நிஜம் நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம்'' என்று தங்கையிடம் சொல்லி விட்டு, அம்மாவிடம் திரும்பி, ''எனக்கு பசிக்குதும்மா, சாப்பிடலாம்'' என்று பேச்சை மாற்றினாள்.

''சரக்கு மலிந்தால் சந்தைக்கு வரட்டும். சீக்கிரம் சாப்பிட்டு வாங்க. என் கல்யாண விஷயம் அப்படியே நிற்கிறது அதை மறந்து விட வேண்டாம்'' என்று சொல்லி விட்டு தொலைக்காட்சி பெட்டியை உயிர்ப்பித்து அதில் ஆழ்ந்து போனாள்.

'பசிக்கிறது' என்று சொல்லிவிட்டு உணவைச் சாப்பிடாமல் அளைந்து கொண்டு இருந்த ஆனந்தியைப் பார்க்க சாரதாவுக்குச் சங்கடமாக இருந்தது.

''என்னடா யோசிக்கிறாய்?''

''வேறென்னம்மா? வசந்தி கல்யாணத்தைப் பற்றி நான் யோசித்துக் கொண்டு இருக்கிறேன்'' என்று கசப்பாக சொல்ல அவர் நிமிர்ந்தார்.

''என்னைப் பற்றி கவலைப் படாதே ஆனந்தி. இந்த வீட்டை எனக்காக பிடித்து வைக்க வேண்டும் என்று நினைக்காதே. இவர்களுடன் பேசி ஜெயிக்க உன்னால் முடியாது. நீ எங்கே இருக்கிறாயோ அங்கே உன்னுடன் நானும் இருந்து கொள்வேன். நான் உயிரோடு இருக்கும் வரை எனக்கு ரெண்டு வேளை கஞ்சி ஊற்ற மாட்டாயா?''

''அம்மா, இப்ப என்ன சாவதைப் பற்றி பேச்சு? கண்டதையும் நினைக்காதீங்க'' என்று அதட்டினாள்.

''எல்லோரும் அவங்கவங்க வாழ்க்கையைப் பற்றித் தனித் தனியா முடிவெடுக்கிறாங்க? நீ மட்டும் ஏன்டா

அப்படி எடுக்கலை?'' என்று கேட்கும் போதே சாரதாவிற்கு கண்கள் கலங்கி குரல் தழுதழுத்தது.

''நான் உங்க பொண்ணும்மா, யார் எக்கேடு கெட்டுப் போனால் எனக்கென்ன என்று என்னால் இருக்க முடியாதும்மா.''

''அவங்களும் என் வயிற்றில் பிறந்தவங்க தானேடா?''

''அதைப் பற்றிப் பேசி என்ன ஆகப் போகுதும்மா? விடுங்க இன்றைய பிரச்சனைக்கு வருவோம்.''

''அது சரி. வீட்டை பாங்க்ல அடமானம் வச்சா எவ்வளவு கிடைக்கும்? இவங்க கேட்கும் அளவுக்கு பணம் வருமா?''

''வசந்திக்கு பத்து லட்சம், என்றால் அதற்குக் குறைவாகக் கார்த்திக்குக் கொடுக்க முடியாது. சொத்து மதிப்பு 40 லட்சம் இருக்கு இல்லையா? அதனால் இவங்க கேட்கும் அளவுக்குக் கடன் கிடைக்கும். ஆனால் அதைத் திருப்பிக் கட்டுவது சிரமம். ஆனால் இருபது லட்சம் கடன் வாங்கினால், மாசம் முப்பதாயிரம் ரூபாய் கட்டுவது மாதிரி வரும். வரும் வாடகை அதற்கு போதாது'' என்று தயக்கத்துடன் சொல்ல அவர் ஆமோதித்தார்.

''அது மட்டும் இல்லை ஆனந்தி, அவ்வளவு கஷ்டப்பட்டு நீ உன் வாயை கட்டி வயிற்றைக் கட்டி காப்பாற்றின சொத்தை பங்கு போட நான் மண்டையைப் போட்டதும் உரிமை கொண்டாடிக் கொண்டு அவங்களும் வருவாங்க.''

''அம்மா!'' என்ற அவளின் அதட்டல் அவரின் பேச்சை நிறுத்தியது.



''மனிதனா பிறந்த எல்லோருமே ஒரு நாள் சாகத்தான் வேண்டும். ஆனால் அதற்காக ஒரு ஒரு வாக்கியத்திற்கு நடுவிலும் அதை இழுக்க வேண்டிய அவசியம் இல்லை'' என்று அதட்டலாக சொல்ல அவர் தலை அசைத்தார்.

''உனக்காகவாவது நான் இன்னும் நீண்ட நாள் இருக்கணும் ஆனந்தி அதுதான் என் ஆசையும், என்றவரின் கண்கள் பனித்தது.

''சரிம்மா, நான் இன்றே பேப்பரிலும் இன்டர்நெட்டிலும் நம் வீடு விற்பனைக்கு என்று விளம்பரம் கொடுத்து விடுகிறேன். அப்படியே பள்ளிக்கு அருகில் வீடு ஏதாவது வாடகைக்கு கிடைக்குமா என்று பார்க்கிறேன். இன்னும் இரண்டு மாதங்களுக்குள் வீடு விற்பனை ஆன கையோடு அவள் கல்யாணத்தை வைத்து விடலாம்'' என்று அவள் சொல்லி வாயை மூடு முன்பு உள்ளே வந்தாள் வசந்தி.

''ஆனந்தி, நீ புத்திசாலி. கணக்கு டீச்சர் வேறே. கேட்கவா வேண்டும்? சீக்கிரமே இந்த முடிவுக்கு வருவாய் என்று எனக்குத் தெரியும். ஏற்கனவே இந்த வீட்டை வாங்கத் தயாரா ஒரு வாடிக்கையை ஜெய் பிடித்து வைத்து இருக்கிறார். பதினைந்து தினங்களிலேயே பண பரிவர்த்தனை முடித்துக் கொள்ளலாம். அடுத்த மாதம் ஏழாம் தேதி முகூர்த்தத்திலேயே கல்யாணம் வச்சுக்கலாம் என்று ஜெய் சொன்னார்'' என்று சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, சாரதாவும், ஆனந்தியும் உச்ச பட்ச அதிர்ச்சியுடன் அவளை வெறித்தனர்.

''இந்த வீட்டை விற்பது தொடர்பாக நாம் முடிவெடுப்பதற்கு முன்பே ஜெய் ஏற்கனவே வாடிக்கை வரை பிடித்து விட்டாரா?'' என்று கேட்ட ஆனந்தியின் குரலில் இருந்த நக்கல் வசந்திக்குப் புரிந்தது.

''அது அவரா ஒன்றும் செய்யவில்லை. சதாசிவம் பெரியப்பாவும் கார்த்திக்கும், அவரிடம் கெஞ்சிக் கேட்டு கொண்டதால் தான், தெரிந்தவர்களிடம் சொல்லி வைத்தார்.''

''என்ன அப்படிப் பார்க்கறீங்க? நான் என்ன தப்பா சொல்லி விட்டேன்? ஏற்கனவே கார்த்தி சொல்லிக் கொண்டே இருந்தான். எப்படியும் அவன் பெங்களூரில் இருந்து வரப் போவதில்லை. நானும் கல்யாணம் ஆகி ஜெய் வீட்டுக்குச் சென்று விட்டால் இந்த வீடு சும்மா தானே இருக்கும். அதனால் விற்று விடலாம் என்று யோசித்தது'' என்று மேலும் கனலைக் கொட்டினாள்.

''உன் கல்யாணம் முடிந்த பிறகு, நாங்க ரெண்டு பேரும் உன்னோட ஜெய் வீட்டில் வந்து இருக்க வேண்டுமா வசந்தி?'' என்று ஆத்திரமாகக் கேட்ட அம்மாவின் கோபம் அவளுக்குப் புரியவில்லை.

''என்னம்மா என்னுடன் எப்படி வந்து இருப்பீங்க? பொதுவா அம்மா பையன் வீட்டில் இருப்பது தானே நம் பண்பாடு.''

''அப்ப பெங்களூர் போகச் சொல்கிறாயா?'' என்று விடாமல் கேட்டார்.

''அது நீங்க கார்த்தியுடன் பேசிக்கோங்க.''

''அதாவது கொள் மட்டும் வேண்டும் கடிவாளம் வேண்டாம். இந்த வீட்டை விற்கணும் என்று பேசும் போது கார்த்தியுடன் நீ பேசுவாய் அந்த விற்பனையின் விளைவுகளுக்குப் பொறுப்பேற்க மாட்டாய் அப்படித் தானே?'' என்றவருக்கு உணர்ச்சி பெருக்கில் கண்ணீரும் படபடப்பும் சேர்ந்தே வர ஆனந்தி ஓடி வந்து



அவரை அணைத்துக் கொண்டாள் வசந்தியின் கன்னத்தில் ஓங்கி இரண்டு அறை வைத்தால் என்ன என்ற அளவிற்கு ஆத்திரம் பொங்கியது.

''வாயை மூடு நீ எல்லாம் ஒரு பெண்ணா? எல்லாம் கார்த்திக்கின் வேலை. உனக்கு ஒன்றுமே தெரியாது. இப்படிப் பேச வெட்கமா இல்லை? வீட்டை அடமானம் வைத்தால் கடன் கட்ட சிரமம் என்று பேசியது உன் காதில் விழாது. அம்மா செத்து விடுவேன் என்று புலம்பியது உன் காதில் விழாது. ஆனால் வீட்டை விற்று விடலாம் என்று நாங்க முடிவெடுத்த உடன், ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டியவள் ஆச்சே? உன்னை மாதிரி சுயநலம் பிடித்தவர்களிடம் எனக்கு என்ன பேச்சு? ஜெயராஜிடம் அந்த வாடிக்கையாளரை நான் காலை ஏழு மணிக்கு வரச் சொல்'' என்று தங்கையிடம் பொரிந்து தள்ளி விட்டு தாயிடம் திரும்பினாள்.

''ஏன்மா தேவை இல்லாத விஷயத்துக்கு மனசை அலட்டிக்கறீங்க? வீட்டை விற்கலாம் என்று முடிவு பண்ணிய பிறகு எதற்கு வாக்குவாதம்? ஆக ஜாஸ்தி ஆகப் போகிறது. அவங்களுக்கு எப்படியோ எனக்கு நீங்க வேண்டும்'' என்று ஆறுதல் சொல்லி அழைத்துச் சென்றாள்.

அம்மாவுக்கு மாத்திரை கொடுத்து தூங்க வைத்தாள். பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த அன்னையை குழந்தையாக மாற்றி தலையை வருடி ஆறுதல் படுத்தித் தூங்க வைத்த தாயுமானவளின் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது.

# 9



இரவு ஒன்பது மணி அளவில் வீட்டுக்கு வந்து சேர்ந்தவன் மகளை தன் அறையில் விட்ட பிறகு, பிற பகலில் பாதியில் விட்டுச் சென்று இருந்த வேலையின் தொடர்ச்சி என்ன ஆனது என்பதை அறிந்து கொள்ள சில நிமிடங்கள் செலவழித்தான்.

அதன் பிறகே ஆனந்தியிடம் தன் மாமியாரை வரச் சொல்கிறேன் என்று சொன்னது நினைவில் வந்தது. அவரை அழைக்க மனம் வரவில்லை. உறவு என்று அவர் பின்னால் வந்து சண்டை போட வாய்ப்பு இருக்கிறது. எனவே அவருக்கே சொல்லி விடலாம் என்று முடிவு பண்ணி அழைத்து தகவல் தெரிவித்ததும் எதிர்முனையில் கேட்ட பதில் கேட்டு திகைத்தான்.

''மாப்பிள்ளை, அவளுக்கு இன்னும் பத்து வயசு கூட ஆகலை. இதை இப்போதைக்கு வெளியே சொல்ல வேண்டாம். பள்ளிக்குப் போகவில்லை என்றாலும் கேள்விகள் வரும். படிக்கிற பெண்ணை பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டாம் என்று சொல்லி நிறுத்துவது நியாயம் இல்லை. நாளை மாலை நான் வீட்டுக்கு வருகிறேன். அவளுக்கு புடவை கட்டி வீட்டிலேயே தீட்டு கழித்து விடுகிறேன்'' என்று சொன்னதும் அவனுக்குப் பெருமூச்சு வந்தது.

சிறிய பெண் பூப்படைவதை வெளியே சொல்ல வேண்டாம் என்பதில் நியாயம் இருக்கு. அந்த சின்ன



பெண்ணின் உடல் வலிகளையும் மன உணர்வுகளையும் சரி பண்ண வேண்டாமா? அவர்கள் எந்த பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் அதே சமயத்தில் உரிமையையும் விட்டுத் தர விரும்பவில்லை. மாலையில் வந்து தீட்டு கழிக்கும் சடங்கு நடத்துவதாகக் கதை சொல்கிறார்.

இவரிடம் மேலே பேசி என்ன செய்வது என்று போனை வைத்த பிறகு, ''ஐந்து நாட்கள் வீட்டில் இருக்க வேண்டியது அவசியமா? உடல் ரீதியாக அது தேவையா?'' என்று ஆனந்திக்கு அலைபேசியில் ஒரு தகவல் அனுப்பினான். ஒரு கேள்விக்கு பெண் என்ற முறையில் அறிவியல் ரீதியாக பதில் சொல்வதில் அவளுக்கு என்ன நஷ்டம் என்று எண்ணி தான் அந்தக் கேள்வியை கேட்டான்.

அதற்கு பதில் வரும் வரும் என்று ஆவலுடன் காத்திருந்தவனுக்கு ஏமாற்றமே! விடியும் வரையிலும், ஏன் அதற்குப் பின்னும் கூட ஆனந்தியிடம் இருந்து பதில் வரவில்லை என்பது அவனை துவள வைத்தது. அவள் ஏன் தன்னிடம் பேச வேண்டும் என்ற உண்மை மூளைக்குப் புரிந்தாலும் மனசு வலித்தது.

காலையில் வழக்கமான உணவை முடித்து மகளை தன் காரில் ஏற்றிக் கொண்டு பள்ளியில் இறக்கி விடும்போது, ''இப்ப வயிறு வலிக்குதா கண்ணம்மா? வேறே எதுவும் உதவி வேண்டுமா ஆனந்தி மிஸ் போய் பார்க்கலாமா?'' என்ற கேள்விகளை நூறாவது முறையாக விசாரித்தான்.

''இல்லைப்பா. நேற்று டிஸ்பென்சரியில் மாத்திரை கொடுத்தாங்க. வலி இருந்தால் நானே போட்டுக்

கொள்வேன். மிஸ் எங்கே இருப்பாங்க என்று எனக்குத் தெரியும். தேவை என்றால் நானே பார்த்துக் கொள்கிறேன்'' என்று முகம் சுளிக்காமல் மகளும் பொறுப்பாக பதில் சொல்லத் தலையை வருடினான்.

''அப்பா உன்னைச் சரியா கவனிக்கலை என்ற குறை எதுவும் இருக்கா கண்ணம்மா?''

''நிச்சயமா இல்லைப்பா. என்னப்பா இப்படி எல்லாம் கேட்கறீங்க?''

''ஜாக்கிரதை செல்லம்'' என்று மகளை வழி அனுப்பி விட்டு வாசலிலேயே காத்திருந்தான். அவள் இந்நேரம் சென்று இருப்பாளா உள்ளே போய் பார்க்கலாமா? எதற்கு வந்தாய் என்று கேட்டால் என்ன சொல்வது என்ற யோசனையுடன் அவன் நிற்க, அருகே அந்த ஸ்கூட்டி வந்து நின்றது.

''குட்மார்னிங் சார். என்ன இந்நேரத்தில் இங்கே நிற்கறீங்க'' என்ற அந்தக் கேள்வியை கேட்டதும் அவன் தலையில் கூடை மலர் கொட்டியது போல இருந்த அந்த சந்தோஷத்தை மறைக்காமலேயே திரும்பினான்.

''குட்மார்னிங் மிஸ். காவ்யா வீட்டில் தனியாக விட மனசில்லை. சரியா தப்பா தெரியலை. கேட்ட இடத்தில் பதில் வரலை. காவ்யா வலி இல்லை என்று நம்பிக்கையாகச் சொன்னாள். அதான் பள்ளியில் விட அழைத்து வந்தேன். உங்களை இடையில் சென்று பார்த்துக் கொள்ள கேட்க நிற்கிறேன். உங்களால் முடியுமா.''

''ஒருவேளை முன்பே சென்று இருந்தால் என்ன பண்ணி இருப்பீங்க?'' என்று கேலியாகக் கேட்டவள் அவன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லவில்லை.



''இந்த பள்ளியில் பெயர் சொன்னால், ஒரு ஆசிரியை கண்டு பிடிப்பது அவ்வளவு கஷ்டமா?'' என்றதும் புன்னகை செய்தாள்.

''ரெண்டு மூன்று நாள் ரெஸ்ட் எடுக்கட்டும் என்று சொன்னேனே?''

''இன்று வெள்ளிக்கிழமை ஒரு நாள் தானே? காவ்யா வீட்டில் தனியாக இருப்பதைக் காட்டிலும் பள்ளியில் பாதுகாப்பாகவும் உற்சாகமாகவும் இருப்பாள் என்று தோன்றியது. நீங்களும் பதில் சொல்லலை. நான் வேறென்ன பண்றது?''

''நான் என்ன பதில் சொல்லலை? நீங்க எப்போ கேள்வி கேட்டீங்க.''

''மொபைல் போன் என்று ஒன்று இருக்குமே! அதை பார்க்கவே மாட்டீங்களா?'' என்று அவன் கேட்டதும் அவள் விழித்தாள்.

''என்ன இப்படி முழிக்கிறீங்க? நேற்று நைட் எஸ்.எம்.எஸ். அனுப்பினேன். அதுக்கு பதில் வரும் என்று இன்று காலை ஏழரை மணி வரை காத்திருந்தேன். வரலை. சரி குட்டி நீ ஸ்கூலுக்குப் போ என்று கிளப்பிக் கூட்டி வந்து விட்டேன்.''

''அவங்க பாட்டி யாரோ பூந்தமல்லியில் இருப்பதா சொன்னீங்களே?'' என்று பேச்சை மாற்ற அவன் புன்னகை செய்தான்.

''உங்களுக்கு நான் பேசுவதோ எஸ்.எம்.எஸ். அனுப்புவதோ தொந்தரவாக இருந்தால் இனிமேல் செய்ய மாட்டேன். என் பிரச்சனை என்னுடன் இருக்கட்டும். பை'' என்ற அவன் காரில் ஏற ''ஒரு நிமிஷம்'' என்று கை காட்டி நிறுத்தினாள்.

''உங்களுடைய சொந்த விஷயத்தில் தலையிடாதே என்று நீங்க என்னை விலக்கி வைப்பதை புரிந்து கொள்ளாமல், நான் பேசி இருந்தால், ஐ ஆம் சாரி. அதற்கு ஏன் நான் பதில் சொல்லவில்லை என்று என்னைக் குறை சொல்றீங்க? அதிக உரிமை எடுத்துப் பேசி விட்டேன் என்று நினைக்கிறேன்'' என்று கம்பீரமாக சொல்லி விட்டு அவள் வண்டியை நகர்த்தினாள்.

அவன் காரில் இருந்து இறங்கி பின்னால் நடந்து வருவதை அவளால் உணர முடிந்தாலும் நிற்காமல் சென்று வாகனத்தை வழக்கமாக நிறுத்தும் இடத்தில் விட்டு விட்டு இறங்கினாள்.

எதிரே அவன் வருவதை கண்கள் பார்க்க, கால்கள் நிற்பதா போவதா என்று தடுமாற அவனே வரும் போது ரொம்ப முறுக்கிக் கொள்ள வேண்டாம். அவனுடைய ஸ்டேடஸ்-க்கு கொஞ்சம் மரியாதை கொடு என்று மூளை அறிவுறுத்த நின்றாள்.

''நேற்று இரவு ஒன்பதரை மணிக்கு உங்களுக்கு செய்தி அனுப்பி விட்டு பதிலுக்காகக் காத்திருந்த ஆதங்கத்தில் வார்த்தைகள் அதிகப்படியா வந்து விட்டது என்று நினைக்கிறேன். வேண்டும் என்றே உங்களைக் காயப் படுத்தச் சொல்லவில்லை. சொன்ன பிறகு என்ன செய்வது என்று புரியலை. ஐ ஆம் சாரி.''

''எனக்கு இதுவரை யாரும் மொபைல் போனில் எஸ்.எம்.எஸ். அனுப்பியதே இல்லை. சர்வீஸ் மெசேஜ் தான் வரும். அதனால் அதை நான் கண்டு கொள்வதே இல்லை. அதைப் பார்த்து இருந்தால் பதில் சொல்லி இருப்பேன். நைட் வீட்டில் வேறு ஒரு பிரச்னை. காலையிலும் வேறு வேலைகள் கவனிக்கவில்லை சாரி'' என்று



தானும் அவனுக்கு உரிய விளக்கத்தை மன்னிப்புக் கோரும் குரலில் சொன்னவள் மொபைலை எடுத்துப் பார்த்தாள்.

''நாள் கணக்கு சொல்ல முடியாது. புதிய சூழ் நிலையை சிறிய பெண் ஏற்றுக் கொள்ளும் விதத்தைப் பொறுத்தது. நேற்றைய நிலையை ஒப்பிடும்போது அவள் இயல்பு நிலைக்கு வந்து விட்டாள் என்றால் அதை பெரிது படுத்தாமல் விடுவதில் தப்பில்லை. அவளுக்கு எப்படி இருக்கு என்று கேட்டீங்களா?''

''அவள் உற்சாகமாக இருந்தாள். அதனால் தான் தைரியமா அழைத்து வந்தேன். நடுவில் கொஞ்சம் பார்த்துக் கோங்க. அப்புறம் இதைக் கேட்கலாமா என்று தெரியவில்லை'' என்று நிறுத்தினான்.

''என்ன சொல்லுங்க.''

''இப்பதான் ஒரு சாரி சொல்லி இருக்கிறேன் நீங்க கோபித்துக் கொள்ளவில்லை என்றால் கேட்கிறேன்'' என்று பயத்துடன் சொல்ல, ''பரவாயில்லை, கேளுங்க'' என்று அவள் புன்னகை செய்தாள்.

''நேற்று நைட் வீட்டில் பிரச்னை என்னாலா?''

''ச்சே ச்சே. அதெல்லாம் இல்லை. இது வேறே விஷயம். என் தங்கை கல்யாண விஷயமா சில முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டி இருந்தது. அது பற்றிப் பேசிக் கொண்டு இருந்தோம். உங்களுக்கும் அதுக்கும் சம்பந்தம் இல்லை. நீங்க கவலைப் படாதீங்க'' என்று அவள் சாதாரணமான குரலில் சொல்ல அவனுக்கு மண்டை காய்ந்தது.

இவள் தங்கைக்குக் கல்யாணம் பேசினால் இவள் கல்யாணம்? ஏற்கனவே முடிந்து விட்டதா? எப்படித் தெரிந்து கொள்வது?

''இன்னும் ஏதோ கேள்வி மண்டைக்குள் குடையுது போல?'' என்று கேலியாக அவள் கேட்க அவன் தலை அசைத்தான்.

''எப்படிக் கேட்பது என்று தான் தெரியலை.''

''வாயாலதான் கேட்கணும் சார்'' என்றவளின் கேலி புரிந்தாலும் அவனுக்கு வார்த்தைகள் வரவில்லை. அமைதியாக நின்ற போது காலை பிரார்த்தனைக்கான நேரம் என்பதை அறிவிக்கும் அழைப்பு மணி சப்தமாக ஒலித்தது.

''பெல் அடிச்சுட்டாங்க. நான் கிளம்புறேன்.''

''ஒரு நிமிஷம்'' என்று நிறுத்தினான் தனஞ்செயன்.

''சீக்கிரம் சொல்லுங்க. எனக்கு தாமதமாகச் செல்வது பிடிக்காது.''

''எனக்கும்'' என்று அவசரமாகச் சொன்னவன் சின்ன புன்னகையுடன் வலது கரத்தை நீட்டி ''பிரெண்ட்ஸ்?'' என்று கேள்வியாக நிறுத்த அவள் சின்ன தயக்கத்துடன், ''ம்'' என்று சொல்லி, நுனி விரல்களை உள்ளங்கையில் வைத்து விட்டு கம்பீர நடையுடன் சென்றவளின் பின் புறத்தில் ஆடி அசைந்து இடையை தொட்ட பின்னால் ரசனையோடு பார்த்தபடி வெகு நேரம் நின்று இருந்தான் தனஞ்செயன்.

## 10



தான் நட்புக் கரம் நீட்டியதை அவள் ஆட்சேபணை இல்லாமல் பற்றிக் கொண்டதே அந்த வினாடியில்



தனஞ்செயனுக்குச் சந்தோஷமாகத் தோன்ற, சின்ன புன்னகையுடன் காருக்கு நடந்தான். ஆனாலும் தங்கை கல்யாணத்தைப் பற்றிப் பேசும்போது ஏன் அவளின் அம்மா அவள் கல்யாணத்தைப் பற்றிப் பேசவில்லை என்ற கேள்வி மனதில் குடைந்து கொண்டே இருந்தது.

முன் தினமும் பாதியில் விட்டுச் சென்ற படப்பிடிப்பு வேலைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று இருந்த நினைவு அவனை முன்னே செலுத்த அவன் மற்ற யோசனைகளைப் பின்னால் தள்ளி வேலையில் ஆழ்ந்தான். இரண்டு மணி நேரம் தீவிரமான வேலைக்கு பிறகு ஓய்வாக அமர்ந்து மொபைலை பார்த்தபோது அவளிடம் இருந்து எஸ்.எம்.எஸ். வந்து இருந்தது.

''இடைவேளையில் காவ்யாவைப் பார்த்தேன் நலமாக இருக்கிறாள் கவலை வேண்டாம்'' என்ற அந்த சில வார்த்தைகள் கொண்ட குறுஞ்செய்தியை எத்தனை முறை படித்தான் என்று அவனுக்கே தெரியாது. ஆனால் ஒவ்வொரு முறை படிக்கும் போதும், ஒரு புன்னகை அவன் முகத்தில் தோன்றவே செய்தது.

இருபது முறைக்கும் மேலே படித்த பிறகே முன் தினம் இரவு தான் அவளின் பதிலுக்காகக் காத்திருந்த மாதிரி அவளும் காத்திருப்பாள் என்ற எண்ணம் தோன்ற, ''தேங்க்ஸ் ப்ரெண்ட்' என்ற இரண்டு வார்த்தைகளை பதிலாக அனுப்பிய பிறகு அந்தப் புன்னகையின் அளவு மேலும் கூடியது.

மாலை மூன்று மணி அளவில் டிரைவரிடம் சொல்லி விட்டு தானே மகளை அழைக்க பள்ளிக்கு வந்தான். மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் படிக்கும் அந்த பள்ளியில் சீருடை அணிந்த தன் மகளை

முதல் முறை அழைத்துச் செல்ல வந்த தனஞ்செயனுக்கு கண்டு பிடிக்கச் சிரமமாக இருந்தது அவளிடம் தான் வருவதாகச் சொல்லவில்லையே?

டிரைவர் வழக்கமாக காரினை நிறுத்தும் இடத்திற்கு சென்று விடுவாளோ? அதை பள்ளியின் மூன்று வாசலில் எந்த வழியாகச் செல்வாள் என்ற குழப்பத்துடன் அவன் நின்று கொண்டு இருந்தபோது, அந்த ஆரஞ்சு வண்ண பார்டரில் சின்ன ஜரிகை கட்டிய அடர் பச்சை நிற காட்டன் புடவை கண்ணில் பட்டது.

'ஆனந்தி.' என்று கூவ துடித்த இதழ்களைக் கட்டுப் படுத்தி பார்க்க அவளின் இடது கரம், காவ்யாவின் தோளைச் சுற்றி இருக்க, லேசாக குனிந்து அவளிடம் ஏதோ விசாரித்தபடி நடந்து வந்து கொண்டு இருந்தாள் என்னவோ அந்த கணம் அவர்கள் இணைந்து நடந்து வந்த அந்த நொடி மனசில் நிறைவாக இருக்க, தன் மொபைலை எடுத்துப் படம் பிடித்தான்.

இதுவரை எத்தனையோ விளம்பரப் படங்களை, அவன் இயக்கி இருப்பதால், காமராவிற்கு என்று தனியாக தொழில் நுட்ப ஆள் இருந்தாலும் கோணம் பார்க்க அவனும் காமராவை கையாண்டு இருக்கிறான். எத்தனையோ மாடல் அழகிகளை படம் பிடித்தும் இருக்கிறான் இது புது வேலை என்று சொல்ல முடியாது.

ஆனால், ஒரு பெண்ணின் புகைப் படத்தை அவளின் அனுமதி இல்லாமல் அவளுக்குத் தெரியாமல் படம் எடுப்பது இதுதான் முதல் முறை. ஏதோ திருட்டுத் தனம் செய்வது மாதிரி படபடப்பாக இருந்தாலும் அதை அவளிடம் சொல்லத் தோன்றவில்லை.



''அப்பா...'' என்ற கூச்சலுடன் காவ்யா ஆனந்தியை விட்டு விட்டு ஓடி வர அவன் மொபைலை அவசரமாக பையில் போட்டு அவளை அணைத்துக் கொண்டான்.

''புஜ்ஜு, என்னடா இவ்வளவு சந்தோஷம்?'' என்று கேட்டபடி அவளை அணைத்து தலையை வருட, பின்னாடியே ஆனந்தியும் வந்தாள்.

''காவ்யா, என்னதான் அப்பா வந்தது சந்தோஷமா இருக்கு என்றாலும் இனிமேல் இப்படி ஓடி வர வேண்டாம்'' என்று கண்டிப்பாய் ஆனந்தி சொல்ல அவளின் உற்சாகம் லேசாக வடிந்தது.

''குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை புஜ்ஜு, உன்னுடைய சேப்டிக்காக தான் சொல்றாங்க மிஸ்'' என்று அவன் விளக்கம் கொடுக்கவும் அவள் தலை அசைத்தாள்.

''வழியில் ஒரு கப் காபி சாப்பிடலாமா?'' என்று ஆர்வத்துடன் கேட்க, அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

''இல்லை. அஞ்சு மணிக்கு வீடு பார்க்க கஸ்டமர் வரேன் என்று சொல்லி இருக்காங்க. காவ்யா கொஞ்ச நாளைக்கு வெளியே சாப்பிட வேண்டாம். வீட்டிலும் நூடுல்ஸ் மாதிரி வேண்டாம். முளை கட்டிய பயிரும் சுண்டல் மாதிரி பண்ணி தினமும் சாப்பிடக் கொடுங்க. பை சார்'' என்று அவனிடம் தலை அசைத்து விடை பெற்று வண்டியை நோக்கி நகர அவனுக்குச் சப்பென்று ஆனது. இவ்வளவு சீக்கிரம் கிளம்பி விட்டாளே என்று மனம் வாடி வதங்க, அதை மகளுக்குக் காட்டாமல் மறைக்கவும் வேண்டி இருந்தது.

* * *

மகளைக் கொண்டு வந்து வீட்டில் விட வந்தபோது, அங்கே சவிதாவும் அவளின் அம்மாவும் வந்து இருந்தனர். உணவு மேஜை நிறைய கடையில் வாங்கிய விதம் விதமான பலகாரங்கள் அணிவகுத்து நிற்க, அடர் ரோஜா நிறத்தில் நேவி ப்ளூ வண்ண கரையிட்ட பட்டுப் புடவை, சின்னதாக ஒரு நெக்லஸ், என்று பரிசுகளுடன் வந்து இருந்தனர்.

ஐம்பதாயிரம் ரூபாய்க்கும் மேலாக செலவு பண்ணி, பட்டுப் புடவை, நகை, பழங்கள், இனிப்புகள், என்று விதம் விதமாக அடுக்கி வைத்து இருந்த இன்றைய பரிசை விட நேற்று அங்கே அந்த எளிமையான வீட்டில் கொடுத்த உணவு வகைகளும் சாதாரண பாவாடை தாவணியும் உயர்வாகத் தோன்றியது.

''உதிரப் போக்கினை சரிகட்ட இரும்பு சத்து தேவைப் படும் என்று கருப்பட்டி போட்டு களி செய்தோம். உங்களுக்குப் பிடிக்கலை என்றால் விடுங்க'' என்ற ஆனந்தியின் கோபமான குரலில்கூட அன்பு ஒளிந்து இருந்தது.

''வா காவ்யா குட்டி, எப்படி இருக்கிறாய்?'' என்று விரிந்த புன்னகையோடு அணைத்து வரவேற்ற சவிதா சித்தியிடமோ, ''ஸ்கூலில் தினமும் கூப்பிட உங்க அப்பா வருகிறார்?'' என்று புலன் விசாரணை செய்த பாட்டியிடமோ காவ்யாவின் மனம் பொருந்தவில்லை.

முதல் நாள் மாலையில் தான் ப்ரெட் சாப்பிட்டுக் கொள்கிறேன் என்று சொன்ன பிறகும் வம்படியாக வீட்டுக்கு அழைத்துச் சென்று, பள்ளியிலேயே பழச்சாறு அருந்த வைத்து, குளிக்க நேரமாகும் என்பதால் நடுவில் ஒரு டம்ளர் பால் அருந்த வைத்து, தலைக்கு ஊற்றி



வயிறு நிறைய ஆகாரம் கொடுத்த ஆனந்தியை மனசு அங்கே அவள் இல்லாத போதும் தேடியது.

''இந்த சாரி நானே உனக்காகத் தேர்வு செய்தேன் என்று அவள் மேல் வைத்துக் காட்டிய சவிதாவும் சரி, 'இந்த நெக்லஸ் உனக்காக ஆர்டர் பண்ணி செய்தது' என்ற பாட்டியும் சரி, அவளின் வயிற்று பாட்டை பற்றிக் கவலைப்படவில்லை.

ஆனந்தி சொல்லியதை நினைவு வைத்து, சுண்டல் உடனடியாக செய்ய வழி இல்லை என்றதும், இரண்டு துண்டு ப்ரெட், ஒரு டம்ளர் பாலுடன், வந்த அப்பாவைப் பார்த்ததும் கட்டிக் கொள்ளத் தோன்றியது.

''ஹேய் அம்மு என்ன ஆச்சு? ஏன் இப்படி எமோஷனலா ஆகிறாய்? இதை முதலில் சாப்பிடு அப்புறம் பேசலாம்'' என்று குடிக்க வைத்தால் அதற்கும் அவர்களை மதிக்கவில்லை என்று குறை படித்தார்கள். ஏழு மணி அளவில் உணவு முடித்து அவர்கள் கிளம்பிய பிறகே தனஞ்செயன் மற்றும் காவ்யாவால் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது.

* * *

மாலை ஐந்து மணி அளவில் ஆனந்தி வீட்டுக்குள் நுழையும் போதே உள்ளே பலத்த சப்தத்துடன் பேச்சுக் குரல் கேட்டது. சதாசிவம் பெரியப்பா வந்து இருக்கிறார் போல என்று எண்ணியவளுக்கு பெருமூச்சு வந்தது.

கல்யாண சடங்குகளில் இவரை நிற்க வைக்க வேண்டும் என்று அம்மா அதற்காகவே இவரை முன்னிறுத்தி வரச் சொல்லி இருப்பார் இந்த நோக்கில் வீடு விற்பனைக்கு ஆட்கள் பேச்சு வார்த்தைக்கு

வந்தால், எப்படிச் சமாளிப்பது என்ற கவலையை உள்ளுக்குள் அடக்கி, மலர்ந்த புன்னகை ஒன்றே பூசிக் கொண்டு உள்ளே வந்தாள் ஆனந்தி.

''வா, வா இப்பதான் உன்னை இன்னும் காணோமே என்று கேட்டேன். ஐந்து மணி அடிக்கும்போது, ஆனந்தி இங்கே இருப்பாள் என்று உங்க அம்மா சொன்னாள், நீயும் அதே மாதிரி வந்து நிற்கிறாய்'' என்று அவளை வரவேற்றார் சதாசிவம்.

''வாங்க பெரியப்பா, உங்களைப் பார்த்து ரொம்ப நாளாச்சு. பெரியம்மா நல்லா இருக்காங்களா? நீங்கதான் வசந்தி கல்யாணத்தை முன்னால் நின்று நடத்தி வைக்கணும்'' என்று புன்னகையோடு விசாரிக்க அவர் முகத்தைச் சுளுக்கிக் கொண்டார்.

''இப்பதானே வீட்டுக்குள் நுழைகிறாய். போய் கை கால் கழுவிட்டு காபி குடி. அப்புறமா பேசலாம் நான் உன்னிடம் நிறைய பேசணும்'' என்று அவர் சொன்ன விதத்தில் இவர் என்ன குட்டையைக் குழப்பப் போகிறாரோ தெரியலையே என்று அவளுக்கு வயிற்றைக் கலக்கியது.

சில நிமிடங்களில் காபி கப்புடன் அவர் அருகே வந்து அமர, ''சாரதா, நீயும் இங்கே வா'' என்று அம்மாவை அழைத்தார்.

''நான் கேள்வி பட்டதெல்லாம் நிஜமா?'' என்று தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் அவர் கேட்க, ''என்ன விஷயம் பெரியப்பா?'' என்று நிதானமாக ஆனந்தி விசாரித்தாள்.

''என்ன விஷயம் என்று என்னையே கேட்கிறாயா நீ? இந்த வீட்டை விற்கப் போவதாக கேள்விப்பட்டேனே நிஜமா?'' என்று அழுத்தமான குரலில் கேட்க அவள் அம்மாவை ஒரு முறை பார்த்துவிட்டு, ''ஆமா பெரியப்பா'' என்று அமைதியாகப் பதில் சொன்னாள்.



''நான் கூட தேவை இல்லாமல் யாரோ வதந்தியைக் கிளப்பி விடுறாங்க என்று நினைத்தால், எவ்வளவு தைரியம் இருந்தால் என் முன்னாடியே வந்து நின்று ஆமா என்று பதில் சொல்வாய்? வீட்டை விற்பதாக இருந்தால், என்னிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டாமா?'' என்றவரின் குரலில் கோபம் இருக்க, அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

''ஏன் பெரியப்பா? நீங்க இந்த வீட்டை வாங்கலாம் என்று நினைக்கறீங்களா? அப்படி நினைத்தால் உங்களுக்கு விற்பதில் எனக்கு சந்தோஷம் தான்.''

''என்ன நான் வாங்கணுமா? இது பரம்பரை சொத்து. உங்க அப்பா அவனுடைய சொந்த சம்பாத்தியத்தில் இதை வாங்கவில்லை அடி மனை எங்க அப்பா சம்பாத்தியம். அதில் மேலே இருக்கும் வீடு தான் உங்க அப்பா சம்பாத்தியம். அதனால் வீடு விற்க முடியாது. அப்படியே விற்க வேண்டும் என்று நீ மேலும் முயற்சி செய்தால் இந்த சொத்தில் எனக்கும் பங்கு இருக்கு என்று நான் கோர்ட்டில் கேஸ் போட வேண்டி இருக்கும்...'' என்று ஆவேசமாகச் சொல்ல அவள் உறைந்தாள்.

''இல்லை பெரியப்பா. ஏற்கனவே ஒருத்தர் பார்த்து, முப்பது லட்சம் என்று பேசி...''

''அதெல்லாம் சரி வராது ஆனந்தி. நீ மேற்கொண்டு அந்தப் பேச்சை தொடர்வதாக இருந்தால் எனக்கு கோர்ட்டுக்குப் போவதைத் தவிர வேறு வழி இல்லை...''

''வசந்தி கல்யாணம் வேறே வச்சாச்சே பெரியப்பா...''

''அவளுக்கு நாலு வயசு மூத்தவள் நீயே இன்னும் கன்னி கழியாமல் இருக்கும்போது அதுக்கென்ன அவசரம்?''

''அதைப் பற்றி எல்லாம் தயவு செய்து பேச வேண்டாம் பெரியப்பா. நீங்க வீட்டு விஷயம் பற்றி மட்டும் பேசுங்க'' என்று எரிச்சலை அடக்கி கடினமான குரலில் சொல்ல அவரும் ஒரு பெருமூச்சை வெளியேற்றி முடிவைச் சொன்னார்.

''எல்லாம் உன் நல்லதுக்கு தான் சொல்கிறேன். அவசரத்துக்கு அஞ்சு பத்து லட்சம் நான் வேண்டுமானால் புரட்டித் தருகிறேன். அதை வைத்துக் கல்யாணம் பண்ணி விடு. அதுக்கு பதிலா எனக்கு ரெண்டு வீட்டு வாடகை நீங்க பணத்தைத் திருப்பி தரும் வரை நான் வாங்கிக்கலாம் என்று எனக்கு எழுதிக் கொடு. யோசித்து நல்ல முடிவா சொல்லு. நான் ஒரு வாரம் கழித்து வருகிறேன்'' என்று தீர்மானமாகச் சொல்லி விட்டு எழுந்து சென்றார் சதாசிவம்.

அவளுக்கு முப்பது வயதாகிறது. இதுவரை இந்த சொத்தில் பங்கு கோரி எந்தவிதமான பேச்சு வார்த்தையும் வந்ததே இல்லை. இப்போது திடீர் என்று இப்படி பேசுகிறார் என்றால் என்ன அர்த்தம்? அருகே கல்யாணத் தேதியையும் வைத்துக் கொண்டு பணத்திற்கு என்ன செய்வது என்ற கேள்வி எழுந்தது.

இவர் சொல்வது கேட்பது நியாயமே இல்லை என்றாலும் சிவில் கேஸ் என்று ஆரம்பித்து விட்டால் எப்போது முடியுமோ? வசந்தியின் கல்யாணம், கார்த்திக்கின் தொழில் எல்லாம் என்ன ஆவது? அவளுக்கு கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.



# 11

அன்று மாலை வழக்கம் போல பள்ளி முடிந்து வெளியே வந்து தன் வாகனத்தை எடுக்க முயன்ற ஆனந்தி செய்தி வந்த ஒலி கேட்க எடுத்துப் பார்த்தாள்.

'நேற்று செய்தி அனுப்பி விட்டு உன் பதிலுக்காக இரவு முழுவதும் காத்திருந்தேன்' என்று தனஞ்செயன் சொன்னது மனதில் ஆழமாகப் பதிந்து விட சர்வீஸ் மெசேஜாக இருந்தாலும் பரவாயில்லை என்று உடனே பார்த்து விடுவது வழக்கம் ஆகி விட்டது. எடுத்துப் பார்த்தவளுக்கு செய்தி தனஞ்செயனிடம் இருந்து என்பதை அறிந்ததும் வியப்பு வந்தது.

''வீட்டில் இன்று யாரும் இல்லை. காவ்யாவை உங்க வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்க அல்லது இரண்டு மணி நேரம் அவளுக்குத் துணையாக எங்கள் வீட்டில் இருக்கலாம் உங்க வேலைப்பளு மற்றும் வசதியைப் பொறுத்து எது வேண்டுமானாலும் செய்யலாம். என்ன செய்கிறீர்கள் என்பதை எனக்கு தகவல் அனுப்பி விடுங்க'' என்ற கோரிக்கையை தாங்கி இருக்க அவளின் யோசனை நீண்டது.

''உங்க வீட்டில் நீங்களும் இல்லாத போது இரண்டு மணி நேரம் தங்குவது அவ்வளவு நல்லா இருக்காது. நான் காவ்யாவை எங்க வீட்டுக்கு அழைத்துச் செல்கிறேன்'' என்று பதில் செய்தி அனுப்பி விட்டு அவனின் வீட்டுக்குக் கிளம்பினாள்.

இருபது நிமிடங்களில் அவர்களின் வீட்டை ஸ்கூட்டியில் அடைந்தபோது, ''வாங்கம்மா. நீங்க இப்ப வருவீங்க என்று அய்யா சொன்னார்'' என்று வாசலில் இருந்த செக்யூரிட்டி சல்யூட் வைக்க அவளுக்குப் புன்னகை வந்தது.

''நல்லா இருக்கீங்களா? காவ்யா பள்ளியில் இருந்து வந்தாச்சா?'' என்று கேட்டபடி வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு இறங்கினாள்.

''பத்து நிமிஷம் இருக்கும். சின்னம்மா உள்ளே இருக்காங்க'' என்று சொன்னவன் குரலில் மரியாதை கூடுதலாக இருந்தது. தனஞ்செயனின் உபயம் என்று சொல்லாமலே புரிந்தது. நான்கு தினங்களுக்கு முன்பு இங்கே காவ்யாவுடன் வந்தபோது கிடைத்த விசாரணை நினைவுகள் மனதில் நிழலாடிச் சென்றது. அதில் அவளுக்கு வருத்தம் எதுவும் இல்லை. அவன் தன் கடமையைச் செவ்வனே செய்தான். அவ்வளவுதான்.

''காவ்யா.. கவி.. எங்கே இருக்கிறாய்?'' என்று குரல் கொடுத்தபடி உள்ளே சென்றாள் ஆனந்தி. பதிலே இல்லை. மூன்றாவது முறை காவ்யா என்று சப்தமாக குரல் கொடுத்த உடனே, மாடியில் இருந்து எட்டிப் பார்த்தாள்.

''இதோ வரேன் மிஸ்...'' என்று சொன்னவளின் குரலில் ஏதோ சரி இல்லை என்பதை உடனடியாக அவளால் உணர முடிந்தது.

''அப்பா போன் பண்ணலையா உனக்கு? உன்னை இங்கே தனியாக இருக்க வேண்டாம் என்று எங்க வீட்டுக்கு அழைத்துப் போகச் சொல்லி எனக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பி இருந்தாங்களே? உன்னிடம் சொல்லலையா?''



''சொன்னாங்க மிஸ். ஆனால் கொஞ்சம் ஹோம் வொர்க் இருக்கு. அதான் இங்கேயே பண்ணலாம் என்று நினைத்தேன் மிஸ்.''

''ஹோம் வொர்க் இருந்தால் என்ன? எடுத்துட்டு வா. நானும் ஹெல்ப் பண்ணினால் சீக்கிரமே முடித்து விடலாம்.''

''இல்லை மிஸ் வயிறு வலிக்குது. அதனால அலைய வேண்டாம் இங்கேயே கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்து விட்டு ஹோம் வொர்க் செய்யலாம் என்று நினைத்தேன்.''

''வலியா? பசியா? சரியா சொல்லு. மதியம் என்ன சாப்பிட்டாய்?'' என்று விசாரித்தபடி ஆனந்தி மாடிப் படியேற காவ்யாவின் கண்கள் அறைக்குள் பாய்ந்தது.

''பசியாதான் இருக்கும் மிஸ். சாப்பிடலாமா?'' என்று கேட்டபடி பாதி படிகளில் அவள் இறங்க ஆரம்பிக்க ஆனந்தி நின்றாள். இவளுடைய பேச்சில் எதுவோ சரி இல்லை என்ற எண்ணம் உறுதியானது.

அவளைப் பின் தொடர்ந்து அடுக்களைக்குள் சென்றவள், ''தோசை ஊற்றித் தரட்டுமா? ப்ரெட் ஆம்லெட் மாதிரி சாப்பிடுகிறாயா?'' என்று விசாரித்தபடி அவளை ஓரக்கண்ணால் ஆராய்ந்தாள் ஆனந்தி.

''ப்ரெட் டோஸ்டி மிஸ்'' என்று சொன்னவளின் மனசு இங்கே இல்லை.

''சரி நீ போய் உன் பாட வேலையைக் கவனி. நான் டிபன் எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்று சொல்ல அவள் பறந்து சென்றாள்.

தட்டில் நாலு ஸ்லைஸ் ப்ரெட் வாட்டி, ஒரு டம்ளரில் ஹார்லிக்சும் கலந்து எடுத்து கொண்டு மாடிக்குச் செல்கையில் அவள் மேஜை முன்பு உட்கார்ந்து எதையோ எழுதி கொண்டு இருந்தாள். கணினியை அவசரமாக ஷட் டவுன் செய்து இருக்க வேண்டும். மானிட்டரின் இணைப்பில் விளக்கு ஒளிர்ந்து கொண்டு இருந்தது.

''உன்னுடைய சிஸ்டம்ல கொஞ்சம் நான் வேலை பார்க்கட்டுமா காவ்யா?'' என்று கேட்க அவள் திடுக்கிட்டு நிமிர்ந்த வேகத்தில் ஏதோ சரி இல்லை என்று மீண்டும் உறுதியானது.

''நெட் வேலை செய்யலை மிஸ்'' என்று சொன்னது அவள் கணினியை தொடுவதைத் தவிர்க்கவே என்பது புரிந்தது.

''பரவாயில்லை. நான் பென் டிரைவில் வச்சு இருக்கேன் எக்செல் ஷீட் தான் வேலை செய்யணும்?'' என்று சொல்லி விட்டு கணினியை உயிர்ப்பிக்க அவள் முகத்தில் முத்து முத்தாக வியர்ப்பது தெரிந்தது.

கணினியை உயிர்ப்பித்ததும், ''அவசரமாக அணைத்து விட்டீர்களே? உங்களின் பழைய பிரவுசிங் தளங்களை மீண்டும் இணைப்பு கொடுக்கட்டுமா'' என்ற கேள்வி கணினியில் தோன்ற அவள் ஆமோதிப்பான பதிலைச் சொன்னதும் தோன்றியது பேஸ்புக்.

அதில் விக்ரம் என்பவனிடம் இருந்து ஐந்து செய்திகள் அணிவகுத்து காத்திருக்க, அவள் நிதானமாக அதை வாசித்தாள்.

''காவ்யா இங்கே வா'' என்ற அவளின் நிதானமான அழைப்பு அவளை மேலும் நடுங்க வைத்தது.



''எஸ் மிஸ்.''

''யாரும்மா இந்த விக்ரம்...?'' என்று அருகே அழைத்து அவளின் தோளை வருடியவாறு கேட்க அவள் விரைப்புற்றாள்.

''ப்ரெண்ட் மிஸ்.''

''இவன் கூட தான் நான் வரும்போது பேசிக் கொண்டு இருந்தாயா?''

''.....''

இதற்கு மேல் துருவினால் பதில் கிடைக்காது என்பதுடன், தன் கௌரவத்தை தானே குறைத்துக் கொள்வதாக அமையும் என்பதோடு இந்த விஷயத்தைப் பொறுமையாக வேறு விதத்தில் அணுக வேண்டும் என்று தனக்குள் சொல்லிக் கொண்ட ஆனந்தி பேச்சை மாற்றினாள்.

'சரி வா, வீட்டுக்குப் போகலாம்.'

''இல்லை மிஸ் நான் இங்கேயே இருந்து கொள்கிறேன்.''

''உங்க அப்பா என்னை உனக்கு துணையா இருக்கச் சொல்லி இருக்காங்க. உனக்கு வர பிடிக்கவில்லை என்றால், உங்க அப்பா வரும் வரை, நான் இங்கேயே இருக்கிறேன் எனக்கு ஒன்றும் பிரச்னை இல்லை'' என்று சொன்ன ஆனந்தியின் குரலில் கண்டிப்பு இருக்க அவள் வேறு வழி இன்றி எழுந்தாள்.

இவள் இங்கே இருந்தாலும் அவனுடன் பேச முடியாது என்ற நிர்ப்பந்தத்தினால் தான் காவ்யா கிளம்பி விட்டாள் என்பதை அவளால் உணர முடிந்தது. இது தனிமையில் இருப்பதால் வரும் பிரச்னை.

வாசித்த வரை செய்திகளில் ஒரு ஆதிக்கமான தொனி தென்பட்டது. இவளுக்கு ஏதாவது பிரச்னை

என்றாலும் அதை கவனமாகக் கையாள வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

பேச்சு வாக்கில் இன்றைய சமூக வலைதளங்களால் ஏமாற்றப்படும் பெண்களின் நிலை குறித்து பத்திரிகைகளில் படித்த செய்திகளை சொல்லியபடியே அவளை ஓரக்கண்ணால் ஆராய்ந்தபோது காவ்யாவின் கண்களில் கலவரம் தெரிந்தது.

''நீ பயப்படாதே காவ்யா. தளம் எப்படி இருந்தால் நமக்கென்ன? நம்மைப் பொறுத்தவரை பாதுகாப்பா இருக்கணும். உனக்குச் சொல்லியா தரணும்? அதுவும் இப்போது பெரிய பெண்ணாகி விட்டாய். யாராக இருந்தாலும் சரி, தனியா ஆண்களைச் சந்திக்கப் போகக் கூடாது. கவனமாக நடந்து கொள்ள வேண்டும்'' என்று நம்பிக்கை ஊட்டினாலும் அவளின் முகம் தெளியவில்லை.

''வெளியில் பழகும் ஆண் நண்பர்கள் மட்டும் இல்லை. டிரைவர் செக்யூரிட்டி, ஸ்கூல் டீச்சர்ஸ் இவர்களுக்கும் இந்த கண்டிஷன் பொருந்தும் காவ்யா. உனக்கு அம்மா இருந்தால் இதை எல்லாம் அவங்களே சொல்லித் தந்து இருப்பாங்க இல்லை என்பதால் நான் சொல்லி தருகிறேன். நீ புத்திசாலி பெண் அல்லவா? சொல்வதைப் புரிந்து கொள்வாய் என்று நம்புகிறேன். குட் டச், பேட் டச் தெரியும் இல்லையா?'' என்று ஆரம்பிக்க அவள் கவலையுடன் பார்த்தாள்.

''தெரியும் மிஸ். அப்பா சொல்லி இருக்காங்க. யாராக இருந்தாலும் சரி, மார்பில், தொடையில், பின்புறத்தில், தடவுவதை அனுமதிக்க வேண்டாம். பாராட்டும் நண்பர்கள் என்றாலும் கூட கை குலுக்கல், முதுகில் தட்டுதல், பட்டும் படாமல் அணைப்பு ஓ.கே. அதற்கு மேல்



வேண்டாம் என்று சொல்லி தந்து இருக்காங்க'' என்று சொன்னவளின் குரலில் இவள் தன்னைத் தப்பாக நினைக்கிறாளோ என்ற பயம் இருந்தது.

''உங்க அப்பாவே சொல்லி கொடுத்து இருக்காங்களா? நான் இதை எதிர்பார்க்கலை. நீயும் உங்க அப்பாவும் இவ்வளவு க்ளோசா? அப்படி இருந்தால் உனக்கு வெளியே பிரெண்ட்ஸ் தேவை இல்லையே காவ்யா?'' என்று வாழைப் பழத்தில் ஊசி ஏற்ற முயன்றாள்.

''உங்க அப்பா சொன்னதை தான் நானும் சொல்ல நினைத்தேன். இருந்தாலும் வெளியாட்களை எந்தக் காரணம் கொண்டும் உன்னைத் தொட விட வேண்டாம். வெற்றிகளை பகிர்ந்து கொள்ளும் சந்தோஷமாக இருந்தாலும் சரி தோல்வியில் துவளும் போது ஆறுதல் சொல்வதாக முதுகை வருடுவதாக இருந்தாலும் சரி, அது உனக்குத் தேவை இல்லை காவ்யா. நான் சொல்வது உனக்கு நல்லதற்கு தான் கவி'' என்று கனிவான குரலில் சொல்ல அவளின் கண்களில் நீர் கோர்த்தது.

''ஏன் மிஸ் இதை எல்லாம் இப்ப என்னிடம் சொல்றீங்க?''

''நீ விழிப்பா இருக்கணும் என்பதற்காக முன்னெச்சரிக்கையா சொல்வது தான் கவி. நீ தப்பான பெண் என்பதற்காக இல்லை. போன செவ்வாய்க் கிழமை. காலையில் ஸ்கூலில் உன்னுடன் வந்தானே, அவன் தான் விக்ரமா?'' என்று கேட்க அவள் திடுக்கிட்டு விழித்தாள்.

'ஆமா' என்ற ஒற்றை வார்த்தையை சொல்வதற்குள் அவளுக்கு திக்கியது.

''அவனோடு நீ எங்கேயும் தனியா வெளியே போய் இருக்கிறாயா?'' என்ற கேள்வியில் துடித்து விட்டாள்.

'ஹையோ இல்லை மிஸ்.'

''ஹேய் பதறாதே! நீ அதெல்லாம் செய்ய மாட்டாய் என்று எனக்குத் தெரியும். அவன் அன்று கொஞ்சம் அளவு மீறி உன்னைத் தொட்ட மாதிரி எனக்குத் தோன்றியது. ஆனால் நீ ஸ்மார்ட் கேர்ள். உனக்கு நான் சொல்லித் தர வேண்டியது இல்லை. இனிமேல் பார்த்து நடந்து கொள். அவனைக் கிட்டே சேர்க்க வேண்டாம். கொஞ்சம் தூரத்திலேயே நிறுத்தி வை. ஓகே?'' என்று செல்லமாகக் கன்னத்தில் தட்ட அவள் வேகமாகத் தலை அசைத்தாள்.

இதை அப்பாவிடம் மிஸ் சொல்லி விடுவாங்களோ? அப்பா தன்னிடத்தில் விசாரிப்பாரோ? என்ன பதில் சொல்வது? என்று தயங்கிக் குழம்பிக் காவ்யா தவித்துக் கொண்டு இருக்க ஆனந்தி அதை தனஞ்செயனிடம் சொல்லவே இல்லை.

ஒரு நாள் இரண்டு நாள் பார்த்து விட்டு, அப்பா தன்னிடம் கேட்கவே இல்லை. மிஸ் சொல்லவில்லை என்ற உற்சாகத்தில் அவளின் பழைய துள்ளலும் வெளியே வந்தது. ஆனந்தியின் மீது ஒரு நல்ல அபிப்பிராயமும் பரவியது.

இவள் போட்டு கொடுக்கும் வர்க்கத்தை சார்ந்தவள் இல்லை! உண்மையான அக்கறையுடன் நல்லதை எடுத்துச் சொல்பவள் என்ற எண்ணம் மனதில் பதிந்தது. காவ்யாவின் மனதில் ஆனந்தி உயரத்தை எட்ட, ஆனந்தியின் மனதில் காவ்யாவை பற்றிய மதிப்பீடு இறங்கியது.

அடுத்த இரண்டு நாட்கள் கழித்து, அத்தனை அறிவுரைகளுக்கு பின்பும் மதிய உணவு இடைவேளை



தாண்டி வகுப்புகள் ஆரம்பிக்க சில நிமிடங்களே இருக்கக் கூடிய அந்த நேரத்தில் பள்ளி வளாகத்தில் வண்டியை நிறுத்தி விட்டு ஆனந்தி இறங்கியபோது, 'அந்த விக்ரம்' அதே மாதிரி அவளின் தோள்களை அணைத்து, பின் புறம் வருடி, நடந்து கொண்டு இருக்க இரத்தம் சூடேறியது. அவனின் தொடுகையை காவ்யா உணர்ந்து தள்ளி விடுவதையும் பார்த்த ஆனந்திக்கு நிம்மதியும் கூடவே வந்தது.

## 12

கடந்த இரண்டு நாட்களாக, சதாசிவம் பெரியப்பா வந்து குட்டையைக் குழப்பி விட்டுச் சென்ற பிறகு ஜெய் சொன்ன அந்த வாடிக்கையாளரின் வருகையும் விசாரணையும் நின்று போய் விட, வசந்தியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

''ஜெய் சொன்ன ஒரு ஆள் இல்லை என்றால் அடுத்த வழியை பற்றி யோசிக்க மாட்டாயா? அண்ணன் பெங்களூரில் போய் உட்கார்ந்து கொண்டான். கூடவே இருக்கும் உனக்கு என் கல்யாணத்தை பற்றி அக்கறை இல்லை'' என்று குற்றம் சொல்பவளை என்ன செய்வது என்று புரியாமல் விழித்தாள் ஆனந்தி. அவளால் முடிந்த வரை வக்கீலை பார்த்து பெரியப்பாவின் மிரட்டலில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்று விசாரித்து வந்து விட்டாள்.

உடனடியாக விற்கவில்லை என்றாலும் பரவாயில்லை. கூடுதலாக வட்டி கட்ட நேர்ந்தாலும் சமாளிக்கலாம்

தம்பிக்கும் தங்கைக்கும் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வங்கியில் கடன் பெறுவது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு இருக்கிறாள்.

ஆனால் அவளுக்கு இருக்கும் வேகமும் ஆர்வமும் துடிப்பும் வங்கியின் அலுவலருக்கு இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் கடந்த ஒரு வாரமாக தினமும் காலையில் நேரிலும் மாலையில் போனிலும் அடமான கடன் விண்ணப்பத்தின் நிலை குறித்து விசாரித்துக் கொண்டே இருக்கிறாள் ஆனந்தி.

ஆனால் அவளின் முயற்சி புரிந்தாலும் புரியாதது போல கண்களை கசக்கிக் கொண்டு நிற்கும் வசந்தியை தேற்றிவிட்டு பள்ளிக்குக் கிளம்பியவளுக்கு வங்கி கடனுக்குப் பதிலாக தனஞ்செயனிடம் கேட்கலாமா என்ற எண்ணம் மிக லேசாக அவள் மனதில் அவ்வப்போது எட்டிப் பார்த்தது.

பல்லாவரம் கிளையில் உள்ள வங்கி லாக்கரில் இருந்த வீட்டு பத்திரத்தை எடுக்க மதிய உணவு இடைவேளைக்கு முன்பே ஒரு மணி நேரம் அனுமதி பெற்றுக் கிளம்பினாள் ஆனந்தி. ஒரு மணி நேரம் அனுமதியோடு நாற்பது நிமிடங்கள் உணவு உணவு இடைவேளையும் இருப்பதால் அதற்குள் திரும்பி வந்து விடலாம் என்று சென்று இருந்த ஆனந்தி வேலையை முடித்து விட்டு பள்ளிக்கு திரும்பி வரும்போது பள்ளி விளையாட்டு மைதானத்தில் இருவர் பேசிக் கொண்டு இருப்பது கண்ணில் பட்டது.

காவ்யாவா? அவன் அந்த அயோக்கிய ராஸ்கலாக இருக்க வேண்டும்? எவ்வளவு தைரியம் இருந்தால் பள்ளி வளாகத்திற்குள் வந்து இருப்பான்? பள்ளி நேரத்தில் இவள் ஏன் போகிறாள்?



மனசுக்குள் வண்டு குடைய அந்த பார்க்கிங் ஏரியாவை விட்டு நகராமல் குனிந்து வாகனத்தை நிறுத்துவது போல பாவனை செய்தபடி கண்காணித்தாள். அவர்களுக்கு இடையே வாக்குவாதம் என்பது புரிந்தது. இறுதியாக ஏதோ சொல்லிவிட்டு வெளியேற அவள் கையில் ஒரு கவருடன் வகுப்பறைக்குச் சென்றவளின் நடையில் வேகம் இல்லை.

அவளின் தளர்ந்த நடை அவள் ஏதோ சிக்கலில் மாட்டிக் கொண்டு இருப்பதைத் தெளிவாகக் காட்டியது. அவளின் பிரச்னையை நண்பனாக இருக்கும் தன் தந்தையிடம் வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்வாளா? ஆனந்திக்குச் சந்தேகமாக இருந்தது. மாலையில் வீட்டுக்குச் சென்று பேசிப் பார்க்க வேண்டும்.

அடமானம் குறித்து தனஞ்செயனுடன் பேசலாமா என்று யோசித்தது நினைவு வர அவசரமாக அதை ஒதுக்கினாள். தன் பிரச்னையை பிறகு பார்த்துக் கொள்ளலாம். இவளுக்கு விபரீதமாக எதுவும் நடந்து விடக்கூடாது. தனஞ்செயனிடம் பிறகு பேசிக் கொள்ளலாம். வசந்தியின் திருமணம் எப்படியும் நடக்கும். முக்கால் வாசி ஏற்பாடுகள் நடந்து விட்டது. பணப் பிரச்னை பார்த்துக் கொள்ளலாம் என்று மனசில் நினைத்துக் கொண்டே வகுப்பினை நோக்கி நடந்தாள்.

காவ்யாவிடம் அனுமதி கேட்க வேண்டும் என்றோ தகவல் சொல்ல வேண்டும் என்றோ இல்லாமல், தன் இரு சக்கர வாகனத்தில் அன்று மாலை பள்ளியில் இருந்து கிளம்பி, காவ்யாவின் வீட்டுக்குச் சென்றாள் ஆனந்தி.

''வாங்கம்மா, இன்று வருவது யாருக்கும் தெரியாதா? இப்பதான் சின்னம்மா வந்தாங்க. ஒன்றும் சொல்லவில்லையே?'' என்று வரவேற்ற காவலாளியிடம் இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு மாடியில் இருந்த காவ்யாவின் அறைக்குள் நேராக நுழைந்தாள்.

உள்ளே போகும் போதே தன் போனில் வீடியோ பதிவிற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டாள். ''கவி என்ன பண்ணுகிறாய்?'' என்று அறைக்குள் வந்து விசாரித்த ஆனந்தியின் குரலில் தூக்கி வாரிப் போட நிமிர்ந்தாள் காவ்யா.

''மிஸ்... நீங்களா...?'' என்று கேட்டவளின் கண்கள் கலங்கி இருக்க முகம் அளவு மீறிய திகைப்பைக் காட்டியது.

''காவ்யா என்னிடம் உண்மையைச் சொல்லு. நீ எதோ பிரச்னையில் மாட்டிக் கொண்டு இருக்கிறாய் என்று என் உள்ளுணர்வு சொல்கிறது. உன் அப்பாவிடம் சொல்லக் கூடிய விஷயம். அவரிடம் சொல்லி விட்டேன் என்று சொல். நான் அதில் தலையிடவில்லை. ஆனால் நீ தனியாக தீர்க்க முயன்று சின்னச் சிக்கலை பெரிதாக்கி விடாதே. நீ சின்னப் பெண் இல்லை'' என்று அழுத்தமான குரலில் அதட்டலாகச் சொல்ல அவளின் முகம் அழுகையைக் காட்டியது.

''உங்க அப்பாவை வரச் சொல்லட்டுமா? அவரிடம் பேசுகிறாயா?''

''வேண்டாம் மிஸ்'' என்ற பதில் கண்ணீருடன் உடனே வந்தது.

''அப்ப என்னிடம் சொல்லு.''



''என்ன தப்பா நினைக்காதீங்க மிஸ். நான் அந்த மாதிரி பொண்ணு இல்லை.''

''நான் உன்னைத் தப்பா நினைக்கவில்லை. ஆனால் நீ உண்மையைச் சொன்னால் தான் உனக்கு உதவ முடியும். மதியம் சாப்பிட்டாயா?''

''ம்ம்'' என்று தயக்கத்துடன் வந்த குரலே அது பொய் என்று சொல்ல அவள் பள்ளிப் பையைத் திறந்து உணவு டப்பாவை எடுத்துப் பார்த்தாள். எலுமிச்சை சாதமும் உருளை வருவலும், வெள்ளரிக்காய் சாலடும் தனித்தனி டப்பாக்களில் சமர்த்துப் பிள்ளைகளாக இருந்தது.

''கீதாம்மா காவ்யாவுக்கு ரெண்டு நெய் தோசை பொடியும், ஒரு கிளாஸ் போர்ன்விட்டா எடுத்துட்டு வாங்க'' என்று இண்டர்காமில் உத்தரவிட்டவள் தண்ணீர் பாட்டிலை எடுத்து நீட்டினாள்.

''கொஞ்சம் தண்ணீர் குடி.''

''இல்ல, வேண்டாம் மிஸ்.''

''தொண்டை காஞ்சு போய் இருந்தால் பேச முடியாது. நீ பேசுறது முக்கியமான பிரச்னை. அதை நான் சரியா புரிஞ்சு கொள்ள வேண்டாமா? தண்ணீர் குடித்தால் தான் அடுத்து வரும் சாப்பாட்டை நீ சாப்பிட முடியும்'' என்று அதட்டலாகச் சொல்ல அவள் வாங்கி அருந்தினாள். இப்போது காய்ந்து இருந்த தொண்டை கொஞ்சம் இதம் பெற அவசரமாக அவளை நிமிர்ந்து பார்த்தாள் காவ்யா.

''மிஸ், பிராமிசா நான் எதுவும் தப்பு பண்ணலை மிஸ்.''

''ஓகே கவி, நான் உன்னை நம்புகிறேன்'' என்று தலையை வருட அவளின் வயிற்றை கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தாள் காவ்யா.

''ஹேய் காவ்யா, கவிம்மா! சொன்னால் கேட்கணும் அழக் கூடாது. பிரச்னை எதுவா இருந்தாலும் தீர்த்துக் கொள்ளலாம். தைரியமா இருக்கணும். தப்பு செய்றவங்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கணும். நிமிர்ந்து நில். சமையல் காரம்மா மேலே படி ஏறும் சத்தம் கேட்கிறது. கொஞ்ச நேரம் கண்ட்ரோல் பண்ணிக்கோ'' என்று அவளின் தலையை வருடி ஆறுதல் படுத்தினாள்.

''கணக்கு பாடம் புரியலை என்று அப்பாவிடம் சொன்னால் உனக்கு டியூஷன் வைக்கப் போறாங்க. அதை விட்டுட்டு நீ மனசுக்குள்ளேயே வைத்து புழுங்கினால், அவருக்கு எப்படித் தெரியும்? இரண்டாவது டெர்மில் கணிதத்தில் உன்னை நூற்றுக்கு நூறு வாங்க வைப்பது என் பொறுப்பு'' என்று அதட்ட, அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

இந்த நிமிடம் வரை கனிவாகப் பேசிக் கொண்டு இருந்த ஆனந்தி திடீர் அன்று அதட்டியதோடு கணிதத்தைப் பற்றி பேசவும் விழித்த காவ்யாவுக்கு வாசலை காட்டினாள் ஆனந்தி.

''முகத்தை கழுவிட்டு வந்து சூடு ஆறும் முன்பு இந்த நெய் ரோஸ்ட்டை சாப்பிடு. நான் ஐந்து நிமிடத்தில் வருகிறேன்'' என்று சொல்லி விட்டு சமையல் அறைக்குச் சென்றவள், அவருடன் பேசியபடி ஒரு காபி வாங்கிக் குடித்துவிட்டு, மாடிக்கு வந்தாள்.

தனக்கு காபி எடுத்து வர சொல்லி ஏவல் செய்ததாக இருக்க வேண்டாம் என்ற எண்ணத்தோடு, அவள் அழுததற்கான காரணம் பணியாளர்களின் கற்பனைக்கு ஏற்றவாறு விரியாமல் இருப்பதைத் தடுக்கும் எண்ணத்தில் கீழே வந்த ஆனந்தி அந்த வேலையை முடித்து



விட்டு மேலே சென்ற போது காவ்யா இன்னும் முதல் தோசையிலேயே இருந்தாள்.

''நான் உன்னை என்ன சொல்லிட்டுப் போனேன்?'' என்று அதட்டியபடி அவள் கையில் இருந்து தட்டை வாங்கியவள் பெரிய துண்டுகளாக பிட்டு ஊட்டி விட அவள் கண்கள் கலங்கியது. தொண்டையில் அடைத்துக் கொள்ள உணவினை விழுங்குவது மேலும் சிரமமாக அவள் தண்ணீர் பாட்டிலை நீட்டினாள்.

''மணியாகுது காவ்யா. உங்க அப்பா வருவதற்குள் நாம் பேசிக்க முடிக்க வேண்டும். பாதியில் வந்து விட்டால் சிரமம் கவி. சீக்கிரம் சாப்பிடும்மா'' என்று சொல்ல அந்த மந்திரம் வேலை செய்தது.

ஒரு வாய் தோசை ஒரு வாய் தண்ணீர் என்று இரண்டு தோசையும் பாலையும் குடித்த பிறகு அழுகை கூட மட்டு பட்டு இருந்ததை அவளால் உணர முடிந்தது. பிரச்னையைத் தீர்க்க ஒரு பெரியவர் தன் பின்னால் இருக்கிறார் என்ற பாதுகாப்பு உணர்வும் வயிற்றுக்குள் சென்ற உணவும் சேர்ந்து அவளை நிம்மதியாக உணர வைத்தது.

''இப்ப சொல்லு யார் அந்த விக்ரம்? அவனை உனக்கு எப்படித் தெரியும்?''

''யார் என்று தெரியாது மிஸ். ஆறு மாசமா பேஸ் புக்கில் பேசிக் கொண்டோம்.''

''ம்ம்ம் என்ன பேசுவீங்க?''

''ஆங்கிலப் படங்கள், மியூசிக் ஆல்பம், கார்ட்டூன் கதா பாத்திரங்கள், திரை நட்சத்திரங்கள்...'' என்று திணறலாகச் சொல்ல அவளுக்குப் புரிந்தது. தனிமையில்

தவித்து இருக்கிறாள். குழந்தை தனம் மாறாமல் கார்ட்டூன் பற்றி பேசி இருக்கிறாளே என்ற பரிதாபம் தோன்றியது.

''உனக்கு எப்படி அவனிடம் பேசணும் என்று தோன்றியது.''

''அவன் சக்தி என்ற பெயரில் ப்ரெண்ட்ஷிப் ரிகுவேஸ்ட் கொடுத்தான். அதில் இருந்த பார்பிடால் எனக்கு ரொம்பப் பிடித்தது. முதலில் பெண் என்று நினைத்து ரிகுவேஸ்ட் அக்செப்ட் பண்ணினேன். அப்புறம் தான் அது பையன் என்று தெரிந்தது.''

''சரி ஆரம்பத்திலேயே இப்படி பொய் சொல்பவனை நம்பலாமா என்று யோசிக்கலையா கவி?''

''சக்தி என்று பெண்ணுக்கும் பையனுக்கும் பேர் வைப்பாங்க. நான் பெண் என்று சொன்னேனா? பெண் என்று நீயாக நினைத்துக் கொண்டால் நான் என்ன செய்வது என்று கேட்டான். அதனால் தான்'' என்று சமாதானம் சொன்னவளின் குரல் உள்ளே சென்றது.

நல்ல வாய் ஜாலம் நிறைந்தவன் என்பது புரிந்தது. ''சரி கணினியில் பேசிக் கொண்டு இருந்த நீங்க எப்படி நேரே சந்தித்தீங்க?''

''போட்டோவில் அழகா இருக்கிறாய். உன்னை நேரில் பார்க்கணும் போல ஆசையா இருக்கு என்று பதினஞ்சு நாள் முன்பு கேட்டான்'' என்று சொல்லும் போதே குரல் தொண்டையில் சிக்கிக் கொண்டது.

''உன் போட்டோ எப்படி அவனுக்குக் கிடைத்தது?'' என்ற ஆனந்தியின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் தலை கவிழ்ந்தாள்.



''இது வருத்தப்படும் நேரம் இல்லை கவி. விஷயத்தைச் சொல்லு.''

''போட்டோ ஆல்பம் கேட்டான். போன மாதம் என் பிறந்த நாளின் போது நானும் அப்பாவும் இருந்த போட்டோக்களை பேஸ் புக்கில் அப்லோட் பண்ணினேன்.''

''மேலே சொல்'' என்றவளின் குரலில் கடினத் தன்மை இருக்க அவள் முகம் கசங்கியது.

''அதில என் தப்பு எதுவும் இல்லை மிஸ். வீட்டுல நானும் அப்பாவும் இருக்க என்னுடைய போட்டோசை போட்டால் என்ன தப்பு என்று நினைத்தேன் மிஸ். இப்படி எல்லாம் அவன் மிரட்டுவான் என்று நான் நினைக்கவில்லை மிஸ்.''

''இன்னிக்கு மதியம் ஸ்கூல் கிரவுண்டில் சத்தம் போட்டு பேசிய மாதிரி இருந்ததே? ஏன் சண்டை வந்தது? எதற்கு மிரட்டுகிறான்?'' என்று கேட்டதும் கட்டிலில் அமர்ந்து இருந்தவள் அவள் காலடியில் அமர்ந்தாள்.

''இந்த படங்களைப் பார்த்துட்டு என்னை தப்பா நினைக்காதீங்க மிஸ். நான் அப்படி எல்லாம் பிராமிசா பண்ணலை. ஆனால் அவன் போட்டோ எடுத்து வந்து மிரட்டுறான் மிஸ்'' என்று அழுகையோடு பையினுள் இருந்த ஒரு கவரை எடுத்துக் காட்ட அதைப் பிரித்து பார்வையிட்டாள் ஆனந்தி.

''மிஸ், நான் அவனுடன் தனியா எங்கேயும் போனதே இல்லை மிஸ்.''

''இந்த மாதிரி போட்டோக்கள் எப்படி வந்தது என்று எனக்குத் தெரியாது மிஸ்.''

''இந்த விஷயம் எங்க அப்பாவுக்குத் தெரிஞ்சால் நான் என் பெண்ணை சரியா வளர்க்கலையோ ன்னு துடிச்சுப் போய்டுவாங்க மிஸ்.''

''சத்தியமா சொல்கிறேன் மிஸ். இந்த மாதிரி நான் அவனிடம் எந்த இடத்திலும் என்றுமே இருந்ததில்லை மிஸ்.

''அப்படி எங்க அப்பா வருத்தப் பட்டால் அடுத்த நிமிஷமே நான் இந்த உலகத்தில் இருக்க மாட்டேன் மிஸ்...''

''நான் செத்துப் போய்டுவேன் மிஸ்.''

போட்டோக்களை ஆராய்ந்து கொண்டு இருந்த சில நிமிடங்களில், நெஞ்சே வெடித்து சிதறுவது போன்ற பாவனையில், ஆதங்கத்துடன் புலம்பித் தள்ளிய காவ்யா காலில் விழுந்து கதறிக் கொண்டு இருக்க மனம் உருகி, அந்த சின்னஞ்சிறு மலரைத் தூக்கி நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள் ஆனந்தி.

## 13

மதிய உணவு இடைவேளையின் போது பள்ளி விளையாட்டு மைதானத்தில், காவ்யாவுடன் அந்த பையனைப் பார்த்த போதே ஏதோ சிக்கலில் மாட்டிக் கொண்டு காவ்யா தவிக்கிறாள் என்ற ஆனந்தியின் ஊகம் பொய்யாகப் போகவில்லை.

முதலில் பலவீனமான மறுப்பில் ஆரம்பித்த, நான் தப்பு செய்யவில்லை என்ற ஆதங்கத்தில் தொடர்ந்து,



எங்க அப்பாவுக்குத் தெரிந்தால் செத்து விடுவேன் என்ற உறுதி மொழியில் வந்து நின்ற காவ்யாவை அணைத்து ஆறுதல் மொழிகள் சொன்னாலும் ஆனந்தியின் வார்த்தைகள் அவளை சென்றடையவில்லை.

''ஷ்! கவி, அழுவதால் எந்தப் பிரச்னையும் தீரப் போவதில்லை. முதலில் முகத்தைக் கழுவிக் கொண்டு வா. என்ன நடந்தது என்று விஷயத்தை முழுசாகச் சொல்லு. யோசிக்கலாம். அப்பதான் பிரச்னைக்கு தீர்வு கண்டு பிடிக்க முடியும்'' என்று மிரட்டி அவளை குளியல் அறைக்குள் அனுப்பி விட்டு அவள் நீட்டிய கவரில் இருந்த புகைப்படங்களை மீண்டும் ஒரு முறை பார்த்தாள்.

எல்லாமே அவளுக்கு அவனும், அவனுக்கு அவளும் ஊட்டுவது போன்ற படங்கள், அவன் கழுத்தை கட்டிக் கொண்டு தொங்குவது போன்ற படங்கள், கன்னத்தில் மாறி மாறி முத்தமிடும் படங்கள். தோளில் கை போட்டு அணைத்தபடி நின்ற படங்கள், எல்லாமே ஒரே நாளில் எடுத்தவை என்பது முதல் பார்வையிலேயே புரிந்தது.

அவளின் பிறந்த நாளாகத் தான் இருக்க வேண்டும். தனஞ்செயன் இருந்த இடங்களில் எல்லாம் அவன் முகத்தை மாற்றி அமைத்து கோல்மால் வேலை செய்து இருக்கிறான்.

போட்டோ ஷாப்பில் வேலை செய்ய பொய்யான புகைப்படங்களை வைத்து, சின்னப் பெண்ணை மிரட்டுகிறான் என்ற ஒரு புகாரில் அவனை உள்ளே தள்ளிவிட முடியும். ஆனால் அதற்கும் மேலே ஏதாவது பிரச்னை இருக்கா என்பது தெரியவில்லையே?

குளியல் அறையில் இருந்து காவ்யா முகம் கழுவி வந்த உடனே, ''உன் பிறந்த நாள் விழா ஆல்பம் எடுத்துட்டு வா காவ்யா'' என்று சொல்ல அவள் அலமாரியைத் திறந்து எடுத்துக் கொடுத்தாள். அதில் இருந்த படங்களின் அருகே, இப்போது அவள் கொடுத்த படங்களை ஒவ்வொன்றாக இனம் கண்டு பிடித்து வைக்க காவ்யாவின் கண்கள் விரிந்தது.

''அப்பாவின் முகத்துக்கு பதிலா போட்டோ ஷாப் பண்ணி இருக்கான் மிஸ். திருட்டுத் தனத்தை எல்லாம் அவன் பண்ணிட்டு, என்னை மிரட்டி அவனுக்கு 20,000 ரூபாய் வேண்டும். நாளைக்குள் ஏற்பாடு பண்ணி தரவில்லை என்றால் இந்த போட்டோவை போஸ்டர் அடித்து உங்க வீட்டு முன்னாடி ஒட்டுவேன் என்று சொல்லி இருக்கான் மிஸ். அப்படி நடந்தால், நான் செத்துப் போய்டுவேன் மிஸ்'' என்று பதட்டத்தோடு சொன்ன காவ்யா, முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரமபிக்க அவளும் கட்டிலில் இருந்து இறங்கி அருகே அமர்ந்தாள்.

''பிரச்னை இருப்பவர்கள் எல்லாம் செத்துப் போவது என்று ஆரம்பித்தால் இந்த உலகத்தில் ஒரு ஆள் கூட மிச்சம் இருக்க மாட்டாங்க காவ்யா. அழுவதனால் அல்லது தற்கொலை செய்து கொள்வதனால் பிரச்னை தீர்ந்து விடுமா? தப்பு செய்யாமலே நீ அனாவசியமாக கெட்ட பெயர் வாங்க வேண்டும். இந்த மாதிரி அபத்தமா பேசுறதை நிறுத்திட்டு, மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று பாசிடிவா யோசனை பண்ணு. பிரச்னையை தைரியமா எதிர் நோக்கினால் பிரச்னை உன்னை கண்டு பயந்து ஓடிடும். ம்ம்.. எழுந்து மேலே உட்கார்'' என்று அதட்ட அவள் கொஞ்சம் தேறி, கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.



''சமத்து. இது தான் நல்ல பிள்ளைக்கு அழகு. இப்ப அவன் கடைசியா ஸ்கூலை விட்டு போகும் போது உன்னிடம் என்ன சொன்னான் என்பதை கூடுமான வரையில் அதே வார்த்தைகளை நினைவு படுத்தி சொல்லு பார்ப்போம்.''

''இதான் மிஸ் சொன்னான். நாளைக்கு 20,000 ரூபாய் நீ கொடுக்கலை என்றால், நாளை மறுநாள் உன் வீட்டு வாசலில் இந்த படம் போஸ்டரா தொங்கும் என்று சொன்னான்.''

''அதுக்கு நீ என்ன சொன்னாய்?''

''எங்கப்பா கொடுக்கும் பாக்கெட் மணி நூறு இருநூறு கொடுக்க முடியும். ஆயிரக்கணக்கில் நான் எப்படி கொடுப்பேன்? என்னால் முடியாது என்று சொன்னேன்.''

''அதுக்கு அவன் என்ன சொன்னான்?'

''உன்னிடம் இல்லை என்றால் என்ன? வீட்டு செலவுக்கு பணம் வைத்து இருப்பார்கள் இல்லையா? அதை எடுத்து வா என்று சொன்னான். அப்பா பர்சில் சில ஆயிரங்கள் தான் இருக்கும். எடுக்க முடியாது. எடுத்தாலும் உடனே கண்டு பிடிச்சு விடுவாங்க என்னால் முடியாது என்று சொன்னேன்...''

''இதை எல்லாம் ஏன்டா சொன்னாய்? வீட்டு விஷயங்கள் லாக்கர் சாவி எங்கே இருக்கும். அக்கவுண்ட் விபரங்கள் இதெல்லாம் முன்னே பின்னே தெரியாத ஆளிடம் சொல்லலாமா?''

''சொல்லக் கூடாது என்று தெரியும். சாரி மிஸ்.''

''செய்றதை எல்லாம் செய்து விட்டு இப்ப சாரி சொல்லி என்ன பிரயோஜனம்? அப்புறம் என்ன ஆச்சு?''

''அப்பா டெபிட் கார்டை எடுத்துட்டு வா. பின் நம்பர் சொல். வேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு உன்னிடம் திருப்பிக் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னான் மிஸ்.''

''மை காட்'' என்று அதிர்ச்சியுடன் ஆனந்தி சொல்ல அவள் அடக்கி வைத்து இருந்த கண்ணீர் பெருகி கன்னத்தில் வழிந்தது.

''காவ்யா, உண்மையைச் சொல். உன்னிடம் நான் இன்று மிரட்டி உருட்டி பேசி இருக்கா விட்டால், நீ அப்பா விடம் இதைச் சொல்லி இருப்பாயா?'' என்று அவளின் முகத்தை நிமிர்த்தி கண்களை பார்த்து நேராகக் கேட்க அவள் கண்களைத் தாழ்த்தினாள்.

''சொல்லி இருக்க மாட்டாய் என்று உன் முகமே சொல்கிறது. அப்படி என்றால் நாளை என்ன செய்து இருப்பாய்? அப்பாவின் டெபிட் கார்டைக் கொண்டு போய் நீட்டி, பின் நம்பர் சொல்லி இருப்பாயா?'' என்ற ஆனந்தியின் குரலில் கடுமை அளவுக்கு அதிகமாக இருந்தது.

ஆனந்தியின் சுட்டெரிக்கும் பார்வையும் தணல் துண்டுகளாக வந்து விழுந்த வார்த்தைகளும் காவ்யாவைப் பொசுக்கின.

''இல்லை மிஸ். நிச்சயம் அப்படி செய்து இருக்க மாட்டேன்.''

''பிறகு அவனுக்கு பணம் எப்படிக் கொடுக்க நினைத்தாய்?''

''கழுத்தில் இருக்கும் செயினைக் கொடுத்து'' என்று ஆரம்பிக்கும் முன்பே அவள் கன்னத்தில் ஒரு அறை விழுந்தது.



''இவ்வளவு நேரம் பொறுமையா இருந்த மிஸ் இப்ப ஏன் அடிக்கிறாங்க என்று யோசிக்கிறாயா? நீங்க யார் என்னை கை நீட்டி அடிக்க என்று யோசிக்கிறாயா?'' என்று ஆத்திரமாகக் கேட்க அவள் அடி விழுந்த கன்னத்தைத் தாங்கியபடி கண்ணில் துளிர்த்த நீர் வெளியேறக் கூட விடாமல் மூச்சை இழுத்துப் பிடித்த படி அவளை பார்த்து மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''இதுவரை நீ செய்த எந்த செயலுமே நீ தப்பு என்ற நினைப்புடன் செய்யவில்லை. ஆனால் விஷயம் கை மீறிப் போன இந்த நிமிஷத்தில், உன் செயினை கொடுத்து சரி பண்ணலாம் என்று நினைத்தாய் பாரு. அது பெரிய தப்பு. அதுவும் இது ஒரு நாளோடு முடியும் விஷயமும் இல்லை. தொடரும் தப்பு. ஒரு செயினை வாங்கி விற்று ருசி கண்டவன் அத்துடன் விடுவான் என்றா நினைத்தாய்? மீண்டும் தொந்தரவு பண்ணினால் என்ன செய்வாய்?'' என்று ஆனந்தி உலுக்க அவள் விழித்தாள்.

'மீண்டும் வந்தால் என்ன செய்வது? எத்தனை செயினைக் கொடுக்க முடியும்? நினைக்கவே கண்களை இருட்டியது. அவள் திகைத்து நிற்பதை உணராமலேயே ஆனந்தியின் கேள்விக் கணைகள் மேலும் தொடர்ந்தது.

''இந்த செயின் எங்கே என்று உங்க அப்பா விசாரித்தால் என்ன பதில் சொல்வாய்?''

''.......''

''தொலைந்து விட்டது என்று பொய் சொல்வாய். வீட்டில் அம்மா இல்லை. நகைகள் கணக்கு உங்க அப்பாவுக்குத் தெரியுமோ தெரியாதோ? இந்த பொய் இனி மேல் அப்பப்போ தொடரும். அப்படித் தானே? என்று மேலும் கடினமான குரலில் அதட்டலாகக் கேட்க

அவளுக்கு தான் நினைத்த செயலில் இருந்த பிழை புரிந்தது.

''இனி இப்படிச் செய்ய மாட்டேன் மிஸ். இந்த முறை என்னை இந்த சிக்கலில் இருந்து காப்பாற்றி விடுங்க மிஸ். அப்பாவுக்குத் தெரிய வேண்டாம் மிஸ்'' என்று கைகளைக் குவித்து கெஞ்சுதலாகச் சொல்ல அவளை இழுத்து அணைத்துக் கொண்டாள் ஆனந்தி. புழுவாகத் துடிக்கும் ஒரு சிறு பெண்ணை எவ்வளவு தான் திட்டுவது?

''அப்பா என்னை என்னை ரொம்ப நல்ல பொண்ணு என்று நினைத்துக் கொண்டு இருக்காங்க மிஸ். வேறே யாராவது வந்து என்னைச் சரியா கவனித்துக் கொள்ள வில்லை என்றால் நான் கஷ்டப்படுவேன் என்று தான், எனக்காக தான் மிஸ் அவங்க இன்னொரு கல்யாணம் கூட பண்ணிக்கலை'' என்று கண்களில் நீர் வழிய மார்பில் சாய்ந்து அழுத சிறு மொட்டினை பார்க்கையில் இதயத்தில் ரத்தம் வடிந்தது.

திண்ணிய நெஞ்சம் கொண்டவள், எதற்கும் கலங்காதவள் என்று பேர் வாங்கிய அவளுக்கே கண்ணில் நீர் துளிர்க்கும் உணர்வு வந்தது. மகளின் மேல் தந்தையும், தந்தையின் மேல் மகளும் எந்த அளவு பிரியம் வைத்து இருக்கிறார்கள் ஒருவர் நலனுக்காக மற்றவர் எப்படி துடிக்கிறார்கள் என்பதை வினாடியில் அறிந்து கொண்டாள்.

''ஒகே, கண்ணை துடைச்சுக்கோ. நான் கொஞ்சம் யோசிக்கிறேன். போலீசுக்கு உன் பேர் சொல்லாமல் எப்படி போகலாம் என்று பார்க்கிறேன். நாளைக்கு நீ என்ன செய்யணும் என்று காலையில் ஏழு மணிக்கு நான் போன் பண்ணிச் சொல்கிறேன். இப்ப நான்



கிளம்புகிறேன். அப்பா ஏன்டா டல்லா இருக்க என்று கேட்டால் மேக்ஸ் டெஸ்டில் மார்க் கம்மியா வாங்கிட்டேன் என்று சொல். நான் வந்து இருந்ததையும் சொல்லி விடு. நான் கிளம்பட்டுமா'' என்று எழுந்ததும் அவள் முகத்தில் ஒரு பயம் வந்து அமர்ந்தது.

''பயப்படக் கூடாது. ப்ரச்னையை நான் சுமுகமா தீர்த்து விடுவேன். நீ பைத்தியக்காரத் தனமா செத்து போவதை பற்றி எல்லாம் யோசிக்கக் கூடாது புரிந்ததா?'' என்று கேட்க அவள் கண்களை துடைத்துக் கொண்டு தலை அசைத்தாள்.

''சும்மா தலை அசைத்தால் போதாது. எங்க அம்மா மேலே சத்தியம். நான் அந்த மாதிரி யோசிக்க மாட்டேன், என்று என் தலையில் அடித்து சத்தியம் பண்ணு'' என்று கேட்க அவள் ஒரு கணம் திகைத்து நின்றாலும் அடுத்த கணம் அவளின் தலையில் அடித்து சத்தியம் செய்தாள் காவ்யா.

## 14

வீட்டை விட்டு வெளியே வந்தவள் கண் முன்னே காவ்யாவின் பிரச்னை விஸ்வரூபம் எடுக்க, யோசனையுடன் தனஞ்செயனுக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பினாள்.

''காவ்யா தொடர்பான விஷயம் அவசரமாக பேச வேண்டும். ஒரு மணி நேரத்திற்கு மேலே தேவைப் படும். உங்களை உடனே சந்திக்க விரும்புகிறேன். ஆனந்தி''

என்று செய்தி அனுப்பி விட்டு நிறுத்தி இருந்த வண்டியில் சாய்ந்தபடி பதட்டத்துடன் காத்திருந்தாள் முப்பதாவது வினாடி அழைப்பு வந்து விட்டது.

''காவ்யாவுக்கு என்ன ஆச்சு? நீங்க எங்கே இருக்கீங்க?'' என்ற குரலை கேட்டதும், ''சார் பயப்பட ஒன்றும் இல்லை காவ்யா உங்க வீட்டில் பத்திரமா இருக்கிறாள்'' என்று ஆறுதல் சொன்னாள்.

''ஒரு நிமிஷம், என் உயிரே என்னிடம் இல்லை. என்ன விஷயம் சொல்லுங்க.''

''நான் உங்க அலுவலகத்திற்கு வரட்டுமா? கொஞ்சம் பேசணும்.''

''என் ஆபீஸ் கிண்டியில் இருக்கே? நீங்க பல்லாவரத்தில் இருந்து வர நேரமாகுமே? என்ன விஷயம்? அவசரமா?''

''ஆமா. வேறே என்ன செய்யலாம் என்று சொல்லுங்க.''

''ஏர்போர்ட் பக்கத்தில் ஹோட்டல் ஸ்வாகத் இருக்கு தெரியுமா? அங்கே வந்துடுங்க. பல்லாவரத்தில் இருந்து நீங்க வருவதற்கும் கிண்டியில் இருந்து நான் வருவதற்கும் சரியா இருக்கும். வரீங்களா?''

''வருகிறேன், இன்னும் இருபது நிமிஷத்தில் அங்கே இருப்பேன்'' என்று சொல்லி போனை வைத்தவளுக்கு தன்னை நம்பிய ஒரு சிறுமியை முதுகில் குத்துகிறோம் என்ற குற்ற உணர்வு தோன்றியது. ஆனால் தனக்குத் தெரியாமல் செய்து விட்டாயே என்று இவன் கேள்வி கேட்டால் என்ன பதில் சொல்வது என்ற எண்ணம் தோன்றி குற்ற உணர்வை அடக்கியது.

அவள் அந்த ஹோட்டலை அறியாதவள் என்பதால் வாகனத்தை மெதுவாக செலுத்தி அதை கண்டு பிடித்து



வருவதற்கு முன்பே அங்கே வந்து சேர்ந்து இருந்தான் தனஞ்செயன்.

''வாங்க ஹோட்டல் கண்டு பிடிக்க சிரமமாக இருந்ததா? இங்கே டேபிள் புக் பண்ணி இருக்கேன் இந்த பக்கம் வாங்க'' என்று அழைத்து சென்றான். அவன் பார்வை அவளின் முகத்தை பதட்டத்துடன் ஆராய்ந்தது.

''நான் இப்ப சொல்லப் போகிற விஷயம் கொஞ்சம் ஷாக்கிங்கா இருக்கலாம். இதைக் கொஞ்சம் பாருங்க'' என்று தன் கையில் இருந்த போனை ஹெட் செட்டுடன் அவன் கையில் கொடுத்தாள்.

புரியாத பார்வையுடன் அதை வாங்கியவன், மாலையில் அவள் வீட்டில் நுழைந்ததில் இருந்து, காவ்யாவின் அறையில் நடந்த உரையாடல்களை பதிவு செய்து இருந்ததை கண்டான். வினாடிக்கு வினாடி அவன் முகம் வெவ்வேறு உணர்ச்சிகளைக் காட்டியது.

சின்ன பெண் என்று நினைத்து இருந்த என் செல்ல குட்டியா இப்படி என்ற வருத்தம்!

'நான் செத்துப் போய் விடுவேன் மிஸ்' என்று கதறிய போது வந்த துடிப்பு!

'எங்க அப்பாவுக்கு தெரிய வேண்டாம் மிஸ்' என்று கதறி அழுத போது வந்த உருக்கம்!

'எங்க அப்பா எனக்காக தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை' என்று சொன்ன போது வந்த நெகிழ்வு!

'க்ரெடிட் கார்ட் கொடுக்க மாட்டேன்' என்ற தெளிவில் வந்த பெருமிதம்!

'செயின் கொடுக்கப் போகிறேன்' என்று சொன்ன போது வந்த ஏமாற்றம்!

காவ்யாவை ஆனந்தி அடித்த போது வந்த கருணை என்று உணர்ச்சி பிழம்பாகி இருந்தான்.

நடுவில் பேரர் வந்ததையோ அவள் இருபது நிமிடம் ஐஸ் போட்டு சாத்துக்குடி ஜூஸ் கொண்டு வாங்க என்று சொன்னதையோ அவன் அறியான்!

அவனின் உணர்ச்சிப் போராட்டங்களை நேரில் கண்ட ஆனந்திக்கும் மனம் துடித்தது. இந்த மாதிரி ஒரு நிலை தந்தைக்கு வரக் கூடாது என்று பிரார்த்தனை செய்தது. மனசு நொந்து போன அவனின் துயரத்தில் தோள் கொடுக்க துடிப்பு வந்தது.

''சார், ப்ளீஸ் கண்ணை துடைச்சுக்கோங்க சார். ப்ளீஸ், பப்ளிக் பிளேஸ்'' என்று மெல்லிய குரலில் மூன்று முறை சொன்ன பிறகே அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

மேஜையில் இரண்டு கைகளையும் ஊன்றி, உள்ளங் கையில் முகத்தை தாங்கி சில நிமிடங்கள் அமர்ந்து இருந்தான். நிமிர்ந்து, முகத்தையும் தலையையும் அழுந்த கோதினான். மேஜையில் இருந்த குளிர் நீரை எடுத்து அருந்தினான். சட்டை பையில் இருந்து கர்ச்சீப் எடுத்து முகத்தை துடைத்தான்.

''எனக்கு என்ன சொல்றது என்று தெரியலை. என் பெண் மேலே இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்ட தற்கு நன்றி.''

''காவ்யா இது உங்களுக்கு தெரிவதை விரும்பவில்லை என்றாலும், என்னால் அப்படி நினைக்க முடியவில்லை. மதியம் அவளை அந்த பையனுடன் ஸ்கூல் கிரவுண்டில் தற்செயலாக பார்த்தேன். அவர்களுக்கு இடையே ஏதோ பிரச்னை என்று ஊகித்ததால் தான் மாலையில்



வீட்டுக்குச் சென்றேன். பேசியதை போனில் பதிவு பண்ணியது அவளுக்கு தெரியாமல் தான். ஆனால், தவறான நோக்கத்தில் இல்லை. அதை முதலில் புரிஞ்சுக்கோங்க'' என்று அவள் மிகுந்த வருத்தமான குரலில் சொல்ல அவன் பதறினான்.

''ஹையோ... இல்லை இல்லை... நான் அப்படி தப்பா நினைக்கலை. எனக்கு... நான்... ரொம்ப ஷாக்ல இருக்கேன்... கவலை வேறே...'' என்று பெருமூச்சு விட அவள் அவனை கனிவுடன் பார்த்தாள்.

''எனக்கே படபட வென்று வந்தது. உங்களுக்கு எப்படி இருக்கும் என்று உணர முடிகிறது சார். நாளைக்கு அவனை எப்படி பிடிக்கலாம். நாமே போகலாமா? இல்லை காவல் துறைக்கு செல்லலாமா? காவல் துறைக்கு செல்லும் பட்சத்தில் பள்ளி வளாகத்தில் பிடிக்காமல் இருக்க வேண்டியது அவசியம். நாளைக்கு அவங்க ஏதாவது தப்பு கண்டு பிடிக்கக் கூடாது'' என்று அவள் பேச அவன் பெருமூச்சுடன் நிமிர்ந்து அமர்ந்தான்.

அவனால் இன்னும் அந்த ஆரம்ப காலகட்ட அதிர்ச்சியில் இருந்து வெளியே வர முடியவில்லை. அதனால் இயல்பாக பேசவும் முடியவில்லை. முகத்தை மாறி மாறி அழுந்த துடைத்துக் கொண்டும், பின்னந்தலையை கோதிக் கொண்டும், தூரத்தில் இலக்கின்றி வெறுத்து கொண்டும் இருந்தான் தனஞ்செயன்.

''சார், ரிலாக்ஸ் சார். பிரச்னைக்கு ஒரு நல்ல தீர்வு கண்டு பிடிக்க வேண்டிய நேரம் இது. ஜூஸ் குடிங்க. ஜில்லுன்னு வயிற்றுக்குள் ஏதாவது சென்றால் நல்லா இருக்கும்'' என்று ஜூஸ் டம்ளரை நகர்த்த அவன் அவளை நன்றியுடன் பார்த்தான்.

''இவ்வளவு நாள் நீங்க எங்கே இருந்தீங்க என்றே தெரியாது. இப்ப என் குடும்பத்தில், என் பெண்ணுக்கு நீங்க...''

''எனக்கு நன்றி சொல்வது இப்ப முக்கியம் இல்லை. ஆக வேண்டியதை பார்க்கலாம்.''

''போலீசுக்கே போவது பெட்டர் என்று தோணுது.''

''நாமாக அந்த பையனை மடக்கினால் அவனுக்கு கோபமும் விரோதமும் வளர்ந்து மேலே ஏதாவது பிரச்னைக்கு முயற்சி செய்தால் அது தேவை இல்லாத ரிஸ்க் தானே?''

''நீங்க சொல்றது கரெக்ட் ஆனந்தி. போலீஸ் ஆதி முதல் அந்தம் வரை விசாரித்து விடுவார்கள். அதனால் காவ்யாவை சங்கிலியை கொடுக்க சொல்லி, அவன் அதை விற்கவோ அடகு வைக்கவோ முயற்சி செய்யும் போது வெளியே வைத்தே பிடித்து போலீஸ் விசாரணை செய்தால் சரியா வரும் என்று எனக்குத் தோன்றுது.''

''எனக்கும் போலீசுக்கு போவது பெட்டர் என்று தோன்றியது சார். ஆனால் அங்கே போலீஸ் ஸ்டேஷனில் காவ்யாவை வர வச்சு அலைக்கழிப்பாங்களோ என்ற தயக்கம் வந்தது.''

''ஒன்று இரண்டு முறை போகலாம் ஆனந்தி. திரும்ப திரும்ப வர வைக்காமல் நான் பார்த்து கொள்கிறேன். அவள் இல்லாமலேயே கூட விசாரணையை முடிக்கலாம். மைனர் பெண்ணுக்கு அப்பா என்ற பேரில் நான் பார்த்து கொள்கிறேன். அதற்காக யோசிக்கக் கூடாது. நீங்க எனக்கு ஒரு உதவி பண்ணனுமே?''

''சொல்லுங்க.''



''நாளைக்கு போலீஸ் நடவடிக்கை எடுக்க நான் எல்லாம் ஏற்பாடும் பண்ணி விடுகிறேன். இந்த விஷயம் எனக்கு தெரியும் என்று காவ்யாவுக்குச் சொல்ல வேண்டாம். அவளின் ஆசைப்படி அது எனக்கு தெரியாத ஒரு விஷயமாகவே இருந்துட்டு போகட்டும். என் பெண்ணுக்கு என்னால எந்த குற்ற உணர்வும் வர வேண்டாம். ப்ளீஸ் ஆனந்தி...'' என்றவன் குரல் தடுமாறி கண்ணீரில் தத்தளித்தது.

''சார், என்ன சார் இது சின்னக் குழந்தை மாதிரி...?'' என்று தேறுதலாக அவனின் கையைப் பற்றி அழுத்த அவன் சுதாரித்து கண்கள் துடைத்துக் கொண்டு தெளிவான குரலில் பேசினான்.

''என் பெண்ணுக்கு எந்த காலத்திலும் என் முகத்தை பார்க்க தயக்கமோ, குற்ற உணர்வோ வர கூடாது. அவள் எப்பவும் போல என்னிடம் பழகணும் என்று நான் ஆசைப் படுகிறேன் ஆனந்தி'' என்று தீர்மானமாகச் சொல்ல அவள் திகைத்தாள்.

''சரி சார், ஆனால்...''

''நீங்க பயப்பட வேண்டாம் ஆனந்தி. எல்லா வேலைகளையும் நான் பின்னால் இருந்து இயக்குகிறேன். உங்களுக்கு எந்த சிரமமும் இருக்காது. எனக்காக, என் புஜ்ஜுவின் மன நிம்மதிக்காக, இந்த உதவியை செய்யணும்'' என்று வலது கரத்தை நீட்ட அவள் தன் வலது கரத்தை அவன் கை மேல் வைத்து தலை அசைத்தாள்.

அதன் பிறகு செய்ய வேண்டிய வேலைகளை இருவரும் சாதாரணமாக இருப்பது போல காட்டிக் கொண்டு பேசினார்கள். மனதுக்குள் இருவருமே அடுத்தவரை மிக மிக உயர்ந்த நிலையில் வைத்து பிரமிப்புடன் பூஜை செய்யும் நிலைக்கு ஆளாகி இருந்தனர்.

''நாளைக்கு காலையில் காவ்யாவிடம் பேசிடுங்க ஆனந்தி.''

''பள்ளியில் நான் பார்த்துக் கொள்கிறேன். வெளியே நீங்க பார்த்துக்கோங்க சார்.''

''நான் மிஸ்ஸை விட்டு ரொம்ப நேரம் ஆச்சு ஆனால் நீங்க இன்னும் இந்த சாரை விடவே மாட்டேன் என்கிறீர்களே?'' என்று வருத்தத்துடன் சொல்ல அவள் மெலிதாக புன்னகை செய்தாள்.

''நான் கிளம்புகிறேன் சார். நீங்க வீட்டுக்குப் போனதும் காவ்யா சாப்பிட்டாளா என்று ஒரு முறை செக் பண்ணிக்கோங்க'' என்று விடை பெற்றுக் கிளம்பியவளை பெருமிதமும் அன்பும் கலந்த பாவனையில் வெகுநேரம் பார்த்து கொண்டு இருந்தான்.

## 15



நேர்த்தியாக திட்டமிட்டு, சரியான அதிகாரிகளை பிடித்து, அழகாக வலை விரித்து வைத்ததில், சில மணி நேரத்திலேயே அந்த சக்தி என்ற பெயரில் அறிமுகமாகி விக்ரம் என்ற பெயரில் பழகி, காவ்யாவை மிரட்டியவனை கண்டு பிடித்து காவல் துறை கவனிப்பு செய்வதில், எல்லா உண்மைகளும் வெளி வந்து விட்டது.

அந்த தகவலை நேரில் பகிர்ந்து கொண்டதோடு அவனிடம் இருந்து கைப்பற்றிய சங்கிலியை ஆனந்தியின் கையில் கொடுத்தான் தனஞ்செயன்.



''நீயே இதை காவ்யாவிடம் கொடுத்து விடு ஆனந்தி'' என்று அவன் சங்கிலியை கொடுத்த வினாடியில் அவன் பார்வையில் என்ன பாவனை இருந்தது? நிச்சயம் அது நன்றியை தாண்டிய ஒரு உணர்வு.

''இப்ப மதிய உணவு இடைவேளை தானே? இதைக் கொண்டு போய் காவ்யாவிடம் கொடுத்து பயப்பட வேண்டாம் என்று சொல்லி விடுகிறாயா?'' என்று தாழ்ந்த குரலில் சொல்ல அவள் காவ்யாவின் வகுப் பறைக்குச் செல்ல திரும்பினாள்.

''ஒரு நிமிஷம்...'' என்று நிறுத்த அவள் கண்ணில் கேள்வியுடன் நின்று திரும்பினாள்.

''உங்க தலையில்... ஏதோ... இருக்கு...'' என்று இயல்பாக சொன்னவன் அவள் தலையை லேசாக தடவி விட, 'தேங்க்ஸ்...' என்று அவள் புன்னகையுடன் தலை அசைத்து விட்டு திரும்பி சென்றாள்.

''காவ்யா...'' என்ற அவளின் அழைப்பு காதில் கேட்டதும் தாயைத் தேடி ஓடி வரும் இளம் கன்றினை போல துள்ளிக் குதித்து ஓடி வந்தவளின் கண்களில் அதீத எதிர்பார்ப்பும் ஒரு ஓரத்தில் சின்ன கலக்கமும் தெரிந்தது.

''பிரச்னை முடிந்தது குட்டிம்மா'' என்று அவளின் கன்னத்தை ஆசையுடன் வருடி விட்டு அவளின் கண் முன்னால் அந்த சங்கிலியை ஆட்டிக் காட்டினாள்.

''தேங்க் யூ மிஸ். தேங்க் யூ சோ மச்...'' என்று உணர்ச்சி பெருக்குடன் சொன்னவள் அதே வேகத்தில் அவளின் கழுத்தைக் கட்டி லேசாக எம்பி கன்னத்தில் முத்தமிட்டாள்.

''ஹேய், ஸ்கூலில் இப்படி செய்கிறாய்? உன் பிரெண்ட்ஸ் என்ன என்று விசாரித்தால் என்ன

சொல்வாய்?'' என்று முதுகை வருடிக் கொடுத்தவள் அந்த சங்கிலியை அவளின் கழுத்தில் அணிய வந்த போது தடுத்து நிறுத்தினாள்.

''இல்லை மிஸ். நீங்க எனக்குச் செய்த உதவிக்கு நான் என்னென்னவோ செய்யணும். அட்லீஸ்ட் இந்த செயி னாவது நீங்க போட்டுக்கோங்க. இது நான் உங்களுக்கு கொடுக்கும் கிப்ட்...''

''அதெல்லாம் வேண்டாம். கவி. என்ன பண்ணு கிறாய்? அப்பா செயின் எங்கே என்று கேட்டால் என்ன சொல்வாய்?'' என்று அதட்டியபடி அவளிடம் இருந்து விலக முயல ஆனந்தியின் கைப் பற்றி இழுத்தாள்.

''இதை உங்களிடம் நான் கொடுத்தேன் என்று எங்க அப்பாவிடம் நான் பெருமையா தலை நிமிர்த்திச் சொல்ல லாம். பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே அப்பா உங்களுக்கு ஏதாவது கிப்ட் கொடுக் கணும் என்று சொல்லிட்டே இருக்காங்க. அதனால அவங்க ஒன்றுமே சொல்ல மாட்டாங்க எனக்குத் தெரியும்...''

''அதுசரி... அப்பா கிப்ட் கொடுக்கட்டுமே. இதை நீ ஏன்...'' என்று மீண்டும் மறுக்க முயன்றாள்.

''அவங்க கொடுக்கும் போது கொடுக்கட்டும் நான் இப்ப என் மனசு சொல்றபடி இதை உங்களிடம் கொடுக்கிறேன். ப்ளீஸ் மிஸ் வேண்டாம் என்று சொல்லி என் மனசை உடைச்சுடாதீங்க மிஸ். ப்ளீஸ், ஐ லவ் யூ மிஸ்...'' என்று உறுதியான குரலில் தீர்மானமாகச் சொல்லி, அதை அவளின் கழுத்தில் போட்டு விட, உணர்ச்சி பெருக்கில் பதில் பேசாமல் அணைத்து கொண்டாள் ஆனந்தி.



காவ்யாவின் வகுப்பறையில் இருந்து ஆசிரியர் ஓய் வறைக்கு வந்து தன் உணர்வுகளை கட்டுப் படுத்தி கொண்டு தனஞ்செயனை அழைத்த போது முதல் ரிங்கிலேயே போனை எடுத்தான்.

''ஆனந்தி, காவ்யா என்ன சொன்னாள்?''

''காவ்யா நிறையச் சொன்னாள். நான் இப்போ ரொம்ப எமோஷனலா இருக்கிறேன். அவள் சந்தோஷமாக இருக் கிறாள் என்பதை உங்களுக்குச் சொல்லத் தான் அழைத் தேன்.''

''ஒரு நிமிஷம் கார் பார்க்கிங் ஏரியாவுக்கு வர முடியுமா ஆனந்தி?''

''மதிய உணவு வேலை முடிந்து பள்ளி ஆரம்பிக்கப் போகிறதே?''

''இன்னும் பத்து நிமிடம் இருக்கு. வந்த உடனே திரும்பி விடலாம் ஆனந்தி. ப்ளீஸ்...'' என்று விடாமல் வற்புறுத்தி அழைத்தவன் குரலில் ஆவல் இருந்தது புரிந்தது.

''நீங்க இன்று மாலையில் ப்ரீயா இருக்கீங்களா? உங்களிடம் இரண்டு முக்கியமான விஷயம் பேச வேண்டும். மாலையில் பார்க்கலாமே? அதில் ஒன்று காவ்யா பற்றி, இன்னொன்று என் தங்கையின் திருமணம் பற்றியது...'' என்று ஆரம்பித்தவளை அவன் பேச விடவில்லை.

''பேசலாம் பிரச்னையே இல்லை. ஆனால் அதுக்கு முன்னாடி என்னுடைய பொருள் ஒன்று உன்னிடம் இருக்கு. அதை நான் திருப்பி எடுத்துக் கொள்கிறேன். வந்ததும் நீ போய் விடலாம்'' என்று சொல்ல அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

அவன் பொருளா? என்னது? அந்த செயினை வாங்கி கொள்ள போகிறானா? அந்த விஷயமே அவனுக்கு தெரியாது என்பதை மறந்து தர முடியாது என்று சொல்ல வேண்டும் போல உணர்வு பொங்கியது.

என்ன கேட்கப் போகிறான் என்ற யோசனையுடன் கார் பார்க்கிங் ஏரியாவை அடைந்த போது, அவன் கண்கள் அவள் கழுத்தில் இருந்த சங்கிலியை கணக்கெடுக்கத் தவறவில்லை. அந்த வினாடியில் அவன் மேல் மலர்களை யாரோ கொட்டினார்கள். இறைவன் தன் தேடலுக்கு செவி சாய்த்து விட்டான் என்ற சந்தோஷம் பொங்கியது.

''சொல்லுங்க சார்'' என்று அவள் அருகே வந்து நிற்க அவன் சுவாதீனமாக அவள் தலையில் இருந்து ஒரு சின்ன பட்டன் சைசில் இருந்த காமராவை உருவி அவளிடம் காட்டினான்.

''என் மகள் கலக்கம் நீங்கி சந்தோஷமாக சிரிக்கும் அந்த நிமிடத்து உணர்வுகளை அருகில் இருந்து பார்க்க வேண்டும் என்று ஆசைப் பட்டேன். அதற்காக இந்த காமராவை உன் தலையில் சொல்லாமல் வைத்ததற்கு சாரி, பத்திரமா திருப்பி கொடுத்ததற்கு தேங்க்ஸ்'' என்று அவன் சிரிப்புடன் சொல்ல அவள் திகைப்புடன் விழித்தாள்.

அட பாவி! கடைசி நிமிடத்தில் தலையில் ஏதோ இருக்கு என்று தட்டி விடும் நொடியில் வைத்து விட்டானா?

அவளின் முக பாவனையைப் பார்த்தவனுக்கு புன்னகை வர, ''சாரி அகைன். என் மகள் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறாள் என்பதை நீ சொல்லாமலேயே புரிந்து



கொண்டேன். மாலையில் சுதந்திர தின விழா பூங்காவில் ஐந்து மணிக்கு சந்திக்கலாம்'' என்று கொட்டும் அருவி மாதிரி பேசி விட்டு அவளின் பதிலை எதிர்பாராமல் நகர்ந்த தனஞ்செயனை வியப்புடன் பார்த்தபடி நின்றாள் ஆனந்தி.

## 16

மாலை நான்கு மணிக்கு பள்ளி முடிந்த பிறகு, ஆறாம் வகுப்பில் வந்து எட்டிப் பார்க்க, உற்சாகமாக வீட்டுக்கு கிளம்பிய காவ்யாவை பார்த்ததும் ஆனந்திக்கு புன்னகை மலர்ந்தது.

''இனிமேல் அந்த விக்ரம் அல்லது அறியாத புது நபர்கள் பேஸ்-புக்கில் சேட் வந்தால் பதில் சொல்ல வேண்டாம் கொஞ்ச நாள் கவனமாக இருந்து கொள். உன்னுடைய நன்மைக்காக தான் சொல்கிறேன். ஓகே?'' என்று கனிவான குரலில் சொல்லி அவள் தலையை வருட அவள் கண்களில் பயத்துடன் வேகமாக தலை அசைத்தாள்.

''பயப்பட வேண்டாம். இப்போதைக்கு போலீஸ் நடவடிக்கை எடுத்தாகி விட்டது. ஆனால் இனிமேலும், கொஞ்ச நாள் கழித்து நேரிலோ, போனிலோ தொந்தரவு செய்தால் உடனே என்னிடம் தயங்காமல் சொல்லணும். உனக்கு கட்டாயம் உதவி செய்வேன். தைரியமா இருக்கணும்'' என்று மீண்டும் ஒரு முறை நம்பிக்கை ஊட்டி அனுப்பி வைக்க அவள் கை அசைத்து விட்டு கிளம்பினாள்.

சொன்ன நேரத்திற்கு ஐந்து நிமிடம் முன்பாகவே பூங்காவிற்கு வந்த ஆனந்தி அங்கே விளையாடி கொண்டு இருந்த குழந்தைகளையும் நடை பயிற்சியில் இருந்த முதியவர்களையும் வேடிக்கை பார்த்தபடி அமர்ந்து இருக்க சில நிமிடங்கள் கழிந்தது.

'ஹாய் ரொம்ப நேரமாக காத்திருக்கிறாயா?' என்று விசாரித்தபடி அருகே வந்து அமர்ந்தான் தனஞ்செயன்.

''இல்லை, இப்பதான் வந்தேன் அஞ்சு நிமிஷம் இருக்கும்.

''காவ்யாவை ஈவினிங் பார்த்தாயா? என்ன சொன்னாள்?'' என்று கேட்க அவள் வியப்பில் கண்களை விரித்தாள்.

''அது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''ஒரு ஊகம் தான். பெரிய பரிசு கொடுத்து இருக்காங்க. செல்ல பெண்ணைப் பார்க்காமல் இருக்க முடியுமா?'' என்று கேலியாக கேட்க அவள் முகம் மாறியது.

பரிசு என்று இவன் எதை சொல்கிறான்? இந்த சங்கிலியையா?

''ஹேய் என்ன கோபம்? முகம் இப்படி சுருங்குது? எதுவா இருந்தாலும் பேசித் தீர்த்து கொள்ளலாம் மிஸ். பெஞ்ச் மேலே ஏத்திடாதீங்க'' என்று சொன்னவன் குரலில் கேலிச் சிரிப்பு இருந்தது.

''நான் யாரிடமும் பரிசை எதிர்பார்த்து எந்த வேலையும் செய்வதில்லை மிஸ்டர் தனஞ்செயன்'' என்று அவள் கடினமான குரலில் சொல்ல அவன் கை உயர்த்தினான்.

''சாரி மிஸ். நான் உங்களுடன் சண்டை போட வரவில்லை. எனக்கு சரியா பேசத் தெரியவில்லையோ



என்னவோ? நான் பரிசு என்று சொன்னது இதை'' என்று சொல்லி பிற்பகல் காவ்யாவிடம் சங்கிலியை கொடுத்த போது அவள் ஆனந்தியின் கன்னத்தில் முத்தமிட்ட காட்சியை தன் மொபைலில் போட்டோவாக காட்டினான்.

''ஹேய், இது எப்படி உங்க மொபைலில் போட்டோவாக வந்தது?''

''உன் தலையில் வைத்து இருந்த பட்டன் காமராவை உன் கண் முன்னால் தானே எடுத்து, நன்றி சொல்லி விட்டுப் போனேன் மறந்து விட்டாயா?'' என்று கேட்க அவளின் முகம் விகசித்தது.

''என்ன சத்தமே காணோம்? பெரிய மறக்க முடியாத பரிசு தானே?'' என்றவன் குரல் கனிவாக இருந்தது.

''அது மறக்க முடியாத பரிசு தான். அத்துடன், காவ்யா, இந்த செயினையும் வற்புறுத்தி போட்டு விட்டாள். இதில் உங்களுக்கு ஆட்சேபணை எதுவும் இல்லையே?''

''சில்லி, இதை விட இன்னும் நிறைய கொடுக்கலாம் என்று நான் நினைக்கிறேன். நேரம் வரும் போது சொல்கிறேன். அது இருக்கட்டும். நீ என்னிடம் உன் தங்கையின் திருமணம் தொடர்பா பேசணும் என்று சொன்னாயே? என்ன விஷயம் சொல்லு?'' என்று தனஞ்செயன் பேச்சை மாற்ற ஆனந்தி தடுமாறினாள்.

அவன் பணக்காரன் தான்! நாற்பது லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு பொருளை வாங்கிக் கொள்! தங்கையின் திருமணம் நடக்க இருக்கும் இருபது தினங்களுக்குள் பணத்தைக் கொடு என்று கேட்பது. அதிலும் அவன் மகளுக்கு ஒரு இக்கட்டான நேரத்தில் உதவி

செய்ததற்கு நன்றி கூற அவன் வந்து இருக்கும் இந்த நேரத்தில் கேட்பது அபத்தமாக இருக்கும் என்ற உண்மையைப் புரிந்து கொண்ட ஆனந்தி அந்தப் பிரச்னையை அவனிடம் விவாதிக்க விரும்பவில்லை.

''அது ஒன்றும் இல்லை சார். நான் பேச வந்தது காவ்யாவை பற்றி. காவ்யாவுடன் நேற்று பேசி கண்டு இருந்த போது எனக்குத் தோன்றியதை சொன்னால் நீங்க தப்பா எடுத்து கொள்ளக் கூடாது'' என்ற பீடிகையுடன் ஆரம்பித்தாள்.

''நீ சொல்றதை தப்பா எடுத்துக்க முடியுமா ஆனந்தி? காவ்யாவுக்காக நீ பார்த்துப் பார்த்து செய்வதை கண்ட பின்னும் தப்பா நினைப்பேனா? சொல்லு?'' என்றவன் குரலில் அன்பும் மதிப்பும் கலந்து இருந்தது.

''நீங்க இரவில் வீட்டுக்கு எப்போ வருவீங்க?'' என்று நேரடியாக கேட்டதும் அவன் முகம் வாடிச் சுருங்கியது.

''ரொம்ப லேட் ஆகி விடும் ஆனந்தி. பெரும்பாலான நாட்கள் அவள் தூங்கிய பிறகு தான் வருவேன். ஒரு மாதத்தில் நாலைந்து நாட்கள் இரவு உணவிற்கு வந்தால் அதுவே பெரிய விஷயம் தான்.''

''உங்க வேலை அப்படி என்று எனக்கு புரியுது ஆனால் அந்த மாதிரி நீங்க இரவில் தாமதமா வருவதால் தான் இந்த பிரச்னை வந்து இருக்கிறது என்பது என் கருத்து. இப்படி முகத்திற்கு நேரே கடுமையாக சொல்வதற்கு சாரி. ஆனால் அது தான் உண்மை'' என்று அவள் சொல்ல அவனிடம் இருந்து நீண்ட பெருமூச்சு வெளியேறியது.

''அம்மா இருந்த வரை இது பெரிய குறையாகத் தெரியவில்லை. அம்மா மறைவிற்கு பிறகு, சட்டென்று



விழுந்த அந்த வெற்றிடத்தில் அவள் தனிமையை உணர்ந்து இருக்க வேண்டும். அதை நான் கவனிக்கவும் செப்பனிடவும் தவறி விட்டேன், உண்மை தான்...'' என்று வருத்தமாகச் சொன்னவன் முகம் கவிழ்ந்து தரையை பார்த்த படி இருந்தது.

''உங்க ஸ்டேடஸ் கம்பேர் பண்ணும் போது இன்றைய பிரச்னை ரொம்ப சாதாரணமானது. இதை சில மணி நேரத்தில் முடித்து விட்டீர்கள். ஆனால் இவன் ஒரு ஆள் இல்லை. இவனை மாதிரி இன்னும் எத்தனை பேர் வருவார்களோ? இன்றைய சமூக தளங்களில் எத்தனை விதமான அவலங்கள் நடக்கின்றன என்பதற்கு கணக்கு எதுவும் கிடையாது. பிரச்னை இன்றோடு தீரவில்லை. நிரந்தர தீர்வு அவசியம் நீங்க அவளின் தனிமையை தீர்க்க ஏதாவது செய்ய வேண்டும். அதுவும் உடனேயே...'' என்று சொல்லி நிறுத்த அவளின் வாதத்தில் இருந்த நியாயம் அவனுக்கும் புரிந்தது.

''வீட்டோடு பொறுப்பாக ஒரு ஆள் வேண்டும் என்று விளம்பரம் கொடுத்து இருக்கிறேன். வேலை தேடி தரும் நிறுவனங்களிடமுமே சொல்லி வைத்து இருக்கிறேன். இரண்டு மூன்று நாளில் ஏற்பாடு பண்ணுகிறேன் என்று சொல்லி இருக்காங்க.''

''அது நிரந்தர தீர்வாக இருக்க முடியாதே சார்?''

''ப்ச்! இந்த சாரை விடவே மாட்டியா ஆனந்தி நீ?'' என்று எரிந்து விழ அவள் திகைத்து விழித்தாள். நன்றாக தானே பேசி கொண்டு இருந்தான். திடீர் என்று என்ன ஆச்சு?

''நான் என்ன உங்க ஸ்கூலில் வேலை பார்க்கிறேனா? உங்க ஸ்கூல் கரெஸ்பாண்டண்டா? எதுக்கு

இப்படி வாக்கியத்துக்கு மூன்று சார் போடுகிறாய்?'' என்று மேலும் பொரிய அவளின் முகம் வாடியது.

நிரந்தரத் தீர்வு வேண்டும் என்று அவள் பரிந்துரைப்பது திருமணத்தை என்பது புரிந்தது அதனாலேயே எரிச்சல் வந்தது.

''ஏற்கனவே ஒரு கல்யாணம் பண்ணி வாழ்ந்த எனக்கு இரண்டாம் கல்யாணம் பற்றிப் பேசுகிறாய். ஆனால் நடக்கவே இல்லாத உன் கல்யாணம் பற்றியோ, ஏற்கனவே நிச்சயம் ஆன உன் தங்கையின் திருமணம் பற்றியோ கேள்வி கேட்டால் பூசி மெழுகுகிறாயே? ஏன் ஆனந்தி?''

''அதெல்லாம் பற்றி பேச விரும்பவில்லை சார். இப்ப காவ்யாவின் பிரச்னை தானே கண் முன்னால் நிற்கிறது. அதனால்...'' என்று சொன்ன ஆனந்தியை முறைத்தான்.

அடுத்தவன் பிரச்னையில் அவள் மூக்கை நுழைத்து அபிப்ராயம் சொல்வாள்! ஆனால் அவள் பிரச்னையை பற்றிப் பேச மாட்டாளா? தான் அவளை நெருங்கி நெருங்கிச் செல்ல விருப்பத்துடன் காத்திருக்க, அவள் தன்னை தூரமாகத் தள்ளி வைக்கிறாள் என்ற ஆத்திரம் வந்தது.

''நிரந்தரத் தீர்வு எல்லாம் நீ சொல்வது போல நிமிஷமா எடுக்க முடியாது. இப்போதைக்கு வீட்டோடு இருக்க ஒரு கவர்ன்ஸ் ஏற்பாடு பண்ணுகிறேன். மகள் மேல் அக்கறை வைத்து இவ்வளவு தூரம் செயல்படுவதற்கு நன்றி வேறென்ன?'' என்று கேட்க அவள் விழித்தாள்.

இப்படி முகத்தை வைத்து கொண்டு, இந்த குரலில் வேறென்ன என்று கேட்டால், விஷயம் சொல்ல



முடியுமா என்ன? தொண்டைக்குள் ஏதோ அடைத்தது. சட்டென்று அவன் தன்னை இரண்டாம் தர குடிமகளாக நடத்துவதாகத் தோன்றியது. அவள் என்ன தப்பு செய்தாள்? எதற்கு இப்படிக் காய்கிறான்? ஒன்றும் இல்லை, என்ற வார்த்தைகளை கூட சொல்ல முடியாமல் மறுப்பதாகத் தலை அசைத்தாள் ஆனந்தி.

''ஓகே, எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு, கிளம்புகிறேன்'' என்று முணுமுணுப்பாக சொன்னவன் அவளின் பதிலை எதிர்பாராமல் கிளம்பி விட அவளுக்கு முகத்தில் அறை வாங்கியது போல இருந்தது. இவனிடம் வீடு விற்பனை பற்றி இன்று முடியாவிட்டாலும் இரண்டு நாள் கழித்தாவது பேசலாம் என்று நினைத்த சிந்தனை மனதின் அடி ஆழத்துக்கு சென்றது.

* * *

பூங்காவில் இருந்து பாதி பேச்சில் அரை குறையாக விடை பெற்று வெறியேறிய தனஞ்செயனுக்கு அடுத்த ஒரு வாரம் அவளிடம் பேசாமல் எப்படி கழிந்தது என்றே தெரியவில்லை.

ஒவ்வொரு நாளையும் விடியா பகலே தொலையா இரவே என்று நெட்டி தள்ள வேண்டி இருந்தது. வேலை நிரம்பி இருக்கும் பகல் பொழுதுகளை காட்டிலும், இரவு அதிக தொல்லை தந்தது.

''பார்க்கும் இடத்தில் எல்லாம் நந்தலாலா
உன்னை காணும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா''

என்று பரம்பொருளுக்கு பாரதி சொன்ன உவமை அவனுக்குப் பொருந்தியது. எந்த திசையில் நின்றாலும் ஆனந்தியின் பேச்சும் தோற்றமும், தோன்றியது. மனம் ஒரு நிலையில் இல்லை.

மகள் படிப்பு தொடர்பான வேலைகளை செய்து கொண்டு இருக்க, அருகே அமர்ந்து அவளின் தலையை மெல்ல வருடினான்.

''நீ ஹேப்பியா இருக்கியா காவ்யா?'' என்ற தந்தையின் கேள்வியில் திடுக்கிட்டு திரும்பினாள்.

''என்னப்பா திடீர் என்று...'' என்றவளின் குரல் தடுமாறியது.

''சும்மாதான்டா! அப்பா உன் மேல் உயிரையே வைத்து இருக்கிறேன். உனக்கு என்ன வேண்டுமானாலும் என்னிடம் தயங்காமல் சொல்லு என்று சொல்றேன். வேறே எந்த அர்த்தமும் இல்லை'' என்று சொல்ல அவள் அவனை கட்டி கொண்டாள்.

''தெரியும்பா. ஐ லவ் யூ'' என்று சொன்னவளின் மனம் அப்பாவிடம் விஷயத்தை மறைக்கிறோம் என்ற குற்ற உணர்வில் தத்தளித்தது.

''நானும் தான் புஜ்ஜூ. ஹோம் வொர்க் இருந்தால் பாரு கண்ணு'' என்று சொல்லியவனுக்கு ஆனந்தியிடம் பேச வேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

இதற்கு முன்பு அவளை பார்த்த சந்தர்ப்பங்களில் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் மனக்கண்ணில் மீண்டும் மீண்டும் உலா வந்தது. அன்று மதியம் அவள் தலையில் இருந்த காமராவை எடுக்க வரச் சொன்ன போது, அவளே தன்னிடம் பேச வேண்டும் என்று அழைத்தானே? அந்த சந்திப்பை எவ்வளவு ஆவலுடன் சென்றான். கடைசியில் அவள் திருமணம் பற்றி பேசியதில் தனக்கு ஏன் கோபம் வந்தது?

அவளுடைய பிரச்னையைச் சொல்ல மறுக்கிறாளே என்ற கோபம் தான். உன் பிரச்னையை என்னிடம்



பகிர்ந்து கொள்ளவில்லை என்றால் என் பிரச்னையில் தலையிட நீ யார் என்ற சிறுபிள்ளைத் தனமான கோபம்! பெருமூச்சு வந்தது.

போனது போகட்டும். ஆசை வந்த பின்பு மறைக்க வேண்டாம். தானாகக் கோபித்துக் கொண்டு எழுந்து வந்தால், தானே பேசுவது தான் முறை. இதயம் பரபரக்க, ''இப்போது பேசலாமா? பிசியா?'' என்று குறுஞ்செய்தி அனுப்பி விட்டு தடதடக்கும் இதயத்துடன் காத்திருந்த முப்பதாவது வினாடி அவனின் அலைபேசி ஒலி எழுப்பியது.

# 17



சதாசிவம் பெரியப்பா வந்து தன்னால் முடிந்த குழப்பத்தை ஏற்படுத்தி விட்டு சென்று ஒரு வாரம் கடந்து இருந்தது. வசந்தியும் கார்த்திக்கும் மாறி மாறி வீடு விற்பனை என்ன ஆச்சு என்று நெருக்கி கொண்டு இருந்தனர். பள்ளியில் இருந்து வந்து தன் வேலைகளை செய்து கொண்டு இருந்த ஆனந்தியை கார்த்திக்கின் அழைப்பு சோர்வாக்கியது.

''கார்த்தி பேசணும் என்று சொல்கிறான். பெரிய இவ மாதிரி ரூமுக்குள்ளே போய் கதவை சாத்தி கொண்டால் தீர்ந்து விடுமா?'' என்று வசந்தி அதட்ட அவளை முறைத்தபடி போனை வாங்கினாள்.

''சொல்லுடா...''

''வீடு விற்கும் ஐடியா இல்லையா அக்கா? அம்மா பேச்சை கேட்டு கொண்டு தயங்குகிறாய் என்று

நினைக்கிறேன். வசந்தி கல்யாணம் நல்லபடியா நடக்க வேண்டாமா?''

''வசந்தி கல்யாணம் பற்றி மட்டும் யோசிக்கிறாயே? அதன் பிறகு அம்மா எங்கே இருப்பாங்க என்று யோசிக்க வேண்டாமா? ஏன் நீ அம்மாவை வைத்து கொள்ள போகிறாயா?''

''நான் அம்மா நல்லா இருக்கணும் பெங்களூர் வந்து என் மனைவியிடம் சிரமப்பட வேண்டாம் என்று நினைக்கிறேன். அதைப் புரிந்து கொள்ளாமல் நீ நக்கல் அடிக்கிறாய் நல்லதுக்கு காலமில்லை...''

''நான் ஏன் உன்னை நக்கல் அடிக்கணும்? அதே மனைவியிடம் எங்க அம்மாவை நல்லா பார்த்துக்கோ என்று சொல்ல முடியாதோ?''

''தேவை இல்லாமல் விஷயத்தை டைவர்ட் பண்ணாதீங்க அக்கா. இன்னிக்கு விஷயத்துக்கு வாங்க.''

''வேண்டாம் என்று நான் சொல்லவில்லை கார்த்திக். பெரியப்பா வந்து குட்டையை குழப்பியதற்கு நான் என்ன செய்ய முடியும்? அடகு வைக்க முயற்சி செய்கிறேன். உனக்கு அவசரம் என்றால் நீயே இங்கே வந்து அந்த வேலையை கவனி. நான் வேண்டாம் என்று சொல்கிறேன்?'' என்று சொல்லி விட்டு பதிலை எதிர் பாராமல் போனை கட் பண்ண அம்மாவின் அருகே சென்றாள்.

''சாரிம்மா, நான் ஏதாவது தப்பா பேசிட்டேனா?'' என்று கவலையுடன் கேட்க அவர் கண்ணீரோடு மறுப்பாக தலை அசைத்தார்.

''இல்லை ஆனந்தி. இப்ப தான் கரெக்டா பேசி இருக்கிறாய் நீ இன்னும் நான்கு ஆண்டுகள் முன்பாக



அவன் படிப்பை முடித்ததும் இந்த மாதிரி பேசி இருந்தால் உனக்கு இந்நேரம் கல்யாணம் முடிந்து இருக்கும்...''

''இல்லைம்மா உங்களை விட்டுப் போகும் எண்ணம் எனக்கு இல்லை. கல்யாணம் என்பது அதற்கு தடையாக இருக்கும் என்றால் அந்தக் கல்யாணம் வேண்டாம் என்று நான் முடிவெடுத்து எத்தனையோ வருடம் ஆகி விட்டது.''

''பைத்தியம் மாதிரிப் பேசாதே ஆனந்தி, எனக்குப் பிறகு...'' என்று மீண்டும் ஆரம்பித்தவரின் வாயைப் பொத்தினாள்.

''வேண்டாம்மா, இதையே பேசிப் பேசி என்னை பல வீனமாக்காதீங்க. நான் சந்தோஷமா இருக்கேன். ஒரு வேளை நாளைக்கு இந்த வீடு விற்பனை நடைபெற வில்லை என்றால் வசந்தி கல்யாணத்துக்கு என்ன செய்வது என்பது தான் என் கவலை?''

''அந்தக் கவலை வசந்திக்கும் கொஞ்சமாவது இருக்கட்டும் ஆனந்தி. திருமணம் முடிந்த பிறகும், வளை காப்பு பிரசவம் பிறந்த வீட்டு சீர் என்று நாம் தொடர்ந்து செய்ய வேண்டி இருக்கும்' என்று சொல்லும் போதே அவளின் அழைப்பேசியில் தகவல் வந்த ஒலி கேட்டு எடுத்து பார்த்தவள் முகம் மலர்ந்தது. தனஞ்செயன்! உடனே அழைத்தாள்.

ஆனந்திக்கு மெசேஜ் அனுப்பிய முப்பதாவது வினாடி அவளிடம் இருந்து அழைப்பு வர மனசுக்குள் பரவசம் பரவியது.

''ஹாய், வேலையாக இருக்கும் போது தொந்தரவு பண்ணிட்டேனா?'' என்றவனின் குரலில் இருந்த பா

வசத்தை அளக்க இந்த பூவுலகிலேயே அளவுகோல் இல்லை.''

''நோட் புக்ஸ் கரெக்ட் பண்ணி கொண்டு இருந்தேன். சொல்லுங்க'' என்றவளின் குரலிலும் அவனுக்கு இணையான உற்சாகம் இருந்ததை தனஞ்செயனால் உணர முடிந்தது.

''பார்க்கில் இருந்து அப்படி அவசரமா கிளம்பி வந்ததற்கு சாரி. காவ்யா விஷயம் தவிர எதுவும் பேச மாட்டேன் என்று பிடிவாதமா சொன்னது கஷ்டமா இருந்தது. தப்பா நினைக்கவில்லை என்றால் என்னை பிரெண்டா நினைத்து, உன் பிரச்னை என்ன என்பதை என்னுடன் பகிர்ந்து கொள்ளலாமா?'' என்று அவன் கேட்க அவளின் முகம் வாடியது.

மீண்டும் அவன் அந்த பேச்சிற்கே போகிறானே? இவனிடம் பேச வேண்டாம் என்று அல்லவா நினைத்தோம்? பண உதவி இல்லை என்றாலும் இவனை போன்ற நபர்களின் அறிமுகமே சுகம் அல்லவா?

''இதுக்காகவா போன் பண்ணினீங்க? எனக்கு எந்த பிரச்னையும் இல்லை சார். உங்க அக்கறைக்கு நன்றி'' என்று முடித்து போனை வைத்து விட அவனுக்கு முகத்தில் அடித்தது போல இருந்தது. போனில் பேச்சை ஆரம்பிக்கும் போது இருந்த பரவசம் சில வினாடிகளில் காணாமல் போய் இருந்தது.

ஆனந்தி ஒதுங்கி போனதால் அந்த பிரச்னையை அத்துடன் விட தனஞ்செயன் தயாராக இல்லை. தன் மகளுக்கு ஒரு உதவி செய்தவளின் பிரச்னை என்ன என்று கூட அறியாமல் தான் இருப்பது சுயநலத்தின் உச்ச கட்டம் என்று குற்ற உணர்வு நெருக்க, மீண்டும் சில வினாடிகளில் அவனிடம் இருந்து அழைப்பு வந்தது.



''தனா தான் பேசுறேன் ஆனந்தி. லைன் கட் ஆகிவிட்டது என்று நினைக்கிறேன். பார்க்கில் என்னுடன் நீ பேச விரும்பிய அந்த இன்னொரு விஷயம் என்ன என்று சொல்லு'' என்று இயல்பான குரலில் ஏற்கனவே பேச்சு துண்டிக்கப்பட்டதை உணராதவன் போல விசாரிக்க இதயம் சில கணங்கள் நின்று துடிக்க ஆரம்பித்தது.

சொல்லலாமா? வேண்டாமா? மனம் இரு பக்கமும் ஊஞ்சலாட சில கணங்கள் அமைதியில் கழிந்தது.

''ஆனந்தி. என்ன பிரச்னை என்று சொல்லும்மா ப்ளீஸ்...'' என்று மீண்டும் கேட்டான். அவனின் குரலில் தேகம் முழுவதுமே ஒரு முறை சிலிர்த்து அடங்கியது.

அந்த அழைப்பும் அவனின் பேச்சும் மனதை தென்றலாக வருடியது. அவள் நினைப்பது நடக்குமோ நடக்காதோ இப்படி ஒரு தோழமை இருப்பதே சந்தோஷம் தான். அதை கெடுத்துக் கொள்ள வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தாள்.

''ஆனந்தி, நான் தனஞ்செயன் பேசுகிறேன். நான் பேசுவது கேட்குதா? லைனில் இருக்கிறாயா?'' என்று மீண்டும் அழுத்தமான குரலில் பேச அவள் சுய நினைவிற்கு வந்தாள்.

''கேட்குது சார், என் தங்கை திருமணத்திற்கு உங்களை அழைக்க நினைத்தேன். நாளை காவ்யாவிடம் அழைப்பிதழ் கொடுத்து அனுப்புகிறேன். நீங்க அவசியம் வர வேண்டும்.''

''பொய். முதலில் என்ன நினைத்து பேச அழைத்தாய் என்பதைச் சொல்லு'' என்றவன் குரலில் ஒருமையும் உரிமையும் வந்து இருந்தது.

''அதான் சொன்னேன் சார்'' என்று மீண்டும் அவள் பேச முற்படும் போதே போன் எதிர்முனையில் வைக்கப் பட்டு விட்டது.

போனை பாதி பேச்சில் வைத்து விட்டானே? மீண்டும் கோபம் வந்து விட்டதோ? இல்லை இவளிடம் போனில் பேசினால் ஆகாது என்று நேரில் கிளம்பி வரப் போகிறானோ?

அப்படி வந்தால்...?

அவன் நிஜமாகவே தன் பிரச்னையில் அக்கறை கொண்டு இருப்பவன் என்று கருதி, பகிர்ந்து கொள்ளலாம்.

'எந்த எதிர்பார்ப்பையும் வளர்த்து கொள்ளாதே ஆனந்தி' என்று மூளை சொல்லிக் கொண்டு இருந்தாலும், மனம் அவனை எதிர்பார்ப்பதை நிறுத்தவில்லை. நாற்பதாவது நிமிடம் வாசல் அழைப்பு மணி ஒலிக்க, கதவினை திறப்பதற்கு முன்பாகவே ஆனந்தியின் இதயம் துள்ளிக் குதித்து, 'வந்து விட்டான்' என்று சொன்னது.

ஆனந்தி பேசிய நேரமே எட்டு மணி. அதன் பிறகு அவன் யோசித்து உடை மாற்றி கிளம்பி அங்கே வந்த சேர்ந்த போது மேலும் நாற்பத்தி ஐந்த நிமிடங்கள் ஆகி இருக்க அவனுக்கு அழைப்பு மணியை அழுத்த தனஞ்செயனுக்குத் தயக்கமாக இருந்தது.

தன்னை நண்பன் என்று ஒத்து கொண்டு இருந்தாலும் அகால நேரத்தில் பெண்கள் தனியே இருக்கும் ஒரு வீட்டுக்கு வந்து நிற்பது சரி இல்லையோ என்ற கலக்கம் இருந்தது. எப்படி இருந்தாலும் தன் மனதில் இருக்கும் எண்ணங்கள் சரிப்படுமா என்பதை உரசிப் பார்க்கும் உரை கல்லாக இதை நினைத்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்து அழைப்பு மணியை அடித்தான்.



ஆனால் கதவை திறந்த வினாடியில் ஆனந்தியின் முகம் மலர்ந்த விதத்தையும், ''காவ்யா அப்பாம்மா'' என்று இயல்பாக உள்ளே குரல் கொடுத்த விதத்தையும் பார்த்தவனுக்கு அந்த கலக்கம் சூரியனைக் கண்ட பனித்துளி போல மறைந்தது.

பத்து தினங்களுக்கு முன்னால் இதே வீட்டுக்கு வந்த போது வாசலிலேயே அவள் தன்னை நிற்க வைத்து கேட்ட கேள்விகள் நினைவில் வந்து புன்னகையையும் மலர வைத்தது.

''ஹாய், நேரம் கெட்ட நேரத்தில் தொந்தரவு செய்கிறேனா?''

''அப்படி எதுவும் இல்ல. வாங்க'' என்று வரவேற்க அவன் திருப்தியுடன் உள்ளே வந்தான்.

''வாங்க தம்பி குழந்தை நல்லா இருக்கிறாளா?'' என்று கேட்ட சாரதாவை பார்த்து முறுவலித்தான்.

''நல்லா இருக்கிறாள். ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது உங்க புட்டையும் களியையும் சொல்லி விடுவாள். ஒரே நாளில் அவளை உங்க சமையலுக்கு அடிமை ஆக்கி வச்சு இருக்கீங்க'' என்று சொல்ல அவர் செய்த புன்னகை கண்களை எட்டவில்லை.

அறை வாசலில் நின்று இருந்த வசந்தியை பார்த்து, ''என்னம்மா கல்யாண பொண்ணு, ஏன் அப்படி ஒளிஞ்சு நின்று பார்க்கிறாய்? மாப்பிள்ளை வீட்டுல இருந்து யாரும் இல்லை. வெளியே வா. கல்யாண வேலை எப்படி நடக்குது?'' என்று கேட்க அவளுக்குள் குழப்பம் முளைத்தது. இவனை ஆனந்தி தகவல் சொல்லி வரவழைத்து இருக்கிறாளா? இவன் இயல்பாக விசாரிக்கிறானா இதில் உள்குத்து எதுவும் இருக்கிறதா?

''அதில் ஏதாவது தடங்கல் என்றால் நீங்க உதவி செய்வீர்களா?'' என்றவளின் கேள்வியில் இருந்த பாவனை அவனுக்குப் புரியவில்லை. அவன் திரும்பி ஆனந்தியை பார்த்தான்.

''ஆனந்தி, என்ன பிரச்னை என்று சொன்னால், அதை தீர்க்க என்னால் முடிந்த உதவியை நிச்சயம் செய்வேன்'' என்று சொல்ல அவள் அவன் பார்வையை சந்திக்கத் தயங்கினாள்.

இன்று காலையில் இருந்து பல முறை நினைத்து இருந்தாலும், அன்று பூங்காவில் பேச வேண்டும் என்று முடிவெடுத்தே சென்று இருந்தாலும், அவனே இங்கே உடனடியாக வருவான் என்றோ, நேரடியாக விசாரணையைத் துவக்குவான் என்றோ எதிர்பார்க்கவில்லை. அவளால் உடனடியாகப் பேச முடியவில்லை.

''அம்மா, ஒரு கப் காபி கிடைக்குமா?'' என்று சாரதாவை பார்த்து கேட்க, 'இதோ' என்று தலை அசைத்து விட்டு உள்ளே சென்றார்.

''உட்கார் ஆனந்தி'' என்று அதட்டலாக சொன்னவன், 'நீ கொஞ்சம் உள்ளே இரு வசந்தி' என்று அவளை அனுப்பவும் மறக்கவில்லை.

''உனக்கு ஒரு உதவி செய்தால் அதை வைத்து உன்னை கார்னர் பண்ணி எந்தக் காரியமும் சாதிக்க வேண்டும் என்ற அவசியம் எனக்கு இல்லை. முதலில் என்னை நம்பு. ஏதோ பணப் பிரச்னை என்ற அளவில் ஊகிக்க முடிகிறது. எவ்வளவு யாருக்கு தர வேண்டும் என்று சொன்னால் நான் நடவடிக்கை எடுக்கிறேன் ஆனந்தி'' என்று குரலில் கனிவையும் கண்டிப்பையும் சரி விகிதத்தில் கலந்து சொல்ல அவள் தலை இன்னும் நிமிரவில்லை.



''எனக்கு எதையும் யாரிடமும் இலவசமாகப் பெற்றுக் கொள்வது பிடிக்காது'' என்று சொல்ல அவன் தலை அசைத்தான்.

''தெரியும், எந்த உதவியையும் இலவசமாகத் தர எனக்கு விருப்பம் இல்லை. அது உன் சுய கௌரவத்தைப் பாதிக்கும் என்பதோடு சுற்றி இருக்கும் சிலர் நம்மைத் தவறாகப் பேசவும் வழி வகுக்கும். அது என்னுடைய நோக்கம் இல்லை'' என்று அவன் சொல்ல, அவள் நன்றியுடன் நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களில் கண்ணீரை பார்த்ததும் அவனுக்குள் உருகியது.

''நான் உன்னைத் தைரியசாலி என்று நினைத்துக் கொண்டு இருக்கிறேன் ஆனந்தி. உன் கண்ணில் நீரை பார்க்க எனக்கு விருப்பம் இல்லை. முதலில் துடைத்துக் கொள். உன் பணத் தேவையைச் சொன்னால், அதற்கான கடன் பத்திரம் பெற்றுக் கொண்டு தருகிறேன். வங்கி வட்டி விகிதம் வசூலித்து கொள்கிறேன். போதுமா? இல்லை இன்னும் வேறென்ன செய்ய வேண்டும் சொல்...''

''எப்படி அதை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பதையும் எழுத்து மூலமான பத்திரத்திலேயே சொல்லிடுங்க'' என்றவளின் குரலில் இப்போது நம்பிக்கை ஒளி வீச அவன் புன்னகை செய்தான்.

''மாதா மாதம் திருப்பி கொடுத்தாலும் சரி, மொத்தமாக எப்போது முடியுமோ அப்போது கொடுத்தாலும் சரி, நீ சொல்லும் விதத்தில் எழுதி வாங்கிக் கொள்கிறேன்.''

''வங்கி நடைமுறைப் படி எல்லாமே செய்து கொள்ளலாம் சார்.''

''எஸ். அவர்கள் ப்ராசசிங் செக்கியூரிட்டி என்று நோண்டுவார்கள். அது இல்லாமல் ஆனந்தி என்று தனி நபரை

நம்பி நான் கடன் கொடுக்கிறேன். இப்போ உனக்கு என்ன பிரச்னை? என்ன நான் செய்ய வேண்டும்?'' என்று கேட்க அவள் கண்களை துடைத்துக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தாள்.

# 18

''உன்னை நான் நம்புகிறேன். ஆனந்தி என்ற தனி நபரை நம்பி உனக்கு வேண்டிய பொருளாதார உதவியை செய்கிறேன் எனக்கு எந்த காரண்டீயும் தேவை இல்லை'' என்று அழுத்தம் திருத்தமாக தன் வீடு தேடி வந்து உத்திரவாதம் கொடுத்த தனஞ்செயனைப் பார்க்கும் போது ஆனந்திக்குப் பெருமையாக இருந்தது.

''என் மேல் இவ்வளவு நம்பிக்கை வைத்ததற்கு நன்றி. அந்த நம்பிக்கை என்றென்றும் நிலைத்து நிற்கும்படி நடந்து கொள்வேன். எனக்கு உதவி செய்ததை எண்ணி நீங்க வருத்தப்படும் நிலை உங்களுக்கு நிச்சயம் வராது...'' என்று நன்றியுடன் ஆனந்தி சொல்ல அவன் புன்னகை செய்தான்.

''மேடை பேச்சு மாதிரி இருக்கு ஆனந்தி. போதும். விஷயத்துக்கு வா'' என்று அவன் குறுக்கிடும் போதே அம்மா பாலுடன் வந்தார்.

''காபி குடித்தால் தூக்கம் வராதே என்று ஹார்லிக்ஸ் கொண்டு வந்து இருக்கிறேன்'' என்று சாரதா வர, ''பரவாயில்லைம்மா'' என்று வாங்கி கொண்டான்.

''அம்மா நீங்களும் உட்காருங்க'' என்று ஆனந்தி கை காட்ட அவர் தனஞ்செயனை பார்த்தபடி அமர்ந்தார்.



''உங்களால் முடியவில்லை என்றால் சொல்லி விடலாம். நான் இரண்டு வழி யோசித்து வைத்து இருக்கிறேன். உங்களால் முடியாத வேலை நன்றிக் கடனைக் கழிப்பதற்காக என்று செய்ய வேண்டாம். எனக்கு உதவி செய்ய முனைவதால் உங்களுக்குப் பொருளாதார ரீதியில் எந்தப் பிரச்னையும் வந்து விட கூடாது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்'' என்று மீண்டும் ஒரு முறை வலியுறுத்திச் சொல்ல அவளின் முகத்தைப் பார்த்தபடி ஹார்லிக்சை அருந்தினான்.

''ஓகே, மேலே சொல்லு...'' என்று நிதானமாக ஊக்கினான்.

''வசந்தியின் திருமணத்திற்காகவும், பெங்களூரில் என் தம்பி கார்த்திக் புதிதாக ஆரம்பிக்க இருக்கிற தொழிலுக்காவும் எங்களுக்கு பணம் தேவைப் படுகிறது. அதற்காக இந்த வீட்டை விற்க முடிவு செய்தோம். ஆனால் சில சட்ட சிக்கல்களை வேண்டும் என்றே உறவினர்கள் ஏற்படுத்துவதால் அதில் தடங்கல் வந்து விட்டது. அதனால்...'' என்று தயங்கி நிறுத்த அவன் வியப்புடன் பார்த்தான்.

''இதில் நான் எந்த மாதிரியான உதவி செய்ய வேண்டும்? சட்ட ரீதியிலா? அல்லது பொருளாதா ரீதியிலா?''

''அது நிலைமையை பொறுத்தது. உங்க மதிப்பீட்டில், இந்த வீடு என்ன விலைக்கு போகும் என்று நினைக்கறீங்க'' என்று கேட்டதும் அவன் கண்கள் வீட்டை அளவிட்டது.

''ஒரு கிரவுண்டு மனை. நாங்க குடி இருக்கும் பகுதி மட்டும் எண்ணூறு சதுர அடி. பின்னால் ஐநூறு சதுர

அடியிலும் முதல் மாடியில் ஆயிரத்தி ஐநூறு சதுர அடியும் மொத்தம் நாலு வீடா இருக்கு. மூன்று பேர் வாடகைக்கு இருக்காங்க. அவங்களை காலி பண்ணுவது உடனடியா சாத்தியம் இல்லை. என்ன விலை பெறும் என்று சொல்லுங்க'' என்று கேட்க அவன் யோசித்தான்.

''வீடு கட்டி முப்பது வருஷம் இருக்குமா?'' என்று கேட்டான். மொபைலில் மனையின் விற்பனை விலை ஆராய்ந்தான்.

''நான் தோராயமா மதிப்பு போட்டுச் சொல்கிறேன். அஞ்சு பெர்சன்ட் கூட குறைய இருக்கலாம். ஒரு கிரவுண்ட் மனை இந்த ஏரியாவில் முப்பது லட்சத்திற்கு போகும். சதுர அடிக்கு அறுநூறு ரூபாய் என்றால் பதினெட்டு லட்சம். நாற்பத்தி எட்டு லட்சம். குடியிருப்பவர் கொடுத்த அட்வான்ஸ் தொகை அவர்களை காலி பண்ண தேவைப் படும் சிரமம், அவசரமான விற்பனை என்பதை எல்லாம் கணக்கில் எடுத்தால் கூட நாற்பது பெறும்'' என்று சொல்ல ஆனந்தியும் சாரதாவும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.

''என்ன ரெண்டு பேரும் ஒன்றுமே பேசவில்லை என்னுடைய கணக்கு சரி இல்லையா?'' என்று தயக்கத்துடன் கேட்டான்.

''இல்லை தம்பி, வேறே ஒருவரிடம் விற்க ஏற்பாடு பண்ணினோம். அவங்க முப்பது தரேன் என்று சொன்னாங்க'' என்று சொல்ல அவனுக்கு கோபம் துளிர்த்தது.

''என்ன விஷயம் என்று நான் உன்னிடம் எத்தனை தடவை கேட்டு இருப்பேன்? ஒரு தடவை வாயை திறந்து இது தான் பிரச்னை என்று கோடி காட்டி இருக்கலாம் இல்லையா? நீ எல்லாம் படித்த பெண் தானே?



அரசாங்க பதிவேடுகளில் இருக்கும் கைட் லைன் வேல்யூ செக் பண்ணனும் என்று தெரியாதா?'' என்று கோபமாகக் கேட்டவனைத் திகைப்புடன் பார்த்தாள் ஆனந்தி.

''இல்லை, வசந்திக்கு பார்த்து இருக்கும் மாப்பிள்ளை மூலமாக வந்த வாடிக்கை என்பதால்...'' என்று திணறலாக அவள் ஆரம்பிக்க அவன் கோபம் மேலும் கூடியது.

''வந்தால்...? உடனே சரி என்று சொல்லி விடுவீர்களா? கையில் இருக்கும் சொத்து என்ன மதிப்பு பெறும் என்பதை விசாரிக்காமல் விற்பனை செய்வீர்களா? தனக்கு தொழில், தங்கைக்கு கல்யாணம், பூர்வீக வீடு விற்பனை, இதைக் கூட அருகே இருந்து பார்க்க முடியாமல் உன் தம்பி பெங்களூரில் என்ன வெட்டி முறிக்கிறான்?'' என்று அதட்டியவன் பேச்சை நிறுத்தி, சாரதா மற்றும் ஆனந்தியின் திகைத்த முகங்களை பார்த்தான்.

''ஐ ஆம் சாரி, இப்ப இந்த நேரத்தில் நான் உங்களுக்கு எந்த மாதிரி உதவி செய்ய வேண்டும் என்று சொல்லுங்க'' என்று விசாரித்தான்.

''உங்களுக்கு வசதியும் விருப்பமும் இருந்தால், இந்த வீட்டை நீங்களே முப்பது லட்சத்திற்கு வாங்கி கொள்ளலாம்'' என்று ஆனந்தி சொல்ல நம்ப முடியாமல் பார்த்தான்.

''நீ என்ன சொல்கிறாய்?''

''முன்பு பேசிய விற்பனை தேவை இல்லாத சட்ட பிரச்னைகளால் ஏற்கனவே பேசிய விற்பனை நின்று விட்டது. ஆனால் எங்களுக்கு அவசரமாகப் பணம்

தேவைப் படுகிறது. அதனால் நீங்களே வாங்கிக் கொள்ளலாம். உங்களால் முடியுமா?'' என்று கேட்ட ஆனந்தியை வியப்பாகப் பார்த்தான்.

அவளின் முக பாவனையை பார்த்தால், இந்த வீட்டை விற்க மனமில்லை ஆனால் பொருளாதார நெருக்கடியின் காரணமாக விருப்பம் இன்றி விற்கிறாள் என்பது புரிந்தது. இந்த வீட்டை வாங்கி இவளுக்கே பரிசளித்தால் எப்படி இருக்கும்? அவசரமாக யோசனை ஓட, அவன் முகம் மலர்ந்தது.

''முடியும் ஆனந்தி. காவ்யாவுக்கு ஒரு நிரந்தர துணை வேண்டும் என்று நீ சொன்னதை நான் யோசித்து பார்த்து நான் திருமணம் செய்து கொள்ளலாம் என்று முடிவு பண்ணி விட்டேன்...'' என்று சொல்ல அவளுக்கு மூச்சு முட்டியது.

''இதை ஏன் என்னிடம் சொல்றீங்க?'' என்றவளின் குரல் தொண்டையை விட்டு வெளியேற பெரிய போராட்டம் நடத்தியும் கிசுக்சுப்பாகவே வந்தது.

''நீ தானே ஐடியா கொடுத்தாய். அதனால் உன்னிடமே என் முடிவைப் பகிர்ந்து கொள்கிறேன். அத்துடன், என் வருங்கால மனைவிக்கு ஒரு பரிசு தந்து, 'என்னை திருமணம் செய்து கொள்கிறாயா?' என்று கேட்க நினைத்தேன். என்ன பரிசு வாங்கலாம் என்று யோசித்துக் கொண்டே இருந்தேன். இப்ப அவங்க பேரில் இந்த வீட்டை வாங்கி பரிசளித்து விடலாம் என்று முடிவு பண்ணி விட்டேன். உனக்கு ஒகே தானே?''

''எனக்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும் சார்?''

''வருங்கால மனைவியாக வரப் போகும் உன்னிடம் கேட்காமல் வேறு யாரிடம் கேட்பது? உனக்கு இந்த



வீடு பிடிக்க வேண்டுமே? விலை கட்டுப்படியாக வேண்டும். எவ்வளவு விஷயம் இருக்கு?'' என்று அசால்ட்டாக சொன்ன தனஞ்செயனின் வார்த்தைகளில் அதிகம் அதிர்ந்தது யார் என்று நிர்ணயம் செய்ய முடியவில்லை.

'நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்' என்ற செய்தியை ஒரு ஆண் ஒரு பெண்ணிடம் எத்தனையோ விதங்களில் எப்படி எப்படி எல்லாமோ வெளிப்படுத்தியதாக, கதைகளில் படித்து இருக்கலாம் சினிமாவில் பார்த்து இருக்கலாம்.

தனஞ்செயன் ஆனந்தியிடம் சம்மதம் கேட்ட மாதிரி ஒரு முறையை இந்த உலகத்தில் வசிக்கும் நிஜ மாந்தர்கள் மட்டும் இன்றி கற்பனை பாத்திரங்கள்கூட கேட்டு இருக்க மாட்டார்கள். அவனின் கேள்வியில் திகைத்து நின்ற மூவரில் முதலில் சுதாரித்தது வசந்தி!

''மிஸ்டர் என்ன பேசிட்டு இருக்கீங்க? இந்த வீட்டின் அமைதியை குலைப்பதற்காகவே வந்தீங்களா? பெரிய மனுஷன் என்று வீட்டுக்குள்ளே உட்கார வைத்து பேசிட்டு இருக்கற இவங்களை சொல்லணும்'' என்று கோபத்துடன் சொல்ல சாரதா அதட்டினார்.

''கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று அவர் கேட்கிறார். பதில் சொல்ல வேண்டியது ஆனந்தி. அவங்க ரெண்டு பேரும் பேசி முடிவு பண்ணட்டும். உன் கல்யாணத்தைப் பற்றி நீ யாரிடமாவது அபிப்ராயம் கேட்டாயா? அக்கா கல்யாணத்தில் நீ ஆலோசனை சொல்லத் தேவை இல்லை'' என்று சொன்னவர் தனஞ்செயனிடம் திரும்பினார்.

''நீங்க பேசி முடிவு பண்ணுங்க. கொஞ்சம் வெளியே போயிட்டு வருகிறேன்'' என்று கிளம்பியவரின் கை

பற்றி தடுத்தாள் ஆனந்தி. ''உங்களுக்குத் தெரியாமல் பேச ஒன்றும் இல்லைம்மா நீங்க வெளியே போக வேண்டிய அவசியம் இல்லை என்று அம்மாவை அருகே அமர வைத்தவள் தனஞ்செயனிடம் திரும்பினாள்.

''நீங்க எமோஷனலா ஏதோ முடிவு பண்ணி இருக்கீங்க என்று நினைக்கிறேன். கல்யாணம் என்பது பெரிய விஷயம். நீங்க நல்லா யோசித்து...''

''நான் யோசித்தாச்சு ஆனந்தி. இனி நீ தான் யோசிக்க வேண்டும். யோசித்துச் சொல். இந்த வீட்டை நான் வாங்குவதற்கும் உன் முடிவிற்கும் சம்பந்தம் இல்லை. இந்த கல்யாணத்திற்கு எவ்வளவு தேவைப் படுமோ, அதை கொடுக்க ஏற்பாடு பண்ணுகிறேன். நம் திருமணம் பற்றிய முடிவை நீ பிறகு சொல்லு. வரேன்மா'' என்று எழுந்து கை குவித்து விட்டு கிளம்ப இருவரும் அமைதியாக இருந்தனர்.

## 19



தனஞ்செயன், வீட்டை விட்டுப் போகும் போது, ''என் வருங்கால மனைவியின் பெயரில் இந்த வீட்டை நான் வாங்கிக் கொள்கிறேன்'' என்று சொன்ன வாக்கியம் அவர்களின் நெஞ்சில் நிம்மதியை வார்த்தது என்பது உண்மைதான்.

ஆனால் அந்த வருங்கால மனைவி யார் என்று கோடி காட்டி விட்டுப் போனதில் சாரதா ஆனந்தி மற்றும் வசந்தி மூவருமே வெகுவாக அதிர்ந்து இருந்தனர்.



''ஆனந்தி, என்ன இது? நான் முதல்முறை அந்த பெண்ணை அழைத்து வந்த போதே கேட்டேன். அவளுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டதற்கு நான் ஆசிரியை அவள் மாணவி என்று கதை அளந்தாய்? இப்ப எந்த தைரியத்தில் அவர் வந்து இப்படி பேசி விட்டு போகிறார்?'' என்று எரிச்சலுடன் தனஞ்செயன் வெளியேறிய அடுத்த நிமிடம் வசந்தி கேட்க ஆனந்தி அவளை நிதானமாகப் பார்த்தாள்.

''அவர் என்னைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொன்னதில் உன் நலன் ஏதாவது பாதிக்கப் படுகிறதா வசந்தி?''

''ஏய்! நான் என்ன சொன்னால் நீ என்ன கேட்கிறாய்?''

''நீ உன் கல்யாணத்தை முடிவு பண்ணுவதற்கு முன்னால் என்னைப் பற்றியோ அம்மாவைப் பற்றியோ நினைத்துப் பார்த்தாயா என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் என்னுடைய ஒவ்வொரு செயலும் என்னை சார்ந்தவர்களுக்கு, எந்த வித சிக்கலையும் உண்டு பண்ணி விடக் கூடாது என்று கவனமாக இருப்பேன். அதனால் தான் கேட்கிறேன்'' என்ற நிதானமான ஆனந்தியின் வார்த்தைகள் வசந்தியை சுட்டது.

''அது... வந்து...'' என்று தடுமாறினாள்.

''அவரின் விருப்பம் உன் வாழ்க்கையை எந்த விதத்திலாவது பாதிக்கும் என்று எனக்கு நிரூபித்தால் அந்த கணமே நான் அவரை இந்த மாதிரி எண்ணத்துடன் இங்கே வராதீர்கள் என்று சொல்லி விடுவேன். வசந்தி. அதில் உனக்கு சந்தேகம் வேண்டாம். எனக்கு என் சந்தோஷத்தை விட என்னைச் சார்ந்தவர்களின் சந்தோஷமே

முக்கியம். சொல்லு'' என்று கேட்க அவள் அதிர்ச்சியுடன் ஆனந்தியைப் பார்த்தாள்.

கோபப் படாமல், குரலை உயர்த்தாமல், அடி தடியில் இறங்காமல் எவ்வளவு நாசூக்காக என் திருமண வாழ்க்கையை முடிவு பண்ணுவதற்கு முன்னால் உங்களின் நலனை நினைத்து பார்ப்பேன் என்று அழகாகச் சொல்லி விட்டாள்? அவளுக்குத் தோன்றிய இந்த எண்ணம் ஏன் தனக்குத் தோன்றவில்லை?

இத்தனைக்கும் இவள் தன்னை விட ஐந்து வயது மூத்தவள். அவள் திருமணம் ஆகாமல் காத்திருக்கும் வேளையிலும், தன் திருமணப் பேச்சு வந்த போது அதைத் தடை செய்ய முயலவில்லை. அவளை தான் கண்டபடி அரட்டுகிறோமே என்ற குற்ற உணர்வு தோன்றியது.

''என்ன சத்தமே காணோம்? கேட்கிறாள் இல்லையா பதில் சொல்லு. முதலில் ஜெயராஜை பிடித்து இருந்தது. இப்ப அவனை விட வசதியா யாராவது கிடைத்தால் அவரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமா என்று மனசு அலைபாயுது...''

''அம்மா...'' என்ற இரண்டு அதட்டல் குரல்கள் ஒரே நேரத்தில் சாரதாவின் கோபத்திற்கு அணை போட்டு நிறுத்தியது.

''என்னம்மா பேசறீங்க? அவ உங்க பொண்ணு. பெற்ற பெண்ணையே இப்படிப் பேச உங்களுக்கு எப்படி மனம் வந்தது? இந்த மாதிரி ஒரு குற்றச் சாட்டை நான் உங்களிடம் எதிர்பார்க்கவே இல்லை. இப்படிப் பேசாதீங்கம்மா. உங்க வாயில் இருந்து இந்த மாதிரி தரக் குறைவான வார்த்தைகள் கோபத்தில் கூட வரலாமா?'' என்று ஆத்திரமாக ஆனந்தி கேட்ட அதே நேரம் வசந்தியின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக ஆரம்பித்து இருந்தது.



''வீட்டுக்கு மூத்த பெண் நீ இருக்கிறாய். உனக்கு ஒரு கல்யாணம் பண்ணனும் என்று உனக்கு பின்னால் பிறந்த இரண்டு சுயநல பிண்டங்களுமே நினைக்கலை. உன்னைக் கரையேற்ற நான் செய்த முயற்சிகளை எல்லாம் இவங்க வாழ்க்கையில் செட்டில் ஆகட்டும் என்று நீ தள்ளி போட்டாய். அதெல்லாம் இவங்க கொஞ்சமாவது நினைத்துப் பார்த்தாங்களா?'' என்று மேலும் ஆத்திரமாக சாரதா பேச, வசந்தியின் கண்ணீர் கூட இப்போது நின்று விட்டது.

மனதில் குற்ற உணர்வு பெருகியது. அம்மா இப்படி தன்னைத் தரக் குறைவான ஒரு வார்த்தை சொல்வதற்கு தமக்கைக்கு முன்னால் கல்யாணம் செய்து கொள்ள விரும்பிய தன் ஆசையும் ஒரு காரணம் அல்லவா? கார்த்திக் செய்தது தப்பாக இருந்தாலும், அவளும் அதே தவறான பாதையில் செல்வது என்ன நியாயம்?

''அவங்கவங்களுக்கு அவங்கவங்க வாழ்க்கை முக்கியமா போச்சு. நீ மட்டும் ஏண்டீ இப்படி இருக்கிறாய்? என்னை கல்யாணம் பண்ணிக்கிறியா என்று கொஞ்சம் முன்னாடி கேட்டானே? அவன் கையை பிடிச்சுட்டு அவன் பின்னாடி போய் இருக்க வேண்டியது தானே? ஏன் தயங்கி நின்றாய்?'' என்று ஆவேசமாக சாரதா பேச அருகே வந்து அணைத்து கொண்டாள் ஆனந்தி.

''இதெல்லாம் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று முடிக்கிற சமாச்சாரமா அம்மா? உங்களுக்கு நான் சொல்ல வேண்டுமா? என்ன நடக்கணும் என்று என் தலையில் எழுதி இருக்கோ, அது கட்டாயம் நடக்கும். நீங்க பொறுமையா இருங்க, பார்த்துக் கொள்ளலாம்.''

''இதே பதிலை தான் ஆனந்தி நானும் எட்டு வருஷமா கேட்டுட்டே இருக்கிறேன்'' என்ற சாரதாவின் குரலில வருத்தம் ததும்பி வழிய அவள் கண்களை மூடி திறந் தாள்.

''அம்மா அவர் இன்று இந்தப் பேச்சை பேச வர வில்லை. வீடு விற்பனை குறித்த பிரச்னையில் வளர்ந்த பேச்சு கல்யாணத்துக்கு போய் விட்டது. அதை நாம் இப்போ சீரியஸா எடுத்துக் கொள்ள வேணாம் அம்மா. இப் போதைக்கு வசந்தி கல்யாணம் நல்ல படியா முடியணுமே என்று கவலை தான் எனக்கு'' என்று சொல்ல அவளின் பதிலில் சாரதாவுக்கு மட்டும் இல்லாமல் வசந்திக்கும் சேர்த்தே கண்களில் நீர் சுரந்தது.

''வசந்தி கல்யாணத்தில் இனிமேல் பிரச்னை எப்படி வரும்? கல்யாணச் செலவுக்கும் வீடு விற்பனைக்கும் தொடர்பு இல்லை. அந்த பணம் நான் தருகிறேன் என்று தம்பி சொல்லியாச்சு. இனி என்ன கவலை? உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையணும் என்று தான் என் கவலை.''

''சாரிடம் பண உதவி கேட்டேன். ஆனால் அவர் எங் கேயோ போய் விட்டார். இதில நிறைய யோசிக் கணும்மா'' என்று பெருமூச்சை வெளியேற்றினாள்.

''இது திடீர் என்று எடுத்த முடிவா இருக்க முடியாது ஆனந்தி. கடந்த இருபது நாளாவே உன்னை பார்த்து பழ கியதில் நல்லா யோசிச்சு எடுத்த முடிவா தான் இருக் கும்'' என்று சாரதா சொல்ல அவள் அரை குறையாகத் தலை அசைத்தாள்.

''இருக்கலாம். ஆனாலும் அவர் இப்பதானே அவரின் விருப்பத்தைச் சொல்லி இருக்கிறார். அவருக்கு வயது



வந்த ஒரு பெண் இருக்கிறாள். அவளிடம் சம்மதம் கேட்டாரா தெரியலை. அவளிடமும் பேசி விட்டு தான் ஒரு முடிவெடுக்கணும். நாளைக்கு காவ்யாவிடம் முதலில் பேசிப் பார்க்கிறேன்'' என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தாள்.

* * *

வீட்டில் காவ்யா தனியாக இருப்பாளே என்ற எண் ணத்தில் தாமதமாகி விட்டது என்ற அவசரத்துடன், சீக்கிரம் போக வேண்டும் ஆனந்தியின் வீட்டில் இருந்து கிளம்பிய தனஞ்செயனுக்கு, நேரம் கெட்ட நேரத்தில் வந்த சவிதாவின் அழைப்பு அவன் ரத்த அழுத்தத்தை உயர்த்தியது.

''சொல்லு...'' என்ற அந்த ஒற்றை வார்த்தை அவளின் தன்மானத்தை தாக்க அவளின் முகம் கோபத்தில் சூடேறியது.

''அதென்ன நான் போன் பண்ணினால் இவ்வளவு எரிச்சல் கோபம்?''

''கோபமாவது எரிச்சலாவது? என் கோபம் உன்னை என்ன பண்ண முடியும் சொல்லு? என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சீக்கிரம் சொல்லு எனக்கு வேலை இருக்கு.''

''என்னிடம் பேச வேண்டும் என்றால் மட்டும் எதா வது வேலை வந்து விடுமே? எவளோ ஒரு டீச்சரோடு ஹோட்டல் போய் இருக்கீங்க. அஞ்சு மணிக்கு ஆபீசில் படப்பிடிப்பின் நடுவே முக்கால் மணி நேரம் காணாமல் போய் இருக்கீங்க. அதெல்லாம் தொலையுது என்று நினைத்தால் இப்ப அவள் வீட்டுக்கே போய் இருக்கீங்க. அப்போது எல்லாம் வேலை இல்ல. என்னுடன் போனில்

அஞ்சு நிமிஷம் பேசுவதற்குள் முக்கியமான வேலை அணி வகுத்து நிற்குமோ?'' என்று சவிதா பேசப் பேச அவன் அதிர்ந்து போனான்.

''இதெல்லாம் உனக்கு யார் சொன்னது? என்னை பின் தொடர ஆள் வைத்து வேவு பார்க்கிறாயா? ஐ ஹேட் ஆல் திஸ் நான்சென்ஸ்...'' என்று அதட்டியவனின் கோபம் அவளை ஒன்றும் செய்யவில்லை.

''கோபப் படுவது மாதிரி நடித்து, என் கேள்விக்குப் பதில் சொல்லாமல் தப்பித்து விட முடியாது. சொல்லுங்க அது யார்? அவளோட நீங்க ஏன் தனியா பேசணும்?'' என்று அவள் தன் கேள்வியிலேயே நிற்க அவன் பெருமூச் சுடன் தன் தலையை அழுந்த கோதி கொண்டான்.

''அவங்க காவ்யா பள்ளியில் வேலை செய்றாங்க. காவ்யா பெரிய பெண் ஆன போது அவங்க வீட்டுல வச்சு இருந்து சடங்கு எல்லாம் செய்து அனுப்பி விட்டாங்க. அதில் இருந்து பழக்கம்'' என்று விளக்கம் சொல்லும் போதே இவளுக்கு தான் ஏன் சொல்ல வேண்டும் என்ற கோபமும் தோன்றத் தான் செய்தது.

''இதெல்லாம் ஏன் அம்மாவுக்கு முன்னாடியே சொல் லலை? என் அக்கா பெண்ணுக்கு சடங்கு நடத்த அவ ளுக்கு என்ன யோக்கியதை இருக்கு?'' என்று ஆத்திர மாக கேட்க அவன் திகைத்தான். இதென்ன நாம் ஒன்றை சொன்னால் அவள் ஒன்றை எடுத்துக் கொள்கிறாள்?

''அது எனக்குத் தெரிவதற்கு முன்னாடியே நடந்தது சவி. வீட்டுக்கு வந்த உடனே நான் அத்தைக்கு தானே போன் பண்ணினேன். நீங்க இரண்டு பேரும் மறுநாள் வந்தீங்களே...'' என்று சொல்லும் போதே பள்ளியில் இருந்து வந்த சின்ன பெண்ணை பசியில் உட்கார



வைத்து இவர்கள் போட்டோ செஷன் நடத்தியது நினைவில் வந்து பல்லை கடித்தான்.

''பள்ளி கூடத்தில் வேலை செய்யும் ஒரு டீச்சர், ஒரு சின்ன உதவி செய்ததுக்கு இவ்வளவு பில்ட் அப்பா? அவளுக்கு ஐநூறோ ஆயிரமோ கொடுப்பதை விட் டுட்டு ஸ்டார் ஹோட்டலில் அவளோட உட்கார்ந்து டின்னர் சாப்பிடுவதும் பொது இடத்தில மணி கணக்கா பேசுவதும், இப்ப அர்த்த ராத்திரியில் அவள் வீட்டுக்கே போய் கொஞ்சுவதும் என்ன நியாயம்?''

''முன்னே பின்னே தெரியாத பெண்ணை பற்றி எதற்கு அநியாயமா பேசுகிறாய்? இப்ப என்ன விஷயமா போன் பண்ணினாய்?'' என்று அவளின் பேச்சுக்கு தடை போட முயன்றவனுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

''கல்யாணம் ஆகாத பெண், தனியா உங்களுடன் உட்கார்ந்து பேசக் கூடாது பேர் கெட்டு விடும் என்று எனக்கு முழ நீளத்துக்கு அட்வைஸ் பண்ணுவீங்க. உபதேசம் எல்லாம் எனக்கு தான் போல. அவளுக்கு ஒன்றும் கிடையாதா?''

''ஷட் அப் சவிதா, அவள் என்னிடம் என்ன பேசி னாள் என்பது தெரியாமல் கண்டபடி உளறாதே'' என்ற ஆவேசமான அதட்டல் சவிதாவை கொதிக்க வைத்தது.

''கூலிக்கு மாரடிக்கும் ஒருத்திக்காக என்னையே வாய் மூட சொல்வீங்களா? ஸ்டார் ஹோட்டலின் அரை இருட்டில் ஏ.சி. அறையில் உட்கார்ந்து அப்படி அவள் என்ன பேசினாள்? பகவத் கீதைக்கு விளக்கம் சொன் னாளோ?''

''சை! உன்னிடம் விளக்கம் சொல்ல வந்தேன் பாரு என்னை சொல்லணும்? அடுத்தவர்களின் நல்ல குண

நலன்கள் புரிய நம்மிடம் கொஞ்சமாவது இருக்கணுமே? உனக்கு எல்லாம் அது புரியாது. உன்னிடம் பேசுவதே வேஸ்ட்'' என்று எரிச்சலுடன் சொல்லி விட்டு போன் இணைப்பை துண்டித்தான் தனஞ்செயன்.

தன்னை கண்காணிக்க ஆள் வைத்து இருக்கிறாள் என்பது மனதில் சஞ்சலத்தை அதிகப் படுத்தியது. சீக்கிரமே ஒரு வழி பண்ண வேண்டும்.

நல்ல வேளை ஆனந்தியிடம் தன் மனதை சொல்லி யாச்சு. உடனே காவ்யாவிடமும் சொல்ல வேண்டும். இதற்கு மேலும் திருமணத்தை தள்ளிப் போட முடியாது என்ற முடிவுடன் காரை வீட்டுக்குச் செலுத்தினான் தனஞ்செயன்.

## 20

ஆனந்தியின் வீட்டில் இருந்து வெளியே வந்த தனஞ்செயனின் மனம் சிறகுகள் இல்லாமல் வானத்தில் பறந்து கொண்டு இருந்தது. தன் மனதை அவளிடம் எப்படிச் சொல்வது என்று குழம்பி தவித்தவன் போகிற போக்கில் வீடு வாங்குகிறேன் என்று சொல்லும் போதே மனதை வெளிப்படுத்தி விட்ட சாமர்த்தியத்தை எண்ணி அவனுக்கு புன்னகை மலர்ந்தது.

ஆனால் அந்த சந்தோஷத்தை சில நிமிடங்கள் கூட நீடிக்க விடாமல் செய்த பெருமை, சவிதாவையே சாரும். ஆனால் அந்த கெட்டதிலும் சிறு நன்மையாக உடனடியாக காவ்யாவிடம் பேச வேண்டும் என்ற உறுதியை



தனஞ்செயன் எடுக்க வைத்த பெருமை அவளுக்கு வந்தது.

வீட்டுக்குள் நுழைந்த உடனே தன் மகளை தேடி போனான். எழுதி கொண்டு இருந்தவளின் அருகே ஒரு நாற்காலியை இழுத்து போட்டு அமர்ந்தான்.

''சாப்பிட்டாயா புஜ்ஜு...'' என்று தலை கோதி விசாரிக்க அவனை வியப்பாகப் பார்த்தாள்.

''நீங்க வெளியே போவதற்கு முன்னால் நாம் இருவரும் உட்கார்ந்து தானேப்பா அடை வெல்லம் தொட்டு சாப்பிட்டோம்? அப்ப கூட வெல்லத்தில் இரும்பு சத்து இருக்கு என்று ஆனந்தி மிஸ் சொன்னாங்க என்றேனே? மறந்துட்டீங்களா?'' என்று கேட்க அவன் அசடு வழிந்தான்.

''ஹோம் வொர்க் இன்னும் இருக்கா? முடித்து விட்டாயா காவ்யா?'' என்று சமாளித்து கேட்க, ''ஏதாவது பேசணுமாப்பா?'' என்று நேரடியாக கேட்டாள் மகள்.

''நீ ரொம்ப ஸ்மார்ட் தங்கம்'' என்று சிரிக்க அவள் புத்தகத்தை மூடி வைத்தாள்.

''போர்டிக்கோ ஊஞ்சலுக்கு போகலாம்பா'' என்று சொல்லி விட்டு துள்ளி எழுந்து மகள் செல்ல ஆனந்தியை மணம் செய்து கொள்வதை பற்றி மகளிடம் அனுமதி வாங்க வேண்டும் என்ற பதட்டத்துடன் பின் தொடர்ந்தான் தனஞ்செயன்.

ஊஞ்சலில் அவன் அமரும் வரை காத்திருந்து, தாவி ஏறியவள் ஆசையுடன் அவன் தோளில் சாய்ந்து கொள்ள அவன் காலை லேசாக உந்தி ஊஞ்சலை ஆட்டி விட்டான்.

''ஊஞ்சலில் ஆடுவது உனக்கு ரொம்பப் பிடிக்கும் இல்ல குட்டி?''

''எனக்கு மட்டும் இல்லைப்பா. பெரியவங்களுக்கும் பிடிக்குமாம். ஆனந்தி மிஸ் நம் வீட்டுக்கு மூன்று முறை வந்தாங்க இல்லையா? அப்ப ரெண்டு நிமிஷம் ஆடிட்டு போனாங்க. தெரியுமா? எனக்கும் பிடிக்கும் என்று அவங்களே சொன்னாங்கப்பா.''

''ஊஞ்சல் வயசு வித்தியாசம் இல்லாமல் லேடீஸ் எல்லோருக்கும் பிடிக்கும் என்று சொல்லு.''

''ஏன்பா? உங்களுக்கு ஊஞ்சலில் ஆடுவது பிடிக்கவில்லையா?'' என்று கேலியாகக் கேட்க அவன் புன்னகை செய்தான்.

''தனியா ஆட இஷ்டம் இல்ல அம்மு. நீ என் மடியில் இருந்தால், நம்மோடு சேர்ந்து ஆனந்தி மிஸ்ஸும் இருந்தால் எனக்கும் ஊஞ்சல் ஆடப் பிடிக்கும் காவ்யா?'' என்று அவளைப் பார்த்தபடியே சொல்ல ஒரு நிமிஷம் திகைப்புடன் பார்த்தாள்.

''அப்பா'' என்று குரலில் நடுக்கத்தோடு அழைத்தாள்.

''உனக்கு ஆனந்தியை பிடிச்சு இருக்கா புஜ்ஜு?'' என்று அவளின் முகத்தை கைகளில் ஏந்தி, கனிவான குரலில் விசாரித்தான்.

''உங்களுக்கும் மிஸ்ஸை பிடிச்சு இருக்காப்பா?'' என்று மகள் கேட்ட எதிர் கேள்வியிலேயே தன் கேள்விக்கான விடை இருப்பதை உணர்ந்தாலும் அவன் அதைக் கண்டு கொள்ளவில்லை.

''நான் உன் விருப்பத்தை கேட்டேன் காவ்யா?''

''மிஸ் ரொம்ப கண்டிப்பா இருக்காங்கப்பா. சில சமயம் முகத்தை சுண்டி கடுமையா பேசும் போது



கொஞ்சம் கஷ்டமா இருந்ததுப்பா. ஆனால்...'' என்று இழுத்தவளுக்கு அவள் செய்த அந்த மாபெரும் உதவியும் மறக்கவில்லை குரல் தழுதழுத்தது.

''அது உன்னை கஷ்டப்படுத்துவதற்காக இல்லை குட்டிம்மா. நீ ஏதாவது சின்ன தப்பு பண்ணினால் உன்னை திருத்தி நல்வழிப் படுத்துவதற்காக கடுமை காட்டி இருப்பாங்க. அதுக்குக் காரணம் உன்னைப் பிடிக்காமல் இல்லை செல்லம்...''

''மிஸ்ஸுக்கு என்னை பிடிக்கலை என்று நான் எப்போப்பா சொன்னேன்? மிஸ்க்கு என்னை ரொம்பப் பிடிச்சு இருக்கு என்று எனக்குத் தெரியும். அவங்க எனக்காக...'' என்று தொண்டை நடுங்க சொன்னவள் மேலே பேச்சைத் தொடரவில்லை. அன்றைய நினைவில் அவள் உடலில் சின்ன சிலிப்பு ஓடி அடங்கியது.

''உங்க மிஸ் எனக்கும் அட்வைஸ் பண்ணினாங்க செல்லம். வயசு வந்த பெண்ணைத் தனியா விட்டுட்டு வெளியூர் போகாதீங்க. என்னதான் வேலைக்காரங்க இருந்தாலும் வீட்டுல பொறுப்பான ஒரு பெண் துணை காவ்யாவுக்கு வேண்டும் என்று அட்வைஸ் பண்ணினாங்கடா...'' என்று அவளை தன்னோடு சேர்த்து அணைத்து சொல்லி சிரிக்க அவளும் அதில் இணைந்தாள்.

''உங்களுக்கும் என்ன உங்களுக்கும்? ஏன் மிஸ் உங்களுக்கு அட்வைஸ் பண்ணக் கூடாதா? அவ்வளவு தூரம் அட்வைஸ் பண்ணியதற்கு நீங்க என்ன நடவடிக்கை எடுத்தீங்க?'' என்று விசாரிக்க அவன் பவ்யமாக கை கட்டி எழுந்து நின்றான்.

''அவங்க சொல்றதுக்கு முன்னாடியே ஒரு பொது நிர்வாகி வேண்டும் என்று பேப்பரில் விளம்பரம்

கொடுத்தேன். வரும் ஞாயிற்றுக் கிழமை நேர் முகத் தேவுக்கு வர சொல்லியும் இருந்தேன். ஆனால் இப்ப வேறே ஏதாவது செய்யலாமா என்று யோசிக்கிறேன் குட்டிம்மா...''

''என்னப்பா செய்யப் போறீங்க?''

''உனக்கு ஆனந்தியை பிடிச்சு இருக்கா?'' என்று மீண்டும் முதலில் கேட்ட கேள்விக்கே வர அவள் ஆமோதிப்பதாக தலை அசைத்தாள்.

''பிடிச்சு இருக்குப்பா உங்களுக்கு ஏன் இந்த சந்தேகம்? அவங்களை பிடிக்காமலா நீங்க எனக்கு பிறந்த நாளுக்கு வாங்கி கொடுத்த அந்த புது செயினை மிஸ்ஸுக்குப் பரிசாக் கொடுத்தேன்?'' என்று அவள் கேட்க அவன் கண்கள் மின்னியது.

''இனிமேல் அவங்களை மிஸ் என்று கூப்பிடாமல் அம்மா என்று கூப்பிடச் சொன்னால் உனக்கு ஓகேயா கண்ணு?'' என்று அவன் கேட்டு முடிக்கும் முன்பே பாய்ந்த வந்து அணைத்துக் கொண்டாள்.

''அம்மா என்றால், என் கூடவே எல்லா நாளும் எல்லா நேரமும் இருப்பாங்களாப்பா?'' என்றவள் குரல் உணர்ச்சிப் பெருக்கில் தள்ளாடியது.

''உனக்கு பிடித்து இருந்தால், நீ சம்மதம் சொன்னால், அதன் பிறகு நான் ஆனந்தி மிஸ்ஸிடம் பேசுவேன் காவ்யா. ஆனால் எனக்கு நீ தான் முக்கியம். உன் சம்மதம், சந்தோஷம் அது வேண்டும். நீ என் உயிரினும் மேலானவள் காவ்யா. உனக்காக இந்த திருமணத்தை தள்ளி வைப்பது உட்பட என்ன வேண்டுமானாலும் செய்வேன். நீ உன் முடிவைச் சொல்லுடா. ஆனந்தியின் அருகாமை உனக்கு சந்தோஷம் தரும் என்றால் தான், நான் அவளிடம்



பேசுவேன்'' என்று அழுத்தமாகச் சொல்ல அப்பாவைக் கட்டி அணைத்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

''ஐ லவ் யூ. இந்த பத்து வருஷமா தனியா தானேப்பா வளர்த்தீங்க. நீங்க என் நலனுக்காக இவ்வளவு தூரம் பார்க்கும் போது உங்களுக்காக நான் சம்மதம் சொல்ல மாட்டேனாப்பா?'' என்று சொன்னவள் தொண்டையை செருமி சீர்படுத்தினாள்.

''நீங்க மிஸ் கிட்டே போய் கல்யாணத்துக்கு சம்மதம் கேளுங்க. சரி என்று சொன்னால் மண்டபமும் மூகூர்த்த நாளும் பார்க்கலாம். இல்லை என்றால் என்னிடம் சொல்லுங்க. நாளைக்கே ஆள் வைத்து தூக்கி விடலாம்'' என்று கண் சிமிட்டி கேலியாகச் சொல்ல, ஒரு கணம் விழித்தான்.

அடுத்த வினாடியே அவளின் பாவனையிலும் வார்த்தைகளிலும், அது வரை தனஞ்செயனுக்கு இருந்த படபடப்பும் ஆவலும் குறைய வெடித்து சிரிக்க ஆரம்பித்தான் அந்த சிரிப்பு காவ்யாவுக்கும் ஒட்டிக் கொண்டது.

## 21

என்றும் இல்லாத திருநாளாக காலை ஏழு மணிக்கு அழைத்து, 'இன்று காலை உங்க வீட்டுக்கு வருகிறேன். முக்கியமான விஷயம் பேசணும். மாமாவை இருக்க சொல்லுங்க' என்று தனஞ்செயன் தொலைபேசியில் சொல்லிய வார்த்தைகளை வினோதினியின் வீட்டில் இருந்த யாராலும் நம்ப முடியவில்லை.

பட்ட படிப்பை முடித்து விட்டு கடந்த மூன்று மாதங்களாக காரணம் எதுவும் இன்றி தனஞ்செயனை தேடிச் சென்று பேசும் சவிதா,

விளம்பர தொழிலில் கணிசமான வருமானம் பார்க்கும் மருமகன் பேத்தியை பார்த்துக் கொள்ள புதிதாக யாரையாவது அழைத்து வந்து விடுவானோ என்ற பயத்தில் பனிரெண்டு வருடங்கள் வித்தியாசம் இருந்தாலும் பரவாயில்லை என்று இரண்டாவது மகளை மூத்த மருமகனை திருமணம் செய்து கொண்டால் நன்றாக இருக்குமே என்று நினைக்கும் பிரேமாவதி,

25 சதவிகித பங்குகளை வைத்து இருக்கும் மருமகனின் வருமானத்தில் சுரண்டி தன் தொழிலை நடத்தும் சண்முகம்,

என்று சுயநலத்தின் மொத்த உருவமான அந்த குடும்பத்தில் தப்பி பிறந்தது வினோதினி. அதனால் தானே என்னவோ கடவுள் வெகு சீக்கிரம் அவளை தன்னிடத்தில் அழைத்து கொண்டார். அவளைத் திருமணம் செய்து கொண்ட தனஞ்செயனின் சந்தோஷம் நிலைத்தது ஓராண்டுக்கும் குறைவே.

குறை பிரசவத்தில் காவ்யாவை அவனுக்குத் தந்து விட்டு அவள் இந்த உலகத்தில் இல்லாமல் போனாள். இந்த பதினோரு ஆண்டுகளில் அவன் இந்த வீட்டுக்கு வந்தது நான்கு ஐந்து முறைகள் இருக்குமோ என்னவோ?

அதிலும் 'சவிதாவின் போக்கு சரி இல்லை. கண்டித்து வையுங்க' என்று சொல்வதற்காக கடந்த மாதத்தில் இரண்டு முறை வந்தான்.

மாப்பிள்ளை முக்கியமான விஷயம் பேசணும். மாமாவையும் இருக்க சொல்லுங்க என்று சொல்லி



விட்டாரே! மகளின் முயற்சி வெற்றி பெற்று விட்டது என்று ஆனந்தக் கூத்தாடாத குறைதான்.

''என்னங்க, மாப்பிள்ளை வரேன் என்று சொல்லி இருக்கார். உங்களிடம் ஏதோ முக்கியமான விஷயம் பேசணுமாம். சவிதா கல்யாண விஷயமா தான் இருக்கும். ஜோசியரை பதினோரு மணிக்கு வர சொல்லுங்க'' என்று கணவரிடம் உத்தரவு போட்டு விட்டு சமையல் அறைக்குள் சென்றார்.

''மாப்பிள்ளை கல்யாண விஷயம் பேச வருகிறார். சாப்பாடு பிரமாதமா இருக்கணும். ஸ்வீட் ஒன்று பண்ணிடுங்க'' என்று வேலை ஆட்களை முடுக்கி விட்டார்.

''ஜீன்சை கட்டிக் கொண்டு அழமாமல் நல்லதா ஒரு பட்டுப் புடவை எடுத்து கட்டு'' என்று மகளுக்கு ஆலோசனை கூறினார். ஆனால் பிரேமாவதியின் இத்தனை பரபரப்பையும் அவன் வந்து சொல்லிய ஒற்றை வாக்கியம் ஒன்றும் இல்லாமல் செய்தது.

''மாமா, உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வந்தேன்'' என்று வீட்டுக்குள் அடி எடுத்து வைத்த மூன்றாவது நிமிடம் தனஞ்செயன் நேரடியாக பேச்சு வார்த்தைக்குள் நுழைந்தான்.

''சொல்லுங்க தனா.''

''உங்க டெக்ஸ்டைல் கம்பெனியில் 25 சதவிகித பங்கு காவ்யா பேரில் இருக்கு இல்லையா?'' என்று ஆரம்பித்த உடனே பிரேமாவதி, சண்முகம், சவிதா மூவருக்குமே முகம் அஷ்ட கோணலானது.

''அதுக்கென்ன மாப்பிள்ளை?'' என்று கணவரை மீறிக் கொண்டு பதில் அளித்த மாமியாரின் அவசர குடுக்கை

தனம் அவனுக்குத் திருப்தி இல்லை. ஆனாலும் அது பெரிய விஷயம் இல்லை என்பது போல ஒதுக்கி விட்டு மாமனாரிடமே பேச்சை தொடர்ந்தான்.

''எனக்கு அவசரமாக நாற்பது லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. தொழிலில் இருந்து அவ்வளவு பணம் வெளியே எடுக்க முடியாத சூழ்நிலை. அத்துடன் இந்த பங்குகளில் இருந்து எனக்கு வருமானம் இல்லை'' என்று சொல்லி கொஞ்சம் இடைவெளி விட்டான்.

''ஏன் இப்ப திடீர் என்று இதைப் பற்றிப் பேசணும்?'' என்று எரிச்சலுடன் இடையிட்ட சவிதாவைத் தீர்க்கமாக பார்த்தான்.

''காவ்யா பருவமடைந்து விட்டாள். திரும்பி பார்ப்பதற்குள் அவள் திருமணத்திற்கு தயாராகி நிற்பாள். அவளுக்கு என்று நான் தனியாக சொத்துக்களை சேர்க்க வேண்டும், என்ற ஞானோதயம் இப்ப வந்து இருக்கு சவிதா'' என்று நிதானமான குரலில் எடுத்து சொல்ல அவளின் முகம் திகைப்பை காட்டியது.

அவனைக் கல்யாணம் செய்து கொள்வதைப் பற்றி ஜாடையாகவும் நேரிடையாகவும் பேசுகிறாள் என்று தெரிந்தே 'மகளின் கல்யாணம் பற்றி தன்னிடம் பேசுகிறான் திமிர் பிடித்தவன்' என்று பொறும, மகளுக்கும் மூத்த மாப்பிள்ளைக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையில் பிரேமாவதி இடையிட்டார்.

''சவிதா கல்யாணம் பற்றி நான் பேசினால் அவள் சின்ன பொண்ணு என்று சொல்றீங்க. ஆனால் அவளை விட பனிரெண்டு வயது சின்ன பொண்ணு கல்யாணத்தை பற்றி நீங்க பேசறீங்க? உபதேசம் ஊருக்கு தானா?'' என்ற மாமியாரின் புறம் திரும்பினான்.



''நான் என் மகளின் கல்யாணம் பற்றிப் பேசவில்லை. என் மகளின் திருமணத்திற்கு சொத்து சேர்ப்பதைப் பற்றி பேசுகிறேன். நான் எந்தக் காரணம் கொண்டும் அவளை விட பதினைந்து வயது மூத்த, ஒரு மகளுடன் நிற்கும் நடுத்தர வயதில் நிற்கும் மனிதனுக்கு இரண்டாம் தாரமாக கொடுக்க மாட்டேன்'' என்று அவன் வைத்த குட்டில் பிரேமாவதியின் முகம் சுருங்கி சூம்பிப் போனது.

''இந்த ஷேர்சை நான் வைத்து இருப்பதால் எனக்கு எந்த பலனும் இந்த பத்து ஆண்டுகளில் வரவில்லை. அதனால் ஷேர்களை விற்று விட முடிவு பண்ணி விட்டேன்'' என்று சொல்ல அதிர்ந்தார்கள்.

''ஏன், எதுக்கு? அப்படி பணத்திற்கு என்ன அவசரம்?'' என்று வேகமாகக் கேட்ட பிரேமாவதியை ஒரு பார்வை பார்த்தவன், அதை பதில் சொல்லாமல் ஒதுக்கி விட்டு மாமனாரிடம் பேச்சைத் தொடர்ந்தான்.

''இந்த பங்குகளை மார்க்கெட்டில் விற்றால் எனக்கு நல்ல விலை கிடைக்கும். இது குடும்ப தொழில் ஆச்சே? கணிசமான பங்குகளை மூன்றாம் நபர் வாங்குவது உங்களின் நிர்வாகத்தில் சில சிக்கல்களை ஏற்படுத்தலாம். அதை நான் விரும்பவில்லை...''

''அவ்வளவு அக்கறை இருப்பவர் எதற்காக பங்குகளை விற்க வேண்டும்?'' என்று பிரேமாவதி இடையிட அவன் முறைத்தான்.

''எனக்கு அவசரத் தேவை என்று ஏற்கனவே சொல்லி விட்டேன். நீங்க அப்பப்போ சவிதாவைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி கேட்கறீங்களே? உங்களால் 40 லட்சம் ரூபாய் உடனடியா கொடுக்க முடியுமா? அப்படி கொடுப்பதாக இருந்தால் இந்த பங்குகளை விற்க

வேண்டிய அவசியம் இருக்காது. நானும் சவிதாவைக் கல்யாணம் செய்து கொள்வதைப் பற்றி யோசிப்பேன்'' என்று சொல்ல சவிதாவுக்கு ஆத்திரம் பொங்கியது.

''என் இங்கே வந்து கேட்கறீங்க? நாங்க தராதரம் தெரியாதவங்க ஆச்சே? அந்த ஸ்கூல் டீச்சரிடம் போய் கேட்க வேண்டியது தானே?'' என்று குதர்க்கமாகச் சொல்ல சிரித்தான் தனஞ்செயன்.

''கேட்டேனே, கேட்டு வாயை மூடும் முன்பு, தன்னிடம் பணம் இல்லை என்று சொல்லி விட்டாள்'' என்று நிறுத்த அவளின் முகத்தில் ஏளனம் வந்தது.

''அவள் பணம் தருவாளா? வாங்குபவள் ஆச்சே?''

'நான் இன்னும் முழுசா முடிக்கவில்லை. அதற்குள் அவசரப் படுகிறாயே? என்னிடம் பணமா இல்லை. ஆனால் பூர்வீக வீடு இருக்கிறது. அதை அடகு வைத்தோ விற்றோ உங்களுக்கு தேவையான பணத்தை எடுத்து கொள்ளுங்க என்று அவளின் வீட்டுப் பத்திரங்களை என்னிடம் கொடுத்து விட்டாள். எனக்கு தேவை என்ற சமயத்தில், முன் பின் யோசிக்காமல் பெரிய உதவி செய்த அவளைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லி விட்டேன். இது உங்களின் தகவலுக்கு'' என்று தெளிவான குரலில் அழுத்தமாக தனஞ்செயன் உரைக்க, அங்கே ஊசி விழுந்தால் கூட கேட்கும் அளவுக்கு நிசப்தம் நிலவியது.

அவன் சொன்ன விபரங்கள் எல்லாமே உண்மை தான். ஆனால் அதன் அர்த்தம் அவர்களுக்கு வேறு விதமாகப் புரியும் என்பதை உணர்ந்தே கவனமாக வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து பேசினான் தனஞ்செயன்.



இப்படி பேசினால் தான் ஆனந்தியை மணம் செய்து கொள்ள எண்ணுவதில் புதிதாகப் பிரச்னைகள் இவர்கள் மூலம் வராமல் இருக்க வேண்டுமானால் அவர்களாகப் பின் வாங்க வேண்டும். அதற்கு இது தான் வழி என்று யோசித்துப் பேசினான்.

அவள் அவனிடம் பத்திரம் கொடுத்தது உண்மை. அவள் காவ்யா விஷயத்தில் மிகப் பெரிய உதவி செய்ததும் உண்மை. அவன் அவளைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொன்னது உண்மை. ஆனால் அவர்களுக்கிடையே நடந்த பேச்சுவார்த்தைகளின் சாராம்சம் முழுக்க முழுக்க வேறு என்பதை இவர்களால் உணர முடியவில்லை.

இவனுக்கு உடனடியாக நாற்பது லட்சம் ரூபாய் தேவைப் படும் அளவுக்கு என்ன நெருக்கடி? தொழில் சரியாக போகவில்லையோ? தொழிலில் நஷ்டமா? நல்லவேளை நான் தப்பித்தேன் என்ற யோசனையில் சவிதா மூழ்கினாள்.

தொழிலைப் பற்றி தெரியாவிட்டாலும், 25 சதவிகிதப் பங்குகளை வெளி நபர் வாங்குவது நிறுவனத்தில் தனது பலம் சரிய காரணமாக இருக்கும் என்ற அளவுக்கு விஷயம் தெரிந்ததால், பேச்சை இழந்தார் பிரேமாவதி.

மனைவியும் மகளும் சுயநலமான எண்ணத்தில் மூழ்கிப் பேச்சைத் தொலைக்க அந்த வீட்டில் கொஞ்சமேனும் நியாயம் பேச தெரிந்த சண்முகம் மருமகனை கனிவோடு நோக்கி ''சரி நான் நிதி நிர்வாக இயக்குனரிடம் பேசி விட்டு, இன்று மாலையில் தகவல் சொல்கிறேன். வா சாப்பிடலாம்'' என்று அழைத்தார் சண்முகம்.

ஆனால் மாமியாரும் சவிதாவும் அமர்ந்து இருந்த கோலத்திலேயே அவர்களின் மன நிலையை ஊகித்தவள் புன்னகையுடன், ''தேங்க்ஸ் மாமா, காலையில் சீக்கிரம் அவள் பள்ளிக்கு கிளம்ப வேண்டும் என்று காவ்யாவுக்கு கம்பெனி கொடுப்பதற்காக சாப்பிட்டு விட்டு தான் கிளம்பினேன்'' என்று சொல்லி விடை பெற மற்ற மூவரும் திகைத்து அமர்ந்து இருந்தனர்.

## 22



முன்தினம் இரவு வீடு தேடி வந்து தனஞ்செயன் தன்னிடம் பேசியது ஆனந்தியின் நினைவுகளில் மீண்டும் மீண்டும் ரீங்காரம் செய்து கொண்டு இருந்தது. ஆனால் தன்னை மறு கல்யாணம் செய்து கொள்வதன் மூலம் ஏற்கனவே இருக்கும் தந்தை மகள் உறவில் எந்த விரிசலும் வந்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தாள்.

அதனால், திருமணம் தொடர்பான கேள்விக்கு தனஞ்செயனுக்கு பதில் சொல்வதற்கு முன்பே, காவ்யாவிடம் தனியாகப் பேச வேண்டும் என்ற எண்ணத்தில் ஆனந்தி இருந்ததால் காவ்யா அவளை காலை பதினொரு மணி அளவில் இடைவேளையில் பார்க்க வந்தது மன நிறைவை தந்தது.

''ஹேய் கவி, வா வா. ஸ்நாக்ஸ் கொண்டு வரவில்லையா? பிஸ்கட் தரட்டுமா?'' என்று உரிமையுடன் கேட்டவளை ஆனந்தியின் அருகே இருந்த மற்ற ஆசிரியர்கள் ஒரு மாதிரி பார்த்தனர். மற்ற ஆசிரியர்களை



பார்த்த பிறகே தான் இங்கே ஆனந்தியை தேடி வந்து இருக்கக் கூடாது என்ற ஞானோதயம் வந்தது.

''இல்லை மிஸ் வேண்டாம். நான் சும்மா உங்களை பார்க்க வந்தேன் மிஸ்'' என்று விலகி ஓட முயல அவளின் கை பற்றி நிறுத்தினாள்.

நேற்று இரவு தந்தை தன்னிடம் பேசியதன் தாக்கத்தில் அவளைப் பார்க்க ஓடி வந்து விட்ட காவ்யாவுக்கு, வந்த பிறகே அது ஆசிரியர்களின் ஓய்வறை என்பதும் அங்கே ஆனந்தியுடன் கூட மேலும் சில ஆசிரியர்கள் இருப்பார்கள் என்பதும் உரைக்க அவள் பேச்சு வராமல் தடுமாறினாள்.

''மாலையில் பள்ளி முடிந்ததும் நாம் கொஞ்சம் வெளியில் போகலாமா?'' என்று கேட்டதும் கண்களில் சந்தோஷ மின்னல் பளிச்சிட வேகமாக தலை அசைத்து விட்டு ஓடி விட்டாள்.

''என்ன ஆனந்தி? யார் அந்த பொண்ணு? அவள் ஏன் இங்கே உன்னைத் தேடி வருகிறாள்?'' என்ற கேள்விக் கணைகள் அருகில் இருந்த ஆசிரியர்களிடம் இருந்து அவளை நோக்கிப் பாய அவள் சின்ன புன்னகையை மட்டுமே பதிலாக கொடுத்தாள். இடைவெளி முடிய இன்னும் சில நிமிடங்கள் இருக்கும் தருவாயில், தனஞ்செயனிடம் இருந்து அழைப்பு வந்தது.

''ரெண்டு நிமிஷம் பேசலாமா? இன்னும் வகுப்பு ஆரம்பிக்கலையே?''

''இல்லை சொல்லுங்க.''

''நேற்று நான் பேசியதைப் பற்றி யோசித்தாயா என்று கேட்க போன் பண்ணினேன். ஆனால் இப்ப பேச

முடியாது அதனால் நாலரை மணிக்கு நான் பள்ளிக்கு வரட்டுமா?''

''இன்னிக்கா?'' என்றவளின் மனகண்ணில் காவ்யா வந்து நிழலாட அவள் சம்மதம் சொல்லத் தயங்கினாள்.

''கவலைப் படாதே. நான் உன்னை நிர்பந்தம் செய்ய மாட்டேன். வீடு வாங்குவதற்கும் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கும் சம்பந்தம் இல்லை. என்னை நம்பி என்னுடன் வருவாயா?'' என்றவனின் குரல் வருத்தம் இருப்பதை உணர முடிந்தது.

''ஏன் இப்படி பேசறீங்க? உங்க மேலே நம்பிக்கை இல்லாமல் வர மாட்டேன் என்று சொல்லவில்லை. சில நிமிடங்கள் முன்பு, காவ்யாவை இன்று மாலையில் வெளியே அழைத்து செல்கிறேன் என்று வாக்கு கொடுத் தேன். கொடுத்த முதல் வாக்கைத் தவற வேண்டுமா என்று நினைத்து தான் தயங்கினேன். போதுமா?'' என்று வேகமாக அவள் கொடுத்த பதிலடி அவனைத் திகைக்க வைத்தது.

காவ்யாவை வெளியே அழைத்து செல்ல வேண்டும் என்று நினைத்ததே இனித்தது என்றால் அவளுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்ற தன்னை தவிர்ப்பது உயிர் வரை சென்று உருக்கியது.

''நான் சொன்னது காதில் விழுந்ததா? லைனில் இருக் கீங்களா? நான் கிளாசுக்கு போகணும். போனை வைத்து விடட்டுமா?'' என்று தயக்கத்தோடு கேட்க அவசரமாக கனவில் இருந்த விழித்தான்.

''ஒரு நிமிஷம், வச்சுடாதே...''

''சொல்லுங்க சார்...''



''இந்த சார் வேறேயா? இதுக்கு வேறே நான் ஒரு வழி பண்ணணும்'' என்று சலித்து கொண்டாலும் பேச்சினை தொடர்ந்தான்.

''காவ்யாவை வெளியே அழைத்து செல்ல வாக்களித் ததை மாற்ற வேண்டாம். நீங்க எங்கே போறீங்க என்று தகவல் சொல்லுங்க மிஸ். அப்படியே உங்களுடன் சேர்ந்து வருவதற்கு எனக்கு அனுமதி கொடுங்க மிஸ். அது போதும் மிஸ்...'' என்று ஒரே வாக்கியத்தில் மூன்று மிஸ் போட அந்த வினாடியில் முகம் சிவந்தது.

மகளுடன் சேர்ந்து செல்ல, இவன் தன்னிடம் அனுமதி கேட்கிறானா? கடவுளே! சில கணங்கள் நீண்ட அமை தியைக் கூட தாள முடியாமல், ''ப்ளீஸ் மிஸ், சரி என்று சொல்லுங்க மிஸ்'' என்று மேலும் இரண்டு மிஸ்களை போட அவளுக்குச் சிரிப்பு பொங்கியது.

''பல்லாவரத்தில் எங்க ஸ்கூல் பக்கத்தில், ஒரு 'பசி-ருசி' என்று ஒரு ரெஸ்டாரண்ட் இருக்கு. ஸ்கூல் டீச்சர்ஸ் எங்களுக்குள் ஏதாவது பார்ட்டி என்றால் அங்கே தான் போவோம். அங்கே அழைத்து போகலாம் என்று நினைத்தேன்...''

''சரி, அஞ்சு மணிக்குள் அங்கே நானும் வந்து விடு கிறேன். பை'' என்று சொல்லி விட்டு போனை வைக்க அவள் அந்த நிமிடம் இமயமலை தொட்ட சந்தோஷத்தை உணர்ந்தாள்.

மாலையில் பள்ளி முடிந்ததும் காவ்யாவை தேடி வகுப்பறைக்கு வந்த ஆனந்தியை துள்ளலுடன் கட்டி கொண்டாள்.

''மிஸ் இன்று என்னை வெளியே அழைத்து செல் கிறேன் என்று எங்க அப்பாவிடம் தகவல் சொல்லிட்

டீங்களா?'' என்று கேட்டதும் உதட்டை பிதுக்கினாள் ஆனந்தி

''உங்க அப்பாவிடம் நீ தானே சொல்ல வேண்டும்? நான் உன்னை வருகிறாயா என்று கேட்டேன். ஒகே என்று சொன்னாய். உன் அப்பாவிடம் கேட்டு இருப்பாய் என்று நினைத்தேன்'' என்று சொல்லவும் அவள் இடுப்பில் நின்று கை வைத்து முறைத்தாள்.

''இதை என்ன நம்ப சொல்றீங்களா மிஸ்?''

''ஏன் காவ்யா நம்ப முடியலை?''

''நீங்க இந்த ஸ்கூலில் வேலை பார்ப்பதனால் உங்களுக்கு இங்கே இருக்கும் நடை முறைகள் தெரிந்து இருக்குமே?'' என்று சொன்னவளை சின்னச் சிரிப்புடன் பார்த்தாள் ஆனந்தி.

''புரியலையே?''

''புரியும்படி வண்டியில் போகும் போது சொல்கிறேன் மிஸ்.''

''காரிலா? நாம் என் வண்டியில் போகலாம் என்று நினைத்தேனே?''

''அப்படி என்றால் நான் வீட்டுக்கு எப்படி திரும்பிச் செல்வது? நீங்க கொண்டு வந்து விடுவது என்றால் அலைச்சல் தானே?'' என்று காவ்யா சந்தேகம் எழுப்ப அவள் ரகசியமாகப் புன்னகை செய்தாள். தனஞ்செயன் வருவது இப்போதைக்கு ரகசியமாக இருக்கட்டும்!

''சொல்றேன் சொல்றேன். முதலில் உன் டிரைவரை பார்த்து அவரை கிளம்பச் சொல்லி விடலாம். அப்புறம் என் வண்டியில் போகும் போது பேசிக் கொண்டே போகலாம். ஒகே?'' என்று ஆனந்தி கேட்க அவள் மறுப்பாகத் தலை அசைத்தாள்.



''கார் தான் வேண்டுமா? என்னுடன் வண்டியில் வர மாட்டாயா?'' என்று கேட்டதும் ஆனந்தியின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''இல்லை மிஸ். எங்க அம்மா இரு சக்கர வாகனத்தில் போகும் போது பின்னால் அமர்ந்து இருந்த எங்க சித்தி விடாமல் பேசிக் கொண்டே இருந்ததால் சாலை விபத்தில் அம்மா இறந்துட்டாங்க. அதனால் நாம் எங்கே போக வேண்டுமோ, அந்த இடத்திற்கு போய் சேர்ந்த பிறகே பேசலாம் மிஸ். என்னால் காத்திருக்க முடியும்'' என்று சொன்ன பதினோரு வயது குழந்தையின் கடந்த காலம் அவளைக் கசக்கிப் பிழிந்தது.

''ஐ ஆம் சாரி காவ்யா...'' என்று மன்னிப்பு கேட்டு விட்டு டிரைவருக்கு விபரம் சொல்லி வீட்டுக்கு அனுப்பிய பின்பு அவளை இரு சக்கர வாகனத்தில் ஏற்றி கொண்டு தனஞ்செயனிடம் சொன்ன இடத்திற்கு வந்து சேர்ந்தாள் ஆனந்தி.

''வாவ்! வெளியே இருக்கும் அந்த வாகன சந்தடி உள்ளே கேட்கவே இல்லையே மிஸ்? ஆனால் கண்ணாடி வழியே மொத்த சாலையின் பரபரப்பும் தெரிகிறது ஆனால் சப்தம் கேட்கவில்லை பார்க்க ரொம்ப வித்தியாசமா இருக்கு மிஸ்...'' என்று ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்த காவ்யா சொல்ல அவள் புன்னகை செய்தாள்.

''என்ன சாப்பிடுகிறாய்?''

''ரோஸ் மில்க்...''

''டிபன் ஏதாவது முதலில் சாப்பிடு. அப்புறமா ட்ரிங்க்ஸுக்கு போகலாம்.''

''சோலா பூரி, சென்னா மசாலாவுடன்...'' என்று சொல்ல மூன்று ப்ளேட் ஆர்டர் பண்ண, அவள் வியப்புடன் பார்த்தாள்.

''மூன்று பிளேட்டா சொன்னீங்க மிஸ்?''

''ஆமா ஏன்?''

''நாம் இரண்டு பேர் தானே இங்கே இருக்கிறோம்?''

''நம் இருவரில் ஒருவர் இன்னொரு பூரி சாப்பிடக் கூடாது என்று சட்டமா?'' என்று கண் சிமிட்ட அவள் நம்பாமல் தலை அசைத்தாள்.

''நீங்க எதையோ என்னிடம் மறைக்கறீங்க மிஸ். அங்கே ஸ்கூலில் அப்பாவிடம் சொல்லிட்டீங்களா என்று கேட்டதற்கு கூட...''

''மறந்து விட்டேனே? அந்த பேச்சு அப்படியே நிற்கிறதே? உங்க அப்பாவிடம் ஏற்கனவே நீ அனுமதி வாங்கி இருப்பாய் என்று நான் சொன்னதை ஏன் உன்னால் நம்ப முடியவில்லை கவி?'' என்று விட்ட இடத்துக்கு சென்றாள் ஆனந்தி.

''நீங்க என்னை வெளியே அழைத்து போவதா எப்போது என்னிடம் சொன்னீங்க?''

''மார்னிங் இண்டர்வல் பீரியடில்...''

''மாணவர்களிடையே மொபைல் அனுமதிக்கப் படுவதில்லை தானே?''

''ஆமா...''

''பிறகு நான் எப்படி எங்க அப்பாவிடம் பெர்மிஷன் கேட்டு இருக்க முடியும் என்று எதிர்பார்க்கறீங்க?'' என்றதும் அவள் சிரித்தாள்.

''நான் சொன்ன நேரத்திற்கும், பள்ளி முடிவதற்கும் இடையே மதிய உணவு இடைவேளை வந்தது தானே?''

''ஆமா!''



''உனக்கு உங்க அப்பாவின் மொபைல் நம்பர் தெரியும் தானே?''

''தெரியும்...''

''ஸ்கூலில் காயின் போட்டு பேசும் பொது தொலை பேசி இருக்கு தானே?'' என்று கேட்டதும் அவள் முகத்தில் அசடு வழிந்தது.

''அதில் காயின் போட்டு பேசும் அளவுக்கு கூட உன்னிடம் பைசா இல்ல என்று என்னை நம்பச் சொல்கிறாயா கவி?''

''ஹையோ ஆமால்ல...''

''ஆமாவா? இல்லையா?'' என்று கண் சிமிட்டிச் சிரித்த ஆனந்தியின் இடுப்பை சுற்றி கைகளை போட்டவள், ''பழைய ஜோக் மிஸ். புதுசா ஏதாவது சொல்லுங்க...'' என்று சிரிப்புடன் சொன்னாள் காவ்யா.

''ரொம்ப நாளா சொல்லும் அதே மிஸ் சொல்லும் போது எனக்கும் பழைய ஜோக் தான் நினைவில் வருது நீ புதுசா ஏதாவது சொல்லு. நானும் புது ஜோக் சொல்ல முயற்சி செய்கிறேன்'' என்று சிரிப்புடன் வலை விரித்தாள் ஆனந்தி.

''அப்புறம் பேச்சு மாறக் கூடாது மிஸ். பிராமிஸ்...'' என்று தீவிரமான கண்களுடன் கேட்க, அவளுக்கு ஒரு கணம் சிலிர்த்தது.

''எதுக்கு இந்த சின்ன விஷயத்துக்கு போய் ப்ராமிஸ் எல்லாம் கேட்கிறாய்? சும்மா சாதாரணமா பேசலாமே கவி?''

''நான் சொல்லப் போவது சாதாரணமான விஷயம் இல்ல மிஸ். பிராமிஸ் பண்ணுங்க'' என்று பிடிவாதமாக

நிற்க ஆனந்தி காவ்யாவின் உள்ளங்கையில் தன் வலது கையை வைத்து அழுத்தினான்.

''இனிமேல் உங்களை மிஸ் என்று கூப்பிடாமல் அம்மா என்று கூப்பிடட்டுமா?'' என்று கேட்டு முடித்த அடுத்த வினாடி, அவளை அணைத்து உச்சியில் ஆசையுடன் முத்தமிட்டாள் ஆனந்தி.

## 23

அதுவரை சின்ன கேலியுடன் மடக்கிப் பேசிக் கொண்டு இருந்த ஆனந்தி, தன்னுடைய கேள்வியை கேட்ட மாத்திரத்தில் வேகமாக வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொள்ள, காவ்யாவும் ஆனந்தியின் அணைப்பிற்குள் சந்தோஷமாக அடங்கினாள்.

''நீங்க எனக்கு அம்மாவா வரட்டுமா என்று அப்பா என்னிடம் நேற்று கேட்டாங்க. அப்பவே நீங்க எங்க வீட்டுக்கு வந்து விட மாட்டீங்களா என்று இருந்தது. அதான் ஆசிரியர் ஓய்வறைக்கு உங்களைத் தேடி வந்தேன்'' என்று சொல்ல அவளின் முகத்தை நிமிர்த்தி நேராகப் பார்த்தாள் ஆனந்தி.

உச்சியில் அழுந்த முத்தமிட்டு விட்டு அவளை அணைத்தவாறே அருகில் அமர்ந்த, சர்வர் கொண்டு வந்த தட்டை அவளின் புறம் நகர்த்தி, ''சாப்பிடு கவி'' என்று உபசரித்தாள்.

''நீங்களும் சாப்பிடுங்கம்மா.''

''சாப்பிடலாம். ஆனால் மூன்றாவது ப்ளேட்டுக்குரிய ஆளைக் காணோமே என்று தேடுகிறேன்,'' என்று



சொல்லியபடி ஆனந்தியின் கண்கள் அலைய அப்போது தான் உணவகத்தின் கதவை திறந்து உள்ளே வந்து கொண்டு இருந்த தனஞ்செயனை கண்டது.

தனஞ்செயன் புன்னகையோடு அவர்களை நோக்கி வர, ''அப்பா'' என்று சந்தோஷமாக கூச்சலிட்டபடி அவனை நோக்கி கையாட்ட அவன் நெருங்கி வந்தான்.

''டிபன் உபசரிப்பு கவனிப்பு எல்லாம் உனக்கு மட்டும் தானா குட்டி? எனக்கு கிடையாதா?'' என்று மகளிடம் கேட்டவன் பார்வை ஆனந்தியிடம் இருக்க அவள் அவனை பார்த்தபடி எழுந்தாள். அவளின் செய்கையை அறிந்தவன் அவசரமாக கையை பிடிக்க முயல, மாட்டியது அவளின் புடவை முந்தானை.

புடவையை பிடித்து விட்டான் என்பது உணர்ந்ததால் நகராமல் நின்றவளின் கண்கள் அவனை பார்க்க, 'இருவர் அமரும் சோபாவில் மூவரும் அமரலாம்' என்று கண்ணால் சேதி சொன்னவனை தவிர்க்க முடியவில்லை.

''நீங்க வருவீங்க என்று மிஸ் சொல்லவே இல்லைப்பா...'' என்று குற்றம் சொன்ன மகளை தோளில் தட்டி கொடுத்தான்.

''ஒரு சர்ப்ரைசா இருக்கட்டும் என்று நினைத்து இருப்பாங்க...''

''ஆனால் மிஸ் சொல்லாமலேயே நானே அவங்க மூன்று ப்ளேட் ஆர்டர் பண்ணியதில் கண்டு பிடித்து விட்டேன்பா'' என்று உற்சாகமாகச் சொல்ல, அவனும் சந்தோஷமாகச் சிரித்தான்.

''எதிர்காலத் துப்பறியும் நிபுணர் இப்பவே ரெடி ஆகிறாங்க போல ஆனந்தி. உஷாரா இருந்து கொள்'' என்று

நெருங்கி அமர்ந்து இருந்ததால் வந்த சங்கடமான அமைதியில் இருந்த ஆனந்தியையும் பேச்சுக்குள் இழுத்தான் தனஞ்செயன்.

சின்ன கேலிகள், சிரிப்புடன் கூடிய கால்வாரல்கள், ஆகியவற்றுடன் சிற்றுண்டியை முடித்த பிறகு, 'அருகே இருந்த சுதந்திர தின பூங்காவிற்கு செல்லலாம்' என்று தனஞ்செயன் சொல்ல உற்சாகமாக ஒத்து கொண்டாள் காவ்யா.

''அம்மா நான் உங்க ஹோண்டா ஆக்டிவாவை பார்க்கில் இருக்கும் ட்ராக்கில் ஓட்டி பார்க்கட்டுமா?'' என்று கேட்க, ''ஏற்கனவே வண்டி ஓட்டி இருக்கிறாயா?'' என்று கவனமாக விசாரித்தாள் ஆனந்தி. இருவரும் பேசுவதை வியப்போடு கேட்டு கொண்டு இருந்தவன் நெஞ்சில் மழை சாரல்.

''சைக்கிள் ஓட்டுவேனேம்மா? கியர் இல்லாத வண்டி ஓட்ட என்ன பெரிய திறமை. ரெண்டு ரவுண்ட் ஓட்டு வதை நீங்க பின்னால உட்கார்ந்து பாருங்க. நம்பிக்கை இருந்தால் கொடுங்க.''

''நம்பிக்கை இல்லாமல் இல்லை கவி, வண்டிக்கு ஏதாவது என்றால் சரி பண்ணி விடலாம். ஆனால் உனக்கு எதுவும் அடி பட்டு விடக் கூடாதே?'' முதல் இரண்டு சுற்று களுக்கு, நானும் உன் பின்னால் அமர்ந்து வருகிறேன்.''

''ஒகே, ஆனால் முதல் இரண்டு சுற்றுக்கள் மட்டும் தான்'' என்று அவள் ஆனந்தியிடம் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு இருக்க இடையில் புகுந்தான் தனஞ் செயன்.

''வேண்டாம் ஆனந்தி, பேலன்ஸ் இல்லாமல் இரண்டு பேரும் விழுந்து விட்டால் கஷ்டம். நான்



புஜ்ஜூ பின்னால் உட்கார்கிறேன். வண்டிக்கு ஏதாவது ஆனாலும் சரி பண்ணிக்கலாம். உங்களுக்கு ஏதாவது என்றால் அப்பா பீல் பண்ணுவேண்டா செல்லம்'' என்று சொல்ல உள்ளுக்குள் நெகிழ்ந்தாள் ஆனந்தி.

இரண்டு சுற்றுக்கள் மகளுக்கு சில ஆலோசனை களை சொன்னவன் அவளின் வாகனம் ஓட்டும் திறமை யில் நம்பிக்கை வந்த உடனே வண்டியில் இருந்து இறங்கினான்.

''ஜாக்கிரதை கண்ணம்மா'' என்று மட்டும் சொல்லி விட்டு ஆனந்தி இருந்த சிமெண்ட் பெஞ்சில் அருகே அமர்ந்தான்.

''இந்த பார்க் எத்தனை மணிக்கு மூடுவாங்க தெரி யுமா?''

''மணி கணக்கு எல்லாம் கிடையாது ஆறரையில் இருந்து ஏழு மணிக்குள் இருட்டும் நேரத்தில் மூடு வாங்க. ஏன் கேட்கறீங்க?''

''நாம் பேசுவதற்கு எவ்வளவு நேரம் இருக்கு என்று தோராயமாக கணக்கு போடத்தான்'' என்று புன்னகை செய்தான்.

''அவ்வளவு நேரமா? என்னை வீட்டில் தேடுவாங்க...''

''லேட் ஆகும் என்று அம்மாவுக்கு போன் பண்ணிச் சொல்லிடு.''

''இன்னும் கல்யாண வேலை எல்லாம் பாக்கி இருக்கு.''

''அந்த வேலைகளை பகிர்ந்து கொள்ள நான் இருக் கிறேனே? அப்புறம் என்ன கவலை? ஒவ்வொரு வேலையையும் ஒரு ஒரு ஆளுக்கு பிரிச்சுக் கொடுத்து ரெண்டே நாளில் முடித்து விடலாம். முதலில் என்னிக்கு கல்யாணம் சொல்லு...''

''வரும் பதினாறாம் தேதி.''

''அடேங்கப்பா, இன்னும் பனிரெண்டு நாள், வானத்தையே வளைக்கலாம். என்ன வேலை இருக்கு சொல்லு'' என்று கேட்டவனை தயக்கத்துடன் பார்த்தாள்.

''இல்லை. வேண்டாம் சார். நானே பார்த்துக் கொள்கிறேன்.''

''இந்த சாரை விட மாட்டியா? நீ என்னைக் கல்யாணம் பண்ணி கொள்ளவில்லை என்றாலும் நான் உன்னைத் தோழியாக நினைத்து கொள்கிறேன். தயவு செய்து சார் என்று சொல்லாதே. எனக்கு ஸ்கூலில் வேலை பார்க்கிற பீலிங் வருது. எனக்காக இந்த ஒரு உதவி பண்ணுவாயா?'' என்று கேட்க அவள் தலை அசைத்தாள்.

''அதை கொஞ்சம் சிரிச்சுகிட்டே வாயைத் திறந்து சொன்னா தான் என்னவாம்?'' என்று சலித்து கொண்டாலும் அதை விட்டு விட்டு அடுத்த பேச்சுக்குத் தாவினான்.

''அதை விடு கல்யாண வேலையை நான் பகிர்ந்து கொள்வதில் உனக்கு என்ன சிரமம்? நான் பணம் செலவழிக்கவில்லை. என்ன செலவு பண்ணினாலும் கணக்கு காட்டி பணம் வாங்கி கொள்கிறேன்'' என்று மீண்டும் வற்புறுத்த அவள் மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''நீங்க அடிக்கடி எங்க வீட்டுக்கு வந்தால், மாப்பிள்ளை வீட்டுக்காரங்க ஏதாவது கேள்வி கேட்டால், என்னால் பதில் சொல்ல முடியாது.''

''மற்றவர்களை பற்றி கவலைப்படுவதற்கு ஒரு அளவு வேண்டும் ஆனந்தி. எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் எல்லா மனிதர்களையும் திருப்தி



படுத்துவது என்பது இந்த உலகத்தில் யாராலும் முடியாது. ஒரு ஸ்டேஜுக்கு பின்னால் நம் மனசாட்சிக்கு சரி என்று படுவதை செய்வது போதும் என்று நான் நினைக்கிறேன்...''

''அது சரி தான். ஆனால்...''

''நான் உன்னை பாரதி கண்ட புதுமை பெண் என்று நினைத்தேன். நீ சராசரிக்கும் கீழ் தைரியம் உள்ள கோழை என்று இப்பதானே புரியுது. இந்த அழகில் நீ எப்படி காவ்யாவுக்கு தைரியம் சொன்னாய்? ஒருவேளை அது டபிள் ஆக்ட்டா? உன்னை மாதிரியே இருக்கும் யாராவது வந்து...'' என்று சிரிக்க அவள் முறைத்தாள்.

''ஓகே, முறைப்பதை பார்த்தால் பயமாக இருக்கு. அதனால் நீ தைரியசாலி தான் ஒத்து கொள்கிறேன். ஆனால் இப்ப மட்டும் நாம் சேர்ந்து ஹோட்டலில் உணவு அருந்தியதும், இப்போது பார்க்கில் அமர்ந்து இருப்பதும் யாருக்கும் தெரியாது என்றா நினைக்கிறாய்?'' என்று மடக்க அவள் திகைப்புடன் பார்த்தாள்.

''நாம் சொல்லவில்லை என்றால் எப்படித் தெரியும்?''

''பள்ளிக்கு காவ்யாவை அழைக்க வந்த என் டிரைவரை நீ திருப்பி அனுப்பி இருக்கிறாய். இதற்கு கை கால் முளைத்து வீட்டில் வேலைக்காரர்கள் மத்தியிலும், உறவினர்கள் மத்தியிலும் அலசி ஆராயப்படும்...''

''ஹய்யோ, சாரி நான் தெரியாமல்...''

''ப்ச்! அதற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தேவை இல்லை. நாளைக்கே நமக்குத் திருமணம் ஆகி நீ அந்த வீட்டுக்கு எஜமானியாக வந்து விட்டால் இன்று உன்னைப் பற்றி புறம் கூறிய டிரைவர் காலில் விழாத குறையாக

சல்யூட் அடிப்பான். இதை எல்லாம் கண்டு கொள்ளாமல் இருப்பது தான் நமக்கு நல்லது...'' என்றவன் உரையாடல் அவனையும் அறியாமல் திருமணம் பற்றிய பேச்சுக்கு நகர அவள் அதை மாற்ற முயன்றாள்.

''வீடு விற்பனை பற்றி பேசலாமா? என்ன விலை பெற கூடும் என்று நீங்க யாரிடமாவது விசாரித்தீங்களா? என்ன சொன்னாங்க?'' என்று பேச்சைத் திசை திருப்பிய வளைச் சிரிப்போடு பார்த்தான்.

''நான் யாரிடமும் கேட்கவில்லை. கேட்க வேண்டிய அவசியம் இருப்பதாகவும் நினைக்கவில்லை. உனக்கு எவ்வளவு பணம் தேவைப் படுமோ, அதை கொடுக்க என்னால் முடியும். ஏற்கனவே அவங்க என்ன விலை பேசினாங்க? அதை விடக் கூடுதலாக இரண்டு லட்சம் தருகிறேன். போதுமா?'' என்றதும் அவள் அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்த்தாள்.

''என்ன இரண்டு லட்சம் போதாதா? ஐந்து லட்சம் சேர்த்து தரட்டுமா?''

''இல்லை வேண்டாம். அவங்க பேசிய தொகையைத் தந்தாலே போதும். ஏற்கனவே 30 லட்சம் பேசி முடித் தார்கள். எங்க மூன்று பேருக்கும் தலா பத்து லட்சம் ரூபாய்...''

''ஆனால் உனக்கு சேரக்கூடிய அந்த பத்து லட்ச ரூபாயில் வசந்தி கல்யாண செலவுகள் சேர்ந்து விட்டது. உங்க அம்மாவைக் கவனிக்கும் பொறுப்பு வேறு. நல்ல பங்கீட்டு முறை அல்லவா?'' என்ற தனஞ்செயனின் குரலில் கசப்பு இருந்தது. அந்தக் கசப்புக்குக் காரணம் அவள் மேல் இருந்த அக்கறை என்பதை ஆனந்தியால் உணர முடிந்தது.



''வசந்திக்கு செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அவள் என் தங்கை தானே? மேலும், அம்மாவை பார்த்து கொள்கிறேன் என்று பேச்சின் ஆரம்பத்திலேயே நான் சொல்லி விட்டேன். அதில் அவங்க பொறுப்பு தட்டிக் கழித்தார்கள் என்று சொல்ல முடியாது'' என்று விளக்கம் சொல்ல முயன்றவளைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

''உங்க அம்மாவை கவனிக்கும் பொறுப்பை உன் தங்கையும் தம்பியும், மாறி மாறி நீ பார்த்துக்கோ என்று சொல்லி விடுவார்கள் என்பது தெரிந்ததால் முன்ன தாகவே உனக்கு வந்த ஞானோதயம்.''

''அப்படி இல்லை...'' என்று விளக்கம் சொல்ல முயன்றவளைக் கை உயர்த்தி தடுத்தான்.

''உன் தம்பி தங்கை நான் குறைவாக நினைக் கிறேனோ என்று நீ எனக்கு சமாதானம் சொல்ல வேண் டாம். அவர்கள் மட்டுமில்லை. உலகத்தில் எண்பது சதவிகிதம் பேர் அப்படி தான் இருக்கிறார்கள். ஓகே?''

''பொதுவாச் சொல்றீங்களா? இல்லை. குறிப்பா உங்க மனக் கசப்பைச் சொல்றீங்களா?'' என்றவளின் குரலில் கனிவும் பரிவும் இருந்தது.

''இரண்டும் தான். குரலில் இருந்தே என் மன உணர்வு களை கணிக்கும் அளவுக்கு வந்தாச்சா? அதுவும் நல்லது தான் நாம் நம் விஷயம் மட்டும் பேசுவோமா?'' என்று ஒரு பெருமூச்சையும் வெளியேற்றினான்.

சில வினாடிகள் மௌனத்தின் பிறகு, ''என் முதல் திரு மண வாழ்க்கை பற்றி உனக்கு சொல்லவே இல்லையே? வினோதினி பிரசவத்தில் இறந்த போது...'' என்று பேச்சை ஆரம்பித்தான்.

"சாலை விபத்தில் இறந்ததாக என்று காவ்யா சொன்னாளே..." என்று அவசரமாக இடைமிட்ட ஆனந்தியை வியப்பாகப் பார்த்தான்.

# 24

தன் முதல் மனைவியின் மரணம் பற்றிய தகவலை ஏற்கனவே ஆனந்தி அறிந்து வைத்து இருக்கிறாள் என்ற விஷயம் தனஞ்செயனுக்கு வியப்பை அளித்தது.

"இது எப்படி உனக்குத் தெரியும்? காவ்யாவா சொன்னா? நீங்க இதை எப்ப பேசினீங்க?" என்று கேள்விக் கணைகளைத் தொடுக்க சிரித்தாள்.

"ஏன் உங்களுக்கு இவ்வளவு வியப்பு? இன்று பள்ளியில் இருந்து ஹோட்டலுக்கு வருவதற்கு முன்னால்தான் பேசினோம்? ஏன் எனக்கு தெரியக் கூடாத விஷயமா?" என்று கேட்க அவன் மறுப்பாகத் தலை அசைத்தான்.

"அப்படி நினைத்து இருந்தால் நானே சற்று முன்பு பேச்சை ஆரம்பித்து இருப்பேனா? கவி உன்னை ஏற்று கொள்வாளோ என்ற சின்ன உறுத்தல் நேற்று இரவு இருந்தது. ஆனால் நீங்க இருவரும் பேசிக் கொள்வதை பார்த்தால் போகிற போக்கில் என்னை ஓரம் கட்டி விட்டு நீங்க ரெண்டு பேரும் ஒண்ணாகி விடுவீங்க போல இருக்கே...?"

"அதில் உங்களுக்கு ஏன் பொறாமை?"

"ச்சே! பொறாமை இல்லை ஆனந்தி. சந்தோஷம் தான்..." என்றவன் குரலில் உற்சாகம் குமிழியிட, அவள் பேச்சை மாற்றினாள்.



"நீங்க சொல்லுங்க..."

"அவள் இறந்தது பிரசவத்தின் போது ஏற்பட்ட ரத்த இழப்பினால். குறிப்பிட்ட நாளுக்கு முன்பே பிரசவம் நடக்க காரணம், காவ்யா சொன்ன சாலை விபத்து. பொதுவா எங்க வீட்டில் இரு சக்கர வாகனத்தில் போவதில்லை. அன்று பிறந்த நாளுக்கு லைசென்ஸ் தேவைப்படாத எலக்ட்ரிக் ஸ்கூட்டர் வேண்டும், என்று சவிதா அடம் பிடித்ததால் வாங்கி தந்து அழைத்து வந்து இருக்கிறாள். அப்போது அந்த விபத்து நடந்தது" என்று சொன்னவன் நெடிய பெருமூச்சை விட்டான்.

இதில் யாரைக் குற்றம் சொல்ல? பனிரெண்டு வயதில் ஸ்கூட்டர் வேண்டும் என்று ஆசைப்பட்ட சவிதாவையா? தங்கைக்குப் பிறந்த நாள் பரிசு என்று வாங்கி கொடுத்த வினோதினியையா? உன் பிறந்த வீட்டுக்கு செலவு செய்வதை கணக்குக் கேட்க மாட்டேன் என்று பொருளாதாரச் சுதந்திரம் கொடுத்த என்னை நானேவா?

"இன்று வரை கேள்விகள் மட்டுமே தோன்றுமே தவிர விடை எதுவும் கிடைக்காது. அதனால் எனக்கு இன்றும் இரு சக்கர வாகனத்தில் போவதற்கும், போவதை பார்ப்பதற்குமே ஒரு நடுக்கம் தான்..." என்று வருத்தமான குரலில் சொன்னவன் சிலிர்த்தான்.

அவ்வளவு பயம் இருந்தாலும் என்று சற்று முன்னால் அவள் தன் வாகனத்தை ஓட்டிப் பார்க்க அனுமதித்த, 'மகளின் ஆசையை கெடுக்கக் கூடாது' என்ற அவன் உணர்வு பிடித்தது.

எனக்கு ஏதாவது ஆனாலும் உங்களுக்கு எதுவும் ஆகக் கூடாது என்ற அக்கறை மேலும் பிடித்தது.

''கடவுள் ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஒரு காரணம் வைத்து இருப்பார். அது எல்லோருக்கும் நன்மை பயப்பதாகவே இருக்கும். கடந்த காலத்தை நினைத்துக் கவலைபடுவதால் எதுவும் நடக்கப் போவதில்லை'' என்று சமாதானம் செய்தவளை பார்த்துத் தலை அசைத்தான்.

''இந்த பதினோரு ஆண்டுகளில் முதல் ஐந்து வருடங்கள் அவர்கள் வீட்டில் ஒன்றும் சொல்லவில்லை. இங்கேயும் அம்மா இருந்தாங்க. காவ்யாவை பார்த்துக் கொண்டார்கள். சவிதா ப்ளஸ் டூ முடித்து கல்லூரியில் சேர்ந்த நாளில் இருந்து, சவிதாவும், அவங்க அம்மாவும், அவளை கல்யாணம் பண்ணி கொண்டால் காவ்யாவுக்கு நல்லது என்று சொல்லி வந்து இருக்கிறார்கள்'' என்ற போதே அவளின் முகம் இருண்டதை அவனால் உணர முடிந்தது. அதுவரை இருந்த யோசனையான பாவனையும் இறுக்கமும் தளர்ந்து தனஞ்செயனுக்குப் புன்னகை மலர்ந்தது.

''எனக்கு சவிதாவை மணம் செய்து கொள்ள இஷ்டம் இல்லை. நான் வினோதினியை மணம் செய்து கொண்ட போது பார்த்த பதினோரு வயது சிறுமியாகத்தான் நான் இன்று வரை பார்க்கிறேன். இவளை விட்டு வேறொரு பெண்ணைத் திருமணம் செய்வது கடினம். அவங்க வீட்டில் ஏதாவது செய்து கலைத்து விடுவார்கள் என்பதாலேயே சில நாட்கள் முன்பு வரை அதை நான் நினைத்தும் பார்க்கவில்லை. இப்போது கடந்த சில வாரங்களில் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்த பின்பு, உன்னுடன் பழகிய பிறகு என் மனம் மாறி இருக்கிறது'' என்று சொல்லி அவளின் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தான் தனஞ்செயன்.



''காவ்யாவுக்கு இக்கட்டான சூழ்நிலையில் உதவி செய்ததால் வந்த நன்றி உணர்வு. கொஞ்ச நாள் என்னை பார்க்காமல் இருந்தால்...''

''பார்த்த உடனே பத்திகிச்சு என்று சொல்றதுக்கு நாம் ஒன்றும் டீன் ஏஜில் இல்லை ஆனந்தி. அப்படி பார்த்த உடனே பிடிக்க வேண்டும் என்றால் எனக்கு ஏன் சவிதாவை பிடிக்காமல் போனது? கொஞ்சம் யோசித்து பாரேன்...'' என்று அவன் வேகமாக திருப்பிச் சொல்ல ஆனந்திக்குள் பூ மழை பெய்தது.

''அவள் பணத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவம் அப்படி. நேற்று வரை ஒரு நாளுக்கு இருபது முறை அழைப்பவள், இன்று காலையில் நான் ஷேர்ஸ் விற்கப் போகிறேன் என்று சொல்லி வந்த பிறகு, இந்த பத்து மணி நேரத்தில் ஒரு முறை கூட அழைக்கவில்லை. அவளின் குணம் அவ்வளவு தான்.''

''அவங்களுக்கு வேறு வேலை ஏதாவது இருந்து இருக்கலாம்...''

''இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். எப்படி இருந்தாலும், அதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. அழகைப் பார்த்துத் திருமணம் செய்து கொள்ள எனக்கு இளவயதும் இல்லை. முதல் திருமணமும் இல்லை. அதற்காக நீ அழகில்லை என்ற அர்த்தமும் இல்லை'' என்று சொல்லிப் புன்னகையுடன் அவன் நிறுத்த, மறைக்க முயன்றும் அவள் கன்னங்களில் சிவப்பும் இதழ்களில் புன்னகையும் ஏறியது.

''உன் தொழில், உன் வயது, உன் அணுகுமுறை, உன் குடும்பத்தாருக்கு நீ கொடுக்கும் முக்கியத்துவம், ஒரு இக்கட்டான சூழ்நிலையில் என் பெண் எசகு பிசகான

முடிவை எடுக்க விடாமல் தடுத்துக் கரையேற்றியதில் வந்த நன்றி உணர்வு...''

''அதான் சொல்கிறேன் நான் காவ்யாவுக்கு உதவு செய்ததால்...''

''திரும்பத் திரும்ப அதையே சொல்லாதே ஆனந்தி. அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் அது மட்டுமே காரணம் இல்லை. பிடிச்ச முயலுக்கு மூன்று கால் என்று பிடிவாதம் பிடிக்காமல் உன் மனசை முதலில் கேளு. உனக்கு என்னைப் பிடித்து இருக்கா திருமணம் செய்து கொள்ளலாமா என்று அது சொல்லட்டும்'' என்று அழுத்தமாகச் சொல்ல அவள் அமைதியாக இருந்தாள்.

''காவ்யாவிற்கு ஒரு துணை வேண்டும் என்று மட்டும் நான் இந்த முடிவுக்கு வரவில்லை. அதற்கு ஒரு கவர்ன்ஸ் போதும் ஆனந்தி...'' என்று குரலை குழைத்து சொன்னவனின் வார்த்தைகள் இதயத்தை வருடியது.

மயங்கி வரும் மாலை பொழுதில் மங்கலான வெளிச்சத்தில், சுற்றிலும் வண்ண வண்ணப் பூஞ்செடிகளும் மரங்களின் பசுமையும் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்க, அவன் கனிவான வார்த்தைகள் மனதை உருக்கத்தான் செய்தது.

''அதையும் தாண்டி, என் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள, ஒரே அலை வரிசையில் இருக்கக் கூடிய ஒரு பெண் துணை இருந்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றி விட்டது. நேற்று உன்னிடம் சொன்னது உணர்ச்சி வசப்பட்டு எடுத்த முடிவு இல்லை. உன்னைப் பார்த்ததில் இருந்து கடந்த மூன்று வாரங்களாக பல வேறு சந்தர்ப்பங்களில், பல விதமாக யோசித்து



ஆராய்ந்து எடுத்த ஒரு முடிவு. இனி நீதான் பதில் சொல்ல வேண்டும்'' என்று முடித்தான்.

மேலும் சில கணங்கள் அமைதியில் கழிய, ''உனக்கு என்னைப் பிடிக்கலையா ஆனந்தி?'' என்று அவனே கேட்டான்.

''அப்படி இல்லை...''

''ஒரு வேளை, காதலன், கணவன், என்று யாருக்காகவேனும் காத்திருக்கிறாயா? நான் தொந்தரவு செய்கிறேனா?'' என்றவன் குரலில் இவள் மறுப்பின் காரணம் என்னவாக இருக்கும் என்பதை அறியும் ஆராய்ச்சி இருந்தது.

''அதெல்லாம் இல்லை. எனக்கு என் அம்மா என் தம்பி தங்கை இவர்களைத் தவிர வேறு யாருமே முக்கியம் கிடையாது...'' என்று சொன்னவளுக்கு அவனின் வெளிப்படையான அன்பை உணர முடிந்ததால், கண் கலங்கியது.

''ஏன் அழுகிறாய்? என்ன ப்ரச்சனை என்று சொன்னால் தானே தீர்வு சொல்லலாம்?'' என்றவன் குரல் மயிலிறகாய் மனதை வருடியது.

''நாளைக்கு உங்க உறவினர்கள் உங்களை தவறா பேசினால்...''

''ஆரம்ப காலத்தில் சில நாட்கள் சலசலப்பு இருக்கத்தான் செய்யும். அந்த கால கட்டத்தை தாண்டி விட்டால், அவரவருக்கு வேறு பிரச்சனைகள் வந்து விடும். நம்மை மறந்து விடுவார்கள்...''

''இல்லை உங்கள் தொழில் வட்டத்தில்... யாராவது வசதி உள்ளவர்களை...'' என்று மீண்டும் ஆரம்பிக்க அவன் எழுந்தான்.

''நான் யாரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள என்று உன்னிடம் ஆலோசனை கேட்கவில்லை. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று சொன்னேன். உனக்குச் சம்மதம் என்றால் சொல்லு. இல்லை என்றால் விட்டு விடு. ஒகே?'' என்றவன், மகளை தேடிச் செல்ல அவளின் பார்வை அவனை விடாமல் தொடர்ந்தது. எத்தனை முறை எத்தனை விதமாக விளக்கம் சொல்கிறான்? குதர்க்கமாகக் கேள்வி கேட்கிறாள் என்று தெரிந்தும் பொறுமையாக சொல்கிறான்.

யாரோ இவன் யாரோ இவன் என் பூக்களின் வேரோ இவன்?
என் பெண்மையை வென்றான் இவன் அன்பானவன்
உன் காதலில் கரைகின்றவன் உன் பார்வையில் உறைகின்றவன்
உன் பாதையில் நிழலாகவே வருகின்றவன்
என் கோடையில் மழையானவன் என் வாடையில் வெயிலானவன்
கண் ஜாடையில் என் தேவதையை அறிவான் இவன்...

சரி என்று சம்மதம் சொல்லி விட்டால் என்ன? சொல்லு. சொல்லு. சொல்லி விடு. உடனே உன் மனது மாறுவதற்குள் சொல்லி விடு... என்று இதயம் பிடித்து நெட்டித் தள்ள, கால்கள் பலம் இழந்து தள்ளாடுவது போல இருந்தது. பார்வை அவன் மேல் நிலைத்து நிற்க காதுகள், அப்பாவும் மகளும் பேசும் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு இருந்தது.

''என்னப்பா இங்கே நிற்கறீங்க?''

''மணியாச்சுடா, வீட்டுக்கு கிளம்பலாமா?''

''ரொம்ப சந்தோஷமா இருந்ததுப்பா. இப்படி தினமுமே வந்தால் நல்லா தான் இருக்கும். உங்களுக்கு



வேலை இருக்கும் இல்லையா? அட்லீஸ்ட் வாரம் ஒரு முறை இந்த மாதிரி சேர்ந்து சாப்பாடு, கொஞ்ச நேரம் வெளி இடத்தில் பேச்சு, என்று மூன்று பேரும் கட்டாயம் வரணும்பா'' என்று சொன்னவள் வண்டியில் இருந்து இறங்கிய காவ்யா இன்னும் பெஞ்சில் அமர்ந்து இருந்த ஆனந்தியை பார்த்து கை அசைத்தாள்.

''என்னம்மா இந்த இடத்தை விட்டு கிளம்ப மனசே வரலையா? அங்கேயே அசையாமல் உட்கார்ந்து இருக்கீங்க?'' என்று கேலியாக கேட்ட மகளை, வியப்புடன் திரும்பிப் பார்த்தான்.

''நீ.. நீ.. இப்போ என்ன சொன்னாய்?'' என்று கேட்க அவள் திருப்பி நிதானமாக அதே வார்த்தைகளைச் சொன்னதும் அவன் விழிகள் விரிந்தது.

''நீ ஆனந்தியை மிஸ் என்று அழைப்பதில்லையா?'' கேட்கும் போதே அவன் குரலில் உற்சாகத்தின் ஊற்று பொங்கி வர அவள் இருவரையும் மாறி மாறி பார்த்தாள்.

''என்னம்மா இது? அப்பா இப்படி கேட்கறாங்க? அரை மணி நேரமா நீங்க ரெண்டு பேரும் என்னதான் பேசினீங்க பின்னே..?''

''உங்க அப்பா உன்னை மாதிரி ஷார்ப் இல்லை கவி. கொஞ்சம் கம்மி தான்'' என்று நெற்றியை சுட்டிக் காட்டி சிரிப்போடு ஆனந்தி சொல்ல, ''ஏய் ரெண்டு பேரும் சேர்ந்து என்னையே கிண்டல் பண்றீங்களா? உங்களை...'' என்று மிரட்ட, இருவரும் கைகளை உயர்த்தி ஹை-பை கொடுத்து அணைத்துக் கொள்ள, அந்த இடமே சிரிப்பில் குலுங்கியது.

# 25

பூங்காவில் இருந்து கிளம்பும் வேளையில் இருட்டத் தொடங்கி இருக்க, ஆனந்தியைத் தனியாக இரு சக்கர வாகனத்தில் அனுப்ப, தயங்கினான் தனஞ்செயன்.

''மணியாச்சே ஆனந்தி...? நானும் உன் கூட பின்னால் வந்து உன் வீட்டில் விட்டு விட்டு வரவா?'' என்று கேட்க அவள் வந்த சிரிப்பை உதட்டை கடித்து அடக்கினாள்.

''எனக்கு வயசு முப்பதாகப் போகுது தெரியுமா? இந்த ஊரில் தான் பிறந்தேன், வளர்ந்தேன், நடந்தேன், படித்தேன். இங்கே இருக்கும் சந்து பொந்து எல்லாம் எனக்குத் தெரியும். நீங்க கிளம்புங்க. நான் வீட்டுக்கு போயிட்டு உங்களைக் கூப்பிடுகிறேன்'' என்று அழுத்த மாகச் சொல்ல அவன் மனம் இன்றி காரில் ஏறினான்.

''பைம்மா, பாட்டியை கேட்டதா சொல்லுங்க'' என்று காரில் ஏறியபடி சாதாரணமாக சொன்ன காவ்யாவின் வார்த்தைகளைக் கேட்ட இருவரும் ஒரு நிமிஷம் ஆடிப் போனார்கள்.

''தேங்க்ஸ் கவி. கட்டாயம் சொல்றேன் கவி'' என்று உணர்ச்சி பெருக்குடன் சொன்னவள் கன்னத்தில் முத்த மிட்டாள். ஆனந்தியின் கண்கள் கண்ணீரில் தத்தளித் ததை தனஞ்செயனால் உணர முடிந்தது.

''குட் நைட்மா'' என்று திருப்பி சொல்லி அவளின் கன்னத்தில் பதிலுக்கு முத்தமிட்டவளை ரசனையுடன்



பார்த்தான். காவ்யாவின் வார்த்தைகள் பெருமிதத் தையும் சந்தோஷத்தையும் அவனுக்குக் கொடுத்தது.

''பை ஆனந்தி. இனி இது மாதிரி அடிக்கடி போகணும்'' என்று மன நிறைவுடன் சொல்லி அவளை அனுப்பி வைத்தான்.

காரில் போகும் போது, ''புஜ்ஜூ, அப்பா ஆனந்தி மிஸ்ஸை கல்யாணம் பண்ணிக் கொள்வதில் உனக்கு ஒன்றும் பிரச்சனை இல்லையே?'' என்று கேட்க, அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

''நீங்க எந்த நேரத்திலும் என்னுடைய நல்லதை பார்ப்பீங்க என்று நம்பிக்கை இருக்கு. அந்த நம்பிக்கை அம்மா மேலேயும் வைக்கலாம் என்று எனக்குத் தோன்றி ரொம்ப நாள் ஆச்சுப்பா. உங்களுக்குத் தெரியாது'' என்று சொன்னவளின் கண்கள் லேசாக கலங்க அவன் ஓரக் கண்ணால் பார்த்தான்.

''என்ன குட்டிம்மா எமோஷனலா ஆற மாதிரி இருக்கு?'' என்று கேலியாகச் சீண்ட, அவளிடம் இருந்து பதில் இல்லை. இப்போது வெளிப்படையாகவே கர்ச்சீப் எடுத்து கண்களை துடைத்து கொண்டாள்.

''வீட்டுக்கு போனதும் ஒரு பத்து நிமிஷம் நான் உங் களோடு தனியா பேசணும்பா...'' என்றவளின் குரலில் உறுதி இருந்தது.

''பத்து நிமிஷம் போதுமா புஜ்ஜூ?'' என்றவனின் கேள்வி அவளை இயல்பு நிலைக்குக் கொண்டு வர வில்லை.

வீட்டுக்கு வந்து சில நிமிடங்களில் அவன் முகம் கழுவி உடை மாற்றிக் கொண்டு மகளைப் பார்க்க வெளியே

வர கதவை திறக்கும் போதே அவள் வாசலில் நின்று இருந்தாள்.

''ரொம்ப நேரமா நிக்கிறியா? உள்ளே வந்து உட்கார வேண்டியது தானேடா?'' என்றபடி நகர்ந்து அவளுக்கு வழி விட்டான்.

''சொல்லுடாம்மா'' என்று சோபாவில் அருகே உட் கார்ந்து அவளின் தலையை வருட அவள் சட்டென்று ''என்னை மன்னிச்சுடுங்கப்பா நான் ஒரு தப்பு பண்ணிட்டேன்'' என்று கண்ணீருடன் காலில் விழ அவன் புன்னகையோடு அவளைத் தூக்கி நிறுத்தினான்.

''என்ன காவ்யா இது? பெரிய வார்த்தை எல்லாம் பேசு கிறாய்? நான் உன் அப்பா. என்ன விஷயம் சொல்லு. முதலில் அழுகையை நிறுத்து'' என்று முகத்தை துடைத்து விட அவள் கண்ணீர் இன்னும் நிற்காமல் வழிந்தது.

''என்னவோ சொல்லணும்னு வந்து இப்படி அழுது கொண்டு இருந்தால் அப்பாவுக்கு பயமா இருக்கு. என்ன விஷயம் சொல்லும்மா'' என்று மீண்டும் முதுகை வருடி மென்மையான குரலில் கேட்க, பொங்கி வழிந்த கண் ணீரை துடைத்தபடி பேச ஆரம்பித்தாள்.

''அப்பா இப்ப நான் சொல்றது கொஞ்சம் பெரிய விஷயம். உங்களுக்கு சொல்லாமல் தப்பு பண்ணிட் டேன்பா. என்னை தயவு பண்ணி மன்னித்து விடுங்கப்பா ப்ளீஸ்...'' என்று கைகளை குவிக்க அவன் அவளை அணைத்து கொண்டான்.

அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதை ஊகிக்க முடிந்தது. தவறு செய்வதை விட அதை ஒத்து கொள் வதற்கு கூடுதல் தைரியம் வேண்டும். மகளை எண்ணிப் பெருமையாகவே இருந்தது.



''நீ இவ்வளவு எமோஷனலா ஆகும் அளவுக்கு என்ன நடந்தது என்று தெரியலை. ஆனால் நீ விஷயம் சொல்றதுக்கு முன்னாடியே நான் உன்னை மன்னித்து விட்டேன். போதுமா? நீ என்னிடம் என்ன சொல்ல நினைக்கிறாயோ அதைத் தைரியமா சொல்லு.''

சக்தி என்ற பெயரில் விக்ரம் செய்த தவறுகளையும் தன் பிரச்சனை, அதை தீர்த்து வைத்த ஆனந்தியின் சாமர்த்தியம், என அனைத்து விபரங்களையும் வருத்தம் நிரம்பிய குரலில் கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்தபடி தடுமாற்றத்துடன் சொல்லி முடித்தாள்.

''அன்னிக்கு மிஸ் கிட்டே உங்களிடம் சொல்ல வேண் டாம் என்று சொன்னதுக்கு சாரிப்பா. மதிப்பில நான் கீழே இறங்கி போறது என்னவோ மாதிரி இருந்தது....''

''இப்ப அந்த பீலிங் எங்கே போச்சு கண்ணு?'' என்றவன் குரலில் பெருமிதமே இருந்தது.

''நீங்க, நினைத்து இருந்தால் நான் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன் என்று என்னிடம் செய்தியாக சொல்லி இருக்கலாம். ஆனால் நீங்க? நேற்றில் இருந்து இன்று வரை, பதினைந்து முறையாவது என்னிடம் உனக்கு சம்மதமா? சந்தோஷமா? என்று எத்தனை விதமா கேட்டு டீங்க தெரியுமாப்பா?'' என்று பெருமையா சொன்ன வளின் கண்களில் நீர் இருந்தாலும் இதழ்களில் புன் னகை மிளிர்ந்தது.

''பத்து வயசான நீங்க பெற்ற பெண்ணிடம் ஈகோ பார்க்காமல், என் சம்மதம் கிடைத்தால் தான் கல்யாணம் என்று திரும்பித் திரும்பி கேட்கும் போது என் மனசாட்சி என்னைக் கொல்லுதுப்பா...''

''ஹேய் புஜ்ஜூ... என்ன இது? இப்படி எல்லாம் பேச வேண்டாம்...''

''நீங்க என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்று கொள்கிறேன் அப்பா. ஐ லவ் யூப்பா'' என்று சொல்லி மீண்டும் காலில் விழ அவள் விழுவதற்கு முன்பே தூக்கி அணைத்துக் கொண்டான்.

''என்னடா குட்டி. இவ்வளவு பெரிய பிரச்சனையை தைரியமா ரெண்டு பேரும் சமாளிச்சு இருக்கீங்க என்று நானே உங்களைப் பார்த்துப் பெருமையா நினைத்துக் கொண்டு இருக்கிறேன். நீ ஏன் செல்லம். மன்னிப்பு கேட்கிறாய்?''

''நீ பேஸ் புக் போனதிலோ, செட் பண்ணியதிலோ போட்டோ அப்லோட் பண்ணியதிலோ, தவறு இல்லை. அவன் தவறான நோக்கத்தில் என்னவோ பண்ணிட்டான். ஆனால் இவனை மாதிரி எத்தனையோ பேர் இருப் பாங்க. நாம் தான் கவனமா இருக்கணும் கண்ணு. இனி மேல் பார்த்து நடந்துக்கோ'' என்று சொல்ல அவள் தலை அசைத்தாள்.

''நிச்சயமாப்பா! நல்ல பெண்ணுக்கு ஒரு அனுபவம் போதும்பா.''

''தேங்க்ஸ் செல்லம். சீக்கிரமே அம்மாவும் வீட்டுக்கு வந்துட்டா நீ தனிமையை உணர வேண்டிய தேவையே இருக்காது கண்ணு...''

''இப்ப சொல்லுங்கப்பா. அம்மாவை நீங்க கல்யாணம் பண்ணிக்க நான் தடையா இருப்பேன் என்று நீங்க இன்னும் நினைக்கறீங்களா? உங்களுக்கு இந்த மாதிரி எண்ணம் வருவதற்கு முன்னாடியே. இவங்களை மாதிரி ஒரு அம்மா நம் வீட்டில் இருந்தால் எவ்வளவு நல்லா



இருக்கும் என்று நினைத்தேன்பா'' என்று சொல்ல அவன் கண்களை விரித்தான்.

உன் முகம் பார்த்தல் தோணுதடி,

வானத்து நிலவு சின்னதடீ

மேகத்தில மறைந்தே பார்க்குதடி,

உன்னிடம் வெளிச்சம் கேட்குதடி

இந்த மண்ணில் இது போல் யாருமிங்கே

என்றும் வாழவில்லை என்று தோன்றுதடி!

ஆனந்த யாழை மீட்டுகிறாய்...

தனஞ்செயனின் ஒவ்வொரு அணுவிலும் பெருமையும் சந்தோஷமும் பொங்கி வழிந்தது. இவள் என் மகள்!

''நிஜமாவா இது எப்போ நடந்தது...?''

''அன்று முதன் முதலில் மிஸ் வீட்டுக்கு போகும் போது, வழியிலேயே ஒரு புது ட்ரெஸ் எடுக்கணும் என்று கடைக்கு போனோம் இல்லையா? அப்ப உனக்கு என்ன கலர் பிடிக்கும் என்று கேட்டு ஒவ்வொன்றா பார்த்துப் பார்த்து செய்தாங்கப்பா. இது நல்லது கட்டாயம் செய் என்று அதட்டவில்லை. அந்த விஷயத்தினால் நமக்கு என்ன நல்லது என்று விஷயத்தை விளக்கி செய்ய சொன்னாங்க.''

''அந்த ட்ரெஸ் உனக்கு அழகா இருந்தது. உன் செலக்ஷனா? அம்மா செலக்ஷனா?''

''நான் சொல்லி அம்மா செலக்ட் பண்ணினாங்க'' என்று அவள் சொல்ல அவன் சிரித்தான்.

''சூப்பரா பேசுறடா கண்ணு. சோ நான் அம்மாவை பார்ப்பதற்கு முன்பே உனக்கு அம்மாவை பிடிச்சு இருக்கு

என்று சொல்கிறாய்'' என்று கேலியாக சிரித்தபடி அவளை பூஜை அறைக்கு அழைத்து சென்றான்.

காவ்யாவை விளக்கேற்ற சொல்லி புன்னகையுடன், ''இந்த வீட்டுல கல்யாணம் பண்ணிக்கலாம் என்று நான் முடிவு பண்ணுவதற்கு முன்னாடியே என் பொண்ணு எனக்குப் பொண்ணு பார்த்து இருக்கா சாமி. இந்த நியாயத்தை நீயே கேளு'' என்று சிரிக்க கூச்சத்துடன் சிரித்தாலும் காவ்யாவின் முகமும் மனமும் நிறைந்து இருந்தது.

## 26

இரவு ஏழு மணி அளவில் வண்டியை வீட்டின் பக்கவாட்டில் நிறுத்தி பூட்டி விட்டு உள்ளே நுழைந்த ஆனந்திக்கு குறுகுறுப்பாக இருந்தது. இதுவரை அவள் வீட்டுக்கு கால தாமதமாக வந்ததே இல்லை என்று சொல்ல முடியாது.

பள்ளியில் ஸ்போர்ட்ஸ் டே, ஆண்டு விழா நடைபெறும் சமயங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தவும், பத்திரிகை அடிப்பது, விழா ஏற்பாடுகளில் ஒத்தாசை செய்வது, என்று தாமதமாக வந்து இருக்கிறாள். ஆனால் இன்றைய தாமதத்திற்கான காரணம் அலுவலகப் பணி அல்ல என்ற குறுகுறுப்பு இருந்தாலும் நெஞ்சில் நிம்மதியும் சந்தோஷமும் நிலவியது.

''ஆனந்தி, என்ன இன்று இவ்வளவு நேரம்?'' என்று அம்மா கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது.



''காவ்யாவை வெளியே அழைத்து சென்றேன். அவளிடம் கொஞ்சம் பேச வேண்டி இருந்தது'' என்று தயக்கத்துடன் மகள் சொன்ன வார்த்தைகளில் விஷயம் புரிந்து விட, அவருக்கு பரவசம் தோன்றியது. ஒரேயடியாக 'உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாது' என்று தூக்கிப் போட்டு விடாமல் அவன் சொன்னதை மகள் யோசிக்கிறாள் என்பதன் அடையாளம் அல்லவா?

''என்ன வீடு இவ்வளவு அமைதியா இருக்கு? வசந்தி இல்லையா?''

''உள்ளே படுத்து இருக்கா. அவர் வந்து பேசிட்டு போனதில் இருந்து அமைதியா இருக்கா. என்ன விஷயம் என்று தெரியலை. கொஞ்சம் கவலையா இருக்கு.''

''பயப்படாதீங்கம்மா. பண விவகாரமாதான் இருக்கும். தனா பணம் தருகிறேன் என்று சொல்லிவிட்டார். அதை சொன்னால் சரியாகி விடுவாள்'' என்று சொல்லி விட்டு தங்கையை தேடி அவள் அறைக்குள் செல்ல, ஆனந்தியின் அந்த இயல்பான 'தனா' என்ற அழைப்பு ஏற்படுத்திய தாக்கத்தில் இருந்து வெளி வர முடியாமல் தள்ளாடி கொண்டு இருந்தார் சாரதா. அவர் காதில் விழுந்த வார்த்தையை அவராலேயே நம்ப முடியவில்லை. படுக்கையில் ஒருக்களித்து சுருண்டு படுத்து இருந்த தங்கையைப் பார்க்க அதிர்ச்சியாக இருந்தது.

''படுப்பது மனதின் உடலின் இறுக்கத்தை தளர்த்த. அப்ப கூட நேராக படு. கையை இங்கே வை. காலை அங்கே வை, என்று சட்டம் பேசாதீங்க'' என்று அம்மாவை அதட்டுபவள் இப்படி கூனிக் குறுகி படுத்து இருக்கிறாளே?

அருகில் வந்து அவளின் தோளை தொட்டு, ''வசந்தி'' என்று அழைத்தாள். அந்த மெல்லிய அழைப்பில் தூக்கி

வாரிப் போட எழுந்தவள், ''நீயா?'' என்று ஆசுவாசமாக கேட்டாள்.

''நம்ம வீட்டு பெட்ரூமுக்குள் நம்ம வீட்டு ஆளைத் தவிர வேறு யார் வருவாங்க? ஆமா நீ ஏன் இந்த நேரத்தில் இப்படி சுருட்டி கிட்டு படுத்து இருக்க? உடம்பு எதுவும் சரி இல்லையா?'' என்று விசாரிக்க அவளின் கண்களில் கண்ணீர் பெருகியது.

அவளின் கண்ணீரை கண்டதும் திகைத்து போனாள். ஜெய்யை பிடித்து இருக்கு. இவனை தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று பேசும் போது கூட அவள் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு இருந்தாலே தவிர கண்ணீர் வடிக்கவில்லை. அவள் விரும்பிய மணமக னுடனே திருமணம் என்ற நிலையில் இவ்வளவு கண் ணீருக்கு என்ன வேலை?

''வசந்தி என்ன ஆச்சு?''

''நீ சின்ன பொண்ணு ஆனந்தி, அளவுக்கு உனக்கு உலகம் புரியலை என்று அம்மா படிச்சு படிச்சு சொல்லும் போது எல்லாம் அவங்களை நான் கரிச்சு கொட்டி இருக்கிறேன். 'உங்களுக்கு அவள் மட்டும் தான் பிள்ளை எங்களை எல்லாம் தவிட்டுக்கா வாங்கினீங்க' என்று சண்டைப் போட்டு இருக்கிறேன். ஆனால் இன்று அது உண்மை என்று புரிந்து கொண்டேன். என்னை மன்னித்து விடு அக்கா...''

''என்ன ஆச்சு உனக்கு? பைத்தியம் மாதிரி கண்டதை உளறுகிறாய்? ஜெய் வந்தார் என்று அம்மா சொன் னாங்க. ஏதாவது புதுசா வேண்டும் என்று கேட்டாரா? என்ன விஷயம் என்று சொன்னால் சுட்டாயம் செய்து விடலாம். அதுக்காக நீ மனசைப் போட்டுக் குழப்பிக்காதே.''



''இல்லை ஆனந்தி, புதுசா எதுவும் கேட்கலை. ஏற் கனவே பேசிய விஷயம் தான். ஆனால் அதில் இருக்கும் உள் குத்து புரியாமல் நான் உன்னை தப்பா நினைத்து, கண்டபடி பேசி விட்டேன். சாரி ஆனந்தி.''

''சாரி இருக்கட்டும் இன்னும் என்ன விஷயம் என்று நீ சொல்லு.''

''இந்த வீட்டை ஒருத்தர் 30 லட்சத்துக்கு வாங்க போகிறார் என்று ஆள் கூட்டிட்டு வந்தாரே? அது யார் தெரியுமா?''

''யார்?''

''சதாசிவம் பெரியப்பாவோட சம்பந்தி வீட்டுல அண்ணனுக்கு வாங்கி தருகிறார்கள்.''

''ஓ! சரி அதனால் என்ன?''

''உனக்குப் புரியலையா? அவங்களுக்கு இந்த வீட்டின் மதிப்பு நல்லா தெரியும். நமக்கு பணத் தேவை என்று உணர்ந்து சரியான நேரத்தில், மூன்றாவது நபர் மூலமா பேசி அடி மாட்டு விலைக்கு பேச முயன்று இருக்கிறார். நடுவில் சதாசிவம் பெரியப்பா வந்து எனக்கும் பங்கு இருக்கு என்று சொன்னதுக்கு, இன்னும் விலையை குறைக்கலாமா என்பதுதான் காரணம்...''

''இதை ஏன் பெரிசு பண்ணிக்கிட்டு இருக்கிற? எப்படியும் அவங்க வாங்கி கொள்ளப் போவதில்லை தானே? பிறகு ஏன் அதைப் பற்றி பேசணும்? விடு. இந்த வீட்டை தனஞ்செயன் வாங்கி கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்.''

''எப்படி விடச் சொல்கிறாய்? விற்பதும் விற்காமல் போவதும் முழுக்க முழுக்க வேறு விஷயம். கல்யாணம்

ரொம்ப அருகில் இருப்பதால் நாமே அவங்க கையைக் காலைப் பிடித்து விற்று விடுவோமோ என்ற நப்பாசை. மனிதர்களுக்கு பணத்தாசை எப்படிப் பிடித்து ஆட்டுது பார்'' என்ற கோபமாகப் பேசியவளை அமைதியாகப் பார்த்தாள் ஆனந்தி.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? நீயும் பணத்தை வைத்து மனிதர்களை எடை போடும் ஆள் தானே என்று தானே பார்க்கிறாய்? இத்தனை நாள் எப்படியோ? இன்று நான் புது மனுஷி இன்னிக்கு நான் அது மாதிரி நினைக்கவில்லை. நான் விரும்பிய மாப்பிள்ளையும் அது மாதிரி இல்லை. அதனால் கல்யாணம் இப்போதைக்கு தள்ளி போனாலும்'' என்று பேசியவளின் வாயை அழுத்தமாக மூடினாள்.

''இந்த மாதிரி அச்சானியமா பேசாதே. ஏற்கனவே கார்த்திக் கல்யாணம் திடீர் என்று நடந்து விட்டது. அதன் பிறகும் பெண்டாட்டியை கூட்டி வந்து இங்கே வாழலை. அம்மா இந்த வீட்டுல கல்யாண ராசியே இல்லை என்று புலம்பிட்டு இருக்காங்க. இதுல நீ வேற எதையாவது ஆரம்பிக்காதே. இந்தக் கல்யாணம் நடக்கும். அதை நான் பார்த்துக் கொள்கிறேன். எப்பவும் சின்ன பெண்ணை போல கவலை இல்லாமல் டிவி பார்த்துக் கனவு கண்டு கொண்டு இருந்தால் போதும் புரிஞ்சுதா?'' என்று அதட்டினாள் ஆனந்தி.

''என் கல்யாணம் நடக்கணும் என்றால் அதுக்கு முன்னாடி உன் கல்யாணம் நடக்கணும். நீயும் உன் மாப்பிள்ளையும் என்னை தாரை வார்த்து கொடுத்தால் போதும். புரிஞ்சுதா?''

''என்ன உளறல் இது? எதுக்கு உன் கல்யாணத்தையும் என் கல்யாணத்தையும் கோர்க்கிற?''



''அது கூட தெரியாதா? தம்பி பசங்க தட்டுத் தடுமாறி முன்னுக்கு வருது. அவங்களுக்கு ஒரு நல்ல காரியம் நடக்கும் போது உதவி பண்ணாவிட்டாலும் பரவாயில்லை. உபத்திரவம் பண்ணாமல் இருக்கணும் என்று தெரியாத, இவ்வளவு தகிடுதத்தம் பண்ணிய அந்த சதாசிவம் பெரியப்பா என் கல்யாண மேடையில் ஏறக் கூடாது. அதுக்கு தான்...''

''அதென்ன புதுக் குழப்பம்?''

''புதுக் குழப்பம் இல்லை. பழைய குழப்பத்தைச் சரி செய்யும் விதம். இந்த வீடு மேலே கண்ணை வச்சுட்டு எப்படி எல்லாம் எட்டப்பன் வேலை செய்து இந்த வீட்டை பறிக்க நினைத்தார் அந்த சதாசிவம் என்று நினைத்தாலே பற்றிக் கொண்டு வருது. அந்த மாதிரி கள்ளத்தனம் உள்ள மனிதன் என் கல்யாணத்துக்கு வரவே வேண்டாம் என்று சொல்லத் தான் எனக்கு ஆசை.''

''பெரியவங்களை இந்த மாதிரி மரியாதை இல்லாமல் பேச உனக்கு யார் சொல்லிக் கொடுத்தா?'' என்று அதட்டியவளின் குரல் அவள் புத்தியில் ஏறவே இல்லை.

''பெரியவங்க பெரியவங்க மாதிரி நடந்து கொண்டால் நான் ஏன் மரியாதைக் குறைச்சலாப் பேசப் போகிறேன்? எப்படியும் அவங்களைக் கல்யாணத்திற்கு வர வேண்டாம் என்று சொன்னால், அம்மாவும் ஒத்துக் கொள்ள மாட்டாங்க. நீ அதுக்கு மேலே அன்னை தெரசாவின் நேரடி வாரிசா கொடி பிடிப்பாயே? அதனால் நான் அதை சொல்லவில்லை. ஆனால் அவர் எனக்கு பெற்றோர் ஸ்தானத்தில் நின்று எந்த சடங்கும் செய்யக் கூடாது...''

''இப்படி சொன்னால் எப்படி? மற்ற எல்லா சடங்குகளையும் தள்ளினாலும் தாரை வார்த்துக் கொடுக்க அவங்க தயவு வேண்டுமே?'' என்று கேட்டாள் ஆனந்தி.

''நம்ம அம்மாவே நின்று அந்த சடங்குகளை செய்தால் கூட எனக்கு சந்தோஷம் தான். ஆனால் அம்மாவே அதற்கு ஒத்துக் கொள்ள மாட்டாங்க என்பது போக, ஜெய் வீட்டில் இதைக் காரணம் காட்டி புதுசா பிரச்சனை கிளப்பக் கூடாது. அதனால் நீ எனக்கு பெற்றோர் நிலையில் நின்று காரியங்கள் செய்ய வேண்டும். கல்யாணத்திற்கு சீக்கிரம் ஏற்பாடு பண்ணு'' என்று சொல்லி விட்டு வசந்தி வெளியே செல்லத் திகைப்புடன் அதே இடத்தில் அமர்ந்து இருந்தாள் ஆனந்தி.

## 27



''என் கல்யாணத்திற்கு குறித்த நாள் இன்னும் இரண்டு வாரங்களில் காத்திருக்கிறது. என் திருமண சடங்குகளை நீதான் பெற்றோர் நிலையில் இருந்து செய்ய வேண்டும்'' என்று போகிற போக்கில் ஒரு பெரிய வெடி குண்டினை சர்வ சாதாரணமாகத் தூக்கிப் போட்டாள் வசந்தி.

இதுவரை தமக்கையின் திருமணம் பற்றி தான் நினைக்கவில்லை என்றாலும், வீடு தேடி வந்து தனுசெயன் மாதிரி ஒரு மனிதன் 'உன்னை மணம் செய்து கொள்கிறேன்' என்று சொன்ன பிறகும் பதில் சொல்லாமல் இழுத்தடிக்கும் ஆனந்தியை வழிக்குக் கொண்டு வர, அதிரடி பாணி தான் வேலைக்கு ஆகும் என்ற எண்ணம் அவளுக்கு!

இப்படி ஒரு குண்டு போடா விட்டாலும் அவள் திருமணத்திற்கு சம்மதிப்பது குதிரைக் கொம்பு என்ற



எண்ணத்தில் செயல்பட்ட வசந்தி ''சாப்பிடலாமா?'' என்று வழக்கமான உற்சாகத்துடன் வர, ''என்ன நீ மட்டும் வருகிறாய்? ஆனந்தி எங்கே?'' என்று விசாரித்தார் சாரதா.

''அவளுக்கு ஒரு ஷாக் கொடுத்து இருக்கேன். கொஞ்ச நேரம் கழித்து வருவாள். நீங்க எனக்கு தோசை ஊத்துங்க'' என்று அவரை அடுக்களைக்குள் தள்ளி சென்றாள்.

''என்னடி பண்ணிட்டு வந்த? எனக்கு வயிற்றைக் கலக்குது.''

''நல்ல விஷயம் தான் பண்ணி இருக்கேன். நான் போட்ட போட்டில உங்க பொண்ணு ஒரு வாரத்தில கல்யாணம் பண்ணிட்டு மாலையும் கழுத்துமா நிற்கப் போகிறாள் பாருங்க.''

''கல்யாணம் பண்ணிக் கொள்வது நல்ல விஷயம் தான். ஆனால் அவ்வளவு அவசரமா ஏன் பண்ணனும்?''

''காவ்யாவுக்கு என்ன வயசு தெரியுமா?'' என்று சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் கேட்க அவர் விழித்தார்.

''பதினோரு வயசு இருக்கும்...''

''அதுக்கு தான் அவசரம். உங்களுக்கு அதெல்லாம் புரியாது. இரண்டு குழந்தைகளுக்கு நடுவில் இடைவெளி வேண்டும். ஆனால் இதுவே ரொம்ப ஓவர். இன்னும் இடைவெளி விட்டால் என்ன ஆவது? அதுக்கு தான் இந்த ஸ்டன்ட்'' என்று கண்ணடித்தவளை இப்போது புதிய மரியாதையுடன் பார்த்தார் சாரதா.

''வசந்தி...'' என்று அழைத்தவரின் குரல் தழதழத்தது.

''அது மட்டுமில்லை, பொண்ணுங்களுக்கு 30 வயசுக்கு மேலே பிரசவம் சிரமமா இருக்கும். இவள்

தியாகச் செம்மல் மாதிரி குழந்தை வேண்டாம் என்று சொல்லலாம். நமக்கென்று ஒரு பிள்ளை இருப்பது சுகம் தானே? அவளுக்கு மட்டும் ஏன் இல்லாமல் போகணும்?

''அது சரிதான். ஆனால் அப்படி என்ன சொல்லி அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி இருக்கிறாய்?''

''தம்பி பசங்க கல்யாணம், ஆதரவு இல்லாமல் நிக்கிறாங்க என்று கூடப் பார்க்காமல் சொத்தை சுருட்டிக் கொள்ள நினைத்த, உங்க பெரிய மச்சினர் சதாசிவம் திருவிளையாடல் பற்றிச் சொன்னேன். அந்த மனுஷன் என் கல்யாணத்தில் எந்த சடங்குகளிலும் கலந்து கொள்ளக் கூடாது என்று சொன்னேன்.''

''அவர் ஏன் வந்து உன் கல்யாணச் சடங்குகளைச் செய்யணும்?''

''பின்னே நீங்க மேடைக்கு வர மாட்டீங்களே...?''

''அதுக்கு தான் கார்த்தியும், லாவண்யாவும் இருக்காங்களே? அண்ணனும் அண்ணியும் அம்மா அப்பா ஸ்தானம் தானே?'' என்று அவர் கேட்க அவள் முகத்தில் டன் டன்னாய் அசடு வழிந்தது.

''அப்படி என்றால் அக்கா செய்ய முடியாதா?''

''அக்கா செய்யக் கூடாது என்று இல்லை. கார்த்திக் இருக்கும் போது அவள் செய்தால், அது அவனுக்கு கௌரவக் குறைச்சலா இருக்கும்'' என்று சாரதா சொல்ல அவளின் முகம் காற்றுப் போன பலூனாகிப் போனது.

''சோ, சதாசிவம் பெரியப்பா ஒரு டம்மி பீஸ் தானா? ஆனால் கார்த்திக்குக்கு மட்டும் அவன் கல்யாணத்திற்கு



என்று ஒன்றுமே செய்ய விட்டாலும் மரியாதை கொடுக்கணுமா?'' என்று சலித்து கொள்ள அவர் சிரித்தார்.

''நீ ரொம்ப சலித்து கொள்ள வேண்டாம் வசந்தி. நீ சொன்னதும் ஒரு வழியில் கரெக்ட் தான். இப்படி நாலா பக்கத்திலும் சொன்னாலும் தான் அவளுக்கும் ஒரு நல்ல வழி பிறக்கும்'' என்று சொல்ல வெளியே ஆனந்தி வரும் அரவம் கேட்க பேச்சை மாற்றினார்கள்.

''அம்மா, இன்று காவ்யா உங்களை எல்லாம் விசாரித்தாள். நீங்க செய்த புட்டையும் களியையும் ரசித்து பாராட்டிச் சொன்னாள்'' என்று சொல்லியபடி அவளும் வந்து உணவில் கலந்து கொண்டாள்.

''காவ்யா அவ்வளவு பெரிய பெண்ணாக விசாரிக்கிறாளா? அது சரி உன் திருமணம் பற்றி அவங்க அப்பா கேட்டதற்கு நீ என்ன பதில் சொல்லலாம் என்று யோசித்தாயா ஆனந்தி?'' என்று கேட்க அவள் சில வினாடிகள் அமைதிக்கு பின், ''நாளைக்கு சொல்றேன்மா'' என்று சொல்ல சாரதாவும் வசந்தியும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை செய்து கொண்டனர்.

ஆனந்தி சொன்ன 'நாளைக்குச் சொல்கிறேன்' என்ற பதிலுக்கான விளக்கம் மறுநாள் காலை ஏழு மணிக்கு வாசலில் வந்து நின்றது.

''இந்நேரத்தில் யாரு?'' என்ற கேள்வியுடன் வாசலை திறந்த சாரதா திகைத்து போனார்.

அவர்கள் வாங்கி தந்த பாவாடை தாவணியை அணிந்து பெரிய மனுஷியாக, பழம் பூ புடவை அடங்கிய தாம்பாள தட்டுடன் நின்றது காவ்யா. முகம் நிறைய புன்னகையுடன் அவளின் பின்னால் இருந்தது தனஞ்செயன்.

''வாங்க வாங்க'' என்று பரபரப்புடன் வரவேற்ற சாரதாவிற்கு அவர்களின் கையில் இருந்த தட்டு கல்யாண செய்தி சொல்ல அவரின் பரபரப்பு மேலும் அதிகரித்தது.

''நீ பாட்டியை விசாரித்தாய் என்று நேற்று இரவு ஆனந்தி சொன்னாள். அது பெரிய மனுஷி தோரணை என்று நினைத்தால், இப்ப அதை விட பெரிய மனுஷியா வந்து இருக்கீங்க? வாங்க மாமா'' என்று வசந்தி வரவேற்க தனஞ்செயன் முகத்தில் புன்னகை வந்தது.

''மாமாவா? இது நல்லா இருக்கே?''

''நல்லா இருப்பதனால் தான் கூப்பிட்டேன். நான் சொல்றது எல்லாமே நல்லா தான் இருக்கும். என்ன விஷயம்? திடு திப் என்று கிளம்பி வந்துட்டீங்க? வரட்டுமா? உங்களுக்கு வசதிப் படுமா என்று பொண்ணு வீட்ல கேட்க மாட்டீங்களா? இப்படி தட்டுடன் வந்து நின்றால் எப்படி?'' என்று வசந்தி தனஞ்செயனை நிற்க வைத்துக் கேள்வி கேட்க அவன் புன்னகையுடன் மகளைப் பார்க்க, அப்பாவின் சங்கடத்தை உணர்ந்த காவ்யா விளக்கம் சொல்ல ஆரம்பித்தாள்.

''முதன் முதலில் பொண்ணு பார்க்கப் போனால் நீங்க சொல்றது எல்லாம் சரி ஆன்ட்டி. ஆனால் நாங்க எங்க அம்மாவை எங்க வீட்டுக்கு கூட்டிப் போக என்ன நாள் கிழமை வேண்டும்? தேவை இல்லை என்று முடிவு பண்ணி நானும் அப்பாவும் உடனே கிளம்பி வந்துட்டோம் இல்லைப்பா?'' என்று காவ்யா கேட்க அவன் தலை அசைத்த அதே நேரம் வசந்தி வெடித்து சிரிக்க சாரதா அவளின் கன்னத்தை வழித்தார்.

''காவ்யா, என்ன இந்த நேரத்தில? சொல்லவே இல்லை?'' என்று சந்தோஷத்துடன் வந்த ஆனந்தியை ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.



''உங்களை தனியா இங்கே விட்டுட்டு அங்கே இருக்க போர் அடிக்குது. சீக்கிரமே உங்களை அங்கேயே கூட்டிட்டு போகலாம் என்று நானும் அப்பாவும் கிளம்பி வந்து விட்டோம்'' என்று சிரிப்புடன் சொல்ல அவள் தனஞ்செயனைப் பார்த்தாள்.

''எனக்கு எதுவும் தெரியாது. எல்லாம் மேடம் முடிவு தான்'' என்று தோளை குலுக்கினாலும் அதில் அவனுக்கும் சந்தோஷம் சம்மதம் என்ற பாவனையும் மிளிர்ந்தது.

''அம்மா, என் மனைவி இறந்து போய் பதினோரு வருடங்கள் ஆகிறது. இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள்ளணும் என்ற நினைவே வந்ததில்லை. இப்ப பொண்ணு பெரியவளாகி விட்டாள். அவளுக்கும் எனக்கும் இந்த நேரத்தில் ஒரு துணை இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். 'சுபஸ்ய சீக்கிரம்' என்று உடனே வந்து விட்டேன். நீங்க தான் முடிவு சொல்லணும்.''

''இதுல நான் சொல்ல எதுவும் இல்லை மாப்பிள்ளை. ஆனந்தி தான் முடிவு சொல்லணும்'' என்று சொல்லும் போதே மாப்பிள்ளை என்ற வார்த்தையின் மூலம் தன் சம்மதத்தை வெளிப்படுத்தினார் சாரதா.

''உங்க பெண்ணிடம் ஏற்கனவே கேட்டு விட்டேன். உங்களுக்கும் உங்க வீட்டில் உள்ள மற்றவங்களுக்கும் பிடிச்சு இருந்தால்...''

''ரொம்ப இழுக்காதீங்க மாமா. எங்களுக்குப் பிடிச்சு இருப்பதா முக்கியம்? நாங்க வேண்டாம் என்று சொல்லி விட்டால,'' என்று இழுக்கும் போதே ''வசந்தி'' என்ற அதட்டல் சாரதாவிடம் இருந்து வந்த அதே நேரத்தில் ''இந்தக் கல்யாண ஏற்பாடுகளைத் தொடர மாட்டோம்''

என்ற வார்த்தை ஆனந்தி, தனஞ்செயன் இருவரின் வாயில் இருந்தும் வெளி வர வசந்தி திகைத்து போனாள்.

தான் சேலிக்கு சொன்ன ஒரு வார்த்தைக்கு இவ்வளவு மரியாதை கொடுக்கிறாங்களே? அக்கா சொல்வது கூட ஓரளவிற்கு ஒத்து கொள்ளலாம். ஆனால் அவன் சொல்வது?

''ஐ ஆம் சாரி மாமா. நான் சும்மா விளையாட்டுக்கு...'' என்று திணற, ''கல்யாணம் என்பது உனக்கு விளையாட்டா இருக்கா? பேசுவதற்கு முன்பு யோசித்துப் பேசு வசந்தி'' என்று சாரதா அதட்ட தனஞ்செயன் இடையிட்டான்.

''கல்யாணம் என்பது விளையாட்டில்லை வசந்தி. அது இரண்டு மனங்களின் சங்கமம் மட்டும் இல்லை. இரண்டு குடும்பங்களின் சங்கமம். நான் நேற்று முன் தினம் மாலை உங்க வீடு தேடி வந்து, 'உங்க அக்காவைத் திருமணம் செய்து கொள்கிறேன்' என்று சொன்னதற்கு அவள் உடனடியாக பதில் எதுவும் சொல்லவில்லை. அதற்கு என்ன காரணம் என்று உனக்குத் தெரியுமா?'' என்று தனஞ்செயன் கேட்க அவள் திகைப்புடன் விழித்தாள்.

''யோசிக்க அவகாசம் எடுத்துக் கொள்ள நினைத்து இருக்கலாம்...'' என்று திக்கும் போதே அவன் மறுப்பாக தலை அசைத்தான்.

''இல்லை. அவளுக்கு அவகாசம் தேவை இல்லை. இந்த திருமணம் காவ்யாவின் மனதில் என்ன மாதிரி விளைவுகளை ஏற்படுத்தும் என்ற கவலை. அதை தெரிந்து கொள்ள நேற்று அவளை வெளியே அழைத்து



சென்று, மனம் விட்டுப் பேசி, அவளின் சம்மதம் உணர்ந்த பிறகு என்னிடமும் ஒத்து கொண்டாள். காவ்யாவின் மனம் பாதிக்கப்படக் கூடாது என்று ஆனந்தி நினைக்கும் போது உங்க வீட்டில் உள்ளவர்களின் மனம் கஷ்டப்படக் கூடாது என்று நானும் நினைக்க வேண்டும் அல்லவா? அதனால் உங்கள் மூன்று பேரின் சந்தோஷமான சம்மதம் இல்லாமல் எங்க கல்யாணம் நடக்காது என்ற உறுதியை உனக்குத் தருகிறேன்'' என்று சொல்ல அவள் உருகிப் போனாள்.

''மூன்று பேரா? அப்ப கார்த்தியை டீலில் விட்டுட்டீங்களா?'' என்று வசந்தி கேட்க அதற்கு பதில் தனஞ்செயன் சொல்வதற்கு முன்பே காவ்யா சொன்னாள்.

''உங்களை, பாட்டியை, கார்த்தி மாமாவைத்தான் அப்பா மூன்று பேர் என்று சொன்னது. அம்மா சம்மதம் ஏற்கனவே வாங்கியாச்சே?'' என்று சொல்ல அவளை அணைத்து கொண்டாள் வசந்தி.

''அடி தங்கம், உனக்கு இருக்கும் முதிர்ச்சி கூட எனக்கு இல்லையே? இனி நீதான் என் ஆஸ்தான குரு'' என்று கேலியாக வசந்தி சொல்ல அவளும் அவள் இடுப்பில் கை போட்டு அணைத்து, ''குருவுக்கு தட்சணை எதுவும் கிடையாதா பஜ்ஜி, சொஜ்ஜி, பூஸ்ட், இந்த மாதிரி குரு தட்சணை எதுவும் கிடையாதா?'' என்று காவ்யா கண் சிமிட்டி சிரிக்க, ஆனந்தியின் முகம் சிவக்க, அதை தனஞ்செயன் ரசிக்க, என்று அங்கே கொண்டாட்டம் துவங்கியது.

''உனக்கு இல்லாததா கண்ணு? அரை மணி நேரம் வெயிட் பண்ணு. நீ கேட்ட எல்லாமே கொண்டு வந்து

அடுக்கி விடுகிறேன்'' என்று விரிந்து கட்டி சாரதா அடுக்களைக்குள் செல்ல தனஞ்செயன் தடுத்து நிறுத்தினான்.

''உங்க பொண்ணுங்க செய்யட்டும். நீங்க இங்கே உட்காருங்கம்மா. உங்களிடம் நான் கல்யாணம் பற்றிக் கொஞ்சம் பேசணும்'' என்று தெளிவான குரலில் ஆரம்பித்தான்.

''வடபழனி கோவிலில் கல்யாணத்தை உடனடியாக முடிக்கலாம் திருமணத்தை பதிவு பண்ண ஒரு வாரம் அவகாசம் வேண்டும். நடுவில் தொழில் முறை நண்பர்களுக்கு ஹோட்டலில் வரவேற்பு வைக்கலாம் என்று நினைக்கிறேன். நீங்க என்ன சொல்றீங்க?''

''உங்க சௌகரியம் தான் முக்கியம் மாப்பிள்ளை.''

''உங்க உறவினர்களை ஹோட்டல் வரவேற்பிற்கு அழைத்தாலும் சரி, வசந்தி திருமண வரவேற்பில் ஓரத்தில் எங்களையும் நிற்க வைத்தாலும் சரி, உங்க விருப்பம். செலவை நானே ஏற்று கொள்கிறேன். யோசித்து சொல்லுங்க. இந்த நேரத்தில் முன்னறிவிப்பு இல்லாமல் வந்து தொந்தரவு பண்ணியதற்கு சாரி.''

''இது பற்றி கார்த்திக்கிடம் பேசி விட்டு இன்று மாலை அல்லது நாளைக்கு காலையில் சொல்கிறேன் மாப்பிள்ளை.''

''பார்த்தீங்களா? நான் அதை மறந்தே போய் விட்டேன். நானும் கார்த்திக்கிடம் பேசவே இல்லையே? இப்பவே பேசுங்க. அவருக்கு தகவல் சொல்லி கல்யாண விஷயத்தில் அவர் என்ன சொல்கிறார் என்று கேளுங்க'' என்று தன் மொபைலில் கார்த்திக்கின் எண்களை அழுத்தி நீட்ட தயக்கத்துடன் வாங்கினார் சாரதா.



## 28

'கார்த்திக்கிடம் ஆனந்தியின் திருமணம் தொடர்பாக பேசி, சம்மதம் வாங்குங்க' என்ற கோரிக்கையுடன் தன் அலைபேசியில் அவனை அழைத்து கையில் போனை கொடுத்த தனஞ்செயனின் செயல் சாரதாவிற்கு படபடப்பை ஏற்படுத்தி இருந்தது. அந்த இடத்தில் இருந்து நகர்ந்தார். அவன் என்ன மூடில் இருப்பானோ? எப்படி பேசுவானோ என்ற சங்கடம் இருந்தது.

அவனுக்குத் திருமணம் முடிந்த பிறகு கடந்த ஓராண்டில் கார்த்திக்கிடம் அவராக போனில் இதுவரை பேசியதே இல்லை. அவனாக அழைக்கும் போதும், 'நான் நல்லா இருக்கிறேன். நீங்க எப்படி இருக்கீங்க'' என்ற நலன் விசாரணையே பெரும்பாலும் இருக்கும்.

அப்படி இருக்கும் போது திடு திப் என்று திருமண விஷயம் அதுவும் காலை நேர பரபரப்பில் பேசுவதில் அவருக்குச் சின்ன தயக்கம் இருந்தது. ஆனாலும் மகளின் திருமணத்துக்காக இதை கூட செய்யாவிட்டால் எப்படி என்ற வேகமும் கூடவே இருந்ததால், அழைத்து விட்டு கார்த்திக்கின் குரல் கேட்க காத்திருந்தார்.

''கார்த்திக் ஹியர்...'' என்ற மகனின் குரல் கேட்டதும், ''கார்த்தி நான் அம்மா பேசுறேன்'' என்று உற்சாகமாக சொல்ல அவன் எதிர்முனையில் திகைத்தான்.

முதல் காரணம் அம்மா தானாக அழைத்தது.

இரண்டாவது காரணம் புது அலைபேசி எண்.

மூன்றாவது காரணம் அம்மாவின் குரலில் இருந்த உற்சாகம்.

''சொல்லுங்கம்மா. எப்படி இருக்கீங்க? இது யாரோட நம்பர்? இவ்வளவு சந்தோஷமா இருக்கீங்க? என்னம்மா விஷயம்?'' என்று அவனும் சந்தோஷமாக விசாரித்தான்.

''எல்லாம் நல்ல விஷயம் தான் கார்த்திக். நம்ம ஆனந்திக்கு ஒரு வரன் வந்து இருக்கு. பேர் தனஞ்செயன்'' என்று சற்றே தாழ்ந்த குரலில் ஆரம்பித்தவர் தொடர்ந்து நீளமாக விபரம் சொன்னார்.

அவனுடைய வயது, குடும்பம், இரண்டாம் திருமணம், செல்வ வசதி, வீட்டை வாங்கிக் கொள்கிறேன் என்று சொன்னது, உள்ளிட்ட எல்லா விபரங்களையும் சொல்ல அவன் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டான்.

''மாமாவிடம் போனை கொடும்மா'' என்று சொன்னான்.

''ஹலோ கார்த்திக் குட்மார்னிங்...'' என்று இருந்து போனை வாங்கி ஆரம்பித்தான் தனஞ்செயன்.

''குட்மார்னிங் மாமா, அம்மா சொன்ன விஷயங்கள் எல்லாம் கேட்டு ரொம்ப சந்தோஷம். அக்காவுக்கு முன்னாடி கல்யாணம் பண்ணிக் கொண்டோமே என்று நானும் லாவண்யாவும் கூனி குறுகுவோம். அங்கே வரக் கூட எங்களுக்குத் தயக்கமா இருந்தது. ரெண்டு பேருக்கும் ஒரு அழகான குடும்பம் அமைந்து விட்டது என்றதில் சந்தோஷம் மாமா. சீக்கிரமே நானும் சென்னையில் செட்டில் ஆக முயற்சி செய்கிறேன். அம்மாவுக்கு உதவியாக இருக்கும். உங்களுக்கு ஆனந்தியை பிடிச்சு இருக்கா மாமா?'' என்று கேட்டவன் குரலில் மரியாதை இருந்தது.



''எனக்குப் பிடிச்சு இருக்கா என்பதை விட நீ ஆனந்தியிடம் தானே கேட்கணும்?'' என்று மடக்க அவன் சிரித்தான்.

''உங்க திருப்திக்காக கேட்கிறேன். ஆனால் அவளின் சம்மதம் இல்லை என்றால் நீங்க எங்க வீட்டில் உட்கார்ந்து உங்க மொபைலில் அம்மாவுக்கு என் நம்பர் போட்டுத் தர மாட்டீங்க என்று எனக்குத் தெரியாதா மாமா?'' என்று சிரிக்க அவனும் சிரித்தான்.

''கல்யாணம் பற்றி என்ன சொல்றீங்க மாப்பிள்ளை...?''

''வசந்தி கல்யாணத்தோடு உங்களுடையதை இணைக்க வேண்டாம் மாமா. கல்யாணம் என்பது வாழ்க்கையில் ஒரு முறை நடப்பது. அது தனியாகவே இருக்கட்டும். கோவிலில் கல்யாணம் ஹோட்டலில் வரவேற்பு என்று வைத்துக் கொள்ளலாம். வசந்தி கல்யாணத்துக்கு இரண்டு நாள் முன்பே எல்லாம் வைத்து கொண்டால் எனக்கு இன்னும் சந்தோஷமாக இருக்கும்'' என்று சொல்ல அவனும் உற்சாகமாகச் சம்மதம் சொன்னான்.

மேலும் சில நிமிடங்கள் பேசி விட்டு, ''முடிந்தால் நான் இரண்டு மூன்று நாட்களில் கிளம்பி சென்னை வர பார்க்கிறேன்'' என்ற உறுதி மொழியுடன் கார்த்திக் போனை வைக்க தனஞ்செயன் மன நிறைவுடன் சாரதாவை பார்த்தான்.

கார்த்திக்கை அவன் விட்டேற்றியான பையன் தன் ஆசை, தன் எதிர்காலம் என்பதை மட்டும் வைத்து அக்கா தங்கையின் வாழ்க்கை பற்றிய கவலையை தூக்கிப் போட்டு விட்டானோ என்ற எண்ணம் நெஞ்சின் மூலையில் இருந்தது. அது தவறு என்று உணர்த்தி விட்டான்.

கார்த்திக் பேசியதில் இரண்டு விஷயங்கள் அவனுக்கு பிடித்தது.

ஒன்று ஆனந்தி வசந்தி இருவருக்கும் திருமணம் அமையாததினால் வந்த குற்ற உணர்வு தற்போது நீங்கிய தாக சொன்னது.

மற்றொன்று கூடிய விரைவில் அம்மாவுக்கு உதவி யாக சென்னையில் செட்டில் ஆகிறேன் என்று சொன்னது.

கொஞ்சம் நல்லவன் தானோ? சந்தர்ப்ப சூழ்நிலை அவனுக்கு எப்படியோ? எதனால் அவசரக் கல்யாணம் நிகழ்ந்ததோ? நமக்கு எப்படித் தெரியும்?

''அப்பா! டிபன் ரெடி, சாப்பிட வாங்க என்று அம் மாவும் பாட்டியும் உங்களை மூன்று தடவை கூப்பிட்டு விட்டாங்க. நீங்க என்ன பண்ணிட்டு இருக்கீங்க?'' என்று காவ்யா கையை பிடித்து இழுக்கவும் சுய நினை வுக்கு வந்து புன்னகையோடு மேஜைக்கு வந்தான்.

அங்கே இருந்த வசந்தியை பார்த்து, ''சாரிம்மா சொல்லாமல் கொள்ளாமல் வந்து...'' என்று ஆரம்பிக்க அவள் காதுகளை பொத்திக் கொண்டாள்.

''ஹையோ போதும் மாமா. இதை திருப்பித் திருப்பி நீங்க ஆயிரம் தடவை சொன்னதில் என் காதோரம் ரத்தம் கசியுது பாருங்க'' என்று தன் காதைத் திருப்பிக் காட்ட எல்லோரும் சிரித்தனர்.

''ஆன்ட்டி இந்த ஸ்டட் உங்க கல்யாணத்துக்கு புதுசா வாங்கியதை யாருமே கண்டுக்கலை என்று தானே காட்டு நீங்க?'' என்று நக்கலாக காவ்யா சொல்ல மீண்டும் ஒரு சிரிப்பலை எழுந்தது.



''ஆன்ட்டி இல்லை காவ்யா. வசந்தி உனக்கு சித்தி முறை வேண்டும்'' என்று உறவு முறையை சாரதா திருத்த, வசந்தி இடையிட்டாள்.

''அது இருக்கட்டும்மா? அதுவா இப்ப முக்கியம். இந்த ஸ்டட் புதுசு என்று கண்டு பிடித்த வரை பாதி கிணறு தான் தாண்டி இருக்கிறாய் மிச்ச கிணறு எப்போ தாண்டுவாய்?'' என்று சீண்டினாள் வசந்தி.

''என்னம்மா சொல்லணும்?'' என்று கண்ணாலேயே ஆனந்தியிடம் கேட்டதும் அவள் உதட்டை பிதுக்க அதற்கான பதில் தனஞ்செயனிடம் இருந்து வந்தது.

''அது ஜெய் ப்ரதர் வாங்கி கொடுத்ததா? சரி நானும் ஒன்று இதே மாதிரி இல்லை இதை விட பெரிசா ஒன்று வாங்கி ஆனந்திக்கு தந்து விடுகிறேன். இப்ப ஓகே தானே?'' என்று சிரிக்க மீண்டும் ஒரு சிரிப்பலை எழுந்தது.

''இதான் எள் என்று சொல்லும் முன்பு எண்ணையாக நிற்பதா மாமா?''

''இல்லை சித்தி. எள் என்றால் எள்ளாகத் தான் இருக் கணும். எண்ணையாக இருந்தால் ஒன்று அதிகப்ரசங்கி என்று அர்த்தம். இல்லை காது செவிடு என்று அர்த்தம். அப்பா ரெண்டுமே இல்லை. சொன்ன பேச்சு கேட்பவர் இல்லைப்பா?'' என்று காவ்யா சிரிக்க மேலும் ஒரு சிரிப் பலை எழுந்து ஆனந்தியின் முகத்தை மேலும் மேலும் சிவக்க வைத்தது.

* * *

பெங்களூரில் கார்த்திக் முக மலர்ச்சியுடன் போன் பேசிவிட்டு வைக்க அருகே வந்த லாவண்யா யோசனை யுடன் பார்த்தாள்.

''யாரு போனில்? இவ்வளவு சந்தோஷமா பேசுறீங்க? என்ன விஷயம்?''

''நல்ல விஷயம் தான். கேட்டால் நீயும் துள்ளி குதிப்பாய்.''

''உங்க அக்கா கல்யாண விஷயம் முடிவு பண்ணிட்டாங்களா?'' என்று சர்வ சாதாரணமாகக் கேட்டவளை தூக்கி சுற்றினான்.

''ஹய்யோ விடுங்க. எனக்கு தலை சுத்துது'' என்று அதட்டியவளை இறக்கி விட்டு, ''உனக்குக் கூட மூளை வேலை செய்யுதே?'' என்று கேலியாக கேட்டான்.

''பின்னே உங்களை மாதிரி நினைத்தீங்களா? கல்யாணம் பண்ணிக் கொள்ள தெரிஞ்ச கோழைக்கு, அதன் நியாயத்தை பெற்ற தாயிடமும், உடன் பிறந்த தமக்கையிடமும் எடுத்துச் சொல்ல மனசு வரலை தானே? உங்க பயம் தான் நம்மளை இப்படி இத்தனை வருஷமா தள்ளி வச்சு இருக்கு. இப்ப அவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் முடிஞ்ச பிறகாவது போக வா இருந்தால் சரி. வசந்தி கல்யாணத்துடன் கூடவே அக்கா கல்யாணத்தையும் நடத்தி விடலாமா? இன்னும் கொஞ்சம் டைம் தேவைப் படுமா?''

''டைமா? மாமாக்கு அதெல்லாம் தேவை இல்லை. விட்டால் இப்பவே கையோடு அவங்க வீட்டுக்குக் கூட்டிட்டு போக அவர் ரெடி.''

''மாமாவா? அவரை எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''மாமா தான் இப்ப என்னிடம் போனில் பேசியது...''

''நிஜமாவா? எப்படி?''

''எப்படி என்றால் வாயால் தான்...''



''ஹையோ! ஒழுங்கா பேசப் போறீங்களா இல்லையா?''

''மாமாவோட பொண்ணு ஆனந்தியின் பள்ளியில் படிக்கிறாள். சந்தித்து பழக்கம் ஏற்பட்டு இருக்கிறது...''

''பொண்ணு என்றால் என்ன வயசு இருக்கும் கார்த்திக்?''

''பதினோரு வயசு. ஆறாம் வகுப்பு படிக்கிறாள்.''

''ஓ! ஆனால் ஆனந்தி அக்காவிற்கு சம்மதம் தானா?''

''சம்மதம் இல்லை என்றால் அவர் நம் வீட்டுக்கு வந்து அவரின் போனில் அம்மாவை பேச வைப்பாரா?''

''இருந்தாலும் நீங்க ஒரு முறை நேரடியா ஆனந்தி அக்காவிடம் கேட்கலாமே?''

''போனிலா?''

''கேட்கலாம். ஆனால் போனில் அவர்களின் உணர்வுகளை நன்றாக கணிக்க முடியுமா தெரியலை. அதனால் நேரில் கூட போகலாம் எப்படியும் வசந்தி கல்யாணத்திற்கு நாம் கிளம்பித் தானே ஆக வேண்டும் அதுக்கு இன்னும் மூன்று நாளில் கிளம்புவோம். அதுக்கு இப்பவே கிளம்பினால் என்ன? வினோத்தையும் உங்க அம்மா பார்த்ததே இல்லையே? கொஞ்ச நாள் அவர்களுடன் இருக்கலாம் அல்லவா? அவங்களுக்கும் திருப்தியா இருக்கும்.''

''அடேங்கப்பா ஒரு கல்லில் எத்தனை மாங்காய்? அம்மாவை திருப்திப் படுத்தலாம். உங்க அம்மாவுக்கு வினோத்தை பார்த்து கொள்ளும் சிரமத்தில் இருந்து ரிலீப் கொடுக்கலாம். வசந்தி கல்யாணத்திற்கு ஒரு வாரம் முன்னதாக வந்ததா பில்ட் அப் கொடுக்கலாம். ஆனந்தி கல்யாண வேலைகளை கவனித்ததா சொல்லிக்கலாம். தூள் கிளப்பு லவ்ஸ்...''

"இந்த மாதிரி தான் லவ்ஸ் என்று சென்னையில் வந்ததும் கூப்பிடப் போறீங்களா?"

"என் பெண்டாட்டியை எனக்குப் பிடிச்ச மாதிரி கூப்பிட்டால் யாருக்கு என்ன வந்தது?"

"உங்க பெண்டாட்டியை அங்கே இருப்பவங்க முதல் முறையாகப் பார்க்கப் போறாங்க. அவங்க என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் இந்த மாதிரி கோணல் பேச்சை எல்லாம் மூட்டைக் கட்டி வச்சுட்டு சாதாரணமா இருங்க" என்று அறிவுரை கூற, மனைவி சொல்லே மந்திரம் என்று பின்பற்றும் கார்த்திக்கும் அதை கடைபிடித்து, அந்த குடும்பத்தில் மனைவியாக முழுமையாக இணைக்கும் பணியை வெற்றிகரமாக முடிக்கவும் செய்தான்.

## 29

இரண்டு தினங்களில் ஆனந்தியின் திருமணம் வடபழனி கோவிலில் நடக்க இருப்பதாக தனஞ்செயன் முடிவு பண்ணியதோடு, இன்று எல்லோருக்கும் ஜவுளி எடுக்க அழைத்து செல்வதாகவும் சொல்லி இருக்க, அந்த காலை நேரத்தில் ஆறு மணி அளவிலும், வீடு பரபரப்பாக இயங்கி கொண்டு இருந்தது.

அடுக்களையில் சாரதா வேலையாக இருக்க, தொலை பேசியில் வசந்தி திருமணத்திற்கான வேலைகளை ஆனந்தி கவனிக்க, அழைப்பிதழ்களில் முகவரி எழுதிக் கொண்டு இருந்தாள் வசந்தி.



அமைதியாக இருந்த வீட்டில் திடீர் என்று, "அம்மா, யார் வந்து இருக்காங்க என்று பாருங்க" என்ற வசந்தியின் கூக்குரல் கேட்டு, இருந்த ஆனந்தியும் அடுக்களையில் இருந்த சாரதாவும் எட்டிப் பார்த்தார்கள். இடது கையில் ஆறு மாத குழந்தையையும் வலது கையில் மனைவியையும் பற்றியபடி வாசலில் நின்று இருந்தது கார்த்திக்.

"ஹேய் கார்த்திக். வா வா ஏன் அங்கேயே நினறு விட்டாய்? உள்ளே வா. வா லாவண்யா" என்று ஆனந்தி அவர்களை வரவேற்க, "அங்கேயே நில்லு. உள்ளே வராதே" என்ற சாரதாவின் குரல் சப்தமாக வர திடுக்கிட்டு பார்த்தனர்.

"அம்மா, உங்களுக்கு என்ன பைத்தியமா? எதுக்கு கார்த்திக்கை உள்ளே வர வேண்டாம் என்று சொல்றீங்க. உங்க கோபத்தைக் காட்ட இப்ப தான் நேரமா?" என்று அதட்டியபடி உள்ளே சென்ற ஆனந்தியின் முகம் மலர்ந்தது.

"அம்மா ஆரத்தி கரைக்கரங்க கார்த்திக் டென்ஷன் ஆகாதே" என்று உள்ளே இருந்து சப்தம் வர கார்த்திக்கும் லாவண்யாவும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை செய்தார்கள்.

"முதல் முதலில் கையில் குழந்தையோடு வந்து இருக்கிறாய். அதான், ஆரத்தி எடுத்து அழைக்கலாம் என்று நினைத்தேன்" என்று மூவருக்கும் சுற்றி நெற்றியில் திலகமும் பதித்தவர், "வலது காலை எடுத்து வைத்து வாம்மா" என்று சொல்லி வரவேற்றார். தயக்கத்துடன் உள்ளே வந்த லாவண்யா சாரதாவின் கால்களில் வணங்கி எழுந்தாள்.

''எங்க கல்யாணம் பெரியவங்க சம்மதம் வாங்கி காத்திருந்து செய்யக் கூடிய நிலைமையில் இல்லை. அவசர அவசரமா தவிர்க்க முடியாத சூழலில் நடந்து விட்டது. மன்னிச்சுடுங்க. எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க'' என்று கால்களில் விழுந்து வணங்க, ஆனந்தியும் வசந்தியும் அவளை வியப்புடன் பார்த்தார்கள்.

''பேசுவதை பார்த்தால் நல்லவள் மாதிரி தெரியுதே? பிறகு ஏன் கார்த்திக் முன்பே இவளைக் கூட்டி வரவில்லை?'' என்ற கேள்வி இருவர் மனதிலும் எழுந்தது.

''என்னம்மா பார்த்துட்டு இருக்கீங்க? நல்லா இரு என்று ஆசீர்வாதம் பண்ணுங்க'' என்று ஆனந்தி சன்னமான குரலில் சொல்லி அதட்ட அவர் கண்ணில் நீரோடு தூக்கி நிறுத்தினார்.

''தீர்க்க சுமங்கலியா எல்லா வளங்களும் பெற்று சந்தோஷமா இரும்மா'' என்று சொல்லி விட்டு கழுத்தில் இருந்த சங்கிலியை கழட்டி குழந்தையின் கழுத்தில் போட்டார்.

''உங்க சொல்படியே இரண்டு பெண்களுக்கும் திருமணம் நிச்சயம் ஆன பிறகு தான் வர வேண்டும் என்று நீங்க உத்தரவு போட்டபடியே, இன்று தகவல் வந்ததும் கிளம்பி வந்து விட்டோம்மா'' என்று சொன்ன கார்த்திக்கை ஆனந்தி ஆச்சரியமாகப் பார்த்தாள்.

''என்னடா சொல்ற?''

''என்னம்மா அக்கா கேட்கிறாளே? சொல்லி விடட்டுமா?'' என்று கார்த்திக் அம்மாவிடம் கேட்க அவர் புன்னகை செய்தார்.

''முதன் முதலில் எங்க கல்யாணம் முடிஞ்ச உடனே நானும் லாவண்யாவும் இங்கே வந்தோம். அப்ப நீங்க



ரெண்டு பேரும் இல்லை. காலேஜுக்கும் வேலைக்கும் போயிட்டீங்க...''

''என்ன கல்யாணம் முடிஞ்சா பிறகு நீ இங்கே வந்தாயா? எத்தனை நாள் நீ இங்கே வரலை என்று மனசுக்குள் புழுங்கி தவிச்சு இருப்பேன் தெரியுமா? ஏன்டா உடனே கிளம்பி விட்டாய்? அம்மா கோபமா பேசினால் உடனே நீயும் கோபித்துக் கொண்டு கிளம்பி விடுவாயா?'' என்று ஆனந்தி அதட்ட அவன் புன்னகை செய்தான்.

''அம்மா கோபமா எதுவும் சொல்லலை. வீட்டுல வயசு வந்த ரெண்டு பொண்ணுங்க இருக்கும் போது நீ அவசரமா கல்யாணம் பண்ணிக் கொண்டாய். நீ காதல் கல்யாணம் செய்து கொண்டதில் கூட எனக்கு வருத்தம் இல்லை. ஆனால் அவங்க ரெண்டு பேருக்கும் பண்ணிட்டு நீ பண்ணி இருக்கலாமே? இப்பவும் பெரியவங்க சம்மதம் வாங்காமல் பண்ணி கொண்டாயே என்று தான் சொன்னாங்க...''

''அது கூட பெற்ற தாய் சொல்லக் கூடாதா கார்த்திக்? நீ என்ன பெரிய இவனா? ஏன் நீ சொல்ல மாட்டியா?'' என்று தம்பியையும் தம்பி மனைவியையும் சேர்த்தே விரட்டினாள் ஆனந்தி.

''அவர் சொல்றதை முழுசா கேளுங்கக்கா'' என்ற லாவண்யாவின் குரலில் கார்த்திக்கிடம் திரும்பினாள்.

''வசதி முக்கியம் என்று கல்யாணம் பண்ணி கொண்டாய். நல்லா இரு. ஆனால் என் பெண்களுக்கு நான் மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பிக்ஸ் பண்ணும் வரை நீ இங்கே வராதே. அது உனக்குக் கௌரவக் குறைச்சலா

இருக்கும் சொல்லிட்டாங்க. அதனால் தான் வரவில்லை...''

''ஏன்மா அப்படி சொன்னீங்க?'' என்று வருத்தத்துடன ஆனந்தியின் பார்வை சாரதாவிடம் சென்றது. அவர் மௌனமாக நிற்க கார்த்திக்கே பேச்சை தொடர்ந்தான்.

''என்னை வர வேண்டாம் என்று சொல்லிட்டாங்க. நான் அனுப்பும் பணத்தையும் வாங்கவில்லை. குழந்தை பிறந்து இருக்கும்மா. நீங்களாவது இங்கே வந்து பார்த்துட்டுப் போங்க என்று சொன்னேன். அதுக்கு கூட என பெண்களை தனியா விட்டுட்டு நான் வர மாட்டேன் எப்படியும் பிரசவம் பெண் வீட்டில் தானே பார்ப்பாங்க. அவங்க அம்மாவைக் கவனிக்கச் சொல்லு என்று மறுத்துட்டாங்க. இப்ப கல்யாணம் முடிவான செய்தி கிடைத்த உடனே ஓடி வந்து விட்டோம்'' என்று கார்த்திக் சொல்ல ஆனந்திக்கும் வசந்திக்கும் நாணயத்தின் மறுபக்கம் தெரிய வருத்தமாக இருந்தது.

''அது சரி, அக்கா, உனக்கென்ன இவ்வளவு அர்ஜெண்டா கல்யாணம் நிச்சயம் ஆகி இருக்கு. மாமாவை உனக்கு பிடிச்சு இருக்கு தானே?'' என்று அவன் கேட்டு முடிக்கும் முன்பே அவள் கன்னத்தில் வந்து ஒட்டிக்கொண்ட சிவப்பை பார்த்து கார்த்திக்கும் லாவண்யாவும் புன்னகை செய்தனர்.

''அக்கா, உண்மையை சொல்லுங்க. இந்த கல்யாணம் திடீர் என்று வேறு வழி இன்றி எடுத்த முடிவு இல்லையே? அவருக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகி, ஒரு பொண்ணு வேறே இருக்கு போல?''

''கார்த்திக், இப்ப இந்த ஆராய்ச்சிக்கு அவசியமே இல்லை. நான் ஒன்றும் சின்ன பொண்ணு இல்லை.



எனக்கு பிடிக்காமலோ என்னை கட்டாயப்படுத்தியோ இந்தக் கல்யாண ஏற்பாடுகள் நடக்கவில்லை. எனக்கு தனாவை பிடித்து தான் சம்மதம் சொன்னேன். போதுமா?'' என்று அழுத்தம் திருத்தமாக கேட்க அவன் திருப்தியோடு லாவண்யாவை பார்த்தான். அவளின் முகமும் சந்தோஷத்தையே காட்டியது.

''இங்கே வந்து உன்னிடம் பேசும் வரை இரண்டாம் தாரமாக இருக்கிறதே என்று எங்களுக்கு ஒரு சின்ன அதிருப்தி இருந்தது. இப்ப அதெல்லாம் மாறி சந்தோஷம் வந்து விட்டது. கல்யாண வேலை என்ன பாக்கி இருக்கு என்று சொல்லுங்க. நான் ரெடி'' என்று தோளை தட்டி கார்த்திக் களத்தில் இறங்க ஆனந்தியும் வசந்தியும் வாய் விட்டுச் சிரித்தனர்.

''அதுசரி ரெண்டே நாளில் அக்காவுக்குக் கல்யாணம். நீ வந்து வேலை பார்க்கட்டும் என்று மாமா வெயிட் பண்ணுவாரா'' என்று வசந்தி சிரிக்க ஆனந்தி அவளை அதட்டினாள்.

''சும்மா கிண்டல் பண்ணாதே வசந்தி! அவ கிடக்கிறாள். என் கல்யாணத்தை தனியாகவே, நடத்தனும். வாழ்க்கையில் ஒரு முறை நடக்கும் திருமணம். உங்களுக்கு மட்டும் என்று தனிப்பட்ட கொண்டாட்டமாக இருக்கட்டும் என்று நீ சொன்னதில் மாமாவுக்கு ஒரே சந்தோஷம்'' என்று பெருமையாகச் சொல்ல அவன் வியப்புடன் பார்த்தான்.

''இதில் குஷிப்பட என்ன இருக்கு?''

''நீ அப்படி சொல்கிறாய். என் தங்கை வசந்தியின் கல்யாணத்திற்கு முன்பே ஆனந்தியின் கல்யாணம் நடக்க வேண்டும் என்று சொன்னாயாம். உன்னுடன்

பேச அவர் காத்து கொண்டு இருக்கிறார். கல்யாணம் பற்றிய எந்த விபரத்தையும் என்னிடம் கூட அவர் சொல்லவில்லை உனக்காக தான் காத்திருக்கிறார்'' என்று சொன்னதுமே உற்சாகத்துடன் அடுத்த அரை மணி நேரத்தில் குளித்து சாப்பிட்டு தனஞ்செயனைப் பார்க்க கிளம்பி விட்டான் கார்த்திக்.

தனஞ்செயனின் முகவரியை ஆனந்தியிடம் வாங்கிக் கொண்டு கிளம்பிய கார்த்திக் வழியில் பழங்கள் இனிப்புகள் ஆகியவற்றை வாங்கிய பின்பு அவன் வீட்டில் காவ்யா என்று சிறு பெண் இருப்பதை உணர்ந்தான்.

மூன்று கிராமில் சின்னதாக ஒரு தோடு அழகான மாடலில் வாங்கி கொண்டு செல்லும் போதே அந்த வீட்டின் பிரம்மாண்டமும் அழகும் கண்களை கவர்ந்தது. ஏற்கனவே தன் வரவை சொல்லி வைத்து இருந்ததால் பாதுகாவலர் மரியாதையாக வரவேற்று உள்ளே அமர வைக்க அவன் காத்திருந்தான்.

''கார்த்திக் மாமா, நீங்களா?'' என்ற ஒரு உற்சாக பெண் குரல் முதுகுக்கு பின்னால் இருந்து ஒலிக்க அவன் வியப்புடன் திரும்பினான்.

''காவ்யா? உனக்கு என்னை எப்படி தெரியும்? போட்டோ பார்த்து இருக்கிறாயா?'' என்று கேட்க அவள் மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''நீங்க காலையில் அப்பாவிடம் பேசியதை சொன்னாங்க. பத்து மணிக்கு உங்களை எதிர்பார்த்தோமே? கரெக்டா வந்துட்டீங்க. ரெண்டும் ரெண்டும் நாலு..'' என்று கண்சிமிட்ட அவளின் கன்னத்தை வருடினான்.

''அழகா பேசுகிறாய் செல்லம். சின்ன பரிசு உனக்காக'' என்று தோடு இருந்த பெட்டியை கொடுத்ததும், அவள் புன்னகை செய்தாள்.



''எனக்கு ஏற்கனவே காது குத்தி விட்டார்களே? பரவாயில்லை தாங்க்ஸ்'' என்று சிரிப்புடன் சொல்லும் போதே மாடியில் இருந்து பரபரப்பாக தனஞ்செயன் இறங்கி வந்தான்.

''வாங்க கார்த்திக். சாரி நீங்க இவ்வளவு சீக்கிரம் வருவீங்க என்று நான் எதிர்பார்க்கலை. லாவண்யாவும் வினோதும் நல்லா இருக்காங்களா? அழைத்து கொண்டு வந்து இருக்கலாமே? என்ன சாப்பிடுறீங்க?'' என்று வரிசையாக கேள்விகளை அடுக்க கார்த்திக் காவ்யா ரெண்டு பேருமே கலகலவென்று சிரித்தனர்.

''அப்பா கொஞ்சம் மூச்சு விட்டு ஒவ்வொரு கேள்வியா கேளுங்கப்பா'' என்று காவ்யாவும், ''சான்ஸே இல்லை மாமா. ஆனந்தி கூட பள்ளியில் பாடம் எடுக்கும்போது இப்படி பேசி இருக்க மாட்டாள்'' என்று கார்த்திக்கும் சொல்லி விட்டு மேலும் சிரிக்க அவனும் இணைந்து கொண்டான்.

## 30

வீடு தேடி வந்த கார்த்திக்கை பானம் சிற்றுண்டி ஆகியவை கொடுத்து உபசரித்த பின்பு, ''உங்களை இங்கே வர சொன்னதுக்கு முக்கிய காரணமே, கல்யாண செலவுக்கு பணம் கொடுக்க தான் கார்த்திக்...'' என்று பேச்சு வார்த்தையினை துவக்கினான் தனஞ்செயன்.

''ஆனந்தி திருமண விஷயமா பேச நீங்க வரச் சொன்னதாக சொன்னாள். ஆனால் பணம் கொடுப்பீங்க

என்று சொல்லவே இல்லை. நானும் மூன்று வருடங்களாக சம்பாதிக்கிறேன். அம்மாவோ அக்கா தங்கையோ என்னிடம் இருந்து இந்த மூன்று ஆண்டுகளில் பணம் எதுவுமே வாங்கியும் கொள்ளவில்லை தெரியுமா? அதனால் என்னிடம் பணம் இருக்கு'' என்று மறுத்தான் கார்த்திக்.

''உன்னிடம் பணம் இல்லை என்பதற்காகக் கொடுக்கவில்லை கார்த்திக். பெண் வீட்டில் திருமணத்திற்கு எதையும் எதிர்பார்க்கக் கூடாது என்ற என் கொள்கையினால் கொடுக்கிறேன். ஆனந்தி பணம் வாங்க ரொம்பக் கூச்சப்படுகிறாள். அதனால் நீங்க எப்போ வருவீங்க என்று காத்திருந்தேன். இந்த கவரில் இருபது லட்சம் ரூபாய் இருக்கு. இது மாப்பிள்ளை தொழில், உங்க தொழில், ஆனந்தி திருமணத்துக்கு உறவினர்களுக்கு துணிமணி எடுத்து கொடுக்க, வரவேற்பு செலவுகள் ஆகியவற்றிற்கு வைத்துக் கொள்ளுங்க'' என்று கொடுக்க கார்த்திக் திகைத்து போனான்.

என்னதான் பணக்காரனாக இருந்தாலும் திருமணம் முடியாத நிலையில், இருபது லட்சம் ரூபாயை 'இந்தா வைத்து கொள்' என்று கொடுத்த தனஞ்செயனின் பெருந்தன்மையில் கார்த்திக் ஆடிப் போய் விட்டான்.

''இல்லை மாமா. இதை எதிர்பார்த்து நான் வரவில்லை. பெங்களூரில் வேலையாக இருந்தது ஒரு விதத்தில் நன்மை என்றாலும், இரண்டு பெண்களும் திருமணமாகி சென்ற பிறகு அம்மாவைத் தனியாக இருக்க விடுவதோ, பெண்களின் வீட்டில் இருக்க சொல்வதோ நன்றாக இருக்காது. நான் சென்னைக்கே வந்து விடலாம் என்று பார்க்கிறேன். அப்படி இருக்கும் போது வீட்டை



விற்பனை செய்வது குறித்து நான் மறு பரிசீலனை செய்ய வேண்டி இருக்கும். இந்த பணம் வேண்டாம் மாமா'' என்று வாங்க மறுத்தான் கார்த்திக்.

''வீடு விற்கவில்லை என்றாலும் பரவாயில்லை. கையில் செலவுக்கு இதை கடனாக நினைத்து வைத்து கொள். ரெண்டு கல்யாணம் முடிந்த பிறகு மிச்சம் இருப்பதை திருப்பிக் கொடு'' என்று வற்புறுத்திய பிறகும் பிடிவாதமாக மறுத்து விட்டான்.

''இப்போதைக்கு கையில் மூன்று லட்சம் இருக்கு. எனக்கு ஒரு தேவை என்றால் எந்த நேரத்திலும் உங்களிடம் உதவி கேட்கத் தயங்க மாட்டேன். போதுமா? ப்ளீஸ் மாமா எனக்கு பண உதவி வேண்டாம். உங்க மாரல் சப்போர்ட் இருந்தால் போதும்'' என்று பிடிவாதமாக பணத்தைத் திருப்பிக் கொடுத்த கார்த்திக்கை பெருமையுடன் பார்த்தான் தனஞ்செயன்.

* * *

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு வீட்டில் அனைவரும் சேர்ந்து இருக்க, நடைபெறும் முதல் விசேஷம் என்பது அங்கிருந்த அனைவரின் மனத்திலும் கிளர்ச்சியையும் சந்தோஷத்தையும் ஏற்படுத்தி இருந்தது.

முதல் நாள் இரவு பதினோரு மணி வரை பேசி விட்டுத் தாமதமாகவே படுத்த தனஞ்செயனுக்கும் ஆனந்திக்கும் தூக்கம் வருவதாகவே இல்லை. காலை நாலு மணிக்கு அம்மாவைத் தேடி வந்து குரல் கொடுத்தான் கார்த்திக்.

''அம்மா இன்னிக்கு காலையில் வடபழனி கோவிலுக்கு ஆறு மணிக்கு போகணும். நினைவிருக்கு இல்லையா?'' என்று ஆரம்பித்த கார்த்திக்கை பார்த்து தலை அசைத்தார்.

"இருக்கு கார்த்திக். குழந்தையை வைத்து கொண்டு அங்கே இங்கே அலைவது லாவண்யாவுக்கு சிரமமா இருக்கும். அதனால் கல்யாணம் மட்டும் அவள் இருந்தால் போதும். அப்படியே ரெஜிஸ்டரார் ஆபீஸ் போகலாம் என்று சொல்லி இருக்கார். லாவண்யா கோவிலில் இருந்து அவள் இங்கே வீட்டுக்கு திரும்பி வந்து விடட்டும். நீ மட்டும் அங்கே போனால் போதும்" என்று சொல்ல, அவர் சொன்னதில் பின்பாதியை மட்டுமே காதில் வாங்கிய லாவண்யாவுக்கு முகம் வாடியது.

ஏன் இப்படி சொல்கிறார்? தன்னை அவருக்கு பிடிக்கவில்லையோ என்று அவ்வப்போது தோன்றும் சந்தேகம் மீண்டும் தலை தூக்கியது. அவர் தன்னிடம் கடுமையாக பேசவில்லை. குழந்தையையும் பராமரிப்பதில் ஒதுக்கம் காட்டுவதில்லை. ஆனாலும், இது மாதிரி வார்த்தைகள் அவளை வாடி சுருங்க வைத்து விடும்.

ஐந்து மணிக்கு ஏற்பாடு செய்து வைத்து இருந்த வாடகை கார் வந்து விட அனைவரும் உற்சாகமாகக் கிளம்பினார்கள். வீட்டில் இப்படிச் சொன்னாரே என்று நினைத்து கோவிலில் ஒதுங்கி நின்றால் ஒவ்வொரு சடங்கிற்கும் அவளை கார்த்திக்குடன் நிற்க வைத்தார்.

காவ்யாவை தன்னுடன் நிற்க வைத்து கொண்டு, தனஞ்செயனின் சார்பில் அவருடைய மாமியார் மாமனார் வந்து இருக்க, ஆனந்தியின் சார்பில் தங்களை ஜோடியாக நிற்க வைப்பார் என்று காத்திருக்க, பெண்ணை கை பற்றி மாப்பிள்ளையிடம் ஒப்படைக்கும் அந்த சடங்கே நடைபெறவில்லை.

கோவிலில் இருந்து ஒரு வேனில் கார்த்திக் மணமக்களுடன் பதிவாளர் அலுவலகம் செல்ல வசந்தியுடனும் சாரதாவுடனும் வீட்டுக்கு குழந்தையை அழைத்து கொண்டு வந்த லாவண்யாவுக்கு மனம் முழுக்க வெறுப்பாக இருந்தது. இருக்கும் எரிச்சல் போதாது என்று குழந்தை வேறு நசநசவென்று அழுது அவளின் எரிச்சலை கூட்ட, அவசரமாக அவளை தேடி வந்தார் சாரதா.



இவரை பாம்பு என்று நினைத்து தள்ளி நின்றால் பழுதாக அருகே வந்து இழைகிறார். பழுது என்று நெருங்கி சென்றால், தீயாக சுட்டும் கடுமையான வார்த்தைகளை பேசி தள்ளி வைக்கிறார். அவரின் மனநிலை புரியாமல் தவித்து போனாள் லாவண்யா.

ஓரளவிற்கு மேல் கணவனிடமும் இந்த சின்ன வீட்டில் திருமண பரபரப்பில் நெருங்க முடியவில்லை. போதாதற்கு வீடு நிறைய ஆட்கள். தண்ணீர் மாறியதால் குழந்தைக்கு வந்த சின்னச் சின்ன உடல் நல குறைவுகள், அதில் வந்த தொடர் அழுகை, என்று இந்த மூன்று நாட்களில் அவளின் வாழ்க்கை நரகமாகிக் கொண்டு இருந்தது.

கல்யாண ஏற்பாடுகளை கவனிக்க கார்த்திக் சென்று இருக்க, புதிய சூழலில் தன்னை பொருத்தி கொள்ள முயன்று கொண்டு இருந்த லாவண்யாவை, அங்கே வந்ததில் இருந்து அழுது கொண்டே இருந்த வினோதின் உடல் நிலை அவளை ஒன்ற விடாமல் செய்தது.

தொலைபேசியில் அம்மாவுடன் பேசி, கையில் இருந்த மருந்துகளை கொடுத்து, வெளியில் நடந்து, தொட்டிலில் படுக்க வைத்து, பால் கலந்து கொடுத்து, அது பிடிக்கவில்லையோ என்று செரிலாக் கலந்து கொடுத்து, இட்லி ஊட்ட முயன்று, என்னென்னவோ செய்தும், அவன் அழுகை நிற்கவும் இல்லை. உணவு

உள்ளே சென்றால் அல்லவோ தூக்கம் வரும்? என்ன செய்வது என்று தெரியாமல் நிற்க அருகே வந்த சாரதா கை நீட்டினார்.

''ஏன்மா குழந்தை அழுது கொண்டே இருக்கிறான்? கொண்டா குழந்தையை'' என்று அன்போடு வாங்கி, அவன் வயிற்றை தடவி பார்த்த உடனேயே, ''குழந்தை எப்போ வெளியே போனான்?'' என்று கேட்டார்.

''நேற்று காலையில் ஆறு மணிக்கு போனது தான்...''

''ஒரு நாளைக்கு ஒரு தடவை தான் போவானா?''

''இல்லம்மா, ரெண்டு மூன்று தடவை போவான். இரண்டு நாளாக அலைச்சல் புது இடம் பெங்களூரை விட இங்கே...''

''சூடாகி இருக்கும். கையில் ஏதாவது மருந்து வச்சு இருக்கியா?''

''சிரப் வச்சு இருக்கேன். ஆனால் ஏற்கனவே கொடுத்து ஒரு மணி நேரம் ஆச்சு. பிரயோஜனம் இல்லை'' என்று சொன்னவளை தட்டி கொடுத்தாள்.

''பயப்படாதே சரி பண்ணிடலாம்...'' என்றவர் வெற்றிலையில் லேசாக விளக்கெண்ணை தடவி, அடுப்பில் லேசாக சூடேற்றி, குழந்தையின் வயிற்றில் ஒட்ட வைக்க அவள் கண்களில் மிரட்சி வந்தது.

''அம்மா... இதெல்லாம்.. எனக்கு பழக்கம் இல்லை...'' என்று சொல்லும் போதே நீண்ட நாட்களுக்கு பிறகு வந்து இருக்கிறோம். எதையாவது சொல்லி ஏடாகூடமாகி விடக் கூடாது என்ற பயமும் இருந்தது.

''பயப்படாதே லாவண்யா. குழந்தை பற்றிய அக்கறை எனக்கும் இருக்கு. இதெல்லாம் கை வைத்தியம்



தான். ஒரு மணி நேரம் பார்த்துட்டு டாக்டரிடம் அழைத்து செல்லலாம்.''

''வசந்தி வேஸ்லின் இருந்தால் எடுத்து வா'' என்று வாங்கி அதை குழந்தையின் பின்புறம் தடவி மசாஜ் பண்ணி விட குழந்தை சுகமாக அவரின் மடியில் படுத்து இருக்க அழுகை நின்று இருந்தது. கிஸ்மிஸ் பழத்தை தண்ணியில் ஊற வைத்து, அதை கசக்கி, அந்த சாற்றினை எடுத்து குழந்தைக்கு கொடுத்தார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் தொடர்ந்து நடந்த வைத்தியங்களில் குழந்தையின் அழுகை குறைந்ததோடு கழிவுகளும் வெளியேற, லாவண்யாவிற்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

''குழந்தை வெளி இடத்தில் நிறைய நேரம் இருந்தால் அசௌகரியமா இருக்கும் என்பதற்காக தான், உன்னை ரெஜிஸ்ட்ரார் அலுவலகம் செல்ல வேண்டாம் என்று சொன்னேன்'' என்று அக்கறையோடு அவர் விளக்கம் சொல்ல அவளுக்குத் தூக்கி வாரி போட்டது. வயதில் அவ்வளவு பெரியவர் தன் செயலுக்கு விளக்கம் சொல்லி தன்னிடம் மன்னிப்புக் கேட்கிறாரா?

குழந்தை அழுதால் அவளின் தாய் என்ன செய்வார் என்று கடந்த ஆறு மாதங்களாகப் பார்த்துக் கொண்டு இருப்பவளுக்கு நன்றாகத் தெரியும்.

''குழந்தை அழுது கொண்டே இருக்கு பாரு. சீக்கிரம் குழந்தைகள் நல மருத்துவரை போய் பாரு'' என்று ஒரே வாக்கியத்தில் பொறுப்பை முடித்து சில ஆயிரங்களை அவள் கையில் திணிக்கக் கூடும். அவரின் அன்பு பணம் என்ற அளவுகோலால் அளக்கப் படுவது. ஆனால் இவர்...

குழந்தை சில நிமிடங்கள் அழுததுமே துடித்து போகிறார். அவனுக்கு என்ன வேண்டும் என்று பார்த்து சமைக்கிறார். தாய் பால் அருந்தும் குழந்தை என்பதால் தனக்குமே சில கட்டுபாடுகளை விதிப்பவர்.

குழந்தை இங்கே ஆரோக்கியமாக இருப்பதை அவளால் உணர முடிந்தது. அதுவும் இன்று குழந்தையின் ஆரோக்கிய குறைவை கூட மன அழுத்தம் இன்று சமாளிக்க முடிந்தமைக்கு இவரின் ஆறுதல் மொழிகள் காரணம் கண்களில் நீர் பணித்தது.

''அம்மா, குழந்தைக்கு ஒரு பிச்சனை என்றதும் இருந்த இடத்தில், நேரம் காலம் பார்க்காமல் கை வைத்தியம் செய்து, உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியலை. தாங்க்ஸ் அம்மா'' என்று கண்களில் நீர் துளிர்க்க கை கூப்பி நன்றி சொன்னவளை வியப்புடன் பார்த்தார் சாரதா.

''பைத்தியம். அது உன் குழந்தை மட்டும் இல்லை. இந்த வீட்டோட வாரிசு இல்லையா? அதோட நலனில் எனக்கு அக்கறை இல்லையா? நீ எனக்கு நன்றி சொல்கிறாய்? காலையில் சீக்கிரமே எழுந்தது அலுப்பாக இருக்கும். குழந்தை தூங்கும் போதே நீயும் கொஞ்ச நேரம் படுத்து எழுந்திரி'' என்று அன்போடு தலையை வருடி சொல்ல லாவண்யாவின் மனம் மேலும் கசித்து உருகியது.

## 31

வடபழனி கோவிலில் திருமணம் முடிந்த பின்பு கோடம்பாக்கம் பதிவாளர் அலுவலகத்தில் அதனை



பதிவு செய்துவிட்டு பல்லாவரத்தில் அவர்களின் வீட்டில் இருவரையும் இறக்கி விட்டு, காவ்யாவை தன்னுடன் அழைத்து சென்று விட்டான் கார்த்திக்.

''கொஞ்ச நேரம் இங்கே ரெஸ்ட் எடுத்து கொண்டு, மதிய சாப்பாட்டுக்கு அங்கே வந்துடுங்க'' என்று சொல்லி அழைப்பையும் விடுத்து விட்டுச் சென்ற கார்த்திக்கை வாசல் வரை வந்து வழி அனுப்பினான் தனஞ்செயன்.

''என்ன ஆனந்தி, உங்க வீட்டுக்கு சென்று இருந்தால் வீடு நிறைய உறவினர்கள் இருந்து இருப்பாங்க. இங்கே வீடு பெரிதாக இருந்தாலும் உறவு கொஞ்சம் கம்மி தான். உனக்கு ஒன்றும் வருத்தம் இல்லையே?'' என்று விசாரித்தான்.

''இது என்ன தெரியாத விஷயமா? இந்த நிலை பார்த்து தானே காவ்யாவின் மேல் எனக்கு அக்கறையே கூடுதலாக வந்தது. எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை தனா'' என்று சொல்ல அவன் சீட்டியடித்தான்.

''ஆஹா! பார்த்து பழகிய இந்த மூன்று வாரங்களில் மேடம் என்னை பேர் சொல்லி அழைக்கிறாங்கப்பா'' என்று சொல்லிச் சிரிக்க அவள் முகம் சிவந்தாள்.

''சும்மா கேலி பண்ணாதீங்க. ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். அது எமொஷனலான சூழ்நிலை என்பதால் உங்க மனத்தில் பதிந்து இருக்காது. எனக்கு வருத்தம் இல்லை. உங்க அத்தை மாமா கல்யாணத்திற்கு வந்ததே சந்தோஷமா தான் இருந்தது. அதுக்கு மேலே அவங்க செய்வாங்க என்று நாம் எதிர்பார்ப்பது நியாயம் இல்லை. என்ன இருந்தாலும் அவங்க பொண்ணு இடத்தை நான் பறித்து கொண்டேன் என்ற எண்ணம் கொஞ்சம் அவங்க மனசில் இருக்கும் தானே?''

"நீ என்ன சொல்ற?"

"உண்மை தானே? அது அவங்க முகத்தில் எழுதி ஒட்டாத குறையா இருக்கு. ஏற்கனவே வினோதினி இறந்து விட்டாலும், சவிதா மூலமாக அவர்களின் ஆதிக்கம் தொடரும் என்று நினைத்து இருப்பாங்க. பேத்தியின் நிலை என்ன ஆகுமோ என்ற கவலையும் இருக்கும் அல்லவா?"

"அப்படி எல்லாம் நீ கற்பனை கூட பண்ணி விடாதே. அவங்களுக்கு காவ்யா மேலே எல்லாம் அக்கறை இல்லை. அப்படி இருந்து இருந்தால் அவள் பெரியவளான செய்தி சொன்னதும் ஓடி வந்து இருக்க மாட்டாங்களா? இந்த சொத்தை யாரோ அனுபவிப்பதா என்ற பொறாமை தான் காரணம்..."

"அப்படி எல்லாம் நீங்களாக எதையாவது கற்பனை பண்ணக் கூடாது தனா."

"நான் கற்பனை பண்ணவில்லை. அத்தையும் மாமாவும் வடபழனி கோவிலுக்கு நம் கல்யாணத்திற்கு வந்ததை பெருமையாக சொன்னாயே? இதே அத்தையும் மாமாவும், ஒரு வாரம் முன்பு வரை, அவர்களின் பெண் சவிதாவை என்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி வற்புறுத்தி வந்தவர்கள்..."

"அதை ஏற்கனவே சொல்லி இருக்கிறீர்கள் தானே?"

"ஒரே வாரத்தில் நிலைமை தலைகீழாக மாறியதற்கு என்ன காரணம் தெரியுமா? நான் உங்க வீட்டை வாங்க தேவைப்படும் என்பதற்காக அவர்களின் நிறுவனத்தில் இருந்த பங்குகளை அவர்களுக்கே விற்று விட்டேன். வேண்டும் என்றே தான் செய்தேன். அது அவர்களின் உள்ளே இருக்கும் எண்ணத்தை தோல் உரித்து காட்டி



விட்டது. மாப்பிள்ளை ஓட்டாண்டியாகி விட்டானே என்று கேலி பேசிச் சிரிக்கிறார்கள். நல்லவேளை நாங்க தப்பித்தோம் என்று புறம் பேசுகிறார்கள். இதில் இருந்து அவர்களின் அக்கறையும் பச்சோந்தி மாதிரி நிறம் மாறும் மனசும் தெரியலையா உனக்கு?"

"என்னால் உங்களுக்கு நிறைய சிரமம் என்று நினைக்கிறேன்" என்று சொன்னவளின் கன்னங்களை இரண்டு கைகளாலும் பற்றி நிமிர்த்தி சில கணங்கள் முறைத்தான் தனஞ்செயன்.

"என்னை ஒரு நிமிஷம் நிமிர்ந்து நல்லா பார்" என்று சொல்ல அவள் சங்கடத்துடன் பார்த்தாள்.

"என்னை பார்த்தால் ரொம்ப சிரமப்பட்டோ, அல்லது வேறு வழி இன்றி வலுக்கட்டாயமா உன்னைக் கல்யாணம் செய்து கொண்டதை போல தோன்றுகிறதா?" என்று ஆழ்ந்த அழுத்தமான குரலில் கேட்க சில கணங்களுக்கு பின்பு மறுப்பாகத் தலை அசைத்தாள்.

"ஒரு விஷயம் தெரிந்து கொள் ஆனந்தி. உன்னை உனக்காகவே தான் விரும்பி திருமணம் செய்து கொண்டேன். உன்னைப் பார்க்க நேர்ந்ததற்கு ஒரு காரணமாக காவ்யா இருந்து இருக்கலாம். ஆனால் அவளுக்காக நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ளவில்லை. அவளின் பாதுகாப்பிற்காக நீ வேண்டும் என்று நினைத்தால், உனக்கு பள்ளியில் கொடுக்கும் சம்பளத்தை விட அதிகமாக கொடுத்து இங்கே வேலை கொடுத்து இருந்தால் போதுமே? அதுக்காக உன்னைக் கல்யாணம் பண்ணித் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதை முதலில் தெரிந்து கொள்" என்றவன் குரலில் காதலும் கனிவும் இருந்தது.

''என்ன சத்தமே காணோம்? ஏதாவது பேசு. நாம் யாருடைய தொந்தரவும் இல்லாமல் மனசு விட்டுப் பேசுவதற்காகத் தானே கார்த்திக் இங்கே தனியா விட்டுட்டு போனான்.''

''என்ன சொல்லணும்?'' என்றவளின் குரல் தடுமாறியது.

''உனக்கு என்னை பிடிச்சு இருக்கா என்று சொல்லாமே...?''

''அது நான் சொல்லாமலே உங்களுக்கு தெரிந்து இருக்குமே...'' என்று அவனை மாதிரி பாவனையாக சொல்ல அவன் சிரித்தான்.

''டீச்சர் அம்மாவுக்கு பேசக் கற்றுக் கொடுக்கணுமா என்ன?'' என்றவன் கரங்கள் அவளின் தோள்களை பற்ற அவள் உடல் ஒரு முறை சிலிர்த்தது.

''ஆனந்தி, உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணுமே.''

''எனக்கு குழந்தை வேண்டாங்க'' என்று முடிக்க அவன் வியப்புடன் பார்த்தான்.

''ஏன் ஆனந்தி, நான் தள்ளி போட வேண்டாம் உடனே பெற்று கொள்ளலாம் என்று சொல்ல வந்தேன்'' என்றவன் குரலில் கேள்வி இருந்தது.

''காவ்யாவின் வயதுக்கும் அடுத்த குழந்தைக்கும் நிறைய இடைவெளி இருக்கு. இன்னொரு குழந்தை வந்தால் எனக்கும் இரண்டு ஆண்டுகள் காவ்யா விரும்பிய அளவு கவனிக்க இயலாமல் போகும். அது மட்டும் இல்லாமல் இரண்டு குழந்தைகளுக்குமே அது மன ரீதியாக நிறைய பாதிப்புகளை ஏற்படுத்தும். ஐந்து



ஆறு வயது என்றால் இன்னொரு குழந்தை பற்றி யோசிக்கலாம். இப்ப வேண்டாம் தனா...'' என்று சொல்ல அவன் வருத்தமாக பார்த்தான்.

''உனக்கு என்று ஒரு குழந்தை வேண்டும் என்ற ஆசை இருக்கலாம் இல்லையா?''

''எனக்கு என்று ஒரு குழந்தை ஏற்கனவே இருக்கே? இந்தப் பேச்சு வேண்டாம். போதுமே. காவ்யாவுக்கு நான் தாய் தான் தனா'' என்று சொல்ல அவன் நெகிழ்ந்து போனான். அவளின் உறுதியான முடிவிலும் அது சொன்ன வார்த்தைகளில் மட்டும் அல்லாமல், அவளின் அந்த அன்பான தனா என்ற அழைப்பிலும் நெகிழ்ந்தான்.

''உங்களுக்கு என்னை ஏன் பிடித்தது தனா?''

''இவ்வளவு நேரம் வேறென்ன சொன்னேன்?''

''பிடித்தது என்று சொன்னீங்க. ஏன் பிடித்தது என்று சொல்லவில்லையே?''

''என் மகளை அக்கறையோடு பார்த்துக் கொண்ட அன்பு பிடித்தது. உன் போனை எடுக்கவில்லை என்றதும் உனக்கு வந்த கோபம் பிடித்தது. வாசலில் நிற்க வைத்து என்னை டிரைவரா என்று குறுக்கு விசாரணை செய்த தைரியம் பிடித்தது. கையிருப்பு கம்மியாக இருந்தாலும் செய்வதை திருத்தமாக செய்யும் அந்த பண்பு பிடித்தது. ஒரு பிரச்சனை என்றதும் துப்பறிந்த துணிச்சல் பிடித்தது. அதை என்னுடன் பகிர்ந்து கொண்ட நேர்மை பிடித்தது. அழகு பிடித்தது. அன்பு பிடித்தது. ஆனந்தி என்ற பேர் கூட பிடித்தது. வேறென்ன சொல்லணும்?'' என்று அடுக்கிய தனஞ்செயனை அவள் கண்கள் விரியப் பார்த்தாள்.

''கண்ணை விரித்துப் பார்த்தால் மட்டும் போதாது. உனக்கு என்னைப் பிடிச்சதா? எப்போ எப்படி என்று நீயும் சொல்லணும். கல்யாணம் முடிஞ்ச பிறகு கூடச் சொல்லாமல் அமைதியா டிமிக்கி அடிச்சால் எப்படி?'' என்று வம்பிழுக்க அவளின் முகம் செவ்வானத்தின் நிறம் கொண்டது.

''ஒரு இக்கட்டான சூழ்நிலையில் கூட காவ்யா உங்க மேலே வைத்த அன்பு என்னை மயக்கியது. உங்க மதிப்பில் கீழே இறங்க அவள் எவ்வளவு யோசித்தாள் தெரியுமா? அந்த அன்பு அவள் மனதில் வரணும் என்றால் நீங்க இத்தனை ஆண்டுக்ளில் அவளை எந்த அளவு கவர்ந்து இருக்கணும்? பணம் மட்டும் அந்த அன்பை கொடுக்க முடியாதே? முதன் முதலில் நீங்க எங்க வீட்டுக்கு வந்த அப்போது காவ்யாவை நீங்க நெஞ்சோடு சேர்த்து அணைத்து அமர்ந்து இருந்த காட்சி என் வாழ்நாளில் நான் உயிருடன் இருக்கும் வரை மறக்கவே மறக்காது தனா. அவ்வளவு அழகான காட்சி அது. அது ரொம்ப ரொம்பப் பிடிச்சு இருந்தது. அதற்கு முன்னால் என் மனசில் இருந்த கோபத்தை எல்லாம் போக்கி விட்டது தெரியுமா?'' என்று உணர்ச்சியுடன் சொல்ல அவன் புன்னகை செய்தான்.

''உண்மை தான் ஆனந்தி. நானும் அவளும் க்ளோஸ் தான். தினமும் காலையில் ஒரு மணி நேரமாவது இருவரும் விளையாடுவோம்.''

''அந்த ஸ்வாகத் ஹோட்டலில் உங்க கண்ணில் பார்த்த கண்ணீரை என்னால் தாங்கவே முடியலை தனா. அங்கேயே உங்களை கட்டி அணைத்து தலை கோதி ஆறுதல் சொல்ல மனசு துடித்தது தெரியுமா? நீங்க ரெண்டு



பேருமே ஒருவர் மேலே ஒருவர் நிறைய அன்பு வச்சு இருக்கீங்க. அது எனக்கு ரொம்ப பிடிச்சது. பண ரீதியா உதவி பண்ண இருந்தது அப்புறம் தானே? இந்த வீட்டை, வாசலில் இருந்த ஊஞ்சலைக்கூட எனக்கு ரொம்பப் பிடிச்சு இருந்தது. இந்த வீட்டுக்குள் நுழையும் போது என்னை அறியாமலே ஒரு உரிமை உணர்வு வந்தது. நான் பணத்துக்கு ஆசைப்படும் ஆள் இல்லை. ஆனால் இதை எப்படிச் சொல்வது என்று தெரியலை தனா'' என்று சொல்ல அவன் சிரித்தான்.

''நம்பாமல் என்ன ஆனந்தி? இது தான் விட்ட குறை தொட்ட குறை போல. எனக்கும் பரஸ்பரம் அந்த உணர்வு நெருக்கம் தோன்றியது.''

''இருந்தாலும் பசி ருசி உணவகத்தில் உங்க பிடிவாதம் ரொம் ஜாஸ்தி தான். அப்படித்தான் இப்படி பிடிச்சு ரெண்டு பேர் உட்காரும் சீட்டில் மூன்று பேர் உட்காரணுமா? இதுல புடவை தலைப்பை வேறு பிடிச்சு இழுத்தீங்க தலையில் நல்லா ஒரு கொட்டு வைக்கணும் போல வந்தது தெரியுமா?'' என்று கேட்க அவன் சத்தமாகச் சிரித்தான்.

''அய்யோ மிஸ் பயமா இருக்கே? கல்யாணம் ஆகி முதல் நாள். நம்ம இரண்டு பேர் மட்டும் தனியா இருக்கோம். இந்த நேரத்தில இதை தான் சொல்லணுமா? வேறே ஏதாவது நல்ல வார்த்தை சொல்லக் கூடாதா?''

''என்ன சொல்லணும்?''

''ஐ லவ் யூ சொல்லலாம்...''

''இல்லை என்றால் தெரியதாக்கும்?''

''தெரிந்தால் சொல்லக் கூடாதாக்கும்?''

''சொல்லலாம்...''

''பின்னே சொல்லு...''

''ஐ லவ் யூ...''

''என்ன சொன்னாய்? சத்தமா திருப்பிச் சொல்லு.''

''ஏன் உங்களுக்குக் காது கேட்காதா?'' என்றவளின் குறும்பில் அவனும் தன் வயதை மறந்தான்.

''ஏன் உன் வாய் பேசாதா?'' என்று கேட்டபடி அவளை அருகே இழுக்க அவன் மேல் சரிந்து மார்பில் புதைந்த வாறு, ''அது நீங்க அடுத்து என்ன செய்வீங்க என்பதைப் பொறுத்தது'' என்றவள் கண்களில் அழைப்பு இருக்க, அதை ஏற்று அவளின் முகம் நோக்கி குனிந்தான்.

''இரவில் காவ்யாவை இங்கே அழைத்து வந்து விட வேண்டும் ஆனந்தி...'' என்று சொல்லியபடி அவளின் கன்னத்தில் மென்மையாக முத்திரை பதிக்க அவள் கண்களை மூடிக் கொண்டாள்.

''அதனால்... இப்போதே'' என்று இழுத்தவன் பேச்சு நின்று போக, விரல்களும் இதழ்களும் வேலை செய்ய ஆரம்பிக்க, அவர்களின் இல்லறம் நல்லறமாக அங்கே துவங்க அந்த வினாடியில் சம்சார சங்கீதம் உதய மானது.

## 32

மறுநாள் பொழுது விடிந்தால் வசந்தியின் திருமணம் என்றதால் வீடு களேபரமாக இருந்தது.



''மண்டபத்திற்கு எடுத்துப் போக வேண்டிய சாமான் களை எல்லாம் எடுத்து வைத்து விட்டாயா ஆனந்தி? சந்தன கும்பா இல்லை. குங்குமச் சிமிழ் இல்லை என்று அங்கே வந்து குறை படிக்கக் கூடாது. எல்லாம் நினைவு படுத்தி எடுத்து வச்சுக்கோ'' என்ற அம்மாவின் குரல் கேட்டு வேகமாகத் தலை அசைத்தாள்.

''எல்லாமே மொத்தமா பேசி தான் பணம் கொடுத்து இருக்கேன். எங்களை எதுவும் கேட்கக் கூடாது என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். நமக்கு வேண்டிய உடை, நகைகள், பணம். இதை மட்டும் எடுத்துக் கொண்டு போனால் போதும்'' என்று ஆனந்தி சொல்லும்போதே கார்த்திக் அருகே வந்தான்.

''மாமாவிடம் நான் அவ்வளவு தூரம் சொல்லிவிட்டு வந்த பிறகும் நீ இழுத்துப் போட்டு இவ்வளவு செலவு பண்ணுவது எனக்குச் சங்கடமா இருக்கு அக்கா'' என்று சொன்னவனைப் பார்த்து வாஞ்சையுடன் புன்னகைத் தாள்.

''நீ வேண்டாம் என்று சொன்னதும் சரி. மாமா இப்ப செய்வதும் சரி. மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. நம்ம வசந்திக்கு நான் செய்யாமல் யார் செய்வா?'' என்று அவனின் தலையை வருடினாள்.

''நீ திரும்பி வந்து அம்மாவுடன் கூட இருக்கிறேன் என்று சொன்னாய் பார்த்து தான் என் மனசுக்கு ரொம்ப திருப்தியா இருந்ததுடா'' என்று அவனின் கை பிடித்து நெகிழ்ச்சியுடன் சொல்ல அவன் லாவண்யாவை அழைத் தான்.

''நீ நன்றி சொல்லணும் என்று நினைத்தால் இவ ளுக்கு சொல்லு. இரண்டு வருத்தமாக அல்லாடிக்

கொண்டு இருந்த மனத்தை ஒரு நிலைக்குக் கொண்டு வந்து இன்று நான் இந்த முடிவை எடுத்ததற்குக் காரணம் இவள் தான்'' என்று பெருமையாகச் சொல்ல ஆனந்தி லாவண்யாவின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''உண்மையிலேயே எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ள அவ்வளவா ஆர்வம் இல்லாததற்கு காரணமே, நான் இந்த வீட்டை விட்டு வெளியேறி விட்டால் அம்மாவை யார் பார்த்துக் கொள்வார்கள் என்ற கவலை என் மனத்தை அரித்துக் கொண்டு இருந்தது தான். ஆனால் இப்போ மனசு நிறைஞ்சு இருக்கு லாவண்யா. ரொம்ப தாங்க்ஸ்'' என்று பெருமிதமாகச் சொல்ல அவள் சட்டென்று அவளின் கால்களில் விழுந்தாள்.

''ஹேய் என்ன ஆச்சு லாவண்யா? எழுந்திரி. நல்லா இரும்மா நல்லா இரு ஏன் அழுகிறாய்?'' என்று பதட்டத்துடன் அவளைத் தூக்கி நிறுத்த அங்கங்கே வேலையாக இருந்த வசந்தியும் சாரதாவும் அந்த இடத்திற்கு வந்தனர். குழப்பத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அவர்கள் நின்ற லாவண்யா கண்களைத் துடைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தாள்.

''அம்மா, அக்கா, வசந்தி, நீங்க எல்லோருமே என்னை மன்னிக்கணும். இந்த ஒரு வருஷத்தில, கார்த்திக் இங்கே வராததற்கு காரணம் நான் தான். எனக்கு உங்களைப் பற்றிச் சரியா தெரியாததால, நான் அவரை இங்கே விட்டால், நீங்க அவரை மூளை சலவை செய்து, பெங்களூருக்கு அனுப்பாமல் இங்கேயே பிடித்து வச்சுடுவீங்க என்ற பயத்தில...'' என்று திக்கித் திணறி சொன்னவள் அதற்கு மேல் தாங்க மாட்டாமல் தரையில் அமர்ந்து முட்டியில் முகம் புதைத்து விசும்ப ஆரம்பித்தாள்.



''நல்ல விஷயம் நடக்கப் போகும் நேரத்தில் ஏன் இப்படி கண்ணை கசக்கி சீன் போடுகிறாய்? முதலில் எழுந்திரி. எதுவா இருந்தாலும், நாளைக்குக் கல்யாணம் முடிந்த பிறகு பேசிக்கலாம், என்று அதட்டினான் கார்த்திக்.

''சும்மா இருடா. அவளே மனசு தாங்காமல் அழுது கொண்டு இருக்கிறாள் அவளை மிரட்டுகிறாய்?'' என்று சாரதா அதட்ட திகைப்புடன் விழித்தான்.

''லாவண்யா, கண்ணைத் துடை நான் கூட உங்க ரெண்டு பேரையும் இங்கே வராதே என்று சொன்னேன். அதெல்லாம் கோபத்தில் பேசுவது தான். நீர் அடித்து நீர் விலகாது. உன் மேலே எங்களுக்கு எந்தக் கோபமும் இல்லை. எழுந்திரி. முகத்தைக் கழுவு. மண்டபத்துக்கு நல்ல நேரத்தில் கிளம்பலாம்'' என்று மருமகளை தோளைப் பற்றி எழுப்பினார் சாரதா.

''நீங்க சொன்னதில் தப்பில்லைம்மா கோபம் வந்தால் எல்லோரும் பேசுவது தான் எங்க அம்மா கூடப் பேசினாங்க. அம்மா எனக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்கிறேன், என்று சொன்னதும் நான் வீட்டில் கார்த்திக் பற்றி சொன்னதைக் கேட்கவில்லை. அவங்களுக்கு இவரின் பொருளாதார வசதி குறைவு தான் பெரிய விஷயமா தெரிஞ்சது. மறந்துட்டாங்க.''

''ஹய்யோ, கல்யாணத்திற்கு உங்க அம்மாவும் சம்மதிக்கலையா?''

''இல்லை அக்கா. நாங்களா அலுவலக நண்பர்கள் மூலமாக தான் திருமணம் செய்து கொண்டோம். என்னை உடனே கல்யாணம் ஏற்பாடு பண்ணியதால் நீ என்னை இன்றே கல்யாணம் பண்ணி கொள்ளலை என்றால் நான் செத்துப் போய் விடுவேன் என்று

சொன்னதால் வேறே வழி இல்லாமல் அவசரமா எங்க கல்யாணம் முடிஞ்சுடுச்சு'' என்று லாவண்யா சொல்ல மற்ற மூவரும் திகைப்புடன் பார்த்தனர்.

''நான் கண்ணால் பார்க்கும், என் மனசில் நினைக்கும் விஷயத்தைக் கூட உடனே செய்து கொடுத்த என் பெற்றோர்களே என் விருப்பத்தை மதிக்கவில்லை என்ற போது, நீங்களும் இவரின் விருப்பத்தை மதிக்க மாட்டீங்க என்று நானாக நினைத்துக் கொண்டேன். அது தப்பு என்பது இங்கே வந்து இருந்த ஒரு வாரத்திலேயே நல்லாப் புரிந்து கொண்டேன் அக்கா...''

''உங்க அம்மா உனக்கு சப்போர்ட் இல்லை என்று எனக்குத் தெரியாது இல்லை என்றால் உன் பிரசவத்தின்போது நான் வந்து இருப்பேனே'' என்று வருத்தத்துடன் சாரதா சொல்ல அவள் புன்னகை செய்தாள்.

''இல்லம்மா கல்யாணம் தான் அவங்க சம்மதம் இல்லாமல் நடந்தது. அதன் பிறகு கரு உருவானது தெரிந்த உடனே வரப் போக இருந்தாங்க. ஆனால் அவங்களுக்கு உங்களை மாதிரி இந்த அளவு கை வைத்தியம் தெரியாது. பணம் கொடுப்பாங்க. குழந்தை வளர்ப்பில் அட்வைஸ் எதுவும் கிடைக்காது'' என்று சொல்ல ஆனந்தி ஆறுதல் படுத்தினாள்.

''தெரிந்தால் சொல்ல மாட்டாங்களா லாவண்யா? அதை எல்லாம் மனசில் வைத்துக் கொள்ளக் கூடாது.''

''அக்கா நீங்க எல்லாத்தையும் ரொம்ப பாசிடீவா எடுத்துக் கொண்டு பேசுவது எனக்குச் சந்தோஷமா இருக்கு உங்களை எல்லாம் இந்த ரெண்டு வருஷமா வந்து பார்க்காமல் தவிர்த்து விட்டேனே என்று மனசுக்குக் கஷ்டமா இருக்கு அக்கா. என்னை எல்லாரும் தயவு செய்து மன்னிச்சுடுங்க'' என்று கைகூப்பினாள்.



''அதெல்லாம் முடிஞ்சு போன கெட்ட நேரம் அதைப் பற்றி இனிமேல் பேச வேண்டாம் விடு'' என்று சாரதா அதட்ட அவள் தலை அசைத்தாள்.

''இல்லைம்மா. இந்த ஒரு முறை நான் முழுசா என் மனசில் என்ன இருக்கு என்று சொல்லி விடுகிறேன். வீட்டில் வயது வந்த பெண்கள் இரண்டு பேர் இருக்கும் போது கல்யாணம் செய்து கொண்டது எனக்கு கில்ட்டியா இருந்தது. இங்கே வர யோசித்தோம். அத்துடன் உடனே குழந்தை வந்து விட்டது. உடல்நலக் குறைவுகள், அம்மாவின் உதாசீனம், வேலை பளு, எல்லாமே சேர்ந்து பிரிவு நீண்டு விட்டது. பிரசவத்துக்கு நீங்க வரவில்லை என்றதும் உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை என்று நானே நினைத்துக் கொண்டேன்...''

''.... இங்கே வந்த பிறகு தானே எங்க மேலே நீங்க கோபத்தை பிடித்து வைத்து கொள்ளவில்லை என்பது புரிஞ்சது. என் பையன் மேலே எவ்வளவு ஆசை வச்சு இருக்கீங்க என்று புரிஞ்சது. இதெல்லாம் தெரியாமல் கண்டதையும் கற்பனை பண்ணி, உங்களை எல்லாம் இத்தனை நாள் தள்ளி வச்சதுக்கு என்னை மன்னிச்சுடுங்க'' என்று உணர்ச்சி பெருக்குடன் சொல்ல அவள் கண்களில் மட்டும் அல்லாமல் அங்கே இருந்த அனைவரின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

'பெண்களுக்குத் திருமணம் முடிப்பதற்கு முன்பு அவன் கல்யாணம் பண்ணிக் கொண்டதில் சின்னக் கோபம் இருந்தது உண்மைதான். ஆனால் இப்ப அதுவும் மாறி விட்டது. அவங்கவங்க தலையில் என்ன எழுதி இருக்கோ அது நடக்கும். எப்படி இருந்தாலும் கார்த்திக்கை கல்யாணம் பண்ணியதையோ, இந்த வீட்டு மருமகள்

என்பதையோ மாற்ற முடியுமா?'' என்று கன்னத்தை அன்போடு வருடினார் சாரதா.

''தாங்க்ஸ் அம்மா. உங்களுக்கு நிச்சயம் நல்ல மருமகளா இருப்பேன்.''

''அந்த நம்பிக்கை எனக்கும் இருக்கு. நாளைக்கு வசந்தி கல்யாணத்தில் நீ தான் பெற்றவர்கள் ஸ்தானத்தில் நின்று கல்யாணச் சடங்குகளை பண்ணப் போகிறாய். நீ தான் இந்த வீட்டுக்கு ராணி. இங்கே எல்லாமே உன் இஷ்டப்படி தான் நடக்கும்.''

''ஆனால் அம்மா நீங்க இப்ப தானே இந்த வார்த்தையைச் சொல்கிறீங்க ஆனந்தி அக்கா கல்யாணத்தின் போது இதே வார்த்தையைச் சொல்ல வாய் வரலை தானே? அன்னிக்கு ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் கூட என்னைப் போக வேண்டாம் என்று சொல்லிட்டீங்களே'' என்று மனதில் உறுத்திக் கொண்டு இருந்ததைக் கேட்க அவர் சிரித்தார்.

''அட அசடே! இதை மனசில் வைத்துக் கொண்டு தான் குழந்தை அழும் போதுகூட என்னிடம் தர மறுத்தாயாக்கும்? ஆனந்தி அவனுக்கு அக்கா இல்லையா? அவளுக்கு நீங்க சடங்கு செய்ய முடியாது. ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் போக வேண்டாம் என்று சொன்னதற்குக் காரணம் நீ குழந்தையோடு அலைய வேண்டாம் என்ற அக்கறையில்தான் என்று சொல்ல அவள் ஓடி வந்து சாரதாவின் கால்களில் விழுந்தாள்.

''சாரிம்மா நான் வழக்கம் போல இதையும் தப்பா நினைத்துக் கொண்டேன்.''

''இனிமேல் எதையும் மனசுல வைத்துக் கொள்ளாமல் உடனுக்குடன் கேட்டுத் தெளிவுப் பண்ணி விடு. ஓகே?



ஆனந்தி வீட்டுக்கு மூத்தவள் என்றாலும் நாளைக்கு சடங்குக்கு கார்த்திக்கை கேட்கிறேனே? ஆனந்தி பொறுப்பாக இருந்தாலும் அவள் இன்னொரு வீட்டுக்கு உரிமையானவள் புரிஞ்சுதா'' என்று சொல்லி அவளின் கன்னத்தைத் துடைத்து விட்டார்.

''ஓகே ஓகே. மணியாச்சு. கல்யாண மண்டபத்துக்குக் கிளம்பும் உத்தேசம் உங்களுக்கு இருக்கா? இல்லை என்றால் ஜெய் மாமா இங்கே வந்து வசந்தியை கூட்டிட்டுப் போகச் சொல்லி போன் பண்ணனும் போல இருக்கு. எல்லோரும் முகம் கழுவி கல்யாண மண்டபத்துக்கு கிளம்பலாம். இனிமேல் அழுகைக்கு இடமே இல்லை. இங்கே சந்தோஷ சிரிப்பு சப்தம் மட்டும் தான் கேட்கணும்'' என்று கார்த்திக் மிரட்ட எல்லோரும் புன்னகை பூத்தனர்.

சம்சார சங்கீதம் அங்கே சுகமாக ஒலிக்க ஆரம்பித்தது.

# 33

மாலை எட்டு மணி அளவில் தனஞ்செயன் அலுவலக வேலை முடித்து வரும்போது போர்டிக்கோவில் ஊஞ்சலில் அமர்ந்து தன் வருகைக்காக காத்திருக்கும் மகள் மனைவியைக் காணோம் என்றதும் அவன் முகம் வாடியது.

திருமணம் ஆகி இந்த பதினைந்து நாட்களில் அவர்கள் இருவரும் வாசலில் எதிர் கொண்டழைத்து அவனை உள்ளே அழைத்துச் செல்வார்கள். அதில் ஒரு

பெருமிதம் அவனுக்கு. இன்று காணோமே? என்ன ஆச்சு என்ற கேள்வியுடன் உள்ளே வந்தவன், ''புஜ்ஜு, ஆனந்தி, எங்கே இருக்கீங்க?'' என்று குரல் கொடுத்தான்.

''நாங்க கவி ரூமில் ப்ராஜெக்ட் பண்ணிட்டு இருக்கோம். மேலே வாங்க'' என்ற ஆனந்தியின் குரல் கேட்டதும் இரண்டு இரண்டு படிகளாக தாவி ஏறி அங்கே சென்றான். அறை முழுவதும் ஸ்டேஷனரி பொருட்கள் மானாவாரியாக இறைந்து கிடந்தன.

''ஹேய் என்ன இது ரூமை இந்த பாடு பண்ணி வச்சு இருக்கீங்க?'' என்று கேலியாகக் கேட்க ஆனந்தி பெருமூச்சு விட்டாள்.

''இன்னும் இவள் சாப்பிடலை. நான் பண்ணித் தருகிறேன் என்றாலும் விடமாட்டேன் என்று தானே செய்கிறாள். நல்ல விஷயம் தானே என்று நானும் உடன் உட்கார்ந்து இருக்கிறேன். நீங்க கை கால் கழுவிட்டு சாப்பிடுங்க'' என்று சொல்ல அவன் முறைத்தான்.

''ஏன் நீ வரமாட்டாயா?'' என்ற செல்ல கோபம் அதில் தெரிய அவள் கண்களால் சமாதானம் சொல்ல, ''புஜ்ஜு, சாப்பிட்டு பண்ணலாம் குட்டி அப்பாவும் உங்களுக்கு ஹெல்ப் பண்றேன்'' என்று மகளை அழைத்து பார்த்தான்.

''ஜோக் அடிக்காதீங்கப்பா. ஸ்கூல் ப்ராஜெக்ட் பற்றி உங்களுக்கு என்ன தெரியுமா? அம்மா சொன்னாலும் ஒரு அர்த்தம் இருக்கு'' என்று சிரிக்க அவன் முறுக்கிக் கொண்டான்.

''வர வர நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து கொண்டு என்னை தனியா டீலில் விடுறீங்க'' என்றவன் குரலில் குறை இருந்தது.



''நாங்க உங்களை விலக்கி வச்சாலும் நீங்க ஏன் விலகிப் போறீங்க? ரெண்டு கை தட்டினால் தான் சப்தம் வரும். ஒரு கை ஓசை வெளியே தெரியாது. நீங்க வந்து எங்களோடு சேர்ந்துக்கோங்க'' என்று கணவனிடம் சவால் விட்ட காவ்யா அவளுக்கு கைகளை உயர்த்தி உள்ளங்கையில் தட்டி ஹை - பை கொடுத்தாள்.

''சூப்பர் பஞ்ச்ம்மா'' என்ற சிரிப்புடன் அவர்கள் வேலையில் மூழ்க சற்று நேரம் சப்தமே காணோம் என்றதும் திரும்பி பார்த்தார்கள். அவன் அங்கே இல்லை.

''என்னடா குட்டி அப்பாவை காணோம்? நான் போய் பார்த்துட்டு வரட்டுமா?''

''வரட்டும்மா. நீங்க இந்த படத்தை வெட்டி பண்ணிக் கொடுங்க. இங்கே ஒட்டணும்'' என்று அவளுக்கும் வேலை கொடுக்க அவள் தவிப்புடன் வாசலையும் மகளையும் மாறி மாறிப் பார்த்தபடி இருந்தாள். ஐந்து நிமிடங்களாகி இருக்கலாமோ என்னவோ?

ஆறாவது நிமிடம் ஆரம்பிக்கும்போது, முகம் கழுவி உடை மாற்றி இருந்தவன் தட்டில் நிறைய இட்லிகளும் சின்ன கிண்ணங்களில் சட்னி சாம்பாரும் எடுத்துக் கொண்டு வந்தான்.

''அம்மாவும் பொண்ணும் பிசியா பள்ளிக்கூட வேலையில் இருக்கங்க. அந்த வேலை எனக்குத் தெரியாது என்று ரிஜெக்ட் பண்ணிட்டீங்க. அதனால் எனக்குத் தெரிந்த வேலை செய்ய வந்து இருக்கேன் ரெண்டு பேரும் உங்க வேலையைப் பார்த்துக் கொண்டே ஆளுக்கு ஒரு வாய் சாப்பாடு வாங்கிக்கோங்க'' என்று கொஞ்சலாகச் சொல்ல விழிகளை இமைக்காமல் அவனைக் காதலுடன் பார்த்தாள் ஆனந்தி.

''ஹேய் கண்ணை சிமிட்டிக்கோ. இப்படி பார்த்தால் என்ன அர்த்தம்?'' என்று ரகசியமாக அவளின் காதருகே குனிந்து சொன்னவன் இதழ்களும் மீசையும் கன்னத்தில் உரசி குறுகுறுப்பூட்டியது.

''குட்டிம்மா மணியாச்சு. வாயில் தருகிறேன். சாப்பிட்டுக் கொண்டே வேலையைப் பாரு'' என்று மகளுக்கு ஊட்டியவன் இடையிடையே மனைவிக்கும் ஊட்ட அவளின் முகத்தில் வியப்பும், காதலும், பெருமிதமும் ஒவ்வொரு வாய்க்கும் கூடிக் கொண்டே போனது.

மரம் வெட்டுவதை தடுக்கும் விழிப்புணர்வு வாசகங்கள் தயார் பண்ணும் வேலை முடித்து அந்த போஸ்டரை தூரத்தில் வைத்துக் காட்டியபோது மகளின் வேலையை எண்ணி தனஞ்செயனுக்குப் பெருமையாகவே இருந்தது.

''ரொம்ப அழகா இருக்கு செல்லம்'' என்று மனமார பாராட்ட காவ்யா ஆர்வத்துடன் அவன் முகத்தைப் பார்த்தாள்.

''இந்த படம் பார்த்தால் உங்களுக்கு என்ன தோணுதுப்பா?''

''மரம் வெட்டுவது குறித்த விழிப்புணர்வு வாசகம் தானே புஜ்ஜூ? நல்லா இருக்கு கண்ணு.''

''அப்பா நீங்க கல்யாணத்துக்கு அப்புறம் ரொம்ப மாறிட்டீங்க'' என்ற குற்றம் சாட்டும் குரலில் காவ்யா சொல்ல தனஞ்செயன் ஆனந்தி இருவருக்கும் தூக்கி வாரிப் போட்டது. அவள் ஆனந்தியின் அறையில் படுப்பது வழக்கம். தனஞ்செயனின் அறைக்கு போவது வருவது இயல்பாக இருக்கும். இந்த ஒரு வாரத்தில் அவள் பள்ளிக்குச் சென்ற பிறகு, மதிய உணவிற்கு வரும்



வேளையில் அவர்களின் நெருக்கம் இருந்தது. இவள் என்ன சொல்கிறாள்? குழப்பத்துடன் பார்த்தனர்.

''அப்பா, இந்த மரங்கள் இருக்கும் போஸ்டர் பார்த்துக் கூடப் புரியலையா?'' என்று மீண்டும் கேட்க அவன் குழப்பத்தோடு இல்லை என்று தலை அசைத்தான்.

''ஹய்யோ...'' என்று சலித்துக் கொண்ட காவ்யா சன்னக் குரலில் ''தூரத்து மரங்கள் பார்க்குதடி. தேவதை இவளா கேட்குதடி'' என்று பாடியதும் அவன் முகம் பிரகாசம் அடைந்தது.

''அதைச் சொல்கிறாயா? நீ தான் என் தேவதை. இன்னிக்கு மட்டும் இல்லை புஜ்ஜூ. நீ வளர்ந்து உனக்குக் கல்யாணம் ஆகி உனக்கு ஒரு குழந்தை வந்தாலும் நீதான் கண்ணு என்னுடைய தேவதை'' என்று உணர்வுப் பூர்வமாக தனஞ்செயன் சொல்ல ஆனந்தி இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''என்ன புரியலையா? அப்பாக்கும் எனக்கும் இந்த பாட்டு ரொம்பப் பிடிக்கும். அப்பா சூப்பரா பாடுவாங்க தெரியுமா? சீக்கிரம் வர அன்னிக்கு என்னைத் தூங்க வைக்க இந்த பாட்டு பாடுவாங்க. ஒரு வாரமா அப்பா டிமிக்கி அடிச்சுட்டாங்க விடாதீங்க. நீங்களும் சொல்லுங்க'' என்று சொல்ல வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

''ஹேய் அவள் சும்மா சொல்கிறாள்.''

''பரவாயில்லை. நீங்க சுமாரா பாடினால் கூடப் போதும். இன்று பாடியே ஆகணும்'' என்று சொல்ல அவன் மகளை அழைத்துக் கொண்டு படுக்கை அறைக்கு வந்தான். அவளை நடுவில் படுக்க வைத்து விட்டு அருகே படுக்க, ஆனந்தி மறுபுறம் வந்து அமர்ந்தாள்.

மகளின் நெற்றியில் ஒரு முத்தம் வைத்தவன், ''இந்த பாடலின் ஆரம்ப வரி என்ன தெரியுமா ஆனந்தி?'' என்று

உணர்வுப் பூர்வமாகக் கேட்க ஆனந்தி ஆமோதிப்பாக தலை அசைத்தாள்.

''மகளைப் பெற்ற அப்பாக்களுக்கு தான் தெரியும் முத்தம் காமத்தில் சேர்ந்தது அல்ல என்று'' ரசனையான குரலில் ஆனந்தி சொல்ல, அவன் ஈர விழிகளுடன் ஆமோதித்தான்.

''நீங்களும் படுத்துக்கோங்கம்மா அப்பா பாட பாட தூக்கம் சுகமா வரும்'' என்று அவளின் கழுத்தில் கை போட்டு அருகில் இழுத்தாள் காவ்யா. காவ்யாவின் ஒரு பக்கம் படுத்தவன் இருவரின் மேலும் அணைப்பக கரம் போட்டு ஆழ்ந்த மென்மையான குரலில் பாட ஆரம்பித்தான்.

ஆனந்த யாழை மீட்டுகிறாய்
அடி நெஞ்சில் வண்ணம் தீட்டுகிறாய்
அன்பெனும் குடையை நீட்டுகிறாய்
அதில் ஆயிரம் மழை துளி கூட்டுகிறாய்
உந்தன் கைகள் பிடித்துப் போகும் வழி
அது போதவில்லை இன்னும் வேண்டுமடி
இந்த மண்ணில் இதுபோல் யாருமிங்கே
எங்கும் வாழவில்லை என்று தோனுதடி!

## 34



இரண்டு மாதங்களுக்குப் பிறகு...

மதிய உணவு இடைவேளையில் ஆனந்தியை தனஞ்செயன் அழைக்க, ''என்ன ஆச்சரியம்? வேலை



நேரத்தில் என் நினைவுகூட உங்களுக்கு வருகிறது?'' என்று கேலியாகக் கொஞ்சினாள்.

''இது அநியாயம். ஸ்கூல் நேரத்தில் போன் பண்ணித் தொந்தரவு பண்ணக் கூடாது. பசங்களுக்கு நான் முன் மாதிரியா இருக்கணும் என்று போனில் பேச எனக்கு தடா போட்டதை மறந்து விட்டு, இப்படி அபாண்டமா குற்றம் சொல்கிறாய்? இனி தினமும் பேசட்டுமா?'' என்று கொஞ்ச அவளின் முகம் மலர்ந்தாலும் அதை மறைத்து அவனை மிரட்டினாள்.

''இந்தக் கதை எல்லாம் வேண்டாம். ஏற்கனவே சொன்னது சொன்னது தான். இன்று போல அவசியமானதுக்கு மட்டும் போனில் கூப்பிட்டால் போதும்.''

''ஏன் இப்படி பிடிவாதம் பிடிக்கிறாய் ஆனந்தி? ரெண்டு நிமிஷம் பேசினால் ஒரு பூஸ்ட் குடிச்ச மாதிரி இருக்கும் தெரியுமா?''

''ஹையோ, அப்புறம் எனக்குக் கொஞ்ச நேரம் வேறே எதையுமே நினைக்க முடியாது. இது ஆபீஸ் மாதிரி இல்லைங்க. ஒரு நிமிஷம் வகுப்பறையில் வேறே சிந்தனை வந்தால் நல்லா இருக்குமா சொல்லுங்க. அதுவும் நீங்க பேசினால் சென்சார் போர்ட் பக்கத்தில் வச்சுக்கணும். பெரிய ரொமாண்டிக் ஹீரோ என்று நினைப்பு'' என்று திட்டுவது போல புகழாரம் சூட்ட அவன் சத்தமாகச் சிரித்தான்.

''நீ இப்படியே பேசிட்டு இரு. எனக்கு நான் சொல்ல வந்த விஷயமே மறந்திடும்'' என்று சிரிக்க அவளும் புலம்பலை நிறுத்தினாள்.

''சொல்லுங்க. என்ன விஷயமா போன் பண்ணினீங்க? வெளியே போவது எல்லாம் வார இறுதி மட்டும்தான். வேலை நாட்களில் நோ.''

''அப்பா! பயங்கர கண்டிப்பான ஆசிரியர் தான். உன் வகுப்பில் படிக்கும் பசங்க பாவம்'' என்று மேலும் வம்பு வளர்க்க அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''அப்படித்தான் சொல்லிக்கறாங்க. அதனால் தானே நீங்க இப்ப என்னிடம் பேசிட்டு இருக்கீங்க'' என்றதும் அவன் மேலும் சிரித்தான்.

''இப்படி பதிலுக்கு பதில் மடக்கி பேசுவது உற்சாகமாக இருக்கு. ஆனால் எனக்கு நிறைய அழைப்புகள் வந்து கொண்டே இருக்குது. அதனால் விஷயத்தைச் சொல்லி பேச்சை இத்துடன் முடிக்கிறேன். போன டிசம்பரில் தயார் பண்ணிய 'சுற்று சூழல் பாதுகாப்பு விளம்பர குறும்படம்' ஒன்றுக்கு மத்திய அரசு விருது கிடைச்சு இருக்கு. குடியரசு தின விழாவில் ஜனாதிபதி தலைமையில் நடக்கும் விழாவில் அந்த விருதை தரப் போறாங்க. அதைச் சொல்ல தான் போன் பண்ணினேன். என் வாழ்க்கையில் மீண்டும் வசந்தம் வர வைத்ததற்கு தாங்க்ஸ்'' என்று சொல்ல திக்கு முக்காடிப் போனாள் ஆனந்தி.

''ஹேய்! நான் என்ன செய்தேன்? அது உங்க உழைப்பிற்கு கிடைத்த வெற்றி. வாழ்த்துக்கள் தனா. ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு. இது மாதிரி இன்னும் நிறைய விருதுகள் நீங்க வாங்கணும்'' என்று நெகிழ்வுடன் சொல்ல, அவன் மகிழ்ந்தான்.

''அதுக்கு நீயும் கவியும் என் கூடவே கடைசி வர இருக்கணும். புஜ்ஜூக்கு சொல்லிடு. அம்மாவிடம் எல்லோரையும் கூட்டிட்டு இரவு சாப்பிட வெளியே போகலாமா என்று கேட்டுச் சொல்லு. வசந்தி ஜெய் ரெண்டு பேரையும் கூப்பிடு. ஓகே? பை'' என்று வைக்க அவளின் மனம் நிறைந்து இருந்தது.



கார்த்திக்கிடமும், வசந்தியிடமும், அம்மாவிடமும் பேசி தகவலைப் பகிர்ந்து கொண்ட பிறகு, சாரதா அவர்கள் அனைவரையும் வீட்டுக்கு வரச் சொல்லி அழைத்தார்.

''ஏற்கனவே வசந்தி மசக்கையா இருப்பதால் இங்கே இருக்கிறாள். அவளைப் பார்க்க தினமும் மாப்பிள்ளை வருகிறார். கார்த்திக் லாவண்யாவும் இங்கே இருக்க, நீங்களும் வந்துடுங்க. இன்னிக்கு பௌர்ணமி வேறு ஆனந்தி. நான் சாதம் கலந்து வைக்கிறேன். எல்லோரும் சேர்ந்து இங்கேயே மொட்டை மாடியில் சாப்பிட்டு விட்டுப் போகலாம். நீயும் வந்து ஒரு மாசம் இருக்குமே'' என்று சாரதா அழைப்பு விட அது அங்கீகரிக்கப்பட்டது.

வீட்டு மொட்டை மாடியில் எட்டு மணி அளவில், நான்கு ஜமக்காளங்கள் விரித்து குடும்பத்தில் இருக்கும் எட்டு மாத வினோத் முதல், அறுபது வயது சாரதா வரை அனைவரும் அங்கே கூடி இருக்க, அந்த இடமே பேச்சிலும் சிரிப்பிலும் கலகலத்தது.

''அம்மா எனக்கு புளியோதரை மட்டும் போதும்'' - வசந்தி.

''பாட்டி எனக்கு சர்க்கரைப் பொங்கல்'' - காவ்யா.

''அத்தை எனக்கு தேங்காய் சாதம்'' - ஜெய்.

''அம்மா கவிக்கு லெமன் ரைஸ் கொடுங்க'' - ஆனந்தி.

''எனக்கு தயிர் சாதம்'' - லாவண்யா.

''எனக்கு வடகம்'' - தனஞ்செயன்.

''பாட்டி மம்மம்'' என்று வினோத்.

என்று ஒரே நேரத்தில் கலவையான குரல்கள் ஒலித்து, தங்களுக்கு வேண்டிய உணவினை, சாரதாவிடமும்

ஆனந்தியிடமும் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தனர். சுவையான உணவு உள்ளே செல்ல, கேலியான பேச்சும் சிரிப்பும் வெளியே வந்தது.

''மாமா தேசிய அளவில் விருது வாங்கினதுக்கு இப்படி சிம்பிளா பார்ட்டி கொடுத்தால் போதாது. பெரிசா ஸ்டார் ஹோட்டலில் ஒரு பார்ட்டி வைக்கணும்'' என்று கார்த்திக் தனஞ்செயனை வம்பிழுக்க அவன் உடனடியாக ஒத்துக் கொண்டான்.

''வச்சுட்டால் போச்சு மாப்பிள்ளை. நான் முதலிலேயே ஆனந்தியிடம் சொன்னேன். அம்மா தான் இன்று இங்கே சாப்பிடலாம் என்று வர வைத்தாங்க.''

''அவன் கிடக்கிறான் மாப்பிள்ளை. அவன் சென்னையில் புதுசா தொழில் ஆரம்பிச்சதுக்கு உங்களுக்கு என்ன கொடுத்தான்? கேள்வி கேட்க அவனுக்கு ரைட்ஸ் இல்லை'' என்று சாரதா சொல்ல ஆனந்தி சிரித்தாள்.

''நீங்க உங்க பிள்ளையை விட்டுட்டு மாப்பிள்ளையை சப்போர்ட் பண்றது டூ மச் அம்மா.''

''நல்லா கேளுங்க அக்கா. நீங்க எனக்கு சப்போர்ட் பண்ணுவீங்களா?'' என்று கார்த்திக் வேகமாகக் கேட்க காவ்யா சிரித்தபடி இடையிட்டாள்.

''மாமா! அப்பா பக்கத்தில் இருக்கும் அம்மா எனக்கே சப்போர்ட் பண்ண மாட்டாங்க. இதுல உங்களுக்கு சான்ஸே இல்லை'' என்று உண்மையை உடைக்க அங்கே ஒரு சிரிப்பலை எழுந்தது.

''பார்த்தாயா லவ்ஸ்! எல்லாரும் எப்படி இருக்காங்க? நீ எனக்கு சப்போர்ட் பண்ணினால் என்ன? இதை எல்லாம் கேட்க மாட்டியா?''



''என்னை என்னங்க செய்யச் சொல்றீங்க? வினோத் ஸ்கூல் அட்மிஷனுக்கு அக்காவிடம் சொல்லி வைத்து இருக்கேன். அதனால் அவங்களை கேள்வி கேட்கும் அதிகாரம் எதுவும் இப்ப செல்லாதுங்க'' என்று கை விரித்தாலும் அதற்கும் ஒரு சிரிப்பலை எழுந்தது.

''எட்டு மாசக் குழந்தைக்கு ஸ்கூல் அட்மிஷனா? இதெல்லாம் ஓவர் இல்லையா மச்சான்?'' என்று ஜெய் கேட்க, வசந்தி இடையிட்டாள்.

''நீங்க வேறே? நான் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கே அக்காவிடம் மனு போட்டு வச்சு இருக்கேன். நீங்க வினோத்தை சொல்ல வந்துட்டீங்க?'' என்றதும் அலை அலையாகச் சிரிப்பு எழுந்தது.

''ஒரு ஸ்கூல் டீச்சருக்கு இவ்வளவு மவுசு இருக்கும் என்று எனக்குத் தெரியாமல் போச்சே? முன்பே தெரிந்து இருந்தால் டீச்சரை நான் சைட் அடித்து இருப்பேன்'' என்று கார்த்திக் கண்ணைக் கசக்க, அவன் முதுகில் ஒரு அடி வைத்தார் சாரதா.

''காதலிச்சுக் கல்யாணம் பண்ணி எட்டு மாசத்துல ஒரு பிள்ளையும் இருக்கு. பேசுற பேச்சைப் பாரு'' என்று சாரதா அதட்ட லாவண்யா அவனுக்கு ஆதரவாக வந்தாள்.

''எனக்கு கார்த்தியைத் தெரியும்மா. சும்மா ஜோக்குக்குச் சொல்றது தானே?''

''எது ஜோக்? எது சீரியஸ் என்று தெரியாததால் இப்படி எல்லாம் நடந்தது லாவண்யா. இனி எதுவும் தப்பா நடக்கக் கூடாது. சில விஷயங்கள் கேலிக்குரியவை இல்லை'' என்று தீர்மானமாகச் சொல்ல தனஞ்செயன் இடையிட்டான்.

''எல்லோரும் சேர்ந்து இருக்கும் நேரத்தில் அட்வைஸ் மாதிரி வேண்டாமே? சந்தோஷமா இருக்கணும்.''

''ஆமாம்மா இந்த நேரத்தில் ஜோக்ஸ், பாட்டு மட்டும் தான்...''

''அப்பா, பாட்டு ஒண்ணு பாடுங்கப்பா...'' என்று காவியா ஆரம்பிக்க கார்த்திக் இணைந்தான்.

''ஆமாம் மாமா. அதென்ன உங்க ஆனந்த யாழை மீட்டுகிறாய் பாட்டுக்கு ஒரு பெரிய ஃபேன் கிளப் இருக்காமே?''

''அதெல்லாம் இல்லை என்னை ஆளை விடுங்க.''

''சும்மா பாடுங்க பிரதர்'' என்று ஜெய்.

''அப்பா ப்ளீஸ்...'' என்று காவ்யா.

''பந்தா பண்ணக்கூடாது தனா...'' என்று ஆனந்தி.

விதம் விதமாக மிரட்டல் வர அவன் புன்னகையோடு கை தூக்கினான்.

''இது க்ரூப் சாங். எல்லோரும் சேர்ந்து கலக்கலாம். ரெடி ஸ்டார்ட்...'' என்று தனஞ்செயன் ஆரம்பித்ததும் ஒவ்வொரு குரலாக அந்தப் பாடலில் இணைய, அந்த குடும்பத்தின் சந்தோஷம் நிரந்தரமானது.

ஆனந்த குயிலின் பாட்டு தினம் எங்களின் வீட்டுக்குள்ளே
பூக்களில் நனையும் காற்று தினம் எங்களின் தோட்டத்திலே
கிளிகளின் கூட்டுக்குள்ளே புது உலகம் பிறந்ததே!
அன்பு கொண்ட நெஞ்சுக்குள்ளே ஒரு வானம் விரிந்ததே!
கனிகள் தித்திப்பா? கவிதை தித்திப்பா?
அது அன்பைவிட தித்திப்பா?

*